பேராசிரியரின்

திருத்தலப்பயணம்

ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)
தமிழ்ப் பல்கலைக்கழகம்

EBOOK
மின்நூல்

ந சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் இறைநெறி
ந சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள்



ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

ISBN:978-81-939835-6-0

பேராசிரியரின் திருத்தலப்பயணம்
ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தொகுப்பு
நூற்றாண்டுக்குழு

ந சுப்பு ரெட்டியார்100
Centenary Committee Publications

பேராசிரியரின் திருத்தலப்பயணம் ~ ஒரு திறனாய்வு

All rights are reserved. No part of the publication may be reproduced,
stored in a retrieval system(including but not limited to computers,
disks, external drives, electronic or digital devices, e-readers, websites),
or transmitted in any form or by any means(including but not limited to
cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical,
recording, electronic, digital versions) without the prior written permission of the publisher,
not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is
published and without a similar condition being imposed on the subsequent purchase.

முதல் பதிப்பு – நவம்பர் 2019

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

NA SUBBU REDDIAR 100 EDUCATIONAL TRUST
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939835-6-0

9 788193 983560 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப்படையல்

12.8.1928 <><> 29.12.2015

தமிழண்ணல்

(இராம பெரியகருப்பன்)

(பேராசிரியரின் கெழுதகை நண்பர்)

பொருளடக்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக
ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)

ஆய்வேடு

Compilation of Project Reports submitted by the Recipients of '**NSR100 Kamatchi Ammal Fellowship**' provided by **Na Subbu Reddiar 100 Educational Trust** in the Department of Literature, Tamil University, Thanjavur, Tamilnadu

வ.எண்	மாணாக்கர், ஆய்வேடு, பேராசிரியரின் நூல்
01	**கோ சிவசங்கர்** ந சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் இறைநெறி **மலைநாட்டுத் திருப்பதிகள்**
02	**கா வினோதினி** ந சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள் **வடநாட்டுத் திருப்பதிகள்**

பதிப்புரை

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015-2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 100 நூல்கள், இந்திய அரசு நல்கிய ISBN எண்களுடன், மின் நூல்களாக மாற்றப்பெற்று http://tinyurla.com/y7n2z8pe என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான ***"கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு"*** எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 15 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** மற்றும் **NSR100 Research Fellowship** வழங்கி வருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத்துறை துறை பரிந்துரைத்த இரு ஆய்வியல் நிறைஞர்கட்கு ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** வழங்கியது. அதன்கீழ், பேராசிரியரின் ஏதேனும் ஒரு நூலை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்யும் ஆய்வியல் நிறைஞர்கட்கு நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும், உதவித்தொகையும் வழங்கப்பெற்றன.

திறனாய்வு செய்த மாணாக்கர்கள்:

கோ சிவசங்கர்

கா வினோதினி

ஆய்வேட்டின் தலைப்புகள்:

ந சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் இறைநெறி

ந சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள்

தெரிவு செய்யப்பெற்ற பேராசிரியரின் நூல்கள்:

மலைநாட்டுத் திருப்பதிகள்

வடநாட்டுத் திருப்பதிகள்

அவ்வாறு சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடுகள் தொகுக்கப்பெற்று

பேராசிரியரின் திருத்தலப்பயணம்
ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நூலாக வெளியிடப் பெறுகின்றன. நூலின் ஒரு படி ஒவ்வொரு மாணாக்கர்கட்கும், 2 படிகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் வழங்கப்பெற இருக்கின்றன.

நூற்றாண்டுக்குழு

மலைநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு
போவது போல் பாசாங்கு செய்யும் பேராசிரியர்,
உண்மையில் வைணவ சமய தத்துவங்கள் ,
பக்தி நிலைகள், மரபுகள் – இவற்றையெல்லாம்
நமக்கு சுற்றிக் காட்டி விடுகின்றார்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-9-8

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

மலைநாட்டுத் திருப்பதிகள் 1971

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் எஸ் மகராஜன்



அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்)

மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு போவதுபோல் பாசாங்கு செய்யும் இவ்வாசிரியர், உண்மையில் வைணவ சமய தத்துவங்கள், பக்தி நிலைகள், மரபுகள் — இவற்றையெல்லாம் நமக்குச் சுற்றிக் காட்டி விடுகின்றார்.

வீரசைவ சமயத்தைச் சேர்ந்தவர் ஆசிரியர், ஆனாலும் வைணவத்தைப்பற்றிப் பேசும்போதும் எம்பெருமானைச் சேவித்து அவனுடைய பரம கலியாண குணங்களை எடுத்து விரித்துரைக்கும் போதும், அதிசயிக்கத்தக்க ஈடுபாட்டோடும் விரிந்து பரந்த மனப்பாங்கோடும், தன்னையே வைணவத்தோடு இரண்டும் ஒன்றும் அறக் கரைத்துக் கொள்கின்றார். ஆசிரியருடைய ''நினைவும் சொல்லும் ஒருமைப் பட்டிருக்கையாலே'' இந்த அரிய சாதனை அவருக்குக் கை வந்திருக்கின்றது.

மெய்ப்பொருளோடு ஊடாடுவதற்கென்று ஒவ்வொரு சமயத்திலும் பல உத்திகளை வகுத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால், வைணவ ஞானிகள் வகுத்து வைத்திருக்கும் உத்திகள் தனிச்சிறப்புடையவை. மூர்த்திகளை வெறும் அடையாளப் பொருள்களாகக் கொள்ளாமல், ஒவ்வொரு மூர்த்தியும் இறைவன் எடுத்த அர்ச்சாவதாரம் என்று கொண்டு, மெய்ப்பொருளோடு உறவாடும் போது, பக்திக் கடல் மடை திறக்கின்றது. மெய்யுணர்வு பெருக்கெடுத்தோடுகின்றது.

அர்ச்சாவதாரத்தை அநுபவிக்கக் கொடுத்து வைக்காத வர்கள் வானவர்கள். ஆகவே, வான நாட்டைத் துறந்து மண்ணுலகத்தில் வந்து பிறக்க விரும்புகிறார்கள் அவர்கள், ''இங்குள்ளார் அங்குப் போவது மேன்மையை அநுபவிக்க, அங்குள்ளார் இங்கு வருவது சீல குணாநுபவம் பண்ணுகைக்கு'' என்ற ஈட்டின் வாசகத்தை மேற்கோள் காட்டி இவ்வுண்மையை விளக்குகின்றார் ஆசிரியர்.

எம்பெருமானுக்கு விண்ணுலகச் சூழ்நிலையில் அவ்வளவு அழகு இருப்பதில்லையாம். மண்ணுலகச் சூழ்நிலையிலேயே அவனுடைய அழகு சோபிக்கிறதாம். ஏன்? வானவர் நாடு ஞானஒளி வீசும் நாடு, ஆகையால், அங்கிருக்கும் எம்பெருமான், பகல் விளக்குப்போல், ஒளி குன்றிக் காணப் படுகிறான். ஆனால், அஞ்ஞான இருள் சூழ்ந்த தம் மண்ணுலகத்திலோ, அவன் இருட்டறை விளக்குப்போல, திவ்ய ஒளி வீசி மிளிர்கின்றானாம். ஆகவே, பேரொளியை அநுபவிப்பதற்கு மண்ணுலக இருட்டும் தேவைப்படுகின்றது என்றே தோன்றுகின்றது. இல்லையேல், ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்று அப்பர் அடிகள் சொல்லியிருப்பாரா!

புறத்தே நின்ற பேரொலியைக் கொண்டாடக் கொண்டாட, அது ஆழ்வார் அகத்திலும் குடியேறிவிடுகின்றது. குடியேறிய திருவடிகளிலுள்ள துளவம் ஆழ்வார் உள்ளத்தை நிறைத்து, ஆழ்வாருடைய மெய்யெலாம் கமழச் செய் கின்றது. இந்த நிலையில்,

> **''எந்நன்றி செய்தேனோ**
> **என்நெஞ்சில் திகழ்வதுவே''**

என்று வியந்து ஓலமிடுகின்றார் ஆழ்வார். இந்த வியப்புக்கு விளக்கம் கொடுக்கின்றது ஈடு. எப்படி? ''சடாயுவைப் போல், பிராட்டி சென்ற திசையை எம்பெருமானுக்குக் காட்டி

விட்டு உயிர் துறந்தேனோ? அல்லது, அநுமனைப் போல் ''கண்டனன் கற்பினுக் கணியை'' என்ற முழக்கத்தோடு வந்து, பெருமானின் துயரத்தைத் தீர்த்தேனோ? அல்லது, வேறு என்ன உதவிதான் செய்தேனோ? அறியேன். ஆனால், அவன் என் நெஞ்சத்துள் புகுந்து அருள் செய்து விட்டான்'' என்று தான் செய்த நன்றியைப் பாராட்டுகின்றாராம் ஆழ்வார்.

இப்படியெல்லாம் இறைவனோடு ஊடாடித் திளைப்பதற்கு வழி செய்திருக்கின்றார்கள் நம் முன்னோர்கள் அந்த வழியிலே நம்மை நடத்திச் செல்லுகிறது இந்நூல்.

ஒன்றினோடு ஒன்றொவ்வாப் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் **டாக்டர் சுப்பு ரெட்டியார்.** அவருடைய விரிந்த படிப்பைக் கண்டு நான் அஞ்சிய காலம் ஒன்றுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவரைக் காரைக்குடியில் சந்தித்தபோது, ''எதற்காக நீங்கள் இவ்வளவு படிக்கின்றீர்கள்? கொஞ்சம் படிப்பைக் குறைத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.'' என்று அவரிடம் சொன்னேன். மித மிஞ்சிய படிப்பு கவனத்தைச் சிதறடித்து விடுமே என்ற அச்சத்தால் அவ்வாறு சொன்னேன். ஆனால், இந்நூலைப் படித்த பிறகு என்னுடைய அச்சம் மறைந்துவிட்டது. ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து ஒருமையும் பயனும் பெற்று விட்டது. வாழ்க ''மலைநாட்டுத் திருப்பதிகள்!''

ந.சுப்புரெட்டியாரின் *மலைநாட்டுத் திருப்பதிகள்* நூலில் இறைநெறி

தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டத்திற்காக

அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

கோ. சிவசங்கர்

பதிவு எண் : 5893

நெறியாளர்

முனைவர் பெ. இளையாப்பிள்ளை

இலக்கியத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்-613 010

அக்டோம்பர் 2019

நன்றியுரை

தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையில் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பை மேற்கொள்ள வாய்ப்பளித்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை **துணைவேந்தர்** அவர்களுக்கும், மதிப்புமிகு **பதிவாளர்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாய்வினை மேற்கொள்ள அனுமதி அளித்ததோடு எனது செயல்பாடுகளில் கவனம் கொண்டு பல்வேறு பணிச்சுமைகளுக்கிடையேயும் இன்முகத்தோடு ஆய்வு நுட்பங்களை உணர்த்தி செம்மைபெறச் சீர்மிகு கருத்துக்களைக் கூறி நெறிப்படுத்திய பேராசிரியரும் ஆய்வு நெறியாளருமான முனைவர் **பெ.இளையாப்பிள்ளை** ஐயா அவர்களுக்குப் பணிவான என் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

என் ஆய்விற்கு ஆக்கமும் ஊக்கமும் அழித்த இலக்கியத்துறைத் தலைவர் **ஜெ.தேவி** அம்மா அவர்களுக்கும், கற்றலை செம்மைப்படுத்திய துறை பேராசிரியர்களான **க.திலகவதி** அம்மா, **அ.இரவிச்சந்திரன்** ஐயா, **இரா.தனலெட்சுமி** அம்மா ஆகியோருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வியல் நிறைஞர் ஆய்வினை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புகளில் மேற்கொள்ள எனக்கு உதவிகள் செய்திட்ட பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அறக்கட்டளை திருமிகு டாக்டர் சு.இராமலிங்கம் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வினை மேற்கொள்ள உதவிய மொழிப்புல முதன்மையர் மற்றும் நாட்டுப்புறவியல்த் துறைத்தலைவரும் பேராசிரியருமான **இரா.காமராசு** ஐயா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை இந்த உலத்திற்கு அறிமுகப்படுத்தி இத்தனை ஆண்டு காலம் இச்சமூகத்தில் ஒரு நல்ல மனிதனாக வளர்த்த என் பெற்றோர்களான

சு.கோபாலகிருஷ்ணன், த.புஷ்பலதா ஆகியோருக்கும், என் உடன்பிறப்பான சகோதரர் **கோ.சஞ்சீவ்** அண்ணனுக்கும் மற்றும் குடும்பத்தார்க்கும் என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

என்னுடன் கல்வி பயின்ற எம் வகுப்பு தோழமைகளுக்கும், விடுதி நண்பர்களுக்கும், இலக்கியத்துறை முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் ஆய்விற்கு தேவையான நூல்களை வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தாருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றியுடன்

கோ சிவசங்கர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அயோத்.	- அயோத்யகாண்டம்
ஆ.ஹி.	- ஆசாரஹிருதயம்
இரண்டாம்.திரு.	- இரண்டாம் திருவந்தாதி
உ.ஆ.	- உரையாசிரியர்
உப.மா.	- உபதேசரத்தினமாலை
கங்கை.பட.	- கங்கைப் படலம்
கம்ப.	- கம்பராமாயணம்
குறள்	- திருக்குறள்
சிலம்.	- சிலப்பதிகாரம்
சிறிய.திரு.	- சிறிய திருமடல்
தாயு.பா.	- தாயுமானவர் பாடல்
தி.தே	- திவ்விய தேசம்
திரு.	- திருப்பல்லாண்டு
திரு.எழு.	- திருஎழுகூற்றிருக்கை
திரு.தா.	- திருக்குறுந்தாண்டகம்
திரு.நெடு.	- திருநெடுந்தாண்டகம்
திரு.விரு.	- திருவிருத்தம்
திருச்.வி.	- திருச்சந்திவிருத்தம்
திருவா.	- திருவாசிரியம்
திருவாய்.	- திருவாய்மொழி
தே.பி.	- தேசிகப்பிரபந்தம்
தொல்.	- தொல்காப்பியம்
நன்.	- நன்னூல்
நா.தி.பி.	- நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
நா.ப.	- நான்காம் பத்து
நான்காம்.திரு.	- நான்காம் திருவந்தாதி

நூ.தி	- நூற்றியெட்டுத் திருப்பதிகள்
ப.	- பக்கம்
பக்.	- பக்கங்கள்
பதி.பத்.	- பதிற்றுப்பத்து
பரா.கண்.	- பராபரக்கண்ணி
பா.பா.	- பாப்பாப் பாட்டு
பிர.சா.	- பிரபந்தசாரம்
பு.நா.	- புறநானூறு
பெரி.தி.	- பெரியாழ்வார் திருமொழி
பெரி.திரு.	- பெரிய திருமொழி
பெரிய.திரு.	- பெரிய திருமடல்
பெரு. திரு.	- பெருமாள் திருமொழி
மங்.	- மங்களாசாசனம்
மூ.தி.	- மூன்றாம் திருவந்தாதி
மூன்றாம்.திரு.	- மூன்றாம் திருவந்தாதி
மேலது.	- மேலே குறிப்பிடப்பட்டுள்ள நூல்

பொருளடக்கம்

இயல்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1
1	ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும்	6
2	மலைநாட்டுத் திருப்பதிகளின் அமைப்பும் பெயர்க்காரணமும்	31
3	ந. சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் ஆழ்வார்களின் இறைநெறி	101
4	ந. சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் வைணவத் தத்துவங்கள்	145
	முடிவுரை	167
	துணைநூற் பட்டியல்	171
	பின்னிணைப்புகள் 1. நிழற்படங்கள் 2. அட்டவணைகள்	

முன்னுரை

உலக மொழிகளில் எல்லாம் பக்திக்குரிய மொழி என அறிஞர்களால் அடையாளம் காணப்பட்ட மொழி தமிழே ஆகும். தமிழ் மொழியில் அமைந்துள்ள ஆயிரக்கணக்கான வழிப்பாட்டுப் பாடல்களும், சமய நூல்களுமே இதற்குச் சான்றாதாரமாக விளங்குகிறது. தமிழில் சங்க காலத்தினையும், நீதி நூற்காலத்தையும் அடுத்து தோன்றிய நூல்கள் அனைத்தும் பக்தியைத் தம் பாடுபொருளாகவே கொண்டு அமைந்துள்ளது. இவற்றைப் பக்தி இலக்கியம் என வகைப் படுத்துகின்றோம்.

தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்கள் பெரும்பான்மையாகச் சைவ, வைணவ சமயங்கள் சார்ந்தே இருந்திருக்கின்றது. சைவ சமயத்தில் சிவனை முதன்மையாகவும், வைணவத்தில் திருமாலை முதன்மையாகவும் வைத்து வணங்குகின்றனர். வைணவக் கடவுளான திருமாலை வழிபடுவது சங்ககாலத்திலிருதே வழக்கில் இருந்து வருகிறது.

வைணவ சமயக் கொள்கைகளையும், பக்தி உணர்வையும் பரப்பும் பணியினை முதன்மையாகக் கொண்டவர்கள் ஆழ்வார்கள். அத்தகைய ஆழ்வார்கள் ஆலயங்களுக்குச் சென்று பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டனர். ஆழ்வார்கள் சென்று பாடியதால் அத்தலங்களைத் திவ்விய தேசங்கள் என்ற பெயரால் அழைக்கின்றனர். திவ்விய தேசங்கள் அமைந்துள்ள இடத்தின் அடிப்படையில் வகைப்படுத்தி கூறுகின்றனர். அவ்வகைகளிலே ஒன்றுதான் மலைநாட்டுத் திருப்பதிகள். இம்மலைநாட்டுத் திருப்பதிகளில் மொத்தம் பதின்மூன்றுத் திருப்பதிகள் காணப்படுகின்றன.

மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றிற்கும் ஆன்மீகப் பயணம் செய்யும் ந.சுப்புரெட்டியார், அத்தலங்களில் உள்ள வைணவ சமயக் கருத்துகளையும்,

தத்துவங்களையும், பக்தி நிலைகள், மரபுகள் இவற்றையெல்லாம் நுகர்ந்து தன் படைப்பாற்றலின் வலிமையினால் நூல்கள் பலவற்றையும் படைத்துள்ளார்.

பக்தி நிலையின் உண்மைதனை உணர்த்துவதற்கு ஆழ்வார்கள் மற்ற சமயத்தினரைக் காட்டிலும் தங்களுக்கென தனியொரு உத்திகளைக் கையாண்டுள்ளனர் என்பதனை ந.சுப்புரெட்டியார் தம் படைப்பில் வெளிப்படுத்தியுள்ளார். சிறந்த படைப்பாளிகளின் வரிசையில் ந.சுப்புரெட்டியாரும் சிறந்து விளங்கினார்.

ஆய்வுத் தலைப்பு

“ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் இறைநெறி” என்பது இவ்வாய்வேட்டின் தலைப்பாகும்.

ஆய்வு நோக்கம்

மலைநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்களைக் குறித்து ஆராய்வதும், ஆழ்வார்கள் இறைவன் மீது கொண்டுள்ள பக்தி திறத்தினையும், ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பினையும் “ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் இறைநெறி” என்னும் நூலில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

ந.சுப்புரெட்டியார் எழுதிய “மலைநாட்டுத் திருப்பதிகள்” என்னும் நூலினை மட்டும் ஆய்வு எல்லையாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு முன்னோடிகள்

ந.சுப்புரெட்டியார் எழுதிய அனைத்து நூல்களையும் ஆய்வு செய்த க.ஜோதிமணி அவர்களின் ‘ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பணிகள்’ என்னும் நூலும்,

ம.இரா.தனலெட்சுமி அவர்களின் ‘சமுதாய நோக்கில் ஆழ்வார் பாடல்கள்’ போன்ற நூல்கள் முன்னோடி ஆய்வுகளாக அமைந்துள்ளன.

ஆய்வுச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வுக்குரிய சான்றுகளை முதன்மைச் சான்றாதாரம், துணைமைச் சான்றாதாரங்கள் என இரு வகைகளாக விளக்கலாம்.

முதன்மைச் சான்றாதாரம்

ந.சுப்புரெட்டியார் எழுதிய மலைநாட்டுத் திருப்பதிகள் என்னும் நூல் இவ்வாய்விற்கு முதன்மைச் சான்றாக அமைக்கின்றது.

துணைமைச் சான்றாதாரங்கள்

வைணவ சமயம் தொடர்பாகவும், ஆழ்வார்கள் தொடர்பாகவும், ந.சுப்புரெட்டியார் தொடர்பாகவும் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இதழ்கள், ஆய்வுகள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்களாக அமைந்துள்ளன.

ஆய்வுக் கருதுகோள்

ஆழ்வார்கள் மலைநாட்டுத் திருப்பதிகளுக்குப் பயணம் செய்து இறைவனைக் கண்டு எவ்வாறெல்லாம் கைங்கரியம் செய்தனர் என்பதனையும், அவ்வாழ்வார்கள் சென்ற அத்திருப்பதிகளுக்கு ந.சுப்புரெட்டியார் நேரில் சென்று இறைவனை அனுபவித்து அதனை எவ்வாறெல்லாம் தனது இலக்கிய நடையில் கூறியுள்ளார் என்பதையும் இவ்வாய்வு கருதுகோள்களாகக் கொண்டுள்ளது.

ஆய்வு அணுகுமுறைகள்

ந.சுப்புரெட்டியார் எழுதிய மலைநாட்டுத் திருப்பதிகள் நூலிலுள்ள கருத்துக்களை விளக்கிக் கூறுவதால் விளக்கமுறை ஆய்வும், நூலில் கூறப்பட்டுள்ள சமயக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவதால் தொகுப்புமுறை

ஆய்வும், வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதால் வரலாற்றுமுறை ஆய்வும், சில இடங்களில் பாடல்களை ஒப்பிட்டுக் காண்பதால் ஒப்பீட்டுமுறை ஆய்வும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவையாவன,

1. **ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும், படைப்பும்**
2. **மலைநாட்டுத் திருப்பதிகளின் அமைப்பும், பெயர்க்காரணமும்**
3. **ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் ஆழ்வார்களின் இறைநெறி**
4. **ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் வைணவத் தத்துவங்கள்**

இயல் விளக்கங்கள்

"ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும், படைப்பும்" என்னும் முதல் இயலில் ந.சுப்புரெட்டியாரின் பிறப்பு, வாழ்க்கை, கல்வி, பணி, படைப்புகள், விருதுகள் ஆகியவற்றைப் பற்றி இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

"மலைநாட்டுத் திருப்பதிகளின் அமைப்பும் பெயர்க்காரணமும்" என்னும் இரண்டாம் இயலில் மலைநாட்டின் இயற்கை அமைப்புகள், திருத்தலங்களின் அமைப்பு முறைகள், வழிபாட்டுமுறைகள், வரலாற்றுச் செய்திகள், புராண செய்திகள், திருமால் பற்றிய செய்திகள், திருத்தலம் அமைந்துள்ள இடத்தின் சிறப்புகளும் பற்றி தெளிவாக ஆய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

"ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் ஆழ்வார்களின் இறைநெறி" என்னும் மூன்றாம் இயலில் ஆழ்வார்கள் பற்றியச் செய்திகளும், ஆழ்வார்களின் இறை நெறியும், பக்தியின் விளக்கங்களும், ஆழ்வார்களின்

இறைத்தொண்டும், இறைவனை எவ்வாறெல்லாம் அடைய முற்பட்டனர் என்பது பற்றி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

“ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் வைணவத் தத்துவங்கள்” என்னும் நான்காம் இயலில் வைணவத் தத்துவங்கள் குறித்தும், வைணவ நம்பிக்கைகள் குறித்தும், இறைவனின் திருமந்திரம் குறித்தும் இவ்வியலில் நன்கு ஆராயப்பட்டுள்ளது.

முடிவுரை

நான்கு இயல்களிலும் தொகுத்தளிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் முடிவுரையில் ஆய்வு முடிவுகளாக வழங்கப்பட்டுள்ளன. ஆய்வின் இறுதியில் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களின் பட்டியல், பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. துணைநூற் பட்டியலுக்குப் பின்னர்; அட்டவணைகள், நிழற்படங்கள் ஆகியனவும் இவ்வாய்வில் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல் – 1

ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும்

தமிழ் உரையாசிரியர்களில் தனக்கென தனியொரு இடத்தினைத் தக்கவைத்துக் கொண்டுள்ள பெரும் பேராசிரியர்களில் மிகவும் முக்கியமானவர் ந.சுப்புரெட்டியார். பல்துறை வித்தகராகவும் விளங்கியவர். இவர் தமிழ்மொழி மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் தேர்ந்து காணப்பட்டார். இவர் இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல் என அனைத்து துறைகளிலும் ஆழங்கால் பட்டவர். ந.சுப்புரெட்டியார் பள்ளி ஆசிரியராகத் தனது வாழ்வைத் துவங்கி பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்வுப் பெற்றவர்.

தன்னுடைய மொழிநடையால் மற்ற உரையாசிரியர்களிலிருந்தும் தம்மை வேறுபடுத்திக்காட்டியவர். பல்வேறு விருதுகளையும் பெற்ற ந.சுப்புரெட்டியாரின் வாழ்வையும், அவர் வாழ்ந்தகாலங்களில் அண்ணார் படைத்த படைப்புகள் குறித்தும் **“ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும்”** என்னும் முதல் இயலில் ஆராயப்படுகிறது.

ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்

- **பிறப்பு**

விஜயநகரப் பேரரசை நிறுவிய ஹரிஹரர், புக்கர் என்னும் இரட்டையர் வழி வந்தவர்கள் “ரெட்டியார்”. இவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்தனர். ஒரு குழுவினர் கொல்லிமலை, பச்சைமலைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் குடியேறினர். இவர்கள் காட்டை அழித்து, நிலமாக்கி, விவசாயம் செய்து பெருநிலக்கிழாராக வளர்ந்தனர். இவர்கள் வசித்த ஊர்கள் அனைத்து செழிப்புடன் காணப்பட்டன.

இத்தகைய பின்புலத்திலிருந்து உருவானவர் ந.சுப்புரெட்டியார். இவர் திருச்சி மாவட்டத்தில் லால்குடி வட்டத்திற்கு உட்பட்ட பெரகம்பியில் தந்தை திரு.

நல்லப்பரெட்டியாருக்கும் தாயார் திருமதி. காமாட்சி அம்மாளுக்கும் 1916 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் நாளில் மகனாய்ப் பிறந்தார். இவர் மூன்று வயதாக இருக்கும் பொழுதே தந்தை இறந்துவிட்டார்.

- **இல்வாழ்க்கை**

ந.சுப்புரெட்டியார் 1936 ஆம் ஆண்டு தம் தந்தை வழியில் ஒன்றுவிட்ட அத்தை மகளான செல்லபாப்பா என்பவரை மணந்தார். இவர்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தனர். உறவினர்களின் வேண்டுகோளின் படி பல்வேறு புண்ணியத்தலத்திற்கு ஆன்மீகப்பயணம் மேற்கொண்டனர். இறைவன் அருளால் 1949 இல் இராமலிங்கம் என்பவரும், 1953 இல் இராமகிருஷ்ணர் என்பவரும் பிறந்தனர்.

- **கல்விநிலை**

ந.சுப்புரெட்டியார் தொடக்கக் கல்வியினைக் கோட்டத்தூரில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் இலிங்கச் செட்டியார், வைதீகச் சடங்குகளுடன் ந.சுப்புரெட்டியாருக்குப் பண்ணை நல்லப்ப செட்டியார் இல்லத்தில் வித்தியாப்பியாசம்(எழுத்தறிவித்தல்) என்னும் சடங்கினைத் தொடங்கி வைத்து அவருக்குத் தொடக்க நிலைக்கல்வியினை ஊட்டினார்.

“ஆசிரியர்(இலிங்கச் செட்டியார்) மஞ்சள் தடவிய அளவுபடுத்தப் பெற்றுத் தயாரித்த நான்கைந்து பனையோலை அடங்கிய ஒரு சிறு கட்டில் ‘ஹரி : நமோத்துசித்தம்’ என்று எழுதித் தந்ததும், சருக்கரை கலந்த காய்ச்சிய பாலில் ஏதோ மந்திரம் எழுதிப் பருகச் செய்தலும், அதன் மேற்படியேட்டில் எழுதியதைத் தனித்தனி எழுத்தை மூன்று முறையும், சேர்த்து வாசகமாக மூன்று முறையும் ஆசிரியர் சொல்ல அப்படியே என்னைச் சொல்லும்படி செய்தலும் இவையாவும், இரு சிறு விநாயகர் வழிபாட்டிற்குப் பின்னரே நடைபெற்றதும் நினைவுக்கு வருகின்றன. மறுநாள் தொடங்கி பள்ளிக்கூடத்திற்கு முற்பகலும், பிற்பகலும்

ஒழுங்காகப் போய்வந்ததும் நினைவுக்கு வருகிறது"[1] என்று தனது தொடக்கநிலைக் கல்வியினைக் குறிப்பிடுகின்றார்.

தொடக்கப் பள்ளியினைத் தொடர்ந்து துறையூர் ஜமீந்தார் நடுநிலைப் பள்ளியிலும், முசிறியில் இருந்த ஜில்லாபோர்டு உயர்நிலைப் பள்ளியிலும் படித்துத் தேர்ந்தார். பின்னர் கல்லூரி படிப்பினை 1937 முதல் 1939 ஆம் ஆண்டுகளில் திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் சேர்ந்து வேதியியல் பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்பு, சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து L.T பட்டம் பெற்றார். தாய்மொழி தெலுங்காக இருப்பினும் தமிழ்மொழியில் அதிக ஈடுபாடு காரணமாக 1951 இல் முதுகலைத்தமிழ் பட்டமும், 1970 இல் முனைவர் பட்டமும் பெற்றார்.

- **கல்விப் பணி**

ந.சுப்புரெட்டியார் துறையூர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியரான வி.கே.அரங்கநாத அய்யருக்கு நன்றி மறவாதவராகத் துறையூர் பெருநிலக்கிழார் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் 1944 ஆம் ஆண்டில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். வி.கே.அரங்கநாத அய்யருக்கு நன்றி செலுத்த காரணம் ந.சுப்புரெட்டியாரை முசிறியிலுள்ள கழக உயர்நிலைப் பள்ளியில் சேர்த்து விட்டவர் என்பதேயாகும்.

ந.சுப்புரெட்டியர் பள்ளியில் தலைமையாசிரியராகச் சேர்ந்த பின்பு 200 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கையை 1000 ஆக உயரச்செய்வதற்குக் காரணமாக இருந்தார். அது மட்டுமல்லாது துறையூரைச் சுற்றி ஐந்து பள்ளிக்கூடங்கள் தொடங்கவும் காரணமாக இருந்தார். பள்ளி தலைமையாசிரியராக இருக்கும் போதே மாணவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும், நற்பண்புள்ள நல்லாசிரியராகவும் தனது பணியினைச் செப்பமுறச் செய்தார். 1950 ஆம் ஆண்டு வரை பள்ளியில் தலைமையாசிரியராகவே தம் பணியினைச் செய்தார்.

1950 ஆம் ஆண்டு முதல் சா.கணேசன் அவர்களுடைய பரிந்துரையின் பேரிலே காரைக்குடி அழகப்பா செட்டியார் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறை துறையினை உருவாக்கினார். தமிழ்த் உருவாக்கியதோடு அதன் தலைவராகவும், பேராசிரியராகவும் தம் பணியினை 1960 வரைத் தொடர்ந்தார்.

தமிழகத்தில் பல பள்ளிகளைத் தொடங்கக் காரணமாகவும், கல்லூரியில் தமிழ்த் துறையினை உருவாக்கியதோடு நின்றுவிடாமல், தம் கல்விப் பணியினைத் தமிழகத்தைத் தாண்டி பிறமாநிலத்துக்கும் கொண்டு சேர்த்த பெருமை ந.சுப்புரெட்டியாரையே சாரும். 1960 ஆம் ஆண்டு முதல் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தம்கல்விப் பணியினைத் தொடங்கினார். அப்பல்கலைக்கழகத்திலே தமிழ்த் துறையினை உருவாக்கி அதில் பேராசிரியராகவும் விளங்கினார்.

இதன் மூலம் அங்குள்ள தமிழ் மாணவர்களுக்கு முதுகலைத் தமிழ், ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் பயிலும் வாய்ப்பினை ஏற்படுத்திய பெருமை ந.சுப்புரெட்டியாரைச் சேரும் என்பதில் எள்ளளவும் ஐய்யமில்லை. அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றும் போது கிடைத்த ஊதியத்தைவிடத் திருப்பதி திருவேங்கடன் பல்கலைக்கழகத்தில் வேலைபார்க்கும் போது கிடைக்கும் ஊதியமானது மிகவும் குறைவு என்றாலும் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்.

இதற்கு ந.சுப்புரெட்டியாரின் கருத்து, “முதலில் பள்ளியில் தலைமை ஆசிரியர் பின்னர் கல்லூரியில் பேராசிரியர் – துறைத்தலைவர், இப்பொழுது பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் – துறைத்தலைவர் எனப் பள்ளித் தொடங்கி பல்கலைக்கழகம் வரை எனது பணி விரிவடையக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்”[2] என்பதுதான். திராவிடன் பல்கலைக்கழகத்திலேதான் அவர் முனைவர் பட்டத்தினையும் பெற்றார்.

திருப்பதியில் தெலுங்கு பேசக்கூடிய தமிழர்களுக்காகவே அங்கு ஐந்து உயர்நிலைப் பள்ளிகளையும், நான்கு கல்லூரிகளில் தமிழ்த் துறைகளையும் உருவாக்கினார். ந.சுப்புரெட்டியார் பள்ளிக் கல்லூரி பல்கலைக்கழகம் ஆகிய கல்விநிலையங்களிலே தம் கல்விப் பணியானது நின்றுவிடாமல் கல்வி நிலையங்களைத் தாண்டி வெளியேயும் தம்பணியைத் தொடர்ந்தார்.

- **ந.சுப்புரெட்டியாரின் பண்புநலம்**

ந.சுப்புரெட்டியார் தன் நலனைக் காட்டிலும் மாணவர்கள் மீது அதிக கவனம் செலுத்துவார். மாணவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் பண்பாளராய் விளங்கினார். பல்துறை வித்தகராக விளங்கக்கூடிய ந.சுப்புரெட்டியாரின் தோற்றத்தைத் த.பெரியாண்டவன்,

"திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர் சுப்பு ரெட்டியாராம்"[3]

இவ்வாறு காட்சிப்படுத்துகிறார். சுறுசுறுப்புக்கும் உழைப்புக்கும் உற்சாகத்திற்கும் அடையாளமாக விளங்கினார் என்பதனை அர.சிங்காரவடிவேலன்,

"சுப்புரெட்டி யாரென்று பெயர் சொன்னாலே
சுறுசுறுப்பு பேருழைப்பும் துள்ளு மாமே!"[4]

எனப் பாடுகிறார். பேராசிரியர் தமிழ்த் தொண்டை க.பெருமாள்,

"அருந்தமிழ் புலமை மிக்கர்
ஆங்கில மொழியில் வல்லார்
இருமொழியின்? கண்ணும் நூல்கள்
இயற்றிடும் ஏற்றம் உள்ளார்"[5]

எனச் சித்தரிக்கின்றார். மேலும் பல ஆசிரியர்கள் ந.சுப்பிரெட்டியாரின் பண்புநலன்களைப் பற்றி கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ந.சுப்புரெட்டியாரின் படைப்புலகம்

- **படைப்புகளும் நாட்டுடைமையாக்கமும்**

ந.சுப்புரெட்டியார் மொத்தம் 36 ஆண்டுகள் பணியில் இருந்தார். அவ்வாறு பணியில் இருக்கும் காலத்திலும், பணி ஓய்வு பெற்ற பிறகு 29 ஆண்டுகள் வரையிலும், அதாவது மொத்தம் 65 ஆண்டு காலம் இவரது தமிழ்ப் பணி தொடர்ந்தது. இவர் வாழ்ந்த நாட்களிலே எழுதிய மொத்த நூல்களின் எண்ணிக்கை 135 ஆகும்.

ந.சுப்புரெட்டியார் ஓய்வு பெற்றது முதல் இறக்கும் வரை(1977 - 2006) உள்ள நாட்களில் எழுதிய நூல்களின் எண்ணிக்கே நூறுக்கு அதிகமாக இருக்கும். 2008 ஆம் ஆண்டு தமிழக முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்து ந.சுப்புரெட்டியாரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கினார். நாட்டுடைமை ஆக்கப்பட்டமையால் பேராசிரியரின் நூல்கள் எளிமையாகக் கிடைக்கிறது.

- **படைப்புகள்**

ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் அனைத்துமே பாமர மக்களுக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் அமையப்பெற்றிருக்கிறது. தமிழ் தமிழ் என வெறுமனே பேசுவதை விட அத்தமிழ் மொழிக்குத் தன்னால் முடிந்ததைத் தனது செயல்களாலும் தம் படைப்புகளாலும் செம்மை செய்தவர். தம் திறமையினால் பல்வேறு தளங்களிலும் காலூன்றி நின்றவர்.

ந.சுப்புரெட்டியாரின் படைப்புத் தளங்கள்	
1	ஆசிரியம், உளவியல்
2	இலக்கியம்
3	சமயம், தத்துவம் நூல்கள்

4	திருத்தல பயண நூல்கள்
5	திறனாய்வு நூல்கள்
6	வரலாறு, தன்வரலாறு நூல்கள்
7	அறிவியல் நூல்கள்
8	ஆராய்ச்சி நூல்கள்

ஆகிய தளங்களில் ந.சுப்புரெட்டியார் தம் படைப்புகளை அருளியுள்ளார். ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் பெரும்பாலும் கல்வி பயிலும் மாணவர்களுக்காகப் படைக்கப்பட்டவையாக அமைந்திருக்கின்றன.

1. ஆசிரியம், உளவியல் படைப்புகளில் ந.சுப்புரெட்டியார்

ந.சுப்புரெட்டியார் ஆசிரியர் தொழிலை விரும்பிச் செய்தவர். ஆசிரியப் பணியிலும் தன்னால் முடிந்த அளவுக்குப் பல்வேறு புதுமைகளைப் புகுத்தியுள்ளார். ஆசிரியத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உதவிடும் வகையில் பல நூல்களையும் படைத்திருக்கின்றார். ஆசிரியர்கள் பயன்படுத்தும் விதத்தில் கற்றல், கற்பித்தல், உளவியல் கோட்பாடுகளை விளக்கி ஐந்து நூல்களைப் படைத்திருக்கின்றார்.

ஆசிரியம், உளவியல் படைப்புகள்	
1	தமிழ் பயிற்றும் முறை (1957)
2	கவிதை பயிற்றும் முறை
3	அறிவியல் பயிற்றும் முறை (1957)
4	கல்வி உளவியல் கோட்பாடு (1961)
5	யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்

இவற்றில் “கல்வி உளவியல் கொள்கை என்னும் நூலானது, தற்காலக் கல்வியியல் கொள்கைகளையும் பழங்காலக் கொள்கைகளையும் ஒப்பிட்டுக் காண முயல்கிறது. இத்தகைய நூல்கள் தமிழ்நாட்டிற்கு மிக மிகத் தேவையாகும் என்று ஜி.ஆர்.தாமோதரன் பாராட்டுகின்றார்”[6]. பேராசிரியரின் சிறந்த படைப்புகளுள் தமிழ் பயிற்றும் முறை, கவிதை பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை போன்ற நூல்கள் மிகவும் முக்கியமான நூலாக அமைந்துள்ளது.

தமிழ் பயிற்று முறை நூலில், ஆசிரியர்கள் என்பவர்கள் உயர்நிலை, மேல்நிலை என்று வரும்போது அவர்களின் செயல்பாடானது மாணவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றன. அத்தகைய பருவங்களில் ஆசிரியர்களே செல்வாக்கு பெற்றவர்களாகவும் அமைகின்றனர். நல்லாசிரியரின் இயல்புகளாக நன்னூலார்,

“குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரை யாசிரியன்னே” (நன்.நூற். 26)

என்னும் நூற்பாவில் குறிப்பிடுவதாவது, நல்லாசிரியரை நிலம், மலை, துலாக்கோல், மலர் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு அதன் காரணத்தையும் விளக்கியுள்ளார். கற்பிக்கும் முறைகளைக் கூறும் மேனாட்டு நூல்களும் நல்லாசிரியரின் நல்லியல்புகளை இவ்வாறே விளக்கி கூறுகின்றன. இக்கருத்தினை மொழியாசிரியர்கள் சிந்தித்து உணர வேண்டும் என்கின்றார் ந.சுப்புரெட்டியார்.

இந்நூலில் கற்றல், கற்பித்தல் குறித்த முழுமையான கூறுகள் இடம் பெற்றுள்ளன. ந.சுப்புரெட்டியார் தமிழ் இலக்கியங்களையும், தமிழ் இலக்கணங்களையும் தெளிவாகக் கற்றிருந்து, மாணவர்களுக்குக் கல்வியினைக் கற்றுகொடுக்கும் நல்லாசிரியராகவும் விளங்கியமையால், கற்பிக்கும் முறையினைப் பற்றி தெளிவுடன் நூலினைப் படைத்திருக்கின்றார்.

கவிதை பயிற்று முறை என்னும் நூலில், கவிதை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களைக் கவிதையின் அழகுணர்ச்சியில் ஈடுபட வைக்க வேண்டும் என்கின்றார் ந.சுப்புரெட்டியார். மேலும், “பாடிய கவிஞன் உணர்ந்த அனுபவத்தைக் கற்பனைத்திறன் கொண்ட மாணாக்கர்கள் உணர்வதே கவிதையைக் கற்பிப்போரின் முதன்மையான நோக்கமாக இருத்தல் வேண்டும்.

பாநலம் வியத்தல் திறனே மாணாக்கரின் நிலையாக அமையவேண்டும் என்பதே ஆசிரியர்கள் என்றும் நினைவில் இருத்தல் வேண்டும். இம்முறைதான் மாணாக்கர்கட்கு உவட்டாமல் இனிக்கும் கவிதையை வாய்விட்டுப் படித்தால் தான் கவிதை அனுபவம் ஏற்படும்”[7] என்றும் கூறுகின்றார்.

2. இலக்கியப் படைப்புகளில் ந.சுப்புரெட்டியார்

ந.சுப்புரெட்டியார் தமிழ் இலக்கியப் பணிக்களுக்காவே தன் வாழ்நாளை ஒப்படைத்தவர். தம் தமிழ் ஆற்றலைத் தம் படைப்பின் வழியே நிரூபித்தவர். அதோடு அதனை மாணவர்களிடம் கொண்டு சேர்த்தவர். தம் படைப்பில் கூற வேண்டி கருத்தினை வெறுமனே அப்படியே கூறலாம், அதனை எளிமைப் படுத்துவதற்கென்றே எடுத்துக்காட்டுகளுடன் விளக்கத்தைத் தருவார். ஆகையால ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் அதிகவரவேற்பினைப் பெற்று திகழ்கிறது.

தம் படைப்புத்திறனானது தங்குதடையற்ற ஆற்றுநீர் போன்றும், மரபுமாறாத நடையாலும் இலக்கிய உலகினைக் கட்டிப்போட்டவர். இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை கொண்டவர். இலக்கியங்களில் ஆழங்கால்பட்டு அனைத்து நிலைகளிலும் பொருண்மை மாறாமல் படைக்கக்கூடியவர். புதுமையைக் கொண்டுவரும் முனைப்பில் அதிக கவனம் செலுத்தி படைத்து காட்டிய பெருமை ந.சுப்புரெட்டியாரையேச் சாரும். அத்தகைய படைப்பு நாயகன் படைத்தருளிய இலக்கியப் படைப்புகளை அட்டவணைப் படுத்திக் காணலாம்.

	இலக்கிய படைப்புகள்
1	கவிதை உள்ளம் (1949)
2	காலமும் கவிஞர்களும் (1958)
3	காதல் ஓவியங்கள்
4	அறிவுக்கு விருந்து (1967)
5	முத்தொள்ளாயிர விளக்கம் (1956)
6	பரணிப் பொழிவுகள் (1972)
7	அறிவியல் தமிழ்

8	திருக்குறள் கருத்தரங்கு மலர் (1974)
9	கம்பனின் மக்கள் குரல்
10	காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (1982)
11	திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் (1975)
12	தமிழ் இலக்கியங்ளில் அறம்-நீதி-முறைமை (1988)
13	தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை (1963)
14	பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்
15	திருக்குறள் தெளிவு
16	திருக்குறள் வாழ்வியல் சிந்தனைகள்
17	வள்ளுவர் காட்டும் வாழ்வியல்
18	அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்
19	இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியமும்
20	பாவேந்தர் பாரதிதாசன் – ஒரு கண்ணோட்டம்
21	வாய்மொழியும் வாசகமும்
22	பல்சுவை விருந்து
23	புதுமைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் – ஒரு கண்ணோட்டம்

இவ்வாறாக ந.சுப்புரெட்டியாரின் இலக்கியப் படைப்புகள் இலக்கிய உலகில் அலங்கரித்து அணிச்செய்கின்றன. இப்படைப்புகள் அன்றைய மொழி மரபுடன் துவங்கி, இன்றைய எளிய மொழி நடையும் கொண்டு அமைந்திருக்கின்றன. ந.சுப்புரெட்டியாரை இலக்கிய படைப்புகளின் செல்வந்தன் என்றும் கூறலாம். காரணம் அண்ணாரின் இலக்கியப் பணி அத்தகைய ஆற்றல் கொண்டது என்பது ஆய்ந்து அறியமுடிகிறது.

3. சமய, தத்துவப் படைப்புகளில் ந.சுப்புரெட்டியார்

சைவம், வைணவம் சார்ந்த சமய, தத்துவப் படைப்புகளை ந.சுப்புரெட்டியார் அருளியுள்ளார். ஒவ்வொரு சமயங்களும் தத்துவங்களை

மக்களுக்கு பறைசாற்றிக்கொண்டேதான் இருக்கிறது. இதனை உணர்ந்த ந.சுப்புரெட்டியார் சமயக்கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு அதன் கூறுகளையும், நுட்பங்களையும், செய்திகளையும், நெறிகளையும் விளக்கியுள்ளார். மேலும் தத்துவங்கள் சார்ந்த நூல்களையும் படைத்துக் காட்டியுள்ளார்.

ந.சுப்புரெட்டியார் சமயம், தத்துவம் என்னும் பொருண்மையை மையமாகக் கொண்டு பல நூல்களையும் படைத்துள்ளார். அப்படைப்புகளை அட்டவணையில் காணலாம்.

	சமய, தத்துவ படைப்புகள்
1	திருப்பாவை விளக்கம்
2	அர்ச்சிராதி
3	ஐந்து இரகசியங்கள்
4	வைணவமும் தமிழும்
5	கலியன் குரல்
6	கீதைக்குறள்
7	கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில்
8	ஆண்டாள் பாவையும் அழகு தமிழும்
9	வைணவ உரைவளம்
10	கண்ணன் துதி
11	இராமர் தோத்திரம்
12	வைணவ புராணங்கள்
13	நவவித சம்பந்தம்
14	அர்த்த பஞ்சகம்
15	சைவ சமய விளக்கு
16	சைவ சித்தாந்தம் – ஓர் அறிமுகம்
17	சைவமும் தமிழும்
18	முக்தி நெறி

19	ஆன்மீகமும் அறிவியலும்
20	சில நோக்கில் நாலாயிரம்
21	கீதைப் பொழிவுகள்

ந.சுப்புரெட்டியாரின் படைப்புகளான முக்திநெறி, சிலநோக்கில் நாலாயிரம், வைணவமும் தமிழும், வைணவச் செல்வன், வைணவ உரைவளம், கலியன்குரல், கீதைக்குறள், கண்ணன் எழில்காட்டும் கவிதைப்பொழில், கண்ணன் ஆதி, இராமர் தோத்திரம், கீதைப் பொழிவுகள், ஆண்டாள் பார்வையும் அழகு தமிழும் ஆகிய படைப்புகள் வைணவ சமய, தத்துவக்களை மையப்படுத்திய படைப்புகளாக விளங்குகிறது. இவற்றில் முக்திநெறி என்னும் படைப்புக்குத் தமிழக அரசின் விருது கிடைத்துள்ளது.

சைவ சமய விளக்கு, சைவ சித்தாந்தம் – ஓர் அறிமுகம், சைவமும் தமிழும், ஆன்மீகமும் அறிவியலும் ஆகிய படைப்புகள் சைவ சமய, தத்துவங்களை மையப்படுத்தி படைக்கப்பட்ட படைப்புகளாக விளங்குகின்றன.

ந.சுப்புரெட்டியார் சைவ சமயத்தினைச் சார்ந்தவர். இவர் சைவ மரபினைச் சார்ந்தவராக இருப்பினும், வைணவ சமயம் சார்ந்து படைக்கும் போதும் தம் சமயக்கருத்தினைப் புகுத்தாமல் நடுநிலையாளனாக இருந்து தான் சிறந்த படைப்பாளன் என்பதனை நிரூபித்துக் காட்டியவர். வைணவ சமயக் கருத்துகளின் மீதும் அதிக ஆர்வம் கொண்டவர். ந.சுப்புரெட்டியார் மற்ற படைப்பாளிகளுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். இவ்வாறாகப் பல்வேறு பொருண்மைகளில் சமய, தத்துவ நூல்களையும் படைத்து தனது பங்களிப்பினைச் சமய இலக்கிய உலகுக்கு அருளிய அருள்வள்ளலாகவும் திகழ்ந்தார்.

4. திருத்தல பயணமும் ந.சுப்புரெட்டியாரின் படைப்பும்

ந.சுப்புரெட்டியார் வைணவ சமயக் கடவுளின் மீது அதிக ஈடுபாடு காரணமாக வைணவத் திருப்பதிகளுக்குப் புனிதப் பயணத்தினை மேற்கொண்டார். அவ்வாறு செல்லும் ந.சுப்புரெட்டியார் அத்தலங்களின் சிறப்புகளையும், தலத்து

இறைவனையும், கோயில் அமைப்பு முறைகளையும், புராண செய்திகளையும், வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கி பல நூல்களையும் படைத்துள்ளார். அதோடு நின்றுவிடாமல் சைவ சமயச் சான்றோர்கள் மேற்கொண்ட திருத்தல பயணங்களின் பெருமைகளையும், அவர்கள் பாடிய தேவாரப் பாடல்களின் சிறப்புகளையும் விளக்கும் விதத்திலும் நூல்களைப் படைத்துள்ளார். பயண நூல் படைப்புகளை அட்டவணைப் படுத்திக் காணலாம்.

	பயணநூல்கள்
1	மலைநாட்டுத் திருப்பதிகள் (1971)
2	தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
3	பாண்டியநாட்டுத் திருப்பதிகள்
4	வடநாட்டுத் திருப்பதிகள் (1980)
5	சோழநாட்டுத் திருப்பதிகள் – முதற்பகுதி (1981)
6	சோழநாட்டுத் திருப்பதிகள் – இரண்டாம் பகுதி (1981)
7	தம்பிரான் தோழர்(சுந்தரர்)
8	நாவுக்கரசர் (1986)
9	ஞானசம்பந்தர் (1986)
10	மாணிக்கவாசகர்
11	என் அமெரிக்கப் பயணம் (2004)
12	என் இலங்கைப் பயணம்

நாம் பல்வேறு கோயிகளுக்குச் சென்றிருப்போம். சிறிது நாட்களில் கோயிலுக்குச் சென்றது, அங்கு நிகழ்ந்தவைகளையும் மறந்திருப்போம். ஆனால் ந.சுப்புரெட்டியார் அவ்வாறு செய்யாமல் தான் கோயிலுக்குச் சென்றதைக் குறிப்பு எடுத்து வைத்திருந்தும், நினைவில் வைத்திருந்தும் தனது ஆற்றலால் நூல்களையும் படைத்துள்ளார். அதன் வழி படைக்கப்பட்டவையே மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிகள், பாண்டியநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டு பகுதிகள்) ஆகியன.

இந்நூல்களில் சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டு பகுதிகள்) என்னும் இரண்டு தொகுதிகளுக்கும் தமிழக அரசின் விருது கிடைத்துள்ளது.

ந.சுப்புரெட்டியாரைக் குறித்து எஸ்.மஹாராஜன் என்பவர் "ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து, ஒருமையும் பயனும் பெற்றுவிட்டது"[8] என்று பாராட்டுகின்றார். இந்நூல்களைப் படித்த நீதியரசர் பீ.ஆர்.கோகுல கிருஸ்ணர் என்பவர் "திருப்பதிகளின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் தன்மை, நன்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவின்மை நம்மிடம் எழும்புகிறது"[9] என்று ந.சுப்புரெட்டியாரைப் புகழ்கின்றார்.

சைவச் சான்றோர்களின் பெருமைகளை விளக்கும் விதத்தில் தம்பிரான் தோழர், ஞானசம்பந்தர், நாவுக்கரசர், மாணிக்கவாசகர் எனும் நூல்களைப் படைத்துள்ளார். மேலும் ந.சுப்புரெட்டியார் அயல்நாடுகளுக்குப் பயணம் செய்தார். அதன்விளைவாகத் தான் மேற்கொண்ட பயணத்தினை அடிப்படையாகக் கொண்டு என் அமெரிக்க பயணம், என் இலங்கைப் பயணம் என்னும் பயணநூல்களையும் படைத்துள்ளார். இந்நூல்களைப் படிப்போருக்கு இலங்கையும் அமெரிக்காவினையும் பார்த்த அனுபவம் உண்டாகும்.

(மலைநாட்டுத் திருப்பதிகளும் ந.சுப்புரெட்டியாரும்)

108 திருப்பதிகளிலும் நேரடியாகச்சென்று அனுபவிக்க நினைத்த ந.சுப்புரெட்டியார் தனது துணைவியார், மகன்களுடன் மலைநாட்டுத் திவ்விய தேசங்களைச் சேவிக்க 1969 ஆண்டு சென்றார். ஆழ்வார்களில் மிகவும் முக்கியமானவர் நம்மாழ்வார். அவ்வாறாக நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இறைவனைக் கண்டு அனுபவித்து அதனைக் குறிப்பெடுத்துக்கொண்டார். குறிப்பெடுத்து வைத்திருப்பதனைக் கட்டுரையாக வெளியிடுமாறு அவரின் நண்பர்கள் வேண்டினர். அதனால் ந.சுப்புரெட்டியார்,

யான் பெற்ற இன்பத்தினை இவ்வுலகில் உள்ள மற்றவர்களும் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் கட்டுரையாக எழுதினார்.

திருவாட்டாற்று எம்பெருமான், திருமூழிக்களத்து விளக்கு, திருவித்துவக்கோட்டு அம்மான் ஆகிய மூன்று கட்டுரைகளையும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் வெளியிடும் ‘சப்தகிரி’ என்னும் திங்கள் இதழில் வெளிவந்தன. திருக்காட்கரை அப்பன் என்னும் கட்டுரை பொள்ளாச்சி வரதராஜப் பெருமாள் கோயில் குடமுழுக்குவிழா மலரில் வெளிவந்தன. திருவண்பரிசாரத்து திருவாழ்மார்பன் என்னும் கட்டுரை பெங்களூர் – ஜயநகர் அரங்கமன்னார் – ஆண்டாள் ஆலயக் குடமுழுக்குவிழா மலரில் வெளிவந்தன.

இறுதியில் ந.சுப்புரெட்டியார் மலைநாட்டுத் திவ்விய தேசங்களைப் பற்றி எழுதிய பதின்மூன்று கட்டுரைகளையும் தொகுத்து **மலைநாட்டுத் திருப்பதிகள்** என்ற முழுநூலாக 1971 இல் வெளியிட்டார்.

5. திறனாய்வு படைப்புகளில் ந.சுப்புரெட்டியார்

தமிழ் இலக்கிய உலகில் தற்போது திறனாய்வுக்கு மிக முக்கிய இடம் உள்ளது. திறனாய்வானது மதிப்பீட்டைக் கொண்டது. நூல்களை மதிப்பீடு செய்பவர்களின் எண்ணிக்கை தற்போதைய காலத்தில் அதிகமாகவே காணப்படுகிறது. “திறனாய்வு என்ற சொல், திறனை ஆய்தல் என்ற பொருளில் ஒரு தொகை சொல்லாக உருவாக்கம் பெற்றது”[10].

திறனாய்வு ஒரு தனித்துறையாகவே உருவெடுத்து ஆய்வுலகினைச் செம்மைசெய்கிறது. திறனாய்வுகளைத் திறனாய்வாளர்கள் மேற்கொள்கின்றனர். அத்தகைய திறனாய்வாளர்களில் ந.சுப்புரெட்டியாரும் தம் பங்களிப்பினைச் செலுத்தியுள்ளார் என்பது அவருடைய திறனாய்வு படைப்புகள் விளக்குகின்றது.

திறனாய்வு படைப்புகளைப் பொறுத்த அளவில் ந.சுப்புரெட்டியாரின் பார்வையானது; இலக்கிய நயம் காணல், இலக்கியச் சுவைகளை எடுத்துக்

காட்டுதல், கவிதை நயம் காணல், சொல்லாட்சித் திறனைச் சுட்டிக் காட்டுதல், உட்பொருள் விளக்கம் கூறல் தத்துவ சிந்தனைகளை வாழ்க்கைக்குப் பயன்படுமாறு பொருத்திக்காட்டுதல், கற்பனை வளத்தைப் பாராட்டுதல் என்னும் முறைகளில் அமைந்திருக்கிறது. ந.சுப்புரெட்டியார் இருபதுக்கும் மேற்பட்ட திறனாய்வு படைப்புகளை அருளியுள்ளார். அத்தகைய அருள் கொடைகளை அட்டவணையில் காணலாம்.

	திறனாய்வு நூல்கள்
1	மூவர் தேவாரம்
2	பல்சுவை இலக்கிய விருந்து
3	கவிதை அனுபவம்
4	பாட்டுத் திறன்
5	தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
6	அகத்திணைக் கொள்கைகள்
7	கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்
8	பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியங்கள்
9	அண்ணல் அநுமன் (2003)
10	புதுக்கவிதை நோக்கும் போக்கும் (1983)
11	கண்ணன் பாட்டுத் திறன் (1982)
12	பாஞ்சாலி சபதம் – ஒரு நோக்கு (1982)
13	குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு (1982)
14	பாரதீயம் (1983)
15	ஆழ்வார்கள் ஆரா அமுது (1987)
16	விட்டுசித்தன் விரித்த தமிழ் (1987)
17	சடகோபன் செந்தமிழ்
18	பரகாலன் பைந்தமிழ் (1992)
19	பாவேந்தர் பாட்டுத்திறன் (2001)
20	பாண்டியன் பரிசு ஒரு மதிப்பீடு (2002)
21	கவிஞர் வாலியின் அவதார புருஷன் – ஒரு மதிப்பீடு (1997)

22	கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி – ஒரு மதிப்பீடு (2002)
23	அறிவியல் நோக்கில் இலக்கியம் சமயம் தத்துவம்
24	இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்
25	கவிமணியின் தமிழ்ப்பணி – ஒரு மதிப்பீடு
26	மூவர் தேவாரம் – ஒரு புதிய பார்வை (2003)
27	வாழும் கவிஞர்கள்
28	தந்தை பெரியார் சிந்தனைகள்
29	பல்சுவை விருந்து

ஆகிய திறனாய்வு நூல்களைப் படைத்துள்ளார். பாரதியாரின் கவிதை பற்றிய 'பாரதீயம்' என்ற திறனாய்வு நூலுக்குத் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது.

"திறனாய்வு என்னும் துறையில், ஒரு படைப்பு வெளிவந்த உடனே அதை மதிப்பீடு செய்து நூலாக்கும் புரட்சியை உருவாக்கியவர் பேராசிரியர், 'கவிஞர் வாலியின் அவதார புருஷன் – ஒரு மதிப்பீடு', 'கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி – ஒரு மதிப்பீடு' என்னும் இரு நூல்களும், புதுமைப் பாதையில் அவர் நடைபோட்டதற்கு எடுத்துக் காட்டுகளாகும். நூல் 272 பக்கம், மதிப்பீடு 352 பக்கம் என்பதால் இத்திறனாய்வு மதிபீட்டு நூல் பொருத்தமும் தகுதியும் உடையதாகவே அமைந்துள்ளது என்கிறார் மு.மு.இஸ்மாயில்"[11]. ந.சுப்புரெட்டியாரின் திறானாய்வு பணியானது பன்முக நோக்கில் பரவிக் காணப்படுகிறது.

6. வரலாறு நூல்கள் மற்றும் தன்வரலாறு நூல்களில் ந.சுப்புரெட்டியார்

ந.சுப்புரெட்டியார் பல்துறை வித்தகர் என்பதற்கு இவருடைய நூல்களே ஆதாரம் எனலாம். அவருடைய பரந்துபட்ட பார்வையால் கால் பதிக்காத துறைகளே இல்லை. அத்தகைய ஆளுமையைக் கொண்ட ந.சுப்புரெட்டியார் வரலாற்று துறைகளிலும் தம் பங்களிப்பினை ஆற்றியுள்ளார். அதோடு தம்வரலாறுகளையும் படைத்துள்ளார். இவற்றை அட்டவணைப்படுத்திக் காணலாம்.

	வரலாற்று நூல்கள்	தன்வரலாற்று நூல்கள்
1	வேமனார்	நினைவுக்குமிழிகள் – முதற்பகுதி
2	குரஜாட	நினைவுக்குமிழிகள் – இரண்டாம் பகுதி
3	சி.ஆர்.ரெட்டி	நினைவுக்குமிழிகள் – மூன்றாம் பகுதி
4	தாயுமான அடிகள்	நினைவுக்குமிழிகள் – நான்காம் பகுதி
5	பட்டினத்தார்	மலரும் நினைவுகள்
6	பிரதிவாதி பயங்கரம்	நீங்காத நினைவுகள்
7	அண்ணங்கராசாரிய சுவாமிகள்	
8	தமிழ்க்கடல் ராய.சொ.	
9	முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன்	

வரலாற்று நூல்கள் அனைத்தும் அவர்களின் வாழ்வியல் கூறுகளையும், வாழ்க்கை முறைகளையும் பற்றி அறிந்துகொள்ள மிகவும் பயனுள்ளமையாகக் காணப்படுகிறது.

தன்வரலாறு நூல்கள் என்பது தன் வாழ்க்கைப் பகுதியில் நடந்த நிகழ்வுகளைப் பதிவு செய்யும் விதமாகப் படைக்கப்படுவதாகும். இந்த வகையிலே ந.சுப்புரெட்டியாரும் தம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை ‘நினைவுக்குமிழிகள்’ என்னும் பெயரில் நான்கு பகுதிகளாகப் படைத்துள்ளார். ‘மலரும் நினைவுகள்’ என்னும் நூல், வரலாற்றுப் பெட்டகமாக இல்லாமல், இலக்கிய மேற்கோள்களுடன் இனிய காவியமாக விளங்குகிறது.

7. அறிவியல் படைப்புகளில் ந.சுப்புரெட்டியார்

தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்லாது அறிவியலிலும் ஆழங்கால் பட்டவர். காரணம் அவர் கல்லூரி படிப்பினை அறிவியல் சார்ந்து படித்தமையாலும், இளமையில் அவருக்கு இருந்த கல்வி ஞானமும் என்றும் கூறலாம்.

ந.சுப்புரெட்டியாரின் அறிவியல் துறையினைச் சார்ந்த படைப்பாக்கங்களை அட்டவணையில் காணலாம்.

	அறிவியல் படைப்புகள்
1	மானிட உடல் (1958)
2	அணுவும் ஆக்கமும் (1958)
3	இளைஞர் வானொலி (1962)
4	இளைஞர் தொலைக்காட்சி (1966)
5	அதிசய மின்னணு (1963)
6	தமது உடல் (1974)
7	இராக்கெட்டுகள் (1764)
8	அம்புலிப் பயணம் (1973)
9	தொலை உலகச் செலவு (1976)
10	அணுக்கரு பௌதிகள் (1966)
11	இல்லற நெறி (1964)
12	வாழையடி வாழை (1984)
13	வானமண்டலக் காட்சி
14	அறிவியல் விருந்து
15	தமிழில் அறிவியல் அன்றும் இன்றும் (1990)

இந்நூல்களில் 'தமது உடல்' மற்றும் 'இராக்கெட்டுகள்' என்னும் நூலுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் விருதினை 'அணுக்கரு பௌதிகள்' என்னும் நூல் பெற்றுள்ளது.

தற்போது காணப்படக்கூடிய உலகம் அறிவியல் மயமானது. நாம் எந்த பொருளினைப் பயன் படுத்தினாலும் அவற்றில் அறிவியல் வேலைப்பாடில்லாமல் காணப்படுவது அரிதான ஒன்று. காலத்தின் கட்டாயத்திற்கும், நவீன வளர்ச்சிக்கும் அறிவியல் அடிப்படையானவையாக இருந்து வருகிறது. அறிவியலிலும், நமது அன்றாட நிகழ்வுகளிலும் தகவல் தொழில் நுட்பம் என்பது மிகவும் அடிப்படை

தேவையாக உள்ளது. இதனை மனதில் கொண்டே 'இளைஞர் வானொலி', 'இளைஞர் தொலைக்காட்சி' போன்ற நூல்களைப் படைத்துள்ளார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் விருதினை 'அறிவியல் விருந்து' என்னும் நூல் பெற்றுள்ளது. ந.சுப்புரெட்டியார் ஆங்கில நூலான Nuclear Physics என்ற ஆங்கில நூலினை மூலமொழியாக எடுத்துக்கொண்டு தமிழ் மொழியில் 'அணுக்கரு பௌதிகம்' என்னும் பெறுமொழிநூலாகப் படைத்தார். இவ்வாறு மொழிபெயர்த்ததன் விளைவாகச் சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான விருதினையும் பெற்றார்.

8. ஆராய்சி படைப்புகளில் ந.சுப்புரெட்டியார்

ந.சுப்புரெட்டியார் தம் வாழ்நாளில் அனேக நாட்களைக் கல்விக்காகப் பயன்படுத்தியர். அத்தகைய பெருந்தகை கால் பதிக்காத தளங்கள் அரிது என்றே கூறலாம். அவர் ஆராய்ச்சி நூல்களையும் தந்தருளியுள்ளார். ஆராய்ச்சியின் பயனானது பாமர மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதே ந.சுப்புரெட்டியாரின் நோக்கமாகும். அதனை அட்டவணையில் காணலாம்.

ஆராய்ச்சி படைப்புகள்	
1	கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
2	வைணவச் செல்வன் (தொகுதி -1)
3	வைணவச் செல்வன் (தொகுதி - 2)
4	வடவேங்கடமும் திருவேங்கடமும்
5	Religion and philosophy of Nalayira Divya Prabandam with special reference to Nammalvar
6	Studies in Arts and Science
7	Collected Papers

ந.சுப்புரெட்டியார் படைத்த நூல்கள் அனைத்துமே ஆராய்ச்சி நூலாக இருப்பினும், 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி', 'வைணவச் செல்வம்' -முதல், இரண்டு

தொகுதிகள்(தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு), ‘வடவேங்கடமும் திருவேங்கடமும்’ ஆகிய நூல்கள் முழுமையான மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல்களாக விளங்குகின்றன.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து முனைவர் பட்டத்தினைப் பெற்றார். இந்த ஆய்வானது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து Religion and philosophy of Nalayira Divya Prabandam with special reference to Nammalvar என்னும் பெயரில், திருவேங்கடம் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடப்பட்டது.

ந.சுப்புரெட்டியார் பெற்ற விருதுகள்

ந.சுப்புரெட்டியாரின் படைப்புலகம் விரிந்து பரந்துபட்டது. அவரின் உழைப்பினைப் பாராட்டி பல்வேறு விருதுகளும் பாராட்டுக்களும் பல்வேறு துறைகளின் சார்பாகக் கொடுத்து சிறப்பித்திருக்கின்றனர்.

- தமிழக அரசின் கலை மாமணிவிருது
- தமிழக அரசின் திரு.வி.க. விருது
- தினத்தந்தி சி.பா.ஆதித்தனார் விருது
- மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் டி.லிட். பட்டம்
- மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேரவைச் செம்மல் என்னும் விருது
- ஆழ்வார் ஆய்வு மையத்தின் இராமானுஜர் விருது
- கம்பன் கழகத்தின் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருது
- ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் விருது
- உலகத் திருக்குறள் மையத்தின் திருக்குறள் விருது
- குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் அருள்கலைக்கோன் பட்டம்
- பண்ருட்டி வைணவ சபை வழங்கிய ஸ்ரீசடகோபன் பொன்னடி என்னும் விருது

- ❖ சேவாரத்னா விருது
- ❖ ஆய்வுத் தமிழரசு விருது
- ❖ பொதுமறைச் செம்மல் விருது
- ❖ தமிழ்வாகைச் செம்மல் விருது

எனப் பல விருதுகளையும் பெற்றிருக்கின்றார். இவ்விருதுகள் அனைத்தும் அவரின் விடாமுயற்கிக்குக் கிடைத்த ஊதியம் என்றே கூறலாம்.

ந.சுப்புரெட்டியாரின் இறுதி காலம்

ந.சுப்புரெட்டியார் தனது படைப்புகளினால் உயர்ந்த இடத்தினை அடைந்துள்ளார். தம் வாழ்நாளினை நூல்கள் படைப்பதிலேயே அனேக நாட்களைச் செலவளித்தார். தன்னுடைய இறுதிக்காலம் வரை நூல்கள் படைக்கும் பணியைத் தொடர்ந்து கொண்டே இருந்தார். 135 நூல்களைப் படைத்தருளிய 90 வயதை எட்டிய ந.சுப்புரெட்டியார் 1 – 5 – 2006 ஆம் ஆண்டில் அதிகாலையில் இறைவனடி சேர்ந்தார். அண்ணாரின் பெயரில் பல கல்விநிறுவனங்களில் விழாக்களும் நடத்தப்படுகின்றன. பல நிறுவனங்களில் ந.சுப்புரெட்டியாரின் பெயரில் அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன என்பன குறிப்பிடத்தக்கது.

தொகுப்புரை

- ❖ ந.சுப்புரெட்டியார் பல்துறை சார்ந்த வித்தகராக விளங்கியிருக்கின்றார் என்பதும் இவ்வியலின் மூலம் அறியலாம்.
- ❖ பள்ளி ஆசிரியராகத் தனது பணியினைத் துவங்கி, பல்கலைக்கழகப் பேராசிரியராக வளர்ந்தார் என்பதும், அவர் பணியாற்றிய நிறுவனங்களில் அண்ணாரின் பங்களிப்பு எவ்வாறெல்லாம் அமைந்துள்ளன என்பதனையும் பற்றி அறிந்து கொள்ளமுடிகிறது.
- ❖ கல்வி பயிலும் மாணவர்களுக்காக அதிக நூல்களைப் படைத்துள்ளார் என்பது அவரது படைப்புகள் தெரிவிக்கின்றன.
- ❖ ந.சுப்புரெட்டியார் தன் வாழ்நாளில் மொத்தம் 135 நூல்களைப் படைத்துள்ளார் என்பது இவ்வியலின் மூலம் அறியலாம். அந்நூல்கள் அனைத்தும் அட்டவணைப் படுத்தி இவ்வியலில் காட்டப்பட்டுள்ளது.
- ❖ தமிழ் மொழி மீது அதிக ஈடுபாடு கொண்டவராய்த் திகழ்ந்தார். மேலும், ஆங்கில மொழியில் நூல்களையும் படைத்துள்ளார் என்பதும் இவ்வியலின் மூலம் அறிந்துக்கொள்ளலாம்.
- ❖ ந.சுப்புரெட்டியார் சிறந்த படைப்பாளி மட்டுமல்லாது சிறந்த பண்பாளனாகவும் திகழ்தார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. காரணம் அவரின் செயற்பாடுகளும், அவரின் படைப்புகளும் உண்மைத் தன்மையை வெளிக்காட்டுகிறது.
- ❖ தம் ஓய்வு நேரத்தினையும் பயனுள்ளமையாக அமைத்துக்கொண்டு தனது படைப்புலகை விரிவுப்படுத்தியுள்ளார் என்பது அறிய முடிகிறது.
- ❖ ந.சுப்புரெட்டியாரின் பல நூல்கள் தமிழ அரசின் சிறந்த படைப்புக்கான விருதினைப் பெற்றுள்ளது. அதோடு பல்வேறு விருதுகளும் பெற்றுள்ளார் என்பது அறியமுடிகிறது.

- ❖ திருத்தலங்களுக்குச் செல்வதில் அதிக ஆர்வம் கொண்டவராய்த் திகழ்ந்தார் என்பது, அதனைக் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டு நூலாக்கம் செய்துள்ளார் என்பதும் நம்மால் அறிய முடிகிறது.
- ❖ ந.சுப்புரெட்டியார் திறனாய்வு, சமயம், தத்துவம், வரலாறு, தன்வரலாறு, அறிவியல், உளவியல், ஆசிரியர், இலக்கியம், ஆராய்ச்சி என்பன போன்று பல்வேறு துறைகளில் கால்பதித்துள்ளார் என்பதும் இவ்வியலில் அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார், நினைவுக்குமிழிகள், பக். 19 - 20
2. இரா.காமராசு, ந.சுப்புரெட்டியாரின் பன்முகம், ப. 158
3. மேலது., ப. 29
4. மேலது., ப. 29
5. மேலது., ப. 29
6. மேலது., ப. 10
7. மேலது., ப. 79
8. மேலது., ப. 17
9. மேலது., ப. 17
10. தி.சு.நடராசன், திறனாய்வுக்கலை, ப. 5
11. இரா.காமராசு, ந.சுப்புரெட்டியாரின் பன்முகம், ப. 15

இயல் – 2

மலைநாட்டுத் திருப்பதிகளின் அமைப்பும் பெயர்க்காரணமும்

மலைநாடு என்பது சேரநாட்டைக் குறிக்கிறது. சேரநாடு தற்போது கேரள மாநிலமாகத் திகழ்கிறது. சோழநாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து, சேரநாடு வேழமுடைத்து. சேரநாடானது வேழத்திற்கு மட்டுமல்லாது இயற்கையையும் தன்னகத்தே கொண்டு சிறப்புப் பெற்றுக் காணப்படுகிறது. அத்தகைய சிறப்புபெற்ற மலைநாட்டில் அமைந்துள்ள திருப்பதிகளை மலைநாட்டுத் திருப்பதிகள் என்று அழைக்கின்றனர்.

இம்மலைநாட்டில் அமைந்துள்ள திருப்பதிகளின் அமைப்பு முறைகளையும் திருத்தலங்களின் பெயர்க்காரணங்களையும், கோயில் அமைந்துள்ள இடத்தின் சிறப்புகளும், தலங்களைச் சுற்றிலும் உள்ள இடத்தின் இயற்கை வளங்களையும், கோயிலின் சடங்கு முறைகள், முக்கிய விழாக்கள் போன்றவைகளும், தலத்தின் புராண வரலாறுகளையும், தலத்தின் தொன்மைகளையும், தலத்தினைச் சார்ந்த இலக்கியச் செய்திகளையும், அரசர்களின் திருத்தொண்டும், மலைநாட்டுத் திருப்பதிகளின் சிறப்புகளும், ஆழ்வார்களின் திருத்தலப் பங்கு போன்றவைப் பற்றி “மலைநாட்டுத் திருப்பதிகளின் அமைப்பும் பெயர்க்காரணமும்” என்னும் இவ்வியலில் ஆராயப்படுகிறது.

திவ்விய தேசங்கள்

திருமால் குடிக்கொண்டுள்ள தலங்களை ஏழு வகைகளில் பிரித்துக்கூறலாம். அவையாவன, 1) ஆர்ஷம், 2) பௌராணியம், 3) ஸ்வயம் வ்யக்த தலம், 4) தைவம், 5) மானவம், 6) அபிமானஸ்தலம் 7) திவ்விய தேசம் என்பவையாகும். முனிவர்கள் உருவாக்கிய தலங்களை ‘ஆர்ஷம்’ என்றும், புராணங்களில் கூறப்படும்

தலங்களைப் ‘பௌவுராணிகம்’ என்றும், மானுடர்களால் தோற்றுவிக்கப்படாதவை ‘ஸ்வயம் வ்யக்த தலம்’ அல்லது ‘சைத்தம்’ என்றும், தேவர்களால் உருவாக்கப்பட்டவை ‘தைவம்’ என்றும், மன்னர்களாலும் அடியார்களாலும் உருவாக்கப்பட்டத் தலங்கள் ‘மானவம்’ என்றும், ஆச்சார்யர்களால் உருவாக்கப்பட்ட தலம் ‘அபிமானஸ்தலம்’ என்றும், பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்டவை ‘திவ்விய தேசம்’ என்றும் கூறப்படுகிறது.

பொதுவாக நாம் பாடல் என்று குறிப்பிடுவதை வைணவர்கள் பாசுரம் என்றே குறிப்பிடுகின்றனர். பத்து அல்லது பதினொரு பாசுரங்கள் கொண்ட பதிகத்தைத் திருமொழி என்றும், ஆழ்வார்களால் பாடல் பெற்ற வைணவத் திருத்தலங்களை (கோயில்களை) மங்களாசாசனம் செய்தருளிய திருப்பதிகள் என்றும் அழைக்கின்றனர். “மங்களாசாசனம்” என்பது மங்களங்களை வேண்டுதல் என்பதுபொருள். இறைவனுக்கு ஒரு குறையும் வரக்கூடாது என்று அந்த இறைவனுக்கே மங்களங்களை வேண்டுதல் மங்களாசாசனம் எனப்படுகின்றது.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடியுள்ள ‘நூற்றியெட்டுத் திருப்பதி அந்தாதி’ என்னும் நூலில் வைணவத் திருப்பதிகள் – வைணவ திவ்விய தேசங்கள் நூற்றியெட்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஈரிருப தாம்சோழனம் ஈரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு ஓரிடண்டாம் – சீர்நடுநாடு
ஆறோடு ஈர்எட்டு தொண்டை அவ்வடநாடு
கூறுதிரு நாடுஒன்றாக் கொள்”[1]

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்வியதேசங்களின் எண்ணிக்கை மொத்தம் 108 ஆகும். அவையாவன, சோழநாட்டில் 40 திவ்வியதேசங்கள், பாண்டிய நாட்டில் 18 திவ்வியதேசங்கள், மலைநாட்டில் 13 திவ்வியதேசங்கள், நடுநாட்டில் 2 திவ்விய தேசங்கள், தொண்டைநாட்டில் 22 திவ்வியதேசங்கள், வடநாட்டில் 12 திவ்வியதேசங்கள், திருநாட்டில் 1 திவ்வியதேசம்

அமைந்திருக்கின்றன. இந்த 108 திவ்வியதேசங்களில் 106 தலங்கள் இம்மண்ணுலகிலும், ஒன்று திருபாற்கடலிலும், மற்றொன்று விண்ணுலகிலும்(வைகுண்டம்) காணப்படுகிறது. 108 திவ்வியதேசங்களில் 95 தலங்கள் தென்னகத்தில் அமைந்திருக்கின்றன.

மலைநாட்டுத் திருப்பதிகள்

சேரநாட்டுப் பகுதியே மலைநாடு என்று குறிப்பிடப்படுகிறது. தற்போது சேரநாட்டுப்பகுதிகள் கேரள மாநிலமாக விளங்குகிறது. மலைநாடானது வளம்பொருந்திய நாடு. காரணம் அங்கு நிலவக்கூடிய இயற்கைச் சூழலே ஆகும். அத்தகையச் சிறப்புகளை உள்ளடக்கிய மலைநாட்டில் அமைந்திருக்கும் திருப்பதிகள் மொத்தம் 13 ஆகும்.

“வடக்குத் திசைப்பழநி வான்கீழ் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கூடாம் – கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட்டிற் கெல்லையெனச் செப்பு”[2]

என்னும் மூலம் தெரியாத பழம்பாடல் ஒன்றில் மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றினையும் கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன, 1)திருவனந்தபுரம், 2)திருவண்பரிசாரம், 3)திருக்காட்கரை, 4)திருமூழிக்களம், 5)திருப்புலியூர், 6)திருச்செங்குன்றூர் 7)திருநாவாய், 8)திருவல்லவாழ், 9)திருவண்வண்டூர், 10)திருவட்டாறு, 11)திருவித்துவக்கோடு, 12)திருக்கடித்தானம், 13)திருவாறன்விளை ஆகியன. இப்பதின்மூன்று திருப்பதிகளில் திருவண்பரிசாரம், திருவட்டாறு ஆகிய இரண்டு திருப்பதிகள் மட்டும் தமிழகத்தில் கடைக்கோடியில், முக்கடலும் சங்கமிக்கும் குமரியில் அமைந்திருக்கிறது.

1. திருவண்பரிசாரத்துத் திருவாழ்மார்பன்

இயற்கை வளங்களை உள்ளடக்கியதாக அமைந்திருப்பது மலைநாடு. திருவண்பரிசாரம் என்னும் திருத்தலமானது மலைநாட்டுத் திருப்பதிகளில்

ஒன்றாகும். இத்தலம் 108 திவ்வியதேசங்களில் 77- வது தலமாகவும் விளங்குகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவண்பரிசாரத்து இறைவனுக்கு மட்டுமே ஊஞ்சல் சேவை நடத்தப்படுகிறது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

இயற்கை அன்னையின் வரப்பிரசாதமாகக் கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலப்பகுதி அமைந்திருக்கிறது. இம்மாவட்டத்தின் மற்றொரு சிறப்பு பல்வேறு சமய ஒற்றுமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் திருத்தலங்கள் அமைந்துள்ளதாகும். அத்தகைய சிறப்புமிக்க திருத்தலங்களின் வரிசையிலே இடம்பெற்றிள்ளது திருவண்பரிசாரம். இத்தலமானது கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலை அடுத்து நான்கு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மலைநாட்டுக் கோயில்களின் ‘களை’ இங்கு தென்படுகின்றது.

இதற்குக் காரணம், மலைநாடு என்றாலே செல்வச் செழிப்பான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது எனலாம். இத்தலத்திலே தூய்மை, அமைதி, ஒழுங்கு முதலிய பண்புகளைக் காணமுடிகிறது. மலைநாட்டு வளமும் இயற்கைச்சூழலும் இங்கு தலைக்காட்டத் தொடங்கிவிடுகின்றன. மலைநாடு நீர் வளமிக்கநாடு என்பதனால் அங்கு நீருக்கும் பஞ்சமில்லை. பளிங்குபோன்ற தூய்மையான நீர் நிறைந்த குளமும் கோயிலின் முன்பகுதியில் காணப்படுகிறது.

ஆ) திருத்தலத்தின் பெயர்க் காரணம்

இத்திருத்தலத்து இறைவனானவன் ‘திரு’வாகிய இலட்சுமியைத் தனது உடம்பில் ஆட்கொண்ட காரணத்தால் ‘திருவண்பரிசாரம்’ என்ற பெயரினைப் பெற்றது. பின்பு ‘திருவண்பரிசாரம்’ என்பது ‘திருப்பரிசாரம்’ என்று திரிந்து தற்போது ‘திருப்பதிசாரம்’ என்றே அழைக்கப்படுகிறது. இத்தலத்திற்குத் திருவாழ்மார்பன் (திரு+வாழ்+மார்பன்) என்னும் பெயரின் மூலம் ‘திருவண்பரிசாரம்’ என்று வந்திருக்கிறது. திருவண்பரிசாரத்து எம்பெருமானைத் தொழுதால் திருப்பதி எம்பெருமானைச் சேவிக்கும் பலன் கிடைக்கும் என்ற

நம்பிக்கையானது இப்பகுதிமக்களிடம் காலம்காலமாக வேரூன்றி காணப்படுவதனைப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தனது மலைநாட்டுத் திருப்பதிகள் என்ற நூலில் குறிப்பிட்டுக்காட்டுகின்றார். இந்த நம்பிக்கையால் ‘திருவண்பரிசாரம்’ என்ற திவ்விய தேசத்தின் பெயர் ‘திருப்பதிசாரம்’ என்றே அம்மக்களிடம் நிலைத்து விட்டது.

இ) திருவாழ்மார்பனும் ஆழ்வாரும்

வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தவர் நம்மாழ்வார். பல்வேறு அற்புதங்களை உள்ளடக்கிய நம்மாழ்வாரே இத்திருவண்பரிசாரத்து இறைவனைப் பற்றி ஒரு மங்களாசாசனப் பாடலைப் பாடியுள்ளார். நம்மாழ்வாரின் தாயாகிய உடையநங்கை இத்தலத்திலே பிறந்தார். நம்மாழ்வார் அவதாரம் செய்வதற்கு வித்திட்ட தலம் திருவண்பரிசாரம் ஆகும். உடையநங்கையின் பெற்றோரும் இத்தலத்திலே வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இறைவன்மீது அளவுகடந்த பக்தியைக்கொண்ட உடையநங்கை திருக்குருகூரைச் சேர்ந்த காரி என்ற விஷ்ணு பக்தனை மணந்துகொண்டார். உடையநங்கை குழந்தை வரம் வேண்டி இத்தலத்திலே 41 நாட்கள் கடும் விரதமிருந்து இறைவனுக்கு ஊஞ்சல் திருவிழாவினை நடத்தி கலி 43-வது நாள் நம்மாழ்வாரைப் பெற்றெடுத்தார். இறைவன் அருளினை உடையநங்கையின் கருவில் இருக்கும்போதே பெற்றவர்தான் நம்மாழ்வார் என்பது இதன்மூலம் நாம் உணரலாம். உடையநங்கையின் தந்தையின் பெயரும் திருவாழ்மார்பன் என்பதாகும். நம்மாழ்வாரின் தாயார் பிறந்த வீடானது தற்போது ஒரு பஜனை மடமாகவும் திகழ்கின்றது.

குழந்தையாக இருந்த நம்மாழ்வாரை, ஆழ்வார் திருநகரியில் உள்ள ஆதிபிரான் சன்னதியில் விட, அவர் தவழ்ந்து சென்று புளிய மரத்தின் பொந்திற்குள் புகுந்து யோக முத்திரையுடன் பத்மாஸன யோகத்தில் ஆழ்வாராய்

அமர்ந்தார். இக்கோயிலில் இன்றும் நம்மாழ்வார் குழந்தையாகத் தவழ்வது போன்ற சிலை ஒன்றும் காணப்படுகின்றது.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருவண்பரிசாரத்து இறைவனைத் திருவாழ்மார்பன் என்றும், திருக்குறளப்பன் என்றும் அழைக்கின்றனர். திருவாழ்மார்பன் கிழக்கே திருமுகம் பார்த்தவண்ணம், ஏழு அடி உயரத்தில் நான்கு கரங்களுடன் சங்கு சக்கர தாரியாக வலது காலை மடக்கியும், இடது காலைத் தொங்கவிட்டும் அமர்ந்திருக்கின்றார். திருத்தலத்து இறைவியின் பெயர் கமலவல்லி நாச்சியார் ஆகும்.

இத்திருத்தலத்து மூலவர் தனிச்சிறப்பு பெற்று விளங்குகிறார். காரணம் மூலவர் கடுகு, சர்க்கரை மற்றும் மலைதேசத்து மூலிகைகளால் செய்யப்பட்டிருப்பதேயாகும். இதன்காரணமாக இறைவனுக்குத் திருமஞ்சனம் என்பது கிடையாது. இத்திருத்தலத்தில் இறைவனானவன் நம்மாழ்வாருக்கும் அவரது பெற்றோர்களான காரி, உடையநங்கை ஆகிய இருவர்களுக்கும் நேரில் காட்சியருளினார்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் குலசேகர ராஜன் என்ற அரசன் இத்தலத்தைப் புதுப்பித்தார் என்றும் சொல்லப்படுகிறது. திருவண்பரிசாரம் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஒற்றைக்கல் மண்டபம் ஆகிய மண்டபங்களைக் கொண்டுள்ளது. கோயில் கருவறையின் வலது பக்கம் இராமன், சீதை, அனுமன், இலட்சுமணன் ஆகியோருக்குத் தனித்தனி சன்னதிகள் அமைந்துள்ளன.

கருவறைச்சுற்றில் கன்னிமூல விநாயகர் சிலை உள்ளது. கொடிமரத்தின் பக்கத்திலே பெரிய பலிபீடமும், கோவிலுக்கு வெளியே சோமதீர்த்தம் அமைந்துள்ளது. கோயிலுக்கு வெளியே வடக்குப்பகுதியில் உடையநங்கையார் அவதரித்தார் என்று கூறப்படும் பகுதியுள்ளது. மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருமதில் சுவர்களிலும், உள்சுற்றுச்சுவர்களிலும் திருமண்காப்பிட்டதை இந்தத்

திருப்பதியில் மட்டுமே காணமுடிகிறது. இத்திருத்தலத்தின் அமைப்பானது வடகலை அமைப்பு முறையில் அமைந்திருக்கிறது.

இத்தலத்திலே அனுமன் வேண்டுகோளுக்கு இணங்க அகத்திய முனிவர் இராமாயணம் ஒன்றினைப் படைத்ததாகவும் தலவரலாறு கூறுகின்றது. இத்திருப்பதியில் தீர்த்தம் வழங்கும் வழக்கமும் நடைமுறையில் உள்ளது. கோயில் விமானம் இந்திரகல்யாண விமானம் ஆகும். திருமால் குலசேகர ஆழ்வாரை வைகுண்டத்துக்கு அழைத்துச் சென்ற ஆடி சுவாதி திருநாளினை மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் திருவிழா கொண்டாடப்படுகிறது.

2. திருவட்டாற்று எம்பெருமான்

மலைநாட்டு திருப்பதிகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள முதல் திருத்தலம் திருவண்பரிசாரம், இரண்டாவது திருத்தலம் திருவட்டாறு. இத்திருத்தலம் 108 திவ்விய தேசங்களில் 76- வது திவ்விய தேசமாக விளங்குகிறது. திருவட்டாறு திருத்தலமானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுக் காலம் தொடங்கி இன்று வரை சிறந்த புண்ணியத்தலமாகவும், பல்வேறு கலை நுணுக்கங்களையும், வரலாற்றுச் செய்திகளையும், இலக்கியச் சான்றுகளையும் உள்ளடக்கிய தகவல் பெட்டகமாகவும் விளங்குகிறது.

கேரள நாட்டின் கட்டிடக்கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகவும் இத்தலம் அமைந்திருக்கிறது. இத்தலத்தைப் பற்றியச் செய்திகள் பிரம்மாண்ட புராணத்திலும், கருட புராணத்திலும் காணப்படுகிறது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

நீரினால் சூழப்பட்டிருக்கும் திருவட்டாற்றுத் திருத்தலம் நாகர்கோவிலிலிருந்து பதினாறு கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது. இத்திருத்தலத்திற்குச் செல்லும் பொழுது வழியெங்கும் தோட்டங்களும், சோலைகளும், வயல்களும், ஆறுகளும் எனப் பலதரப்பட்ட வளங்களை ஒரே

இடத்தில் காணலாம். அதுமட்டுமின்றி ஆறுகளிலிருந்து பிரிந்து சென்று நிலத்தினை வளமாக்கும் கால்வாய்களையும் காணலாம். திருவட்டாறுத் திருத்தலத்தின் செழிப்பிற்குக் காரணம் நீர் என்றே கூறலாம்.

ஆ) திருத்தலத்தின் பெயர்க்காரணம்

திருவட்டாற்றுத் திருத்தலத்திற்கு இப்பெயர்வரக்காரணம், பிரம்மன் ஒரு யாகம் செய்ய வேள்வியைத் தோற்றுவித்தார். அப்போது வேள்வியிலிருந்து தோன்றிய கேசன், கேசி என்ற இரு அரக்கர்கள் பிரம்மாவை வேள்வி செய்ய விடாமல் இடையூறு செய்துக்கொண்டிருந்தனர். அதோடு மட்டுமல்லாது விண்ணுலகிலுள்ள தேவர்களுக்கும் துன்பத்தை விளைவித்தார்கள். அனைவரும் சென்று இறைவனான திருமாலிடம் முறையிட, திருமால் கேசனைக் கொன்று கேசியைக் கீழே தள்ளி அவன் மீது படுத்துக்கொண்டான். அப்போது கேசியின் மனைவி கங்கையையும், தாமிரபரணியையும் துணைக்கு அழைக்க, அவ்விருவரும் வேகமாக ஓடிவர, அப்போது பூமாதேவியானவள் இறைவன் சயனித்திருந்த இடத்தினைப் பெரிய மேடாக மாற்றினார்.

இதனை உணர்ந்துகொண்ட நதிதேவதைகள் அவ்விடத்தைச் சுற்றி இரண்டு மாலைப்போன்று வட்டவடிவில் வந்தபடியால் இவ்விடத்திற்கு 'வாட்டாறு' எனப் பெயரை பெற்றது. இவ்விடத்தில் மாலைபோல் பிரியும் இவ்விரு ஆறுகளில் ஒன்றுக்குக் கோதை என்றும் மற்றொன்றுக்குப் பரளி என்றும் பெயர் உண்டாயிற்று என்பதனை தலவரலாறுகள் நமக்கு உணர்த்துகிறது. இவ்வாறாக ஆறானது வட்டமாகச் செல்வதால் இவ்வூரானது வாட்டாறு என்னும் பெயரைப்பெற்றதுடன், கி.பி.11 -ஆம் நூற்றாண்டு வரை வாட்டாறு என்ற பெயரிலே இவ்வூர் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. கி.பி. 11- ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே வாட்டாறு என்பதுடன் 'திரு' என்னும் அடைமொழி சேர்ந்து திருவட்டாறு என்றே அழைக்கப்பட்டிருக்கிறது.

இத்திருக்கோயில் மிக உயரமான இடத்தில் அமைந்திருக்கிறது. திருவட்டாற்று கோயிலின் மூன்று புறம் நீரும், கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் இவ்வூரினைப் பார்க்கும் போது மற்ற வைணவத் தலத்திலிருந்து இத்தலமானது தனித்துவிளங்குகிறது என்பதனை உணரலாம். இத்தகைய தனித்துவம் வாய்ந்த திருத்தலத்தினை ந.சுப்புரெட்டியாரும் நேரில் கண்டுகளித்து அதன் பெருமைகளை நமக்கு இட்டுச் செல்கிறார்.

திருமால் நிலை பெற்றுள்ள திருவட்டாறு ஊரானது மிகவும் பழமையானவையாகவும், சிறப்பினை உடையதாகவும் விளங்குகிறது. “திருவட்டாறு 1284-ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று ‘மதிலக கிரந்தம்’ என்னும் நூல் குறிப்பிடுகிறது”[3]. ஒவ்வொருத் திருத்தலமும் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு அமைந்திருக்கின்றதைக் காணலாம். அதுபோன்றே திருவட்டாற்றுத் தலத்திற்கும் பல சிறப்புகள் காணப்படுகின்றன.

திருவட்டாற்றுத் தலத்தின் சிறப்புக்கு மிகமுக்கிய காரணமாக பரளியாறு, கோதையாறும் விளங்குகிறது. அத்தகைய பெருமையை உடைய ஆறுகளின் கரையில் அமைந்துள்ள இந்த ஊருக்குப் பல பெயர்கள் உள்ளன. ஆதிதாமன விபனம், ஆதி அனந்தபுரம், தட்சண வைகுண்டம், தென் தமிழ்நாட்டு ஸ்ரீரங்கம் என்னும் பெயர்களை இந்த ஊர் ஸ்தலமகாத்மிய புராணங்களும், வாய்மொழி வழக்காறுகளும் குறிப்பிடுகின்றன.

ஆயினும் ஆதி அனந்தபுரம் என்னும் பெயரே பரவலாக அறியப்பட்டது. அனந்தன் சயனித்த இடம் என்ற பொருளில் இது வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியமுடிகிறது. மேலும் “கி.பி. 16-ம் நூற்றாண்டைச் சார்ந்த திருக்குருகைப் பிரான் எழுதிய மாறனலங்காரம் என்னும் நூலிலும் இத்திலத்தினைப் பற்றி கூறியிருக்கிறார்”[4] என்பதையும் அறியலாம்.

இ) ஆதிகேசவனும் ஆழ்வாரும்

திருவட்டாறு எம்பெருமானைப் பற்றி நம்மாழ்வார் மட்டுமே பதினொரு மங்களாசாசனப் பாடல்களைப் பாடியுள்ளார். நம்மாழ்வாரின் பாசுரங்களில், இத்தலத்தின் சிறப்புகளைக் கூறும் பாசுரங்கள் மிகவும் சுவையுடையதாய் அமைந்திருக்கின்றன. அதாவது, திருவட்டாறு செழிப்பானது, வளமுடையது, குளிர்ந்த நீர் நிறைந்தது, வைகுண்ட உலகிற்கு வழிகாட்டுவது, இரணியனை அழித்து நிலைப்பெற்றது, மலைப்போன்ற மாடத்தை உடையது, தென்னாட்டின் திலகம் போன்றது, பாம்பணைமேல் பள்ளிக்கொண்டது என்னும் கருத்துக்களை நம்மாழ்வாரின் பாசுரத்தின் மூலம் அறிய முடிகிறது.

திருவட்டாறு திருத்தலத்தை முதலில் பாடியவர் மாங்குடி மருதனார். இவர் இந்த இடத்தைச் செழிப்பான இடமாகக் குறிப்பிடுகின்றார். அதாவது இந்த ஊரானது வயல்கள் நிறைந்தது. குளத்து நீரின் கீழே மீன்கள் உலாவும். நீரின் மேற்பரப்பில் தாமரையும் குவளையும் பூத்திருக்கும். வயல்களில் நெற்மணிகள் விளைந்து நிற்கும். நெற்பயிரைக் கவர வரும் பறவைகளை ஓட்டப் பறை முழங்கும். மேலும் கடற்கரையிலிருந்து இப்பகுதிக்கு மெல்லிய காற்று வீசும் என்றெல்லாம் தமிழின் மிகத்தொன்மையான சங்க இலக்கிய நூலாகிய புறநானூற்றில் கூறப்பட்டிருக்கும் கருத்தினைக்கொண்டு இத்தலத்தின் சிறப்பினை உணரலாம். இதனையே,

“ கீழ்நீரான் மீன் வழங்குந்நு
மீநீரான் கண்ணன்ன மலர் பூக்குந்நு
கழி சுற்றிய விளை கழனி ” (புறநா. 396)

என்னும் புறநானூறு பாடலானது திருவட்டாற்றின் பெருமையை பறைசாற்றுகிறது. “சங்க காலத்தே சிறப்பாகப் பேசப்படும் ‘எழினி ஆதன்’ பிறந்த ஊர் இந்தத் திருவட்டாறுதான். புறநானூறு புரந்த எழினி ஆதன் என்று மாங்குடி கிழார் கூறுகிறார்”[5].

திருவட்டாற்றுத் தலத்தை முதலில் பாடியவர் மாங்குடி மருதனார் என்றாலும்; திருவட்டாறு எம்பெருமானை முதலில் மங்களாசாசனம் செய்தவர் நம்மாழ்வாரே ஆவர். மேலும் திருவட்டாறு பற்றிய குறிப்புகள் "கி.பி. 7 – ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படும் பாண்டிக்கோவை, கி.பி. 6 –ஆம் நூற்றாண்டு எனக்கருதப்படும் இறையனார் அகப்பொருள், கி.பி. 12 –ஆம் நூற்றாண்டு கலிங்கத்துப்பரணி"[6] ஆகியவற்றிலும் இருக்கின்றன. இதனை அ.கா.பெருமாள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நம்மாழ்வாரோ இவ்ஊரை வளநீர் என்றே குறிப்பிடுகின்றார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த மு.ராகவையங்கார் என்னும் தமிழ் அறிஞர் இந்த ஊரைப்பார்த்துவிட்டு கம்பன் பாடிய பஞ்சவடி போன்றது இக்கிராமம் என்றார். இந்நிலை இன்றும் பெரிதாக மாறவில்லை. இந்நிலைக்குக் காரணம் ஆறுகளின் நீர் கொடையே ஆகும்.

திருவட்டாற்றுத் திருத்தலம் மற்றத்திருத்தலங்களைக் காட்டிலும் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ளது. "இறைவன் உயரமான இடத்தில் குடிகொண்டுள்ளதால், நம்மாழ்வார் இவரை மலைமாடத்து அரவணைமேல் பள்ளி கொண்டான் என்று பாடியுள்ளார். இதற்கு விளக்கம் தந்துள்ள உரையாசிரியரான அண்ணங்கச்சியார் மலைபோல் உயரமுடையகோவில் என்றும், மு.ராகவையங்காரின் உரையில் இதற்கு மாடக்கோவில் என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்"[7]. இவ்விரு உரையாசிரியர்கள் தரும் விளக்கத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரே பொருண்மையைத் தருகிறது என்பது புலப்படும்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருவட்டாற்று இறைவனை ஆதிகேசவப்பெருமாள் என்னும் பெயரில் வழங்கி வருகின்றனர். காரணம் இறைவன் கேசி என்னும் அரக்கனை அழித்ததால் ஆதிகேசன் என்னும் பெயரினைப் பெற்றிருக்கிறார். இங்குள்ள இறைவனின் திருமேனியானது கடுசர்க்கரை யோகம் என்னும் கலவையால், 16008 சாளக்கிராம

கற்களை இணைத்து உருவாக்கப்பட்டது ஆகும். கோயிலின் கருவறையின் வாசல் மேற்கே பார்த்தபடி அமைந்திருக்க; இறைவனின் உடம்பானது தெற்கே பார்த்தபடி சயனக்கோலத்தில் பாம்பின்மேல் பள்ளிகொண்டிருக்கிறார். இத்திருத்தலத்திலே ஆதிகேசவனை ஒரேவாசல் வழியே பார்க்க இயலாது.

சயனக்கோலத்தில் ஆதிகேசவன் காட்சி கொடுப்பதால் கருவறை செவ்வக வடிவில் அமைந்துள்ளது. ஆகையால் மூன்று சன்னதிகளின் வழியாகவே இறைவனைப் பார்க்க முடியும். இடப்புற சன்னதி வழியாகத் திருமுகமண்டலக் காட்சியையும், நடுசன்னதி வழியாகப் பெருமானின் திருவுந்திக் கமலத்தையும், வலப்புற சன்னதி வழியாகத் திருக்கழல் இணைகளையும் காணலாம். இவ்வமைப்பு இத்திருத்தலத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது. நீள் சதுரத்தில் கருவறை அமைவது வைணவ மரபு ஆகும்.

வட இந்தியாவில் மைத்திரேக மரபில் வைணவக்கோவில் நீள்சதுரமாக இருக்க வேண்டும் என்ற நியதி உள்ளது இறைவியின் பெயர் மரகதவள்ளி என்பதாகும். இத்திருத்தலத்து இறைவன் ஹாதலேய மகரிஷி, சந்திரன், பரசுராமன் ஆகியோருக்கு இத்தலத்திலே காட்சியருளினார்.

திருத்தலத்தின் கருவறை, அர்த்த மண்டபம் இவ்விரண்டின் தளங்களும் ஒரே கல்லிலான அமைப்பினைக் கொண்டது. இங்கு இரண்டரை அடி உயரமுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் சிலையும், அவர் வீற்றிருக்கும் மண்டபமும் மிகவும் நேர்த்தியாக அமையப்பெற்றுள்ளது. இத்திருத்தலத்தினைச் சுற்றி பெரிய மதிற்சுவர்களால் சூழப்பட்டிருக்கும். மதிற்சுவரை ஒட்டி நடைபாதையில் பெரிய பெரிய கற்தூண்கள் செதுக்கப்பட்டு அதன் மீது கூடாரம் போன்று அமைக்கப்பட்டிருக்கின்றன.

நடைபாதையின் இருபுறங்களிலும் ஆயிரக்கணக்கான பித்தளை விளக்குகள் தொங்கவிடப்பட்டுள்ளன. நடைபாதையின் கூரையிலும் பல்வேறு வடிவமான வண்ணவிளக்குகள் தொங்குகின்றன. சுற்றுப்பிரகாரத்தில் மொத்தம் 224 கற்தூண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கோவிலின்

கட்டிடக்கலையானது சேரநாட்டின் கட்டிடக்கலையைப் பிரதிபலிக்கும் விதத்தில் காணப்படுகின்றது.

இத்திருப்பதியின் தனித்துவம் என்னவென்றால் இறைவனுக்குப் பூசைகள் செய்பவர்கள் போத்திமார்கள் ஆவர். இவர்கள் பிராமணர்கள் அல்லர். இதுமட்டுமன்றி, இக்கோவிலில் பிராமணர்கள் பூசைகள் செய்ய இயலாது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

திருவட்டாற்றுத் திருத்தலத்தின் விமானம் துவிதல விமானம் ஆகும். இது மரத்தால் ஆனது. கேரளத் தொல்லியல் அறிஞர் வாசுதேவப் பெருமாள் அவர்கள், இந்த விமானம் கேரளதிராவிடப் பாணியில் அமைந்துள்ளது என்பார். திருவட்டாற்றுத் திருத்தலத்தில் ஏராளமான வட்டெழுத்துக்களான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களின் மூலம் சேர நாட்டை ஆண்ட மன்னர்களின் ஆட்சி காலம் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

1. குலசேகரப் பெருமாள் - கி.பி. 644 - 659
2. வீரமார்த்தாண்டவர்மா - கி.பி. 510 - 519
3. வீரகேரளவர்மா - கி.பி. 519 – 550
4. செம்பலாதித்தவர்மா - கி.பி. 612 – 645
5. உன்னி கேரள வர்மா - கி.பி. 734 - 753

இம்மன்னர்களைப் பற்றியச் செய்திகள் இக்கோயில் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி இம்மன்னர்களின் சிற்பங்கள் இக்கோயிலில் செதுக்கப்பட்டிருப்பதனையும் காணலாம். பல்வேறு கல்வெட்டுச் செய்திகளை உள்ளடக்கிய இக்கோயிலானது மன்னரின் ஆட்சிக் காலத்திலும் புகழ் பெற்று விளங்கியிருக்கின்றது என்பதனைப் பல வரலாற்று ஆவணங்கள் உறுதிபடுத்துகிறது. குலசேகரவர்மனால் கட்டப்பட்ட மண்டபம் ஒன்று இத்தலத்தில் காணப்படுகிறது. இத்திருத்தலத்தினைப் பற்றி பல்வேறு வரலாற்று ஆய்வாளர்களும், இலக்கிய ஆராய்சியாளர்களும் பல்வேறு காலக்கட்டத்தின்

வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்றவண்ணம் ஆராய்ந்துள்ளனர். பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரும் அவ்வரிசையில் தனக்கென்று தனியொரு இடத்தினைத் தக்கவைத்துகொண்டுள்ளார் என்பதும் ஆய்வின் மூலமாக அறியமுடிகிறது.

ஆதிகேசவர்கோயிலின் சிறப்புகளில் ஒன்று அதன் பிரம்மாண்ட தோற்றமாகும். மேற்குவாசலிலோ அல்லது கிழக்கு வாசலிலோ தரைமட்டத்திலிருந்து பார்ப்பவர்க்கு ஐந்து மீட்டர் உயரம் உள்ள மூன்று ஏக்கர் பரப்புள்ள மேடையில் இருக்கும் இந்த பிரமாண்டம், திகைப்பை உண்டாக்கிக் கொண்டே இருக்கும். இந்த பிரமாண்டத்தின் முன் மனித ஆணவம் கரைந்துவிடும் என்பது நம்பிக்கை.

கோயில் கருவறையின் வெளிச்சுற்றில் உள்ள பிரம்மாண்டமான கற்தூண்களில் பல்வேறு செய்திகளை உணர்த்தும் சிற்பங்கள் நிறைந்து, கலைக்களஞ்சியமாகவே காட்சி தருகிறது. இக்கோயிலின் உயரமான மதில் சுவரும், கோவிலுக்கு வெளியே தரைமட்டத்திலிருந்து 12 மீட்டருக்குக் கீழ் ஆழமான பகுதியில் ஓடிக்கொண்டிருக்கும் பரளியாறும் இதன் சிறப்பை இவ்வுலகத்திற்கு அன்றிலிருந்து இன்றுவரை பறைசாற்றுகின்றது. இத்திருத்தலத்தின் தீர்த்தமாகக் கடல்வாய்த் தீர்த்தம், வாட்டாறு, இராமதீர்த்தம் ஆகியவை அமைந்திருக்கிறது. இத்தலத்தின் பிரசாதமாகத் திருத்துழாய் மற்றும் சந்தனம் வழங்கப்படுகிறது.

திருவட்டாற்று திருத்தலத்தில் நடைபெறும் திருவிழாக்களும், உற்சவமும் மிகச்சிறப்பு வாய்ந்தவையாகும். இங்கு நடைபெறும் உற்சவத்திற்கு மீன உற்சவம், துலாம் உற்சவம் என அழைக்கப்படுகிறது. இங்கு வைகுண்ட ஏகாதசியன்று நடைபெறும் சொர்க்கவாசல் திறப்பும், முளைப்பாரித் திருவிழாவும் மிகவும் முக்கிய விழாவாகக் கருதப்படுகிறது.

3. அனந்தபுரத்து அண்ணலார்

பண்டைய காலகட்டத்திலிருந்து இன்றுவரை புகழ் பெற்று விளங்கும் தலமாகத் திருவனந்தபுரத்து அண்ணலார்க்கோயில் விளங்குகிறது. கேரள மாநிலத்தின் தலைநகராகவும் திருவனந்தபுரம் திகழ்வதால் இத்தலம் மேலும் சிறப்புடன் திகழ்கிறது. இத்திருத்தலம் மலைநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகவும். 108 திவ்விய தேசங்களில் இத்தலம் 75-வது தலமாகும். அதுமட்டுமின்றி மலைநாட்டுத் திருப்பதிகளில் மிகவும் பெரிய திருக்கோயில் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறது.

திருவனந்தபுரம் தலமானது கி.பி.2-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகவும் விளங்குகிறது. கேரளாவில் அமைந்துள்ள மலைநாட்டுத் திருப்பதிகளில் இத்தலம் மட்டுமே தமிழகக் கட்டிடக்கலைகளைக் கொண்டும்; சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், இரகசியங்கள் போன்றவற்றை உள்ளடக்கியும் காணப்படுகிறது. இத்தலத்தின் பெருமையைப் பற்றி பிரமாண்ட புராணமும், அனந்த சயன மஹாத்மீயமும், ஸ்ரீமத் பாகவதமும் பேசுகிறது. பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரும் இத்தலத்தின் சிறப்புகளையும் வரலாறுகளையும் பற்றி தனது பயணத்தின் வழி நன்கு விளக்கியுள்ளார்.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருத்தலமானது கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம், திருவனந்தபுரத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. இத்திருத்தலமானது அழகிய சோலை சூழ்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. இத்தலத்திற்குச் செல்லும் வழியெங்குமே அடர்ந்த தோப்புகளும், ஓங்கி உயர்ந்த மலைக்குன்றுகளும், நேர்த்தியாகத் திகழும் மணல்மேடுகளும், பூங்கொத்துகள் உலாவும் குளிர் சோலைகளும், ஆங்காங்கே சிற்றாறுகளும், கால்வாய்களும் இவற்றையெல்லாம் காணலாம்.

திருவனந்தபுரத்தின் மற்றொரு சிறப்பு என்னவென்றால் நகரம் முழுவதும் நவநாகரீக வளர்ச்சியின் காரணமாக, மரங்களை அழித்து அவ்விடத்தில் பெரிய கட்டிடங்களைக் கட்டினாலும் இங்கு தோப்புகளுக்கும், சோலைகளுக்கும் குறைவில்லை. இதனால் இயற்கைச் சூழ்நிலையும், செயற்கைச் சூழ்நிலையும் இத்தலத்தை அணிசெய்து அழகு சேர்த்துக்கொண்டிருப்பதனை இன்றும் காணலாம்.

ஆ). திருத்தலத்தின் பெயர்க்காரணம்

புராண காலம் என்றாலே அவை நினைவிற்க்கெட்டாக்காலம் என்றே கூறலாம். அப்படிப்பட்ட புராணக்காலத்திலேயே இத்தலம் இருக்கும் பகுதிகள் 'அனந்தக்காடு' என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதுமட்டுமின்றி 'சியானந்தூர புரம்' என்னும் பெயரிலும் வழங்கப்பட்டிருப்பதாகவும் புராணங்களின் வழியே அறியலாம். மேலும், இத்தலத்தில் இறைவன் அனந்தனாகிய ஆதிசேஷனின் மீது சயனக் கோலத்தில் காட்சியளிப்பதால் திருவனந்தபுரம்(திரு+அனந்த+புரம்) என்ற பெயரைப் பெற்று விளங்குகிறது. திருவிதாங்கூர் ஆட்சிகாலத்தில் இக்கோவில் மிகவும் சிறப்புப் பெற்று விளங்கியது. திருவனந்தபுரத்தின் பண்டைய பெயர் “ஆடகமாடம்” என்பதாகும். இதனைச் சிலப்பதிகாரப் பாடல் உறுதி செய்கிறது.

பண்டையத் தமிழ் இலக்கியங்களான பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் இத்தலத்தினைப் பற்றியக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பண்டைய சேர நாட்டை ஆட்சி செய்த அரசர்கள் அனைவருமே திருவனந்தபுரம் அனந்தபத்மநாபனின் அடியார்களாக விளங்கினர் என்பதைப் பதிற்றுப்பத்துப் பாடல் உணர்த்துகிறது.

பதிற்றுப்பத்தில் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர், சேரமன்னர்களில் ஒருவராய் விளங்கிய களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்னும் அரசர் திருவனந்தபுரம் பெருமானை வழிபட்டு வாழ்ந்து வந்ததனை,

“உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி,
வண்டு ஊது பொலி தார், திரு ஞெமர்அகலத்து,
கண்பொரு திகிரி, கமழ் குரல் துழாஅய்
அலங்கல், செல்வன் சேவடி பரவி” **(பதி.நான்காம்.-1)**

என்னும் பாடல் வழியே அறிய முடிகிறது. “பெரியோர்கள் கடலில் நீராடி, திருமகள் மருவிய மார்பும், கண்களை வெறியோடச் செய்யும் சக்கரப்படையும், நறுமணம் வீசும் பூங்கொத்துக்கள் உடைய துவளமாலை கொண்ட திருமாலின் திருப்பாதங்களைப் பாடிப்பணிவார்கள்” என்பதே இப்பாடலின் பொருள். இப்பாடலுக்குப் பொருள் கூறும் உரையாசிரியர்கள் “செல்வன்” என்பது திருவனந்தபுரத்தில் உறையும் பெருமானைக் குறிப்பதாகக் கூறுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறும் பாடல்வரிகளையும் ஆராய்வதன் மூலம்; வடநாட்டின் மீது போர்த்தொடுக்கச் சென்ற சேரன்செங்குட்டுவன் வெற்றிபெற்று, இமய மலையிலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்குச் சிலை வடித்தான். அவ்வாறு வடநாட்டின் மீது போர்த் தொடுக்கச் செல்லும் முன்னர் திருவனந்தபுரத்து இறைவனை வேண்டி, இறைவன் சூடிய மலர்மாலையினை அணிந்து சென்று வடநாட்டு அரசர்களை வென்றான் என்னும் செய்தியினை,

“ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
சேடன் கொண்டு சிலர் நின்றேத்த
ஆய்கது வாங்கி அணிமணிபுயத்துத் தாங்கினாள்
ஆசித்தகை மையின் செல்வுழி” **(சிலம்பு – வஞ்சி - 65)**

என்னும் பாடல் வழியே அறியலாம். இப்பாடலில் வரும் “ஆடக மாடம்” என்பது திருவனந்தபுரத்தைக் குறிக்கிறது. பண்டைய நாளில் ஆடக மாடம் என்ற பெயரிலேயே இத்தலம் அழைக்கப்பட்டதனை அறிய இப்பாடல் சான்றாக இருப்பதை ஆய்ந்து உணரலாம். இப்பாடலில் சேடன் என்பற்கு ’மலர் மாலை’ என்று பொருள். சிலப்பதிகாரக் காவியமானது சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்

இயற்றப்பட்டிருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். அக்காலகட்டத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்திலேயே திருவனந்தபுரத்து அனந்தபத்மநாபனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால், இத்தலம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதனை உய்த்துணர முடிகிறது.

இ) அனந்தபத்மநாபனும் – ஆழ்வாரும்

பழம்பெருமை வாய்ந்த திருவனந்தபுரத்து இறைவனைப் பற்றி பதினொரு மங்களாசாசனப் பாடல்களைப் நம்மாழ்வார் பாடியுள்ளார். திருவனந்தபுரத்தின் சிறப்புகளாக ஆழ்வார் தனது திருவாய்மொழி பாசுரங்களின் வழியே கூறுவதாவது, "குருத்து சேர் செருந்தி புன்னை, மன்று அலர் பொழில் அனந்தபுரநகர்" என்றும், "பெரிய நீர் வேலை சூழ்ந்து, வாசமே கமளும் சோலை வயல் அணி அனந்தபுரம்" என்றும், "செறி பொழில் அனந்தபுரமாகவே", "மடைத்தலை வாளை பாயும் வயலணி அனந்தபுரமாகவே" என்றெல்லாம் கூறியுள்ளார். அதுமட்டுமின்றி இத்தலமானது சாதாரணமானதன்று என்றும் குறிப்பிடுகிறார். அதற்குக் காரணம் இத்தலத்தில் விண்ணுலகில் உள்ள தேவர்களும், நித்திய சூரிகளும் வந்து பணிசெய்யும் இடமாகத் திருவனந்தபுரம் விளங்குவதால் பரமபதத்தைக்காட்டிலும் இத்தலம் உயர்வு பெற்றிருக்கிறது என்பதேயாகும். இதனை,

"அமரராய்த் திரிகின்றார்கட்(கு)
ஆதிசோ அனந்தபுரத்து
அமரர்கோன் அனந்தபுரத்து
அகப்பணி செய்வர்விண்ணோர்" (திருவாய். 10.2:6)

என்னும் திருவாய்மொழி பாடல் வரிகளின் மூலம் அறியலாம். இதன் மூலம் விண்ணோர்க்குக்கூட இத்தலம் பரிட்சயமாக விளங்கியிருக்கிறது என்பதும் புலப்படுகிறது. நம்மாழ்வார் தனது பாசுரங்களில் இத்தலத்து இறைவனை வேண்டினால் தங்களின் நோயும், வினைகளும், தான் செய்த பாவங்களும் தம்மைவிட்டு அகலும் என்று கூறியிருக்கிறார்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பும் வரலாறும்

திருவனந்தபுரத்து இறைவனை அனந்தபத்மநாபன், புஜங்கசயனன் என்னும் பெயர்களில் அழைக்கின்றனர். இறைவனின் திருவுருவமானது தெற்கே பார்த்த வண்ணம், நீண்ட திருவடிகள் வடக்குபக்கம் பார்த்த படியும், திருமுகமானது கிழக்கே பார்த்தபடியும், அனந்தன் என்று அறியப்படும் பாம்பின் மீது பள்ளிகொண்டபடி சயனக்கோலதில் அமைந்திருக்கிறார். அனந்தபத்மநாபனை மூன்று வாசல்களின் வழியாகவே காணமுடிகிறது. மலைநாட்டுத் திருப்பதிகளிலே திருவட்டாறு, திருவனந்தபுரம் ஆகிய இரு தலங்களில் மட்டுமே இறைவனை மூன்று சன்னதிகளின் வழியே காணமுடிகிறது. மற்றத் தலங்களில் இறைவனைச் சயனக்கோலத்தில் பார்க்க இயலாது. இவ்விரு தலங்களிலுமே இறைவனின் திருமுகம், துருவுந்தி, திருப்பாதங்கள் இவை மூன்றிற்கும் தனித்தனியாகப் பூசைகள் நடைபெறுகின்றன.

துளுவ நாட்டுத் துறவியான திவாகர முனிவர் திருபாற்கடலில் பள்ளிகொண்டுள்ள க்ஷிராப்தி நாதரைக் கண்டு முக்திபெற வேண்டி இத்தலத்திலே சாளகிராமத்தை வைத்து வழிபட்டு வந்தார். ஒருநாள் திருமால் முனிவரின் முன்பாக இரண்டு வயது குழந்தையாகத் தோன்றினார். முனிவர் பூசை செய்து செய்து கொண்டிருந்தபோது குழந்தை சாளகிராமத்தை எடுத்து தன்வாயில் போட்டுக்கொண்டது. அது கண்டமுனிவர் குழந்தையின் மீது கடும் சினம் கொண்டு சீறி எழுந்தார். முனிவரின் கோபத்தைக்கண்ட குழந்தை எழுந்து ஓடத்துவங்கியதும் முனிவரும் அக்குழந்தையினை விடாமல் துரத்தினார். ஒரு மரப்பொந்திற்குள் குழந்தை நுழைய மரம் மிகுந்த சத்தத்துடன் கீழே விழுந்தது. அச்சமயத்தில் திருமால் சயனக்கோலத்தில் முனிவருக்குக் காட்சியருளினார். திவாகர முனிவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப திருமால் திரிதண்டத்தின் அளவுக்குப் பெரிய திருமேனியாகிய திருமுகம், திருவுந்திக்கமலம், திருவடிகள் ஆகிய மூன்றினையும் மூன்று வாசல்களாகின் வழியே காட்சியளிப்பதாகவும் தலவரலாறு கூறுகிறது.

அனந்தபதுமனின் திருமுகத்திற்கு அருகில் சிவலிங்கமும் காணப்படுகிறது. இங்கு ஏகாதச ருத்திரர்களுக்குத் திருமால் காட்சியருளினார் என்பதை விளக்கும் விதத்தில் சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளதாக மக்கள் நம்புகின்றனர். மேலும், இத்தலத்திலே இந்திரன் மற்றும் திவாகரமுனி ஆகியோருக்கும் காட்சியருளினார் என்றும் புராணவரலாறுகள் தெரிவிக்கின்றன. இத்தலத்தின் இறைவியை ஸ்ரீஹரிலட்சுமி என்ற பெயரிலேயே அழைக்கின்றனர். இங்கு மூலவரான அனந்தபத்மநாபனுக்குத் திருமஞ்சனம் கிடையாது. மூலவரின் திருவடிகளில் அர்ச்சனை செய்யப்படுகிறது.

திருவனந்தபுரத்து அண்ணலார் கோயில் திருவட்டாற்றுத் திருக்கோயிலைப் போன்று சற்று உயரமான இடத்தில் அமைந்துள்ளது. கோயிலின் உள்ளே பல படிகளைக்கடந்தே செல்ல வேண்டும். கோயிலுக்கருகே உள்ள சன்னதித்தெருவில் ஒருபுறமாகக் கோயிற்குளம் அமைந்துள்ளது. கோயிலின் நான்கு புறமும் கனமான கோட்டைச் சுவர்கள் காணப்படுகின்றன. திருக்கோயிலுக்கு அருகிலேயே திருவிதாங்கூர் அரசரின் அரண்மனையும் அமைந்துள்ளது. அரசர் அரண்மனையிலிருந்து திருக்கோயிலுக்கு வந்து செல்ல சுரங்கப்பாதையும் காணப்படுகிறது.

கோயில் கோபுரத்திலும், மண்டபத்திலும், தூண்களிலும் பல்வேறு சிற்பங்களைக் காணலாம். இவை அனைத்தும் தென்னிந்தியச் சிற்பங்களே. நுழைவாயிலுள்ள இராஜகோபுரம் சற்றேரக்குறைய 100 அடி உயரம் உடையதாய், ஏழு நிலைகளைக் கொண்டு கம்பீரமாய் காட்சியளிக்கிறது. இத்தலத்தின் விமானம் ஹேமகூட விமானம் ஆகும். இத்தலத்திற்கு அஸ்திவாரமிட்டு வேலையைத் துவங்கியவர் சேரமான் பெருமான் நாயனார் என்று (கி.பி.1050) கல்வெட்டு கூறுகிறது. இக்கோபுரத்தின் அடிக்கல் நாட்டுவிழா கி.பி. 1556- இல் நடத்தப்பட்டு, கோபுரத் திருப்பணி கி.பி. 1604- ம் ஆண்டு நிறைவு பெற்றது. கோயிலில் காணப்படும் பொன்வேய்ந்த கொடிமரமானது கி.பி. 1565- ல் நிறைவு பெற்றதாகவும் கல்வெட்டுக்களின் மூலம் அறியமுடிகிறது.

திருவட்டாறு கோயிலிலுள்ளது போலவே இக்கோவிலைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் ஆயிரக்கணக்கான பித்தளை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. திருவிழா காலங்களில் இவ்விளக்குகள் ஏற்றப்படுகின்றன. கோயில் பிராகாரத்தில் வரிசையாக 366 கற்தூண்கள் காணப்படுகின்றன.

கோயில் உள்சுற்றில் கண்ணன், ஐயப்பன், நரசிம்மன், சிவபெருமான், ஆனைமுகன், இலக்குவனுடன் சேர்ந்த சீதாராமன் இவர்கட்குத் தனித்தனி சன்னதிகள் உள்ளன. கோயிலின் கிழக்கு வாசலின் அருகே ஸ்ரீ ஆஞ்சனேயரின் திருவுருவமும், அவருக்குப் பின்னால் வாசலில் துவாரபாலகர் காட்சியளிக்கின்றனர். குலசேகர மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற மண்டபங்களில் கண்ணைக்கவரும் கருங்கல் சிற்பங்களையும் காணலாம். இவை 18-ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டவையாகும். பலிபீட மண்டபத்திலும் இறைவனின் பலவடிவ சிலைகள் அமைக்கப்பெற்று தலத்திற்கு அழகு சேர்க்கின்றன. கண்ணன் சன்னதிக்கு முன்னர் உள்ள நரசிம்ம மண்டபத்தின் மேலுள்ள கூரையில் ஒன்பது கோள்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

கருவறையின் முன்புள்ள அர்த்த மண்டபத்தின் அடித்தளக் கருங்கல் 20 அடி சதுர வடிவத்தைக் கொண்டது. கல்லின் கனம் இரண்டரை அடி. இது கி.பி. 1731-ல் நிறுவப்பெற்றது. இந்த மண்டபத்தை “ஒற்றைகல் மண்டபம்” என்றே கூறப்படுகிறது. திருவட்டாறு எம்பெருமான் கோயிலிலும் இத்தகைய ஒற்றைக்கல் மண்டபத்தைக் காணலாம். கிட்டத்தட்ட இரண்டு கோயில்கள்; ஒரே மாதிரியான அமைப்பினைக் கொண்டனவாயினும் சிற்பங்கள் முதலியவற்றைப் பார்க்கும் போது திருவட்டாறு கோயில் மிகவும் பழமையானது என அறியமுடிகிறது. திருவட்டாறு கோயில் கேரள நாட்டு கட்டிடப்பாணி கலந்து காணப்படுகிறது. ஆனால் திருவனந்தபுரத் திருக்கோயில் தமிழ் பண்பாடும் கலந்து காணப்படுகிறது.

இத்தலத்தில் ஒற்றைக்கல் மண்டபத்திலுள்ள கல்வெட்டுகளின் மூலம் கி.பி.1686-ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வாலயத்தில் தீ விபத்து ஏற்பட்டச்

செய்தியினையும்; அப்போது கர்ப்பக்கிரகத்தின் கூரையில் பற்றிய தீயினால் இலுப்ப மரத்தினால் செய்யப்பட்ட அனந்தபத்மநாபரின் மூலவிக்ரகமான பெருமானின் இடது கையில் உள்ள மூன்று விரல்களும், இடது காலில் உள்ள விரல்கள் முழுவதும் தீக்கிரையாத் தகவலும், அதிஷ்டவசமாக மேனியும் மற்றபாகங்களும் தீயிலிருந்து தப்பியத் தகவலும் இதன் மூலம் அறியப்படுகிறது.

திருவனந்தபுரம் கோயில் முழுவதும் தீயால் கருகிவிட்ட காரணத்தால், கி.பி.1729 ல் ராஜமார்த்தாண்ட வர்மா கோயிலை முழுமையாகப் புதுப்பித்து, மரத்தாலான மூலவர் சிலையை அகற்றி, அதே இடத்தில் அவந்தி தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 1,200 சாளக்கிராமங்களினாலும், கடுசக்கரை என்ற அஷ்டபந்தனக் கலவையினாலும், புது அனந்தசயன மூர்த்தியை பிரதிஷ்டை செய்ததைப்பற்றி அறியமுடிகிறது.

பலமுறை தீ போன்ற விபத்துகளால் பாதிக்கப்பட்ட அனந்தபத்மநாபனின் கோயில், கி.பி.1935- ஆம் ஆண்டில் திருவனந்தபுரத்தை ஆட்சி செய்த அரசனால் புதுப்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இக்கோயிலைப் புதுப்பித்து கட்டிமுடிக்க 40 ஆண்டுகள் ஆனதாகவும் சொல்லப்படுகிறது. 4000 கொத்தனார்களும், 6000 தித்தார்களும், 100 யானைகளும் கோயில் திருப்பணியில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகின்றன.

108 திவ்விய தேசங்களில், மலைநாட்டுத்திருப்பதிகளில் ஒன்றாக விளங்கும் இத்தலத்தினைப்போன்றே, பாண்டிய நாட்டுத் திருமாலிருஞ்சோலை என்னும் இந்த இரண்டு கோயில்களில் மட்டுமே ‘அபரஞ்சி’ என்று அழைக்கப்படும் மூலிகை மற்றும் உலோகக் கலவையினால் செய்யப்பட்ட உத்ஸவ மூர்த்திகள் காணப்படுகின்றன. சித்த மருத்துவத்தில் கூறியுள்ள முறைப்படி, மருத்துவ மூலிகைகளின் கலவைகளைக்கொண்டு இவை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இரண்டு தலங்களிலுமே, மூலவரைவிட உத்ஸவ மூர்த்திகள் பெருமையாகப் போற்றப்படுகின்றனர்.

இதுபோன்றே "108 திவ்விய தேசங்களில் ஒன்றான திருவிண்ணகர் என்றழைக்கப்படும் ஒப்பிலியப்பன் திருக்கோயிலில் மட்டும்தான் பகவானுக்கு உப்பில்லாமல் நிவேத்தியம் செய்யப்படுகிறது. ஆனால் இந்த அனந்தபத்மநாபர் கோயிலிலும், பெருமானுக்குத் தங்கத்தினால் செய்யப்பட்ட தேங்காய் ஓட்டில்(திரட்டில்) மாங்காய் ஊறுகாய் நிவேத்தியமாகச் செய்யப்படுகிறது"[8]. இந்தக் காட்சியை வேறு பதிகளில் காண இயலாது.

பண்டைய தமிழகத்தில் சேரநாட்டில் ஆட்சி செய்த அனைத்து அரசர்களும் அனந்தபத்மநாபரின் பக்தராக விளங்கி, இக்கோயிலுக்கு ஏராளமான நற்பணிகள் செய்து வந்துள்ளனர் என்பதனை இலக்கியத்தின் வாயிலாகவும், கல்வெட்டுக்களின் வாயிலாகவும் அறியமுடிகிறது. களங்காய்கண்ணி நார் முடிச்சேரல் என்ற சேர அரசன், இப்பெருமானின் பரம பக்தனாக விளங்கிய செய்தி பதிற்றுப்பத்தின் மூலமும், சேரன் செங்குட்டுவன் இப்பெருமானின் மூலமும் அறிய முடிகிறது.

இதைத்தவிர "கி.பி. 1563-ல் திருவிதாங்கூர் மன்னரான ஆதித்ய வர்மாவும், கி.பி.1603-ல் வீரரவிவர்மாவும், கி.பி. 1750-ல் ஆட்சி செய்த ராஜமார்த்தாண்டவர்மாவும், கி.பி. 1809-ல் பால ரவிவர்மா என்ற அரசனும், கி.பி.1818-ல் இராணிகௌரி பார்வதி பாய் அவர்களும், சித்திரை திருநாள் ராமவர்மா மகாராஜா"[9] போன்ற பலரும், திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலுக்கு ஏராளமான பணிகளைச் செய்து வந்துள்ளது கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.

கி.பி. 1750-ல் ஆட்சி செய்த மார்த்தாண்டவர்மன், தனது ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளையும், பிற செல்வங்களையும் திருவனந்தபுத்து கோயிலுக்குப் பட்டயம் எழுதிக்கொடுத்திருக்கின்றார். அதுமட்டுமின்றி அவரது உடைவாளையும் இறைவனின் திருவடியில் வைத்து, பரிபூரண சரணாகதி அடைந்தார். அன்று முதல்

திருவிதாங்கூர் அரசாங்க பரம்பரையினர் ‘பதமநாபதாஸர்’ என்ற பெயரிலே அழைக்கப்பட்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முக்கிய விழாக்கள் நடைபெறுகின்றன. ஒன்று ‘மீனத்திருநாள்’, இவ்விழாவானது மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறுகிறது. அடுத்தபடியாக ‘துலாத்திருநாள்’, இவ்விழாவானது அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெகிறது. திருவிழாக்களின் இறுதிநாளன்று எம்பெருமான் பத்மநாபனை ஊர்வலமாக ‘சங்குமுகம்’ என்ற கடற்கரைக்கு ஊர்வலமாக கொண்டுசென்று கடல்நீரால் குளிப்பாட்டுகின்றனர். இவ்வாறாக இறைவனானவன் ஊர்வலமாக கொண்டு சென்று நீராட்டுவதற்கு ‘ஆறாட்டு’ என்று அழைக்கின்றனர். இன்றளவும் கேரள மக்கள் இறைவன் வீதியுலா செல்வதற்கு ஆறாட்டு என்னும் சொல்லாட்சியே பரவலாகப் பயன்படுத்துகின்றனர் என்பதனைச் சுப்புரெட்டியாரின் நேரடிப்பயணத்தின் மூலம் அறியமுடிகிறது. ஆறாட்டு என்னும் நிகழ்ச்சியைத் தமிழகக்கோயில்களில் தீர்த்தவாரி என்னும் பெயரில் கொண்டாடுகினறனர்.

இவ்விருவிழாக்களையும் தவிர இங்கு “ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ‘மூரஜபம்’ என்னும் திருவிழாவும், “இலட்சதீபம்” என்னும் விழாவும் மிகவும் விமர்சையாகக் கொண்டாடுகின்றனர்”[10]. இந்த மூரஜபம் என்னும் திருவிழாவிற்கும், இலட்சதீபம் என்னும் விழாவிற்கும் தொடர்பு இருக்கின்றன. காரணம், திருவிதாங்கூரை ஆண்ட மன்னன் ஒருவன் தனது ஆட்சியின் போது செய்த கொடுமைக்குப் பரிகாரமாய் இத்தலத்திலே மூரஜபம் என்னும் திருவிழாவினை ஏற்படுத்தினார் என்றும்; மேலும், கி.பி.1750-ல் சேர மன்னனான மார்த்தாண்டவர்மன் நான்கு வேதங்களை இத்தலத்திலே எட்டுமுறை முறையாக ஓதி இலட்சதீபங்களை ஏற்றிக் கொண்டாடினார் என்றும்; அதுமட்டுமின்றி மூரஜபம் திருவிழாவானது தொடர்ந்து 56 நாட்கள் நடத்தப்படுகிறது, அவ்வாறு நடைபெறும் விழாவின் 56-வது நாள் இலட்சதீபங்களை ஏற்றி கொண்டாடுகின்றனர் என்னும் செய்தியினையும் அறியலாம்.

திருவனந்தபுரம் கோயில் மத்ஸ்ய தீர்த்தம், பத்ம தீர்த்தம், வராஹ தீர்த்தம் ஆகியவை தீர்த்தங்கள் அமைந்திருக்கின்றன. “பலராமன் தீர்த்த யாத்திரையின் போது இந்தச் ஸியானந்தூரபரத்தைத் (திருவனந்தபுரம்) தரிசித்தார் என்று பாகவதம் கூறுகிறது”[11].

இந்தியா சுதந்திரமடைந்தப் பின்னரும் அரசர்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டு, திருவிதாங்கூர் சமஸ்தானம் இந்தியத் திருநாட்டுடன் இணைக்கப்பட்டப் பின்னரும், திருவனந்தபுரம் திருக்கோயில் மட்டும் இன்றளவும் திருவிதாங்கூர் அரச வம்சத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேலும், கோயில் நடைமுறையை இன்றும் அரச குடும்பத்தினரே கண்காணித்து வருகின்றனர்.

4. திருவாறன்விளை திருக்குறளப்பன்

திருவாறன்விளை திருத்தலம் மலைநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகும். இத்திருத்தலம் 108 திவ்வியதேசங்களில் 73-வது தலமாகத் திகழ்கிறது. இத்தலத்தினைப் பஞ்சபாண்டவர்களில் ஒருவரான அர்ஜீனனால் புதுப்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத்தலத்திலேதான் சபரிமலை ஐயப்பன் கோயிலிலுள்ள தங்க ஆபரணங்கள் அனைத்தும் பாதுகாப்பிற்காகக் காலங்காலமாக வைக்கப்பட்டுள்ளது. அவ்வாபரணங்களை மகரஜோதி திருவிழாவின் போது மக்கள் ஒன்றுதிரண்டு ஊர்வலமாகச் சபரிமலைக்கு கொண்டு செல்கின்றனர். இந்நிகழ்வும் இக்கோயிலுக்குச் சிறப்பு சேர்க்கிறது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

இறைவழிபாட்டில் தனக்குரிய பாணியில் சிறந்து விளங்குவது கேரளம். இத்தகைய சிறப்புமிக்க கேரள மாநிலத்தில் திருவாறன்விளைத் திருத்தலமானது பத்தனம்திட்டா மாவட்டம் செங்கண்ணூருக்குக் கிழக்கே சுமார் 10 கி.மீ. தொலைவில் அமையப்பெற்றுள்ளது. அங்கு நிலவக்கூடிய தட்பவெப்பநிலையானது மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. கேரளா முழுவதுமே மலைகள், வயல்கள், காடுகள் நிறைந்து எப்பொழுதும் மழைத்

தூறல்களோடு காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக இக்கோயிலானது அடர்ந்த சோலைமயமாகவே காட்சிதருகிறது.

ஆ) திருத்தலத்தின் பெயர்க்காரணம்

கேரளாவில் ஓடக்கூடிய நதிகளில் மிகவும் முக்கிய நதியாக விளங்குவது பம்பை நதி. இந்நதியானது கேரளாவின் அனேக இடங்களில் பாய்ந்து நிலங்களை வளப்படுத்துவதுடன் மட்டுமல்லாமல், பல திருத்தலங்களுக்கும் புண்ணியதீர்த்தமாகவும் விளங்கி, இறுதியில் கடலில் சங்கமிக்கிறது. இத்தகையச் சிறப்பினை உள்ளடக்கிய பம்பை நதியின் கரையில் அமைந்துள்ளத் திருத்தலங்களிலே ஒன்றாகவும் திருவாறன்விளை திருத்தலம் அமைந்துள்ளது. இத்தலத்தினைத் திருவாறன்விளை என்றும் ஆரமுளா என்றும் பெயர்களில் கூறப்படுகின்றனர். ஆனால் தற்போது இத்தலத்தினை ஆரமுளா என்றே அழைக்கின்றனர். இத்தலத்திற்குத் திருவாறன்விளை, ஆரமுளா என்றெல்லாம் பெயர் வரக்காரணம் இன்னதென்று சரியாகத் தெரியவில்லை. எனினும் அர்ஜீனன் ஆறு மூங்கில் துண்டுகளாலான மிதவையில் இறைவன் சிலையைக் கொண்டுவந்தமையால் இத்தலம் திருவாறன்விளை என்றும், வாமன அவதாரத்தினை நினைவுகூறும் வகையில் திருவாறன்விளைத் தலமானது விளங்குவதால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இ) திருவாறன்விளையும் ஆழ்வாரும்

திருவாறன்விளைத் திருத்தலத்து இறைவனைப் பற்றி நம்மாழ்வார் மட்டுமே 11- மங்களாசாசனப் பாடல்களைப் பாடியுள்ளார். இயற்கை பெற்றெடுத்தப் பிள்ளையாகவே திருவாறன்விளைத் திகழ்கிறது. ஏனெனில் எங்கு பார்த்தாலும் பசுமையால் பட்டு உடுத்தியது போன்ற காட்சியைக் காணலாம். இத்தகைய வளம் சொட்டும் திருவாறன்விளையை நம்மாழ்வார், ‘அணிபொழில் சூழ்திருவாறன் விளை’ என்றும், ‘நீடு பொழில் திருவாறன் விளை’ என்றும், ‘கரும்பும் பெரும் செந்நெலும் வயல் சூழ் திருவாறன் விளை’ என்றும், ‘மலர்ச்சோலைகள் சூழ் திருவாறன்விளை’ என்றும், ‘செழும் பொழில் சூழ் திருவாறன்விளை’ என்றெல்லாம்

இத்தலத்தினைப் பாடியுள்ளார். நம்மாழ்வாரின் வரிகளுக்கு ஏற்றார்போல் அனைத்தும் அமைந்துள்ளது உண்மையே. நம்மாழ்வார் கூறியது படியே ந.சுப்புரெட்டியாரும் இத்தலத்தின் இயற்கை வளங்களைப் பார்த்து வியந்து போனார். காரணம் திரும்பும் திசையெங்கும் தோப்புகளும், வயல்களும், சிற்றூர்களும் எனப் புடைசூழ்ந்து காணப்படுவதேயாகும்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருவாறன்விளைத் திருத்தலத்து இறைவனைத் திருக்குறளப்பன் என்றும், பார்த்தசாரதி என்றும் அழைக்கின்றனர். திருக்குறளப்பன் என்பது குள்ளத்தோற்றமுடைய வாமன் என்பவரைக் குறிக்கிறன்து. ஐந்து அடி உயரமுடைய இறைவன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே முகம் பார்த்த வண்ணம் காட்சியளிக்கின்றார். இங்குள்ள இறைவி பத்மாஸனி நாச்சியார் என்று அழைக்கின்றனர். இத்தலத்திலேதான் இறைவன் பிரம்மாவிற்குக் காட்சியருளினார். ஒருமுறை பிரம்மாவிடமிருந்து வேதங்களை மது, கைடபம் என்ற அரக்கர்கள் அபகரித்துச் சென்றனர். வேதங்களை மீட்டுத்தரும்படி பிரம்மா திருமாலிடம் வேண்டினார். பிரம்மாவின் வேண்டுகோளுக்கிணங்கத் திருமால் அரக்கர்களை அழித்து வேதங்களை மீட்டுக்கொடுத்தார். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலே திருமாலை நோக்கி இத்தலத்திலே பிரம்மன் தவமிருந்தார். அப்போது இறைவன் காட்சியருளினார் என்று தலவரலாறு தெரிவிக்கின்றது.

இத்தலத்து இறைவன் பிரம்மாவிற்கு மட்டுமல்லாது வேதவியாசர், அர்ச்சுனன் ஆகியோருக்கும் காட்சியருளினார் என்றும் அறிய முடிகிறது. இத்தலத்திலே வேதவியாசர் தவம் செய்ததாகவும், அவரே தீர்த்தம் ஒன்றினைத் தோற்றுவித்ததனால் அத்தீர்த்தத்திற்கு வேதவியாச தீர்த்தம் என்று பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

பஞ்சபாண்டவர்கள் ஒருமுறை கேரளப்பகுதிக்கு வந்தபோது, ஒவ்வொருவரும் ஒரு திருமால் கோயில்களைப் புதுப்பித்து வழிபாடு செய்தனர். இதில் அர்ச்சுனன் திருவாறன்விளைத் திருத்தலத்தை புதுப்பித்து வழிபாடு

செய்தார் என்பது மட்டுமல்லாது, இத்தலத்தின் அருகில் இருந்த வன்னி மரத்தில் தனது ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தார் என்ற செய்தியும், புராண வரலாறு தெரிவிக்கிறது. மகாபாரதப் போரில் கர்ணனின் தேர்ச்சக்கரம் பூமியினுள் புதைந்து விட்டது. அதனைத் தோள்கொடுத்து தூக்கிநிறுத்தி மீண்டும் போர்புரிய நினைத்தான் கர்ணன். அச்சமயத்தில் அர்ச்சுனன் கர்ணன் மீது அம்பெய்தினார். இதனால் அவர் இறந்து போனார். இவ்வாறு ஆயுதம் எதுவும் இல்லாமல் இருந்த கர்ணனைக் கொன்றது அர்ச்சுனனுக்கு நியமாகத் தெரியவில்லை. யுத்த தர்மத்தின்படி இது பெரும் பாவம் என்றும், அதிலும் தம்போன்றோர் செய்யத்தகாத காரியமென்றும் மிகவும் வருந்தனார்.

அர்ச்சுனன் போரில் கர்ணனை யுத்ததர்மத்திற்கு மாறாகக் கொன்றதால், தன் மன நிம்மதிக்காகவும், போரில் பிற உயிர்களைக் கொன்ற பாவம் போக்கவும் அர்ச்சுனன் இத்தலத்தில் தவம் செய்தார். இதனால் அர்ச்சுனனின் தவத்தைக்கண்ட இறைவன் பார்த்தசாரதியாகக் காட்சியருளினார் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

திருவாறன்விளைத் திருத்தலமானது மிகவும் பிரம்மாண்டமான கட்டிட அமைப்பினைப் பெற்றிருக்கிறது. கோயிலின் நான்கு புறங்களிலும் கேரளக் கட்டிடப்பாணியில் அமைந்த கோபுரங்களும், தங்கக் கவசம் பூசிய மிகப்பெரிய கொடிமரமும், மிகவும் அகண்ட சுற்றுப் பிரகாரமும், பெரிய மண்டபங்களும் கொண்டு அமைந்திருக்கிறது.

இத்தலத்தில் மஞ்சாடி வழிபாடு எனப்படும் வன்னிமரக்காய்களைக் கொடிமரத்தின் மேல் வீசும் வழிபாடு மிகவும் சிறப்பு பெற்றதாக விளங்குகிறது. “இங்குள்ள வன்னி மரத்திலிருந்து உதிரும் வன்னிமரக்காய்களை இத்தலத்தின் கொடிமரத்தின்முன்பு குவித்து வைத்து விற்கின்றனர். இக்காய்கள் அர்ச்சுனன் ஆயுதங்களை மறைத்து வைத்த வன்னி மரத்திலிருந்து வந்ததால்; அர்ச்சுனனின் அம்பினால் எதிரிகளின் அம்பு சிதைவது போல், நோய் சிதையும் என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கை. குருவாயூரில் துலாபாரம் கொடுப்பது போன்று

இத்திருத்தலத்திலும் துலாபாரம் கொடுக்கும் வழக்கம் காலங்காலமாக நடைமுறையிலுள்ளது”[12]. துலாபாரம் என்றால், தராசில் ஒருபுறம் மனிதரும் மற்றொரு புறம் தாம்வேண்டியப் பொருட்களைச் சம எடையளவில் வைத்து அளந்து இறைவனுக்குக் கொடுப்பதேயாகும். திருவாறன்விளை திருத்தலத்தில் வில்வமரக்காய்களை துலாபாரத்தில் அளந்து வழங்கும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

கி.பி.1715-ஆம் ஆண்டு மன்னர் மார்த்தாண்டவர்மா மிகவும் பெரிய மதிற்சுவர்களைக் கோயிலின் நாற்புறமும் கட்டுவித்தார். கிழக்கு வாசலில் 18 படிகள் காணப்படுகின்றது. இப்படிக்கட்டில் ஏறினால் சபரிமலையின் 18 படிகளைக் கடக்கும் புண்ணியம் கிடைக்கும் என்று அம்மக்கள் நம்புகின்றனர். இத்திருத்தலத்தில் திருமாலைத்தவிர சிவன், ஐயப்பன், பலபத்ரன், பகவதி ஆகியோருக்கும் சன்னதிகள் அமைந்திருக்கின்றன.

இத்தலத்தின் மற்றொரு சிறப்பு கோயில் கொடி மரம். கேரளாவில் உள்ள கொடிமரங்களிலேயே மிகவும் உயரமானது ஹரிப்பாடு சுப்பிரமணிய கோயிலில் காணப்படுகிறது. இதற்கு அடுத்து மிகவும் உயரமான கொடிமரம் திருவாறன்விளைத் திருத்தலத்தில் காணப்படுகிறது. இக்கோயிலில் ஓணத்திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவின் ஐந்தாவது நாள் தேவர்கள் இத்தலத்தில் திருமாலை காண வருவதாக மக்கள் நம்புகின்றனர். ஓணத்திருவிழாவின் நான்காவது நாளான உத்திரட்டாதி தினத்தில் ‘வெள்ளம் களி’ என்று அழைக்கப்படும் படகுப்போட்டி பம்பையாற்றில் நடத்தப்படுகிறது.

5. திருச்செங்குன்றூர் அப்பன்

மலைநாட்டுத்திருப்பதிகளில் திருச்செங்குன்றூர் அப்பன் கோயிலும் ஒன்று. 108 திவ்வியதேசங்களில் இத்தலம் 71-வது தலமாக விளங்குகிறது. இங்கு பெருமாள் கோயில் என்று அழைக்கும் வழக்கம் மாற்றம் பெற்று விஷ்ணு கோயில்

என்றே அழைக்கும் வழக்கமே காணப்படுகிறது. விஷ்ணு கோயில் மிகவும் பழமையான கோயில் என்பதனை இங்குகிடைக்கும் புராணச்செய்திகளின் மூலம் அறிய முடிகிறது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

விஷ்ணு கோயில் என்றழைக்கப்படும் திருச்செங்குன்றூர்த் தலம் கேரள மாநிலம், ஆலப்புழை மாவட்டத்தில் திருவனந்தபுரத்திலிருந்து கொல்லம் வழியாக எர்ணாகுளம் செல்லும் வழியில் செங்கண்ணூர் என்னும் இடத்திற்கு அருகே அமைந்துள்ளது. திருத்தலம் அமைந்தைச் சுற்றிலுமே மிகவும் செழிப்பாகக் காணப்படுகிறது. கோயிலுக்கு சற்றுத் தொலைவில் ஓர் ஆற்றங்கரை அமைந்திருக்கிறது. இங்கு செல்லும் வழியின் பகுதிகளில் சோலைகளும், இயற்கை எழில்களும் அடர்ந்து கண்களுக்கு இனிமையைக் கொடுக்கிறது.

ஆ) திருத்தலத்தின் பெயர்க்காரணம்

இத்திருத்தலத்திற்குத் திருச்செங்குன்றூர் என்று பெயர்வரக்காரணம் இன்னதென்று சரியாகத் தெரியவில்லை. ஆயினும், சிற்றாறு என்னும் பெயரினைக் கொண்ட சிறிய நதியானது இத்தலத்திற்கு அருகில் ஓடுவதால் திருச்சிற்றாறு என்றும் பெயரினைப் பெற்றிருக்கலாம் என்றும் கூறுவர். இங்குவாழும் மக்கள் இத்தலத்தினைத் திருச்சிற்றாறு விஷ்ணு கோயில் என்றே அழைக்கப்படுகிறது. நம்மாழ்வார் இத்தலத்தைத் ‘திருச்செங்குன்றூரில் சிற்றாறு’ என்றும், ‘திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு’ என்றும் அழைக்கின்றார்.

பஞ்சபாண்டவர்களுள் ஒருவரான தருமர், மனஅமைதி வேண்டி இக்கோயிலைப் புதுப்பித்து வழிபட்டார் என்பதனால், இக்கோயிலைத் ‘தருமர் கோயில்’, ‘தருமச்சேத்திரம்’, ’தரும அம்பலம்’ என்ற பெயர்களில் எல்லாம் அழைக்கின்றனர். “தேவர்கள் இக்கோயிலில் கூடியிருந்து திருமாலைக் குறித்து தவம்புரிந்தனர் என்றும், அவர்களுக்குத் திருமால் இவ்விடத்தில் காட்சி தந்ததால்

“இமையவரம்பன்” என்ற பெயர் இறைவனுக்கு உண்டாயிற்று”[13] என்று செவிவழிச் செய்தியாகச் சொல்லப்படுகிறது.

இ) திருச்செங்குன்றூர் அப்பனும் ஆழ்வாரும்

திருச்செங்குன்றூர் அப்பனைப்பற்றி நம்மாழ்வார் மட்டுமே பதினோரு மங்களாசாசனப் பாடல்களைப் பாடியுளார். நம்மாழ்வார் “தெந்திசைக்கு அணிகொள் திசைச்செங்குன்றூர்” என்று ஊரின் சிறப்பினைச் சிறப்பித்து கூறுகின்றார். அந்தகாலத்தில் “மனக்கொள்சீர் மூவாயிரம்” திருச்செங்குன்றூரில் வாழ்ந்தனர் என்பதும், அவர்கள் செய்யும் வேள்வித்தீயினால் எழக்கூடிய நறும்புகையினால் மேலுலகையும் மறைக்கும் வண்ணம் இருப்பதனை நம்மாழ்வார்,

“நல்லநான் மறையோர் வேள்வியுள் மடுத்த
நறும்புகை விசும்பொளி மறைக்கும்” (திருவாய். 8.4:5)

என்னும் பாசுர வரிகளின் மூலம் அறியலாம். ஆகவே இந்த ஊர் அக்காலத்திலே சிறப்பு பெற்று இருந்தமைக்கு இப்பாடல் உதாரணமாக இருக்கின்றது. அதுமட்டுமின்றி,

“கொடைபெரும் புகழார் இனையர்தன் ஆனார்
கூரிய விச்சையோடு ஒழுக்கம்
நடைப்பலி இயற்கைத் திருச்செங்குன்றூர்” (திருவாய். 8.4:9)

என்ற பாடல் வரிகளில் நம்மாழ்வார் குறிப்பிடுவது, திருச்செங்குன்றூரில் அக்காலகட்டத்தில் வைணவ சமயத்தவர்கள் ஏராளமாக வாழ்ந்திருக்கின்றனர் என்பதாகும். இந்தச் செய்தியினை ந.சுப்புரெட்டியார் தம் படைப்பில் வெளிக்காட்டுகிறார். மேலும் திருச்செங்குன்றூரானது அதிக அளவில் வாழைக்குலைகள் நிறைந்த தோட்டங்களையும், கமுகு மரங்களைக் கொண்டும் காணப்படுகின்றதையும் நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருச்செங்குன்றூர் இறைவனை 'இமையவர் அப்பன்' என்று அழைக்கின்றனர். இறைவியின் பெயர் செங்கமலவல்லி என்பதாகும். அகன்ற நிலப்பரப்பில் இத்திருத்தலம் அமைந்திருக்கிறது. திருமால் கிழக்கே திருமுகமண்டலங்கொண்டு நான்கு கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார். வலதுபுற கரங்களுள் ஒன்றில் சக்கரமும், மற்றொன்றில் செந்தாமரை மலரும் வைத்திருக்கிறார். இடது புறத்தில் இருக்கும் கரங்களில் ஒன்றில் சங்கும், மற்றொன்றில் தரையில் ஊன்றிய கதாயுதத்தையும் வைத்துக்கொண்டிருக்கிறார்.

கோயில் வளாகத்தில் கோசல கிருஷ்ணன், தருமசாஸ்தா ஆகியோருக்கும் தனித்தனி சன்னதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தலவிருச்சமாக ஆலமரம் இருக்கிறது. கோயில் விமானம் ஜகஜ் ஜோதி விமானம் ஆகும். கோயிலுக்குச் செல்லும் பாதையில் வலதுபுறம் 'சங்குதீர்த்தம்' என்ற தீர்த்தக் குளம் உள்ளது.

இத்தலம் பஞ்சபாண்டவர்களில் ஒருவரான தருமனால் கட்டப்பட்ட தலம் என்று கூறப்படுவதன் காரணம், மகாபாரதப்போரில் துரோணாச்சாரியாரைக் கொல்வதற்காகத் தருமன் பொய் சொன்னதை எண்ணி, மனம் வருந்தி போர் முடிந்த பிறகு இத்தலத்தில் வந்து மன அமைதிக்காக தவமிருந்ததாகவும், அப்போது சிதலமடைந்திருந்த இத்தலத்தைத் தருமன் புதுப்பித்ததாகவும் வரலாறு கூறுகிறது. (அஸ்வத் தாமன் இறந்துவிட்டான் என்று சொல்ல வேண்டிய தர்மன், அஸ்வத்தாமன் என்ற சொல்லைப் பலமாகக் கூவி (அஸ்வத்திரன் என்ற) யானை இறந்துவிட்டது என்ற சொல்லை மிக மெல்லிய சப்தத்தில் உச்சரித்தார். இதனால் போரில் துரோணாச்சாரியார் கொல்லப்பட்டார்).

திருச்செங்குன்றூரிலிருந்து கிழக்கு திசையில் சுமார் 10 கி.மீ. தொலைவில் திருவாறன்விளையும், மேற்குதிசையில் சுமார் 7 கி.மீ. தொலைவில் திருப்புலியூரும், வடமேற்கு திசையில் சுமார் 8 கி.மீ. தொலைவில் திருவண்வண்டூரும், வடக்கு

திசையில் சுமார் 15 கி.மீ. தூரத்தில் திருவல்லவாழ் தலமும், திருவல்லாவிலிருந்து சுமார் 7 கி.மீ. வடகிழக்கில் திருக்கடித்தானமும் அமைந்துள்ளது. திருச்செங்குன்றூர் தலம் தர்மராலும், திருவாறன்விளை அர்ச்சுனனாலும், திருப்புலியூர் பீமனாலும், திருவண்வண்டூர் நகுலனாலும், திருக்கடித்தானம் சகாதேவனாலும் புனரமைப்பு செய்யப்பட்டதாக மக்கள் நம்புகின்றனர்.

திருச்சிற்றூர் ஆற்றின் கரையில் அமைந்திருக்கும் இக்கோயிலில் விஷ்ணுவுக்குரிய அனைத்துச் சிறப்பு நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. திருவிழா நடைபெறும் நாட்களிலும், திருவோண நட்சத்திரத்தன்றும் ‘ஆறாட்டும்’ மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. ஆவணி மாதம் அஷ்டமி ரோகிணி நாளில் தொடங்கிப் பத்து நாட்கள் வரை தசாவதாரப் பெருவிழாவும் நடைபெறுகிறது. இந்த நாட்களில் விஷ்ணுவின் பத்து தோற்றங்களும் சந்தனத்தால் உருவாக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. “திருவிழா நாட்களில் சாக்கியார்கூத்து, கொடியாட்டம் உட்பட மலையாளமரபு வழி நடனங்கள் இடம்பெறுகின்றன”[14]. இத்தலத்தில் பால் பாயாசம் பிரசாதமாக அளிக்கப்படுகிறது.

6. திருக்கடித்தானத்து உறைதிருமால்

சேரநாடு என்று அறியப்படும் மலைநாட்டுத் திருப்பதிகளில் திருக்கடித்தானம் தலமும் ஒன்று. 108 திவ்வியதேசங்களில் 70-வது தலமாகவும் விளங்குகிறது. இத்தலம் மிகவும் பழைமைவாய்ந்தது. “காஷ்மீர மொழியில் எழுதப்பட்ட நூல் ஒன்றில், நினைத்திரத்தில் மோட்சம் தரக்கூடிய பாரத தேசத்திலுள்ள 15 தலங்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளதாகச் சொல்லுவர். அத்தலங்களின் வரிசையில் திருக்கடித்தானத்தின் பெயரும் இடம் பெற்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது”[15]. இதன் மூலம் இத்தலத்தின் மேன்மையினை அறியலாம்.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருக்கடித்தனம் தலமானது கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம், செங்கணாச்சேரியிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அங்குள்ள மக்கள் இத்தலத்தைத் 'திருக்கோடித்தானம்' என்ற பெயரில் அழைக்கின்றனர். திருக்கடித்தானத்தில் இயற்கை அமைப்புக்குப் பஞ்சமில்லை. ஏனெனில் கோடைக்காலமாக இருப்பினும் தோப்புகளும் துரவுகளும் எனச் சேர்ந்து எப்போதும் வளமையாகவே காணப்படும். இவ்வமைப்பைப் பார்ப்பவர்களுக்கு மனதில் புத்துணர்வை ஊட்டும் விதத்தில் அமைந்திருக்கின்றன.

அ) திருத்தலத்தின் பெயர்க் காரணம்

தொல்காப்பியரின் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற கூற்றிற்கிணங்க எச்சொல்லாயினும் ஏதேனும் பொருளினைதந்து நிற்கும். அவ்வண்ணமே, கடி என்ற சொல் கடிகை என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். 'கடிகை' என்றால் நொடிப்பொழுது என்பது பொருள். திருக்கடித்தானம் என்று பெயர் வரக்காரணம், சூரிய வம்சத்தில் பிறந்தவர் ருக்மாங்கதன். இவர் உலக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த குணத்தினைப் படைத்தவர். பிற உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணும் பண்பினை உடையவர். தன்னுடைய கடமையிலிருந்து தவறாத மன்னராகவும் திகழ்ந்தவர்.

இவர் ஆட்சி செய்த இடத்தில் உள்ள நந்தவனத்தில் பூத்திருக்கும் அழகான பூக்களை யாருக்கும் தெரியாமல் தேவர்கள் வந்து பறித்துச் சென்று திருமாலுக்குச் சூட்டி மகிழ்ந்தனர். இவ்வாறு மலர்கள் தொடர்ந்து காணாமல் போவதைக் கண்டறிய முற்படும் ருக்மாங்கதன் தவ வலிமையால் தேவர்களையும், தேவ மகளிரையும் நந்தவனத்தில் மீண்டும் பூப்பறிக்க வந்த போது சிறைப்பிடித்தார். இதனால் தேவர்களுக்கு விண்ணுலகம் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தேவர்கள் இச்செயலுக்கு மன்னிப்பு கேட்டு நிற்க; "ருக்மாங்கதனோ வருடம் தவறாமல் ஏகாதசி விரதம் இருந்து பெரும் பேற்றைப் பெற்றிருப்பதால், அதன்

பயனை தேவர்களுக்குக் கொடுத்தால்தான் தேவர்கள் மீண்டும் விண்ணுலகம் செல்ல முடியும் என்று அசரீரி ஒலித்தது". அதுபோலவே ருக்மாங்கத மன்னன் தேவர்களை அழைத்துவந்து திருக்கடித்தானம் இறைவன் முன்பே நிறுத்தி தனது ஏகாதசி விரதத்தின் பலனை அவர்களுக்குக் கொடுக்கவே அவர்கள் தேவருலகம் சென்றனர். இந்நிகழ்ச்சி அனைத்துமே ஒரு கடிகை நேரத்தில் இத்தலத்தில் நடந்ததால் இத்தலத்திற்கு இப்பெயர் பெற்றிருக்கிறது.

"ஆழ்வார்களால் பாடப்பட்ட 108 திவ்வியதேசங்களில் 'கடி' என்ற சொல்லைக்கொண்ட மூன்றுத் தலங்கள் விளங்குகின்றன. அவை தொண்டைநாட்டுத் திருப்பதியான திருக்கடிகை(சோளாங்கியம்), வடநாட்டுத் திருப்பதியான கண்டன் என்னும் கடிநகர் மற்றும் மலைநாட்டுத் திருப்பதியான திருக்கடித்தானம் ஆகும். அதாவது, ஒரு கடிகை பொழுதாவது இத்தலத்தில் உறையும் இறைவனை மனமுருக வேண்டினால் வேண்டுவது அனைத்தும் கிட்டும் என்பது நம்பிக்கையாகும்"[16]. அதன் காரணமாக இத்தலத்தின் பெயர் கடிகைத்தானம் என்று வந்ததாகக் கூறுவர். பின்னர் திருக்கடிக்கைத்தானமாகி, தற்போதுபோது மருவி திருக்கடித்தானமாக மாறியுள்ளது.

இ) திருக்கடித்தானமும் ஆழ்வாரும்

நம்மாழ்வார் மட்டுமே திருக்கடித்தானம் இறைவனைப் பற்றி 11 மங்களாசாசனப் பாடல்களைப் பாடியுள்ளார். நம்மாழ்வார் இத்தலத்தைச் "சோலைத் திருக்கடித்தானம்" என்றே குறிப்பிடுகின்றார். இதற்குக் காரணம் இத்தலத்தில் நறுமணங்கள் நிறைந்த சோலைகளும், குளிர்ச்சியைத் தரும் தோப்புகளும் சூழ்ந்து காணப்படுவதால் இவ்வாறு குறிப்பிடுகின்றார். ஆழ்வாருடைய காலகட்டத்திலேயே திருக்கடித்தான் ஊரில் வேதியர்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பதும், அவ்வேதியர்கள் நான்மறைகளையும் தினமும் ஓதினார்கள் என்பதனையும்,

"நற்புகழ் வேதியர் நான்மறை நின்று அதிர்
கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே" (திருவாய். 8.6:10)

அவரின் பாசுரத்தின் மூலம் அறிகிறோம். அதுமட்டுமின்றி மிகவும் செழிப்புடன் காணப்படும் மரங்களால் மிகுந்த குளிர்ச்சி ஏற்படுகிறது. அவ்வாறு ஏற்படும் குளிர்ச்சியின் காரணமாகத் தேவர்களின் நாட்டிலுள்ள கற்பகச் சோலைகள் நினைவுக்கு வருவதாகவும்" ஆழ்வார் குறிப்பிடுகிறார். இத்தகைய சிறப்புமிக்க திருக்கடித்தானத்துச் சோலைகளைக் கற்பகச்சோலையுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஆழ்வார். "மணத்தையுடைய இடம் எனப் பொருள்படும் 'திருக்கடித்தானம்' என்ற பெயர் இவ்வூருக்கு மிகவும் பொருந்தும்"[17] என்பதனையும் உணர்ந்து அதனை அனுபவித்துப் பிறருக்கும் தெளிவுப்படுத்திக் காட்டுகின்றார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருக்கடித்தானத்து இறைவனை அற்புத நாராயணன் என்ற பெயரில் வழங்குகின்றனர். இவருக்கு அமிர்த நாராயணன் என்ற பெயரும் உண்டு. ருக்மாங்தகன் என்பவருக்கு இத்தலத்திலே திருமால் காட்சியளினார் என்பதும் புராணவரலாறு தெரிவிக்கிறது. பஞ்சபாண்டவர்களில் சிறந்து விளங்கிய சகாதேவனால் இத்தலம் புதுப்பிக்கப்பட்டது. இங்குள்ள கிருஷ்ணன் சன்னதியை சகாதேவனே கட்டிமுடித்தார். ஆகையால் இத்தலம் சகாதேவன் கட்டியதலம் என்றே இப்பகுதி மக்களால் அழைக்கப்படுகின்றன.

சகாதேவன் இந்தப்பகுதியில் கோயில் கட்டிவந்தபோது திருமால் சிலை அவருக்குக் கிடைக்கவில்லை. இதனால் தீக்குளித்து இறந்து போக முடிவு செய்து அதற்காகத் தயாரானபோது திருமால் சிலை தானாகத் தோன்றியது. இந்த அற்புதத்தைக் குறிக்கும் வகையில்தான் இங்குள்ள நாராயணருக்கு "அற்புத நாராயணன்" என்று பெயர் வந்தது.

இங்குள்ள இறைவன் அறுபது ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய சக்தி பெறுவதாக நம்பிக்கை. மேலும் இப்பெருமான் கலியுகத்தின் முடிவில் ஜோதிமயமாகிவிடுவார். என்றும் சொல்லப்படுகிறது. இறைவியினைக்

கற்பகவல்லி நாச்சியார் என்ற பெயரில் அறியப்படுகிறார். கர்பக்கிரகம் வட்டவடிவில் அமைந்திருக்கிறது. கர்பக்கிரகத்தில் இறைவன் கிழக்கு நோக்கியும், நரசிம்மர் மேற்குநோக்கியும் காட்சியளிக்கின்றன்றனர். பெருமான் சன்னதியே முதன்மையான சன்னதியாகும். நரசிம்மர் சன்னதி பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது. ஒரே கர்பக்கிரகத்தில் இரண்டு சன்னதிகள் இருப்பதால் இங்கு இரட்டைக்கொடிமரம் உள்ளது.

கருவறைக்குத் தெற்கே தட்சணாமூர்த்தி, விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கோயில் பிரகாரத்தில் சாஸ்தா, சுப்பிரமணியர், நாகர் சிலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

திருக்கடித்தானம் கோயில் மதிற்சுவற்றில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுக்கள் ஒன்றில் வட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன. தமிழ்மொழியின் வட்டெழுத்துக்காலத்திலேயே இத்தலம் சிறப்புபெற்றிருக்கின்றன என்பது பற்றி இச்சான்றுகள் நமக்குப் பறைசாற்றுகின்றன. அக்காலகட்டத்திலே இங்குள்ள பெருமானுக்கு நடைபெறும் விழாக்களில் பெண்கள் குடைபிடித்து நடனமிடும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வந்ததாகவும், காலப்போக்கில் அவ்வழக்கம் கைவிடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இக்கருத்தினை, இக்கோயிலைச் சுற்றியுள்ள சிதிலமடைந்த மண்டபம், வெளிவாசற் கதவருகேயுள்ள சுவற்சிற்பங்கள் ஆகியவற்றில், பெண்கள் குடைபிடித்து ஆடுதல் போன்ற நிகழ்ச்சி சிற்பங்களாக சித்தரிக்கப் பட்டிருக்கின்றவற்றோடு ஒப்பிட்டுக்காணலாம்.

இக்கோயிலைச்சுற்றிக் கட்டப்பட்ட பிரம்மாண்ட கல்சுவர்கள் பூதகணங்களால் ஒரே நாளில் கட்டப்பட்டதாகக் கூறுவர். இக்கோயிலின் முகப்பில் ஒரு கல்தூணில் இறந்த ஒருமனிதனின் உடல் கிடத்தப்பட்டிருப்பது சிலையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வுடல் இக்கோயிலின் காவலாளியின் உடல். ஒருமுறை மன்னன் ஒருவன் இந்தகோயிலுக்கு வந்தபோது நடையைத்

சாத்தப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் காவலாளி மன்னனிடம் பணம் வாங்கிக் கொண்டு கோயில் நடையை திறந்துவிட்டிருக்கின்றார். மரபை மீறிய அந்தக் காவலாளி அந்தக்கணமே பிணமாகிப் போனான். இந்த நிகழ்ச்சியை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டவே அக்காவலாளியின் உடல் கோயில் முன் வைக்கப்பட்டுள்ளதாகச் சொல்கின்றனர்.

கார்த்திகை மாதம் நடைபெறும் திருவிழா இக்கோயிலின் பிரதான திருவிழாவாக கொண்டாடப்படுகின்றது. பத்து நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில், ஒன்றாம் நாள் தீபம் ஏற்றப்படுகிறது. அன்று ஏற்றப்படும் தீபம் மறுநாள் வரை இடைவிடாமல் எரிந்துகொண்டிருக்கும். இந்த நிகழ்விற்குச் 'சங்கேதம்' என்று அழைக்கின்றனர். இக்கோயில் தீர்த்தம் பூமிதீர்த்தம் ஆகும். கோயில் விமானம் புண்யகோடிவிமானம் ஆகும். திருக்கடித்தானம் கோயில் தீர்த்தமாகப் பூமிதீர்த்தம் விளங்குகிறது.

7. திருவல்லவாழ் உறையும்கோனார்

மலைநாட்டுத்திருப்பதிகளில் திருவல்லவாழும் ஒன்று. 108 திவ்விய தேசங்களில் இத்தலம் 69-வது தலமாகும். இத்திருத்தலத்திலே இறைவன் பிரம்மச்சரிய விரதம் கடைப்பிடிக்கிறார். எனவே ஐயப்பன் கோயிலைப்போன்று, இங்கும் பெண்களுக்கு அனுமதியில்லை. மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்றும், சித்திரை விஷீ அன்றும் இறைவனின் மார்பு தரிசனம் சிறப்பு என்பதால், இந்த நாட்கள் மட்டும் பெண்களை அனுமதிக்கின்றனர். இத்தலம் 1000 முதல் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் சொல்லப்படுகின்றது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருவல்லவாழ் கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில், கொல்லம் எர்ணாகுளம் பாதையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் உள்ள மக்கள் இத்தலத்தை 'ஸ்ரீ வல்ல சேத்திரம்' என்ற பெயரில் அழைக்கின்றனர். ஆனால், தற்போது 'திருவல்லவாழ்' என்று அழைப்பதை மக்கள் 'திருவல்லா' என்றே அழைக்கின்றனர்.

திருவல்லாத்தலமும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளும் செழிப்புடன் காணப்படுகிறது.

ஆ) திருத்தலத்தின் பெயர்க்காரணம்

கேரளாவிலுள்ள சங்கரமங்கல கிராமத்தில் கடும் விரதத்தை மேற்கொள்ளும் சங்கரமங்கலத்தம்மையார் வாழ்ந்தார். இவர் ஏகாதசி தினத்தில் விரதமிருந்து திருவல்லவாழ்த் தலத்திற்கு வருவார். மறுநாள் துவதாசியன்று இக்கோயிலில் வசிக்கும் துறவிகளுக்கு அன்னதானம் செய்வார். சங்கரமங்கலத்தம்மை கோயிலுக்கு வரும் வழியிலுள்ள காட்டுப்பகுதியில், தோலாசுரன் என்னும் அரக்கன் வாழ்ந்து வந்தார். தோலாசுரன் தன்னையறியாமலே காட்டுவழியில் வரும் அம்மையாரை கோயிலுக்கு வரும்போதெல்லாம் தோலாசுரன் மறைமுகமாக இருந்து அவரை கோயிலுக்குச் செல்லவிடாமல் துன்பம் விளைவித்துவந்தார்.

துன்பமடைந்த அம்மையார் இதனைத் திருமாலிடம் முறையிட்டார். இவ்வாறிருக்க ஒருமுறை அம்மையார் காட்டின் வழியே வரும்போது, பிரம்மச்சாரி இளைஞன் ஒருவன் ஏதோ ஒரு அசுரசக்தியுடன் போர்புரிவதைக் கண்டார். சற்று நேரத்தில் சப்தம் நின்றுவிட, பிரம்மச்சாரியைக் காணவில்லை. அம்மையார் கோயிலுக்கு வந்து திருமாலைப் பார்த்தார். திருமாலோ பார்ப்பதற்கு, காட்டிலே பார்த்த பிரம்மச்சாரி இளைஞரைப் போன்ற தோற்றத்தில் இருந்தார்.

தன்னைப் பாதுகாக்கத் திருமால் நேரில் வந்து அசுரருடன் போரிட்டதாக அம்மையார் புரிந்து கொண்டார். பிரம்மச்சாரி இளைஞர்கள் மேலாடை அணிவதில்லை. திருமாலும் இத்தலத்தில் உடம்பில் மேலாடை இல்லாமல் மார்பு தெரிய காட்சியளிக்கிறார். அவரது மார்பில் லட்சுமி(திரு) நிரந்தரமாகக் குடியிருப்பதால் இவருக்குத் திருவாழ்மார்பன் என்ற பெயர் ஏற்பட்டது. இதனால் தலத்திற்கு திருவல்லவாழ் என்றும் அழைக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. கருடபுராணத்திலும், மத்ஸ்யபுராணத்திலும் இத்தலத்தைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இ) திருவல்லவாழும் ஆழ்வார்களும்

திருவல்லவாழ் திருவாழ்மார்பனைப் பற்றி திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும் 22 மங்களாசாசனப் பாசுரங்களைப் பாடியுள்ளனர். நம்மாழ்வார் இத்தலத்தைத் ‘திருவல்லவாழ்’ என்றும், திருமங்கையாழ்வார் ‘வல்லவாழ்’ என்ற பெயரிலும் மங்களாசாசனம் செய்துள்ளனர். வானத்தை முட்டும் வகையில் உயர்ந்து வளர்ந்திருக்கும் பாக்கு மரங்களும், தேன்பொருந்திய மல்லிகையும், வாசனை வீசுகின்ற சோலைகளும் சூழ்ந்திருக்கும் இடமாகவே திருவல்லவாழ் திகழ்கிறது என்று நம்மாழ்வாரின்,

“மாயோன் நோக்கி நல்வீர்!
வைகலும்வினை யேன்மெலிய
வானார் வண்கமுகும்
மதுமல்லிகை யும்கமழும்
தேனார் சோலைகள்சூழ்
திருவல்ல வாழ்உறையும்
கோனாரை, அடியேன்
அடிகூடுவ(து) என்றுகொல்லோ?” (திருவாய். 5.9:1)

இப்பாசுரத்தின் மூலம் அறியலாம். திருவல்லவாழ் நகரின் இயற்கை வளங்களைக் குறித்தும் ஆழ்வார்கள் அதிகப் பாசுரங்களைப் பாடியுள்ளனர்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருவல்லவாழ் தலமானது விசாலமான இடப்பரப்பில் அமைந்துள்ளது. திருத்தலத்து இறைவனைத் திருவாழ்மார்பன் என்னும் பெயரில் அழைக்கின்றனர். அதோடு மட்டுமல்லாது இறைவனை கோலப்பிரான், ஸ்ரீவல்லபன் என்னும் பெயர்களிலும் வழங்குதலும் உண்டு. இறைவன் நின்ற கோலத்தில், கிழக்கே திருமுகம் பார்த்தவண்ணம் அமைந்திருக்கிறார். இறைவனின் பின்புறம், சுதர்ஸன சக்கரம் அமைந்திருக்கிறது. இறைவியைச் செல்வத்திருக்கொழுந்து நாச்சியார் என்றும் அழைக்கின்றனர். மேலும் அவருக்கு வாத்ஸல்ய தேவி என்னும் பெயரும் உண்டு.

இத்தலத்தில் இறைவனைத் திருமுகமண்டலம் மற்றும் திருவடிகளை ஒரே நேரத்தில் பார்ப்பது என்பது இயலாது. திருவடிகளைப் பார்க்கும் போது திருமுகத்தைத் பார்ப்பது என்பது இயலாது. இத்தகைய அபூர்வமான அமைப்பில் கர்ப்பக்கிரகம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் கண்டாகர்ணன், சங்கரமங்கலத்தம்மையார் ஆகியோருக்குப் பெருமான் காட்சியருளினார்.

இத்தலத்தில் 50 அடி உயரமும், 2 அடி சுற்றளவும் கொண்ட கல்லாலான துவஜஸ்தம்பம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த துவஜஸ்தம்பம் பூமிக்குக் கீழே எவ்வளவு தூரம் செல்கிறது என்பதை அறிய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்தத் துவஜஸ்தம்பத்தைச் சுற்றி, சுமார் 7 அடி உயரம் வரையிலும் அபூர்வமான சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தில் "பெருமானுக்குப் 'பந்தீராயிரம்' என்று சொல்லப்படும் வழிபாடு நடைபெறுகிறது. அப்போது 1200 வாழைப்பழங்கள் பெருமானுக்கு நிவேத்தியமாகப் படைக்கப்படுகின்றன. அதனைப் போலவே, துவாதசியன்று கமுகு பாளையில் பிரசாதமும், உப்பு மாங்காயும் பெருமானுக்கு நிவேத்தியமாகப் படைக்கப்படுகிறது"[18]. இது மற்ற திவ்விய தேசங்களுக்கு இல்லாத தனிச்சிறப்பாகவே அறிய முடிகிறது.

திருவல்லவாழ் தலத்தைச் சுற்றியுள்ள சில இடங்களுக்குத் தலையார், முட்டாறு, காலாறு, சங்கர காலக் கடவு என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. பிரம்மச்சாரிய கோலத்தில் வந்த பகவான் தோலாசுரனின் தலையைத் துண்டித்தபோது அவனது தலை 'தலையார்' என்ற இடத்தில் விழுந்தாகவும், அவனது கை 'முட்டாறு' என்ற இடத்தில் விழுந்ததாகவும், அவனது கால்கள் 'காலாறு' என்ற இடத்தில் விழுந்ததாகவும் சொல்லப்படுகிறது. அசுரனின் தலையைத் துண்டித்த இரத்தக்கரை படிந்த சுதர்ஸன சக்கரத்தைப் பகவான் 'சங்கரகாலக் கடவு' என்ற இடத்தில் சுத்தம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது.

கண்டாகர்ணன் என்பவன் சிவ கணங்களுக்குத் தலைவனாக விளங்கியவன். அவன் அரக்க உருவம் கொண்டவன். தன்னிடம் இருந்த சூலத்தால் உலக மக்களை வதைத்துக் கொன்று, சிவபெருமானுக்கு நரபலியாகக் கொடுத்துவந்ததோடு தானும் நர மாமிசம் உண்டு வாழ்ந்தவன். சிவபெருமானிடம் தன் தீவிர பக்திக்கு முக்திபெறும் வழியைக் கேட்டான். உயிர் கொலைகள் அற்ற சாந்தசொரூபியான நாராயணனை வழிபட்டு பரமபதம் அடைவாய் என்று சிவபெருமான் அருளினார்.

சிவனார் கூறியபடியே கண்டாகர்ணன் எம்பெருமானை நோக்கி 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தை சர்வ நேரமும் தியானித்து தவம் செய்தான். வெறிமயமான தீவிரவாத பக்தியை உடைய தம் பக்தனுக்கு அவன் அறியாமல் அவனுள் தெய்வ ஒருமைப்பாடு விளங்கும் வண்ணம் சாந்த சொரூபமாக அவன் திகழ சிவபெருமான் வழிசெய்தார்.

எம்பெருமான் கண்டாகர்ணனுக்கு மனம் இரங்கி அவனுக்குக் காட்சியருளினார். "கண்டாகர்ணனின் நினைவாக இத்தலத்தைப் புஷ்கரணி கண்டா தீர்த்தம்"[17] என்ற பெயரைப் பெற்றுள்ளதாகப் புராணகதைகளின் மூலம் அறியலாம். இத்தலத்தில் மிகப்பெரிய குளம் ஒன்று காணப்படுகிறது. இதன் சிறப்பு என்னவென்றால் இக்குளம் தானாகவே தோன்றியது என்றும், இன்னும் இக்குளத்தில் ஊற்றுகள் மூலம் தானாகவே தண்ணீர் வருவதாகவும் சொல்லப்படுகிறது.

கோயில் என்றாலே பொதுவாக கொடிமரம் காணப்படும். அதிலும் தமிழ்நாட்டில் உள்ள திவ்விய தேசங்களின் கொடிமரங்களுக்கும், கேரளா என்று அறியப்படும் மலைநாட்டு திவ்விய தேசங்களில் உள்ள கொடி மரங்களுக்கும் ஒரு முக்கியமான வேறு பாடு காணப்படுகிறது. "தமிழ் நாட்டில் கொடிக் கம்பத்தில் சிற்பங்களையோ விக்கிரகத்தையோ காண்பதரிது. ஆனால் மலையாளத்து திவ்விய தேசங்களில் இந்த துவஜஸ்தம்பத்தைச் சுற்றி அபூர்வமான சிற்பங்களையும்,

விக்கிரகங்களையும் வடித்துள்ளார்கள். இவைகள் அதிதேவதைகளாகவும் சில ஸ்தலங்களில் நவக்கிரகங்களாலும் வடிக்கப்பட்டுள்ளன”[19]. அதுபோன்றே இத்தலத்திலும் துவஜஸ்தம்பத்தில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் மிகவும் வசீகரத் தோற்றத்துடனும் தெய்வீகப் பொலிவுடன் திகழ்வது இத்தலத்திற்கான தனிப்பட்ட சிறப்பு ஆகும். கேரளாவின் மிகவும் புகழ் பெற்ற கதக்களி நடனத்தை இங்கே வேண்டுதலாக நடத்துகின்றனர். கோயில் தீர்த்தம் கண்டாகர்ணன் மற்றும் பம்பைநதியாகும். விமானம் சதுரங்க கோல விமானம் ஆகும்.

8. திருவண்வண்டூர் தேவாதிதேவன்

மலைநாட்டுத் திருப்பதிகளில் திருவண்வண்டூரும் ஒன்று. இத்தலம் 108 திவ்வியதேசங்களில் 74-வது திவ்வியதேசமாகும். இவ் 108 திவ்வியதேசங்களில் மூன்று தலங்கள் மட்டுமே வண் என்ற அடைமொழியோடு சேர்த்து அழைக்கப்படுகின்றன. அவை சோழநாட்டில் அமைந்துள்ள திருவண்புருடோத்தமம், மலைநாட்டுத்திருப்பதிகளில் ஒன்றான திருவண்பரிசாரம், மற்றொன்று திருவண்வண்டூர். “நாரதீய புராணத்தை இயற்றச் செய்த பெருமைக்குரிய கோயிலாகத் திருவண்வண்டூர் விளங்குகிறது”[20].

அ. திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருவண்வடூர் கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டத்தில் இருக்கும் செங்கணூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் இவ்வூரைத் ‘திருவமுண்டூர்’, 'வண்வண்டூர்’ என்ற பெயர்களில் அழைக்கின்றனர். திருத்தலத்திற்குச் செல்லும் வழிகளின் இருபுறம் தோட்டங்களும், வயல்களும் கண்ணுக்கு விருந்தாக அமைந்திருக்கின்றன.

ஆ. திருத்தலத்தின் பெயர்க்காரணம்

நம்மாழ்வார் திருவண்வண்டூர் இறைவனிடம் குருகு, நாரை, புள்ளினங்கள், அன்னம், பூங்குயில், கிளி, சிறுபூனை, வண்டினங்கள் ஆகியவற்றைத் தூது அனுப்பி, தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறார். அவற்றில் குறிப்பாக

வண்டினங்களைப் பெருமானிடம் தூது அனுப்பிய காரணத்தால் இத்தலம் திருவண்வண்டூர் எனப் பெயர் பெற்றதாகச் சொல்லுவர். அதோடு மட்டுமின்றி இத்தலத்தில் வண்டுகள் எழுப்பும் ஓசைகள் எங்கும் நிறைந்து காணப்படுவதால் “திருவண்வண்டூர்” எனப்பெயர் வந்ததாகவும் கூறுவர்.

இ) திருவண்வண்டூரும் ஆழ்வாரும்

திருவண்வண்டூர் ஆழ்வாரைப்பற்றி நம்மாழ்வார் மட்டுமே மங்களாசாசனப் பாடல்களைப் பாடியுள்ளார். மங்களாசாசனப் பாடல்களின் எண்ணிக்கை மொத்தம் 10. இவை திருவாய்மொழியில் இடம் பெற்றுள்ளது. நம்மாழ்வார் இத்தலத்தினைத் தனது பாசுரங்களில் திருவண்வண்டூர் என்றே குறிப்பிடுகின்றார்.

“செய்கொள் செந்நெல்லுயர் திருவண்வண்டூர், திணர்த்த வண்டல்கள் மேல் சங்குசேரும் திருவண்வண்டூர், செருவொன் பூம் பொழில் சூழ் செக்கர்வேலைத் திருவண்வண்டூர், செருந்திருஞாழல் மகிழ் புன்னைசூழ்தண் திருவண்வண்டூர்” என்று நம்மாழ்வார் இத்தலத்தின் சிறப்புகளை கூறியிருக்கிறார்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருவண்வண்டூர் இறைவனின் பெயர் பாம்பனையப்பன் ஆகும். இவருக்குக் கமலநாதன் என்னும் பெயரும் உண்டு. இத்தலத்தில் இறைவன் மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றார். இங்கு இறைவியாகக் கமலவல்லி நாச்சியார் இருக்கிறார். கோயில் கருவறை வட்ட வடிவமாக அமைந்திருக்கின்றன. தெய்வங்களின் பெருமைகளை எடுத்துரைக்கும் வகையில் ஏராளமான புராணங்கள் எழுதப்பட்டுள்ளன.

புராணங்கள் பல இருப்பினும் முக்கியமான புராணமாகப் பதினெண் புராணங்கள் திகழ்கின்றன. இவை தவிர்த்து பல புராணங்கள் தெய்வங்களின் பெயர்களையும், புராண சிறப்புகளையும் பறைசாற்றும் வகையில் அமைந்திருக்கின்றன. இவற்றில் நாரதரைப் பற்றிய சிறப்புகளைக் கூறும் நாரதீயப்புராணமும் ஒன்று.

ஈரேழு உலகங்களுக்கும் சென்று வரக்கூடிய அற்புத சக்திபடைத்தவர் நாரதமுனிவர். இவர், திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீமன் நாரயணனின் மேல் அளவுகடந்த பக்தி கொண்டவர். அதனால் எப்பொழுதும் இவர் நாவிலிருந்து ‘நாராயண….. நாராயண…’ என்ற திருநாமம் ஒலித்துக்கொண்டே இருக்கும். இவர் தொடங்கும் கலகம், உலக நன்மையின் பொருட்டே இருக்கும் என்பது பல புராணங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

“ஒரு சமயம் நாரதர் பிரம்மாவால் சபிக்கப்பட்டு பின் திருவண்வண்டூரை அடைந்து திருமாலை வழிபட்டு கடும் தவம் மேற்கொண்டார். பின் தனக்குத் தரிசனம் தந்தருளிய திருமாலிடம், தத்துவ ஞானத்தை உலகிற்கு உபதேசிக்கும் தொழிலைத் தனக்கு அமைந்திட வேண்டும் என்ற வரத்தினைப் பெற்றுக்கொண்டார்”[21]. இதன் மூலம் இங்குதான் தத்துவஞான உபதேசங்கள் அடங்கிய நாரதீயப்புராணங்களை உருவாக்கினார் என்ற செய்தியும் இதன் மூலம் அறியலாம். ஸ்ரீமத் நாராயணனை வழிபடும் முறைகளை இருபத்தைந்தாயிரம் கிரந்தங்களில் நாரதீயப் புராணத்தின் மூலம் நாம் அறியலாம்.

பிற்காலத்தில் இக்கோயில் பராமரிப்பின்றி, வழிபாடும் இல்லாமல் போனது. பஞ்சபாண்டவர்கள் வனவாசத்திற்காக இந்தப் பகுதிக்கு வந்த போது, பாண்டவர்களில் ஒருவரான நகுலன் இங்குள்ள கோயிலைக் கண்டு, அதனைப் புதுப்பித்து வழிபட்டு வந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஆகையால் இக்கோயிலை இங்குள்ள மக்கள் ‘நகுலன் கோயில்’ என்றே அழைக்கின்றனர்.

இக்கோயில் இருக்கும் பகுதியில் ஒரு இடத்தைத் தோண்டும் போது ஒரு கிருஷ்ணர் சிலை கிடைக்கப்பெற்றது. அந்த சிலையைக் கொண்டுவந்து இக்கோயில் வளாகத்திற்குள் வைத்து புதிய சன்னதிகளும், மண்டபங்களும் கட்டப்பட்டன. நின்ற கோலத்தில் வெள்ளித் திருவாபரணம் அணிந்து காட்சியளிக்கும் இவரைக் கோசலைக் கிருஷ்ணன் என்று அழைக்கின்றனர்.

மேலும் கோயில் வளாகத்தில் கணபதி, தட்சிணாமூர்த்தி, சாஸ்த்தா, சிவன் மற்றும் நாகர்சிலைகளும் காணப்படுகின்றன.

திருத்தலத்தின் மேற்கு நுழைவாயிலில் அமைந்திருக்கும் கோபுரத்தின் மேற்குபகுதியில் காளியங்கன் மீது கண்ணன் நடனமாடுவது போன்ற தத்துரூபமான சிற்பம் இடம்பெற்றிருக்கிறது. இதன் கீழ்ப்பகுதியில் விஷ்ணுவின் பத்துத் தோற்றங்களிலான சிற்பங்களும் காணப்படுகிறது. நுழைவாயிலின் முன்புறச் சுவரின் ஒருபகுதியில் அனுமன், மற்றொரு பகுதியில் கருடன் ஆகியோரது சிற்பங்கள் அமைந்திருக்கின்றன.

திருத்தலத்தில் எம்பெருமான் நாரதர் மற்றும் மார்க்கண்டேயர் ஆகியோருக்குக் காட்சியருளினார். இங்கு பெருமானுக்குப் பால் பாயாசம் நிவேத்தியமாகப் படைக்கப்படுகிறது. இத்தலத்தில் ஆவணி மாதத்தில்வரும் அஷ்டமி நாளில், கிருஷ்ணர் தோற்றம் பெற்ற நாளும்; மார்கழி மாதம் வரும் வைகுண்ட ஏகாதசி நாளும் மிகவும் சிறப்பாக விழா கொண்டாடப்படுகின்றன. கோயில் தீர்த்தம் பாபநாச தீர்த்தம், பம்பா தீர்த்தம் ஆகும். விமானம் வேதாலய விமானம் ஆகும்.

9. திருப்புலியூர் மாயப்பிரான்

மலைநாட்டுத்திருப்பதிகளில் திருப்புலியூர்த் தலமும் ஒன்று. இத்தலமானது 108 திவ்விய தேசங்களில் 72-வது திவ்வியதேசமாகும். பஞ்சபாண்டவர்களால் புதுப்பிக்கப்பட்ட ஐந்து தலங்களில் ஒன்றாகவும் இத்தலம் விளங்குகிறது. இத்தலத்தில்தான் திருமால் சப்தரிஷிகளுக்குக் காட்சியருளியதாகவும் தலவரலாறு மூலம் அறிய முடியும்.

அ. திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருப்புலியூர் கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டம் செங்கணூரில் இருந்து மேற்கு பக்கமாக நான்கு கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. இத்தலத்தினைப் ‘புலியூர்’ என்றே ஊர்மக்கள் அழைக்கின்றனர். மேலும், இவ்வூரைக் ‘குட்டநாடு’

என்ற பெயரிலும் பண்டைய நாளில் அழைக்கப்பட்டதை ஆழ்வார்களின் பாடல்களின் மூலம் அறியலாம். திருப்புலியூர் இயற்கைச் சூழலில் அழகுற அமைந்துள்ளது. ஊர்முழுவதும் வயல் பரப்புகள் நிறைந்து காணப்படுகின்றன.

ஆ. திருத்தலத்தின் பெயர்க்காரணம்

இந்திரன் புலியாக மாறி கிருத்தியைக் கொன்ற காரணத்தால் இத்தலத்தின் பெயர் 'புலியூர்' என்று வழங்கலாயிற்று என்று கூறுவர். மேலும் சப்தரிஷிகள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க எம்பெருமான் இத்தலத்தில் மாயபிரானாகக் காட்சியருளினார். இந்திரன் புலியாகவந்து ரிஷிகளைக் காத்ததன் நினைவாக இத்தலம் திருப்புலியூர் என்றே அழைக்கப்படுகிறது.

இ. திருப்புலியூரும் ஆழ்வாரும்

திருப்புலியூர் எம்பெருமானைப் பற்றி நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பன்னிரண்டு பாசுரங்களால் மங்களாசாசனம் பாடியுள்ளனர். சோழநாட்டித் திருப்பதிகளுள் திருப்புலியூர் என்று பெயர் கொண்ட திவ்வியதேசம் ஒன்றிருக்கிறது; அதனின்றும் இத்தலத்தை வேறுபடுத்திக்காட்டவே "குட்டநாட்டுத் திருப்புலியூர்" என்று நம்மாழ்வார் தனது பாசுரங்களில் குறிப்பிட்டிருக்கின்றார்.

திருப்புலியூரானது புன்னைமரங்கள் சூழ்ந்து சோலையாய் காட்சியளிப்பதனை "புன்னை அம்பொழில் சூழ்திருப்புலியூர்" என்று ஊரின் சிறப்பினைக் குறிப்பிடுகின்றார் நம்மாழ்வார். வயல்களும், சோலைகளும் சூழப்பெற்ற திருப்புலியூரில் உள்ள ஊற்று நீரில் தாமரை மலர்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதனை நம்மாழ்வார் "சுவையினுள் தடந்தாமரை மலரும் தண் திருப்புலியூர்" என்று தனது பாசுரவரிகளில் கூறியிருக்கின்றார்.

மலைநாட்டில் வெற்றிலைக்கொடிகளும், மிளகு கொடிகளும் அதிகமாக காணப்படுகிறது. இவை அங்குள்ள வீட்டைச்சுற்றிலுமுள்ள தோட்டங்களில் மலர்ந்து காணப்படுவதை இன்றும் காணலாம். வெற்றிலைச் செடிகளை அடுத்து

அங்கு பாக்கு மரங்களும் செறிந்து காணப்படுகின்றன. மலைநாடு 'நேந்திரம்' என்ற வகை வாழைப்பழத்திற்குப் பெயர் பெற்றது. அதனை மலைநாட்டுமக்கள் முக்கிய உணவாகவும் பயன்படுத்துகின்றனர். அத்தகைய வாழைப்பழங்களைக் கொண்ட வாழைமரங்கள் நிறைந்த தோட்டங்கள் அழகு சேர்க்கின்றன. அந்த வாழைகளில் பழக்குலைகள் தொங்கிக்கொண்டிருப்பதையும், அப்பழங்களின் மணம் எங்கும் வீசிக்கொண்டிருப்பதை இன்றும் காணலாம்.

இங்குள்ள பகுதிகளில் தென்னை மரங்களும் செறிந்து இருப்பதை காணலாம். இந்த தென்னை மரங்களின் ஓலைகளினூடே தென்றல் காற்று வீசி இன்பமயமான சூழலை ஏற்படுத்துகின்றன. இதனையே நம்மாழ்வார்,

"மெல்லிசைச் செல்வ வண் கொடி
புல்க வீங்கிளம் தாழ் கமுகின்
மல்லிகை மடல்வாழை ஈன் கனி
சூழ்ந்து மணங் கமழ்ந்து
புல்லிலைத் தேங்கி னூடு
கால் உலவும் திந்திருப் புலியூர்" **(திருவாய். 8.9:7)**

என்று மலைநாட்டின் சிறப்பினை உணர்த்துகின்றார். இப்படிப்பட்டத் திருத்தலத்திற்குப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் நேரில் சென்று அதன் இயற்கைச்சூழலைக் கண்டுகளித்து அதனை நமக்கும் சுவைபடத் தனது படைப்பினூடே தந்தருளுகின்றார்.

நம்மாழ்வார் காலத்தில் இந்த திருப்பதி அழகிய நீண்ட மாடங்கள் உயர்ந்து தோன்றுவதாய் இருந்தது. இதனை ஆழ்வார் "திகழும் மணி நெடுமாடம் நீடு திருப்புலியூர்" என்று குறிப்பிடுவதைக் காணலாம். இன்று இவ்வூரில் அதிகமாகக் கிறித்தவர்களே வாழ்கின்றனர். ஆனால் அந்தக்காலத்தில் செல்வச் செழிப்புள்ள அந்தணர்களே அதிக அளவில் வாழ்ந்து வந்தனர். அவ்வந்தணர்கள் யாகங்கள் செய்யும் போது யாககுண்டங்களினின்றும் புகை சென்று தேவர்கள் உலகத்தையே மறைக்கும் படி இருக்குமாம். இதனையே,

“………………மல்லைச் செல்வம்
வடமொழி மறைவாணர் வேள்வியுள்
நெல் அழல் வான்புகை போய்த்
திடவிசும்பில் அமரர் நாட்டை
மறைக்கும் தண்திருப்புலியூர்”   (திருவாய். 8.9:8)

என்ற பாடலின் வழியே நம்மாழ்வார் கூறியிருப்பதை ஒப்பிட்டுக்காணலாம். வடமொழி மறைவாணர்களாகிய இந்த அந்தணர்கள் ஓதும் சாமவேத ஒலி கடலொலி போல் நிலைபெற்று ஒலித்துக்கொண்டிருக்குமாம் என்னும் கருத்தினையும் இதன்வழி அறியலாம்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருப்புலியூர் தலத்து இறைவனை மாயபிரான் என்றே அழைக்கின்றனர். திருத்தலம் தரைமட்டத்திலிருந்து சற்று உயரமான இடத்தில் அமைந்திருக்கிறது. இறைவன் நின்றகோலத்தில் வலது கையில் சக்கரமும், இடது கையில் சங்கும் ஏந்தி, கிழக்கு பக்கம் பார்த்தபடி இருக்கிறது. திருத்தல இறைவியின் பெயர் ‘பொற்கொடி நாச்சியார்’ என்பதாகும். இக்கோயில் வளாகத்தில் கணபதி, சிவபெருமான், ஐயப்பன் ஆகியோருக்கும் தனித்தனி சன்னதிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்குத் துவஜஸ்தம்பலமும், கருவறையும் மிக்க எழில் வாய்ந்தவையாகக் காணப்படுகிறது. சப்த ரிஷிகளுக்கு இத்தலத்தில் இறைவன் காட்சியருளினார்.

பஞ்சபாண்டவர்களில் ஒருவரான பீமதேவனால் இத்தலம் புதுப்பிக்கப்பட்ட செய்தியும் புராண வரலாறு மூலம் அறிய முடிகிறது. பாண்டவர்கள், துரியோதனின் வஞ்சனையால் நாட்டையிழந்து, ஊர் ஊராகப் பாரததேசமெங்கும் சுற்றிவந்த போது, சிறிது காலம் தற்போதுள்ள கேரள மாநிலத்திலும் தங்க நேரிட்டதாகவும் கூறுவர். அப்போது திருப்புலியூர் கோயில் மிகவும் பழமையடைந்து காணப்பட்டது. பீமன் அத்தலத்தைப் புதுப்பித்து மகாவிஷ்ணுவை

வழிபட்டு மன அமைதியடைந்தார் என்பதும் தலவரலாறுகள் மூலம் அறியலாம். ஆகையால் இத்தலத்தை மக்கள் “பீம சேத்திரம்” என்று அழைக்கின்றனர்.

இக்கோயிலில் பீமன் பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் சதாயுதம் ஒன்று, கோயிலின் முன்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் வைக்கப்பட்டிருக்கிறது. இத்தலத்தில் உள்ள கொடிமரம் பிறகோயில்களை விடவும் மிக அழகிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கோயில் தீர்த்தம் பிரஞ்ஞா ஸரஸ், பூஞ்சுனை தீர்த்தம் என்பதாகும். கோயில் விமானம் புருஷோத்தம விமானம் ஆகும்.

இக்கோயிலில் ஒவ்வொரு மாதமும் திருவோண நட்சத்திர நாளிலும், விஷ்ணுவுக்குரிய பிற சிறப்பு நாட்களிலும் சிறப்பு வழிபாடு செய்யப்படுகின்றன. மார்கழி மாதம் அஸ்தம் நட்சத்திர நாளில் திருவிழா தொடங்கி பத்து நாட்கள் நடைபெறுகிறது. தை மாதம் முதல் நாளில் இக்கோயிலில் காவடியாட்டமும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

10. திருக்காட்கரை அப்பன்

மலைநாட்டுத்திருப்பதிகளில் திருக்காட்கரையப்பன் கோயிலும் ஒன்று. இத்திருத்தலம் 108 திவ்வியதேசங்களில் 67-வது தலமாகும். வாமனனின் தலம் என்றே இத்தலம் அறியப்படுகிறது. கேரள மக்களின் மிகமுக்கிய விழாவாக கருதப்படும் ஓணம் பண்டிகை இத்தலத்திலே தோன்றியதாகச் சொல்லப்படுவதால்; இத்தலத்திலே ஓணம் பண்டிகை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தற்போது இவ்வோணம் கேரளா முழுவதிலும் மற்றும் தமிழகத்தின் பெரும்பான்மையான பகுதிகளிலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. 4500 ஆண்டுகள் பழமையான தலமாகவும் விளங்குகின்றன. இத்தலத்தினைப் பரசுராமனே கட்டினார் என்றும் கூறப்படுகிறது. வாழைப்பழத்தில் ஒரு வகைக்கு நேந்திரம்பழம் என்னும் பெயரைச் சூட்டி அழைக்கும் வழக்கம் இத்தலத்திலேதான் தோன்றியது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருக்காட்கரைத் திருத்தலம் கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தில் இடப்பள்ளி என்னும் ஊரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. திருக்காட்கரை என்னும் பெயரினைக் கொண்ட இத்திருத்தலம் 'த்ரிக்காக்கரா' என்றே அங்குள்ள மக்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திருத்தலத்திற்குச் செல்லும் வழியெங்கிலுமே பசுமைக்குப் பஞ்சமில்லையென்றே கூறவேண்டும். காரணம், இத்திருத்தலத்தினைச் சுற்றிலுமே தோப்புகளும், சோலைகளும், வயல்களும் என்று அமைந்திருப்பதே ஆகும். இவை அமைத்துமே மலைநாட்டிற்கே உரிய அடிப்படையான அடையாளம் என்றே கூறவேண்டும்.

ஆ) திருத்தலத்தின் பெயர்க்காரணம்

காட்கரையப்பன் என்று இத்திருத்தலத்து இறைவனை அழைப்பதனால் தலத்தின் பெயரும் 'காட்கரை' என்றே அழைக்கின்றனர். 'காட்கரை' என்னும் பெயருடன் 'திரு' என்ற அடைமொழியும் சேர்ந்து 'திருக்காட்கரை' என்று வழங்கப்பட்டுவருகின்றன.

இ) திருக்காட்கரையப்பனும் – ஆழ்வாரும்

திருக்காட்கரை தலத்திலே இறைவனாக வீற்றிருக்கும் அப்பனைப் பற்றி நம்மாழ்வார் மட்டுமே 11 மங்களாசாசனப் பாடல்களைப் பாடியுள்ளார். நம்மாழ்வார் இறைவனைப்பற்றி கூறுவதற்கு முன்பே, இறைவன் குடியிருக்கும் திருத்தலத்தின் சிறப்பினைக் கூறுகின்றார். இத்திருத்தலமானது பூவைப்பூ, காயாம்பூ, நீலோற்பலம், செங்கழுநீர்ப்பூ ஆகிய மலர்வகைகள் பூத்துக்குலுங்கி அழகு சேர்க்கிறது. நம்மாழ்வார் கூறியது போன்றே திருக்காட்கரைத் தலமானது பூக்கள் நிறைந்த பூங்காவாகவே காட்சியளிக்கின்றது. இத்தகைய வண்ணமயமான தலமாகவே திருக்காட்கரை விளங்குகின்றது.

திருக்காட்கரைத் தலத்தினை நம்மாழ்வார் "வெறிகமழ் சோலைத் தென்காட்கரை" என்றும், "சீர்மல்கு சோலை தென் காட்கரை" என்றும், "திருவளர்

சோலை தென் காட்கரை” என்றும், “சுனை கொள் பூஞ்சோலைத் தென்காட்கரை” என்றெல்லாம் சிறப்பித்து கூறியிருப்பதனை இப்பாசுரங்களின் வழி ஆராயலாம்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருக்காட்கரை இறைவனைக் காட்கரையப்பன் என்றும், அப்பன் என்றும் பெயர்களைச் சூட்டி அழைக்கின்றனர். இறைவனானவன் வாமனர் தோற்றத்தில், நான்கு கரங்களுடன், சங்கு, சக்கரம், சதாயுதம், தாமரை ஆகியவற்றைத் தாங்கியபடி நின்றகோலத்தில் தெற்கே முகம் பார்த்தவண்ணம் காட்சி கொடுக்கிறார். இறைவியானவள் பெருஞ்செல்வநாயகி, வாத்ஸல்ய வல்லி ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறார். இத்தலத்திலேதான் இறைவனானவன் கபிலமுனிவருக்குக் காட்சிகொடுத்தார் என்பதும் புராணவரலாறுகள் மூலமாக அறியலாம்.

திருக்காட்கரைத் திருத்தலமானது சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில், தாழ்ந்த மதிற்சுவர்களால் சூழப்பட்ட இடத்தில் அமைந்திருக்கிறது. திருக்காட்கரைத் திருத்தலமானது மிகச்சிறிய அளவிலே அமைந்திருப்பினும்; இக்கோயில் வளாகத்திலே பகவதி, சாஸ்தா, கோபாலகிருஷ்ணன், பிரம்மராட்சசன், யட்சி ஆகியோருக்குத் தனித்தனி சன்னதிகள் அமைந்திருக்கின்றன.

இத்திருத்தலத்து இறைவனுக்கு நேந்திரம் வாழைப்பழங்களைப் படைத்து மக்கள் வழிபடுகின்றனர். இப்பழக்கத்தினை அம்மக்கள் காலங்காலமாக மறவாமல் கடைப்பிடித்து வருகின்றனர். இதற்குக் காரணம் மக்களின் நம்பிக்கையே ஆகும். வாழைப் பழங்களில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு வகை வாழைப்பழத்திற்கு நேந்திரம்பழம் என்று வரக்காரணம், இப்பகுதியில் வசித்து வந்த விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் வாழைக்கன்றுகளை வைத்து பயிர்செய்து வந்தார். தோட்டத்தில் வாழைகள் நன்றாக வளர்ந்திருந்தும், அவற்றில் ஒன்றிலுமே குலைதள்ளாமல் இருந்தது. இதனால் வருத்தம் அடைந்த விவசாயி,

திருக்காட்கரை அப்பனிடம் சென்று, தனது தோட்டத்தில் பயிர் செய்யும் வாழை நன்றாக வளர்ந்து குலைதள்ளினால், பெருமானுக்குப் பொன் வாழைக்குலை ஒன்று சமர்ப்பிப்பதாக வேண்டிக் கொண்டார்.

இறைவனும் தன் பக்தன் வேண்டிக்கொண்டதற்கிணங்க, தன் பக்தனின் நிலத்தைத் தன் நேத்திரத்தினால் (விழியினால்) பார்க்க, புதியதாக ஒரு வாழைமரம் அங்கு தோன்றியதுடன் விளைச்சலும் அதிகமானது. அன்று முதல் அந்த வாழைக்கு 'நேந்திர வாழை மரம்' என்ற பெயர்வந்தது. தனது வேண்டுதல் பலித்ததைக்கண்ட விவசாயி, பொன்வாழைக்குலை ஒன்றினை காணிக்கையாகச் செலுத்தினார் என்றும் சொல்லப்படுகிறது. இதுவே நேந்திரம்பழம் என்று பெயர்வரக் காரணமாகும்.

இத்தலத்திலே யோகி ஒருவருக்குத் தனி சன்னதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சன்னதி உருவாகக் காரணம், இத்திருத்தலத்து இறைவனுக்கு ஒரு விவசாயி காணிக்கையாக கொடுத்த பொன்வாழைக் குலை ஒன்று காணாமல் போய்விட்டது. இச்செய்தியானது அந்த நாட்டு மன்னனுக்கு தெரிவிக்கப்பட்டது. மன்னர் சில அரண்மனைக் காவலர்களை அனுப்பி விசாரிக்கச் சொன்னார். அக்காவலர்களோ கோயிலில் தங்கியிருந்த அப்பாவி யோகி ஒருவரை சந்தேகப்பட்டு கைதுசெய்தனர்.

அரசர் ஆணையிற்கிணங்க யோகி சிறையிலடைத்து துன்புறுத்தினர். முடிவில் பொன்வாழைக்குலை காட்கரையப்பன் கோயில் கர்ப்பக்கிரகத்திலேயே கண்டெடுக்கப்பட்டது. தன்னைச் சந்தேகப்பட்டதற்கான சூழ்நிலைகளை எண்ணி சபித்துவிட்டு யோகி தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்து கொண்டதால் யோகி பிரம்மராட்சசனாக மாறி இத்தலத்தில் திரிந்துகொண்டிருந்தார். மன்னன் தனது தவறினை நினைத்து வருத்தம் கொண்டார். பின்னர் திருக்காட்கரையப்பனை வணங்கி யோகிக்கு தனி சன்னதி ஒன்றினை அமைத்தார். அச்சன்னதியிலே தினசரி பூசைகள் செய்து

பிரம்மராட்சசனாக இருந்த யோகியின் கோபத்தை தணித்தார். இக்காரணத்தினாலே இச்சன்னதிக்கு யோகி சன்னதி என்றும் பிரம்மராட்சசன் என்றும் அழைக்கின்றனர்.

திருக்காட்கரையப்பன் கோயில் பிரகாரச் சுற்றில், பெரிய அளவிலான அரச மரம் ஒன்று உள்ளது. இதனை 'முப்பெருங்கடவுள் மரம்' என்கின்றனர். இம்மரத்தின் வேர்ப்பகுதி பிரம்மா, நடுப்பகுதி விஷ்ணு, உச்சிப்பகுதி சிவபெருமான் என்று நினைத்து, முப்பெருங்கடவுளாக வணங்கி வருகின்றனர். இம்மரத்தடியில் மேடை கட்டி மாடவிளக்கு ஒன்றினையும் ஏற்றி வைத்திருக்கின்றனர். ஒவ்வொரு ஆயில்ய நட்சத்திர நாளிலும், இந்த மரத்தடியில் பூசைகள் செய்கின்றனர். அவ்வேளையில் பழங்குடியினர் இங்குப் 'புல்லுவன்' பாட்டைப் பாடிச் சிறப்பிக்கின்றனர்.

திருக்காட்கரை கோயிலில் ஓணத்திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மகாபலி சக்கரவர்த்தியின் செருக்கினை அடக்கிட திருமால் வாமனனாக அவதரித்து மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் தானமாக கேட்டதாகவும்; அதற்கு மகாபலி சக்கரவர்த்தி இசைவளித்தவுடன் முதல் அடியால் பூமியையும், இரண்டாம் அடியில் வானத்தையும், மூன்றான் அடியை மகாபலி சக்கரவர்த்தியின் தலையிலும் வைத்து அவரை அழித்தார். அச்சமயத்தில் முற்படும் நேரத்தில்; மகாபலி சக்கரவர்த்தி ஆண்டுதோறும் தம்மக்களைக் காண தமக்கு அருள் செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அதனை ஏற்று வாமனர் அருள் புரிந்தார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்களைக் காணவரும் மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்கும் நாளாகத் திருவோணம் கொண்டாடுகின்றனர்.

இத்திருக்கோயிலில் பிரசாதமாகப் பால் பாயாசம் வழங்கப்படுகிறது. இங்குள்ள தீர்த்தத்தினைக் கபில தீர்த்தம் என்றே அழைக்கின்றனர்.

இத்தீர்த்தத்தினைக் கபிலரே உருவாக்கியதால் இத்தீர்த்தத்திற்கு இப்பெயர் பெற்றிருக்கிறது. இத்தீர்த்தத்தையே கோயிலில் பயன்படுத்துகின்றனர்.

11. திருமூழிக்களத்து விளக்கு

மலைநாட்டுத் திருப்பதிகளில் திருமூழிக்களம் தலமும் ஒன்று. இத்தலம் 108 திவ்விய தேசங்களில் 68-வது தலமாகும். இத்தலம் அக்காலத்தில் மிகப்பெரிய கலாசேஷத்திரமாக விளங்கியிருக்கிறது. "ஸ்ரீ சூக்தியை"(திருமொழி) இங்கு அருளப்பட்டுள்ளதால் பல வகையான நூல்களும் இங்கு ஆராயப்பட்டுள்ளன. இதனால் கற்றறிந்த பெரியோர்கள் குழுமியிருந்த கல்வி மாநகராகவும், கலை நகராகவும் சிறப்புற்றிருந்திருக்கிறது. பரதன் மற்றும் லட்சுமணன் இணைந்து வழிபட்டத் திருத்தலம் என்றப் பெருமையினையும் பெற்றுத் திகழ்கிறது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருமூழிக்களமானது மற்ற மலைநாட்டுத் திருப்பதிகளைப் போலவே இயற்கை வனப்பு கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. பசுமை ஊஞ்சலாடும் இத்தலமானது கேரள மாநிலம், எர்ணாகுளம் மாவட்டத்தில் காலடி ரோடு என்னும் இடத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. இத்தலத்தினை இங்குள்ள மக்கள் மூழிக்குளம் என்றே அழைக்கின்றனர். தற்போதும் இவ்வாறு அழைக்கும் வழக்கத்தினையே கொண்டுள்ளனர். இத்திருத்தலமானது சாலக்குடி ஆற்றின் கீழ் கரையில் அமைந்துள்ளது. இத்தலத்தினைச் சுற்றியுள்ள பகுதிகள் முழுவதுமே சோலைகள், நெல் வயல்கள், கமுகு – தென்னந் தோப்புகள் முதலிய இயற்கை வனப்புகளையெல்லாம் காணமுடிகிறது.

ஆ) திருத்தலத்தின் பெயர்க்காரணம்

அரித மகரிஷி என்பவர் திருமாலை நினைத்து இவ்விடத்திலே தவமிருந்து வந்தார், அவரது தவத்தில் மகிழ்ந்த திருமால் அவருக்குக் காட்சியளித்தார். அரித மகரிசஷி இறைவனிடம், 'மனிதனாய்ப் பிறந்தவர்கள் இறைவனை அடைவதற்கு, வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைச் சொல்லுங்கள்' என்று

வேண்டினார். உடனே திருமால், மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைப் போதிக்கும் 'ஸ்ரீசூக்தியை' என்ற திருமொழியை அம்முனிவர்க்குச் சொன்னார். ஆகையால் இத்தலத்திற்குத் திருமொழிக்களம் என்னும் பெயரைப் பெற்றதாகச் சொல்லுவர். திருமொழிக்களம் என்பதே காலப்போக்கில் திருமூழிக்களமாயிற்று.

இ) திருமூழிக்களமும் – ஆழ்வாரும்

திருமூழிக்களத்து இறைவனைப்பற்றி நம்மாழ்வார் பதினொரு பாசுரங்களிலும், திருமங்கையாழ்வார் மூன்று பாசுரங்களிலும் மங்களாசாசனம் செய்துள்ளனர். "திருமங்கையாழ்வார் 'முனியே! திருமூழிக்களத்து விளக்கே!' என்றும், 'மூழிக்களத்து விளக்கினை' என்றும் இத்தலத்து இறைவனைப் போற்றுகின்றார். நம்மாழ்வாரும், 'திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடர்க்கு' என்றும், 'திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடரை' என்றும் போற்றுகின்றார்"[22]. ஆழ்வார்கள் கூறியுள்ள இந்தத் தலத்தினை நேரில் பார்த்த ந. சுப்புரெட்டியாரின் நினைவில் பாரதிதாசனின் "அழகின் சிரிப்பு" என்ற நூலின் கவிதைகளின் காட்சிகளே வருகின்றன என்கிறார். மேலும் பாரதிதாசன் இந்தப் பகுதிக்கு நேரில் வந்துதான் அவர் கவிதைகளைப் பாடினாரோ என்றெல்லாம் நினைக்கத் தூண்டுகிறார் பேராசிரியர்.

"எண்ணற்ற உயிர்கட்கு எல்லையற்ற இன்பங்களைப் படைத்துப் புரந்து இன்புறும் 'அலகிலா விளையாட்டுடை' ஆண்டவனின் பெருங்கருணைத் திறத்தை எண்ணி எண்ணி வியந்து நிற்கின்றோம்" என்று அனுபவித்து கூறும் ஆசிரியரின் கருத்தும் நினைக்கத்தக்கது"[23].

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருமூழிக்களத்து இறைவனை லட்சுமணப்பெருமாள், திருமூழிக்குளத்தான், அப்பன், ஸூக்திநாதன் போன்ற பெயர்களில் அழைக்கப்படுகிறார். இவர் இலட்சுமணப்பெருமாள் என அழைக்கப்பட்டதற்கானக் காரணம் கைகேயி

தசரதனிடம், ‘இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும், பரதன் அரசாள வேண்டும்’ என்று இரண்டு வரங்களைக் கேட்டதால், இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இராமன் காட்டுக்குச் சென்ற வருத்தத்தில் சில நாட்களிலேயே தசரதன் இறந்து போனார். அதன் பிறகு, தற்செயலாக அயோத்தி திரும்பிய பரதன், தனது விருப்பத்தைக் கேட்காமல் தாய் கேட்ட வரங்களையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் நினைத்து வருந்தினான்.

பின்னர் அவன், காட்டுக்குச் சென்ற இராமனைத் திரும்பவும் அயோத்திக்கு அழைத்து வரவேண்டும் என நினைத்துக் காட்டுக்குள் சென்றான். பரதன் காட்டுக்குள் வரும் செய்தியறிந்த இலட்சுமணன், இராமனைக் காட்டுக்குள் அனுப்பிவிட்டு, தான் அரசனான செய்தியைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வதற்காகக் காட்டுக்குள் வருகிறானா? இல்லை, இராமனைக் கொல்வதற்காகப் படைபலத்துடன் காட்டுக்குள் வருகிறானா? என்று அவனாக ஏதேதோ நினைத்துக் கோபமடைந்தான்.

பரதனைத் தவறாக நினைத்து இலட்சுமணன், அவனுடன் சண்டைக்குப் போனான். இராமன், இலட்சுமணனை தடுத்து நிறுத்தினான். காட்டுக்குள்ளிருக்கும் இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்துச் சென்று அரசனாக்க வேண்டும் என்று நினைத்து வந்த பரதன், இராமன் நாடு திரும்ப மறுக்கவே, இராமனின் காலணிகளைப் பெற்றுச் சென்று, அந்தக் காலணிகளைச் சிம்மாசனத்தில் வைத்து, நந்திக்கிராமத்தில் தங்கி இராமனின் பெயரிலேயே பரதன் ஆட்சி செய்தான்.

பரதனைத் தவறாக நினைத்ததை எண்ணி வருந்திய இலட்சுமணன் அந்த மனக்குறையுடனேயே இருந்தார். இந்நிலையில், ஒருநாள் இத்தலத்திற்குப் பரதனும் இலட்சுமணனும் ஒன்றாகச் சேர்ந்து வந்திருந்தனர். அப்போது அங்கிருந்த அரித முனிவர் இலட்சுமணனின் மனதிலிருக்கும் குறையை வெளிப்படுத்தினார்.

அதைக்கேட்ட இலட்சுமணன், அங்கிருந்த பரதனின் காலில் விழுந்து மன்னிப்பு வேண்டினார். ஆனால், பரதன் ‘தம்பி நீ காட்டுக்குள் இருந்த போது அண்ணன் இராமனைக் கண் போன்று காத்திருந்தவன். அந்நிலையில் என்மேல் நீ கோபப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை, இதற்காக நீ எந்தக் குற்ற உணர்வும் கொள்ள வேண்டியதில்லை’ என்றார். இருப்பினும், இலட்சுமணன் அந்தக் குற்ற உணர்வு மறையாமல் இருந்தது. அவன் அரித முனிவரிடம் அந்தக் குற்ற உணர்விலிருந்து விடுபட வழிகாட்டும்படி வேண்டினார். அவர் அங்கிருந்த விஷ்ணு கோயிலைப் புதுப்பித்து, இறைவனை வேண்டினால், மனக்குறை அனைத்தும் நீங்கும் என்று சொன்னார். அதன்படி லட்சுமணன் இக்கோயிலுக்குக் கோபுரம், மண்டபம் போன்றவற்றை எழுப்பிக் கோயிலைப் புதுப்பித்து இறைவனை வழிப்பட்டுக் குறை நீங்கப் பெற்றார் என்ற செய்திகளும் புராணவரலாறு மூலம் அறியலாம்.

இலட்சுமணனின் திருப்பணிக்குப் பிறகு, இங்கு வந்த பக்தர்கள் இலட்சுமணனையே மூலவராக வைத்து வழிப்படத் தொடங்கினர். அதன் பிறகு, இறைவன் இலட்சுமணப்பெருமாள் என அழைக்கப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. லட்சுமணப்பெருமாள் நான்கு கரங்களுடன், வலதுபுறம் மேற்கரத்தில் சங்கு, கீழ் கரத்தில் கதை, இடது புறம் மேற்கரத்தில் சக்கரம், கீழ் கரத்தில் தாமரை மலர் ஆகியவைகளைக் கொண்டு, கிழக்கு நோக்கி நின்ற நிலையில் காட்சியளிக்கின்றார். இத்திருத்தலத்து இறைவி மதுரவேணி நாச்சியார் என்று அழைக்கப்படுகின்றார். கோயில் தீர்த்தமாகச் சங்கதீர்த்தம், சிற்றாறு ஆகியவை விளங்குகிறது.

திருமூழிக்களம் கோயிலின் கருவறை வட்ட வடிவிலும், மேற்கூரை இரண்டடுக்கு கூம்பு வடிவில், தாமிரத்தகடு கொண்டு மூடப்பட்டும் அழகாகக் காட்சியளிக்கிறது. கோயில் வளாகத்தில் கணபதி, சாஸ்தா, சிவபெருமான் ஆகியோருக்கு தனிச் சன்னதிகள் இருக்கின்றன. மேலும் கோயில் வளாகத்தில் பஞ்சலோகத்திலான பகவதி, பஞ்சலோகத்திலான கோசால கிருஷ்ணன்

சிலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயில் உட்புறச் சுவர்களில் இராமாயணத்தைச் சொல்லும் அழகிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

இத்திருத்தலத்தில் சித்திரை மாதம், திருவோண நட்சத்திர நாளில் ஆறாட்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கேரளாவில் ஆடி மாதம் முழுவதையும் இராமாயண மாதம் என்று சொல்கின்றனர். இந்த மாதம் முழுவதும் இறைவனுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

12. திருவித்துவக்கோட்டு அம்மான்

மலைநாட்டுத் திருப்பதிகளில் திருவித்துவக்கோட்டுத் தலமும் ஒன்று. இத்தலம் 108 திவ்வியதேசங்களில் 66-வது தலமாகும். காசிக்குச் செல்ல முடியாதவர்கள் இக்கோயிலில் இருக்கும் காசி விஷ்வநாதரை விழிபட்டு அதற்கான பலன்களை அடைவதாக நம்புகின்றனர். மேலும் இக்கோயிலில் சைவம், வைணவம் ஆகிய இரு பிரிவினரும் வழிபடும் தலங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இப்பகுதியில் வாழும் மக்கள் பெரும்பான்மையோர் தமிழ் பேசுகின்றனர்.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருவித்துவக்கோட்டுத் திருத்தலமானது கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில் ஷோரானூரிலிருந்து சுமார் பதினைந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தை திருமிட்டக்கோடு, திருவிஞ்சிக்கோடு, திருவிச்சிக்கோடு என்றப் பெயர்களில் இப்பகுதி மக்கள் அழைக்கின்றனர். இத்தலம் பாரதபுழா என்னும் ஆற்றங்கரையில் அமைந்திருக்கிறது. இத்தலத்தினைச் சுற்றிலும் பெரிய பெரிய மலைக்குன்றுகள் காணப்படுகிறது. இதனைக்கடந்தே இக்கோயிலை அடைய முடியும்.

ஆ) திருத்தலத்தின் பெயர்க் காரணம்

திருவித்துவக்கோட்டுத் தலத்திற்கு இப்பெயர் வரக்காரணம் இன்னதென்று சரியாகத் தெரியவில்லை. இருப்பினும், குலசேகராழ்வார் இத்தலத்தைப் பற்றிப்

பாடியுள்ள பத்து பாசுரங்களிலும் இத்தலத்து இறைவனின் பெயரைக்கூறாமல் “விற்றுவக்கோட்டம்மா!” என்று மட்டுமே சொல்லுவதால், இத்தலத்தின் பெயர் திருவித்துவக்கோடு என்று அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இ) திருவித்துவக்கோடும் – ஆழ்வாரும்

திருவித்துவக்கோட்டுத் தலத்தைப் பற்றி குலசேகரத்தாழ்வார் மட்டும் பத்து பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார். குலசேகராழ்வாரின் பாசுரங்கள் அனைத்தும் பக்தி சுவை மிகுந்துக் காணப்படுகின்றதனை அனைவராலும் உணரமுடிகிறது. காரணம் இறைவன் மீது கொண்ட தீராத நம்பிகையே ஆகும்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருவித்துவக்கோட்டுத் திருத்தலத்தில் உறையும் இறைவனை உய்ய வந்த பெருமாள், அபயப்பிரதன் போன்ற பெயர்களில் அழைக்கின்றனர். மூலவராக வீற்றிருக்கும் இறைவன் தம்மை வேண்டும் பக்தர்களுக்கு ஏற்படும் துயரங்கள் அனைத்தையும் களைந்து, அவர்களுக்கு அபயமளிப்பவராகவும் இருப்பதால், அபயப்பிரதன்(தமிழில் உய்ய வந்த பெருமாள்) என்று அழைக்கப்படுகின்றார். இறைவன் தெற்கே பார்த்த வண்ணம் நின்றக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இறைவியினை வித்துவக்கோட்டு வல்லி, பத்மபாணி நாச்சியார் என்றப் பெயர்களில் அழைக்கின்றனர்.

இறைவிக்கு இத்தலத்தில் சிலையோ, தனிச்சன்னதியோ கிடையாது. இறைவனின் மார்பில் இறைவி இருப்பதாக அனைவரும் நம்புகின்றனர். இறைவன் வீற்றிருக்கும் சன்னதிக்கு வலதுப்பக்கம், தருமர் நிறுவிய திருமால் சிலையுடனான சன்னதி, நகுலன் மற்றும் சகாதேவன் ஆகியோரால் நிறுவப்பட்ட திருமால் சிலையுடனான சன்னதி என்னும் இரண்டு சன்னதிகள் அமைந்துள்ளன. இடதுபுறம் சிறிது பின்புறமாகப், பீமன் நிறுவிய திருமால் சிலையுடனான சன்னதி காணப்படுகின்றன. பஞ்சபாண்டவர்கள் நிறுவிய நான்கு திருமால் சிலைகளும் நின்றக்கோலத்தில், சங்கு, சக்கரம், கதாயுதம் மற்றும் தாமரையைக் கொண்ட

நான்கு கைகளுடனும் அமைந்திருக்கின்றன. இக்கோயிலில் கணபதி, தட்சிணாமூர்த்தி, சாஸ்தா, நாகர், பகவதி ஆகியோருக்கும் தனித்தனியாகச் சன்னதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நபாகணன் என்ற மன்னனின் மகனான அம்பரீஷன் முக்தி பெறுவதற்காக, மகாவிஷ்ணுவை நோக்கிக் கடும்தவம் செய்தான். அவனைச் சோதித்துப் பார்க்க விரும்பிய விஷ்ணு, அவன் முன்பாக தேவேந்திரம் வடிவில் தோன்றினார். அதனைக்கண்ட அம்பரீஷன், “நான் தேவேந்திரனைக்காண இத்தவத்தைச் செய்யவில்லை. மகாவிஷ்ணுவைக் காணும் என் முயற்சிக்கு இடையூறு செய்ய வேண்டாம்” என்று பணிவோடு சொன்னான். அவனுடைய உண்மையான பக்தியில் மகிழ்ந்த மகாவிஷ்ணு, அவனுக்குத் தனது உணமையான தோற்றத்தைக் காண்பித்தருளினார். அம்பரீஷன் அவரிடம், தனக்கு எந்த திசையிலிருந்து பார்த்தாலும், மகாவிஷ்ணுவே தெரிந்திட வேண்டுமென்று வேண்டினார். விஷ்ணுவும் அவன் விரும்பியபடி, வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் எனும் நான்கு தோற்றங்களில் தனது வியூகத் தோற்றத்தைக் காட்டியருளி, அவனுக்கு முக்தியும் அளித்தார்.

பிற்காலத்தில், பஞ்சபண்டவர்கள் வனவாசத்திற்காக இப்பகுதிக்கு வந்தனர். அங்கே, அவர்களுக்கு மகாவிஷ்ணுவின் வியூகத்தோற்றம் தெரிந்தது. அதனைக் கண்டு மகிழ்ந்த பஞ்சபாண்டவர்கள் அவ்விடத்தில் ஒரு கோயிலைக் கட்ட முடிவு செய்தனர். அங்கு முதலில் அர்ச்சுனன் ஒரு மகாவிஷ்ணு சிலையை நிறுவி வழிபட்டார். அதனைத்தொடர்ந்து தருமர், பீமன் ஆகியோர் தனித்தனியே விஷ்ணு சிலையை நிறுவ, நகுலன் மற்றும் சகாதேவன் ஆகியோர் சேர்ந்து ஒரு விஷ்ணு சிலையை நிறுவி வழிபட்டனர். பஞ்சபாண்டவர்கள் நிறுவி வழிபட்ட நான்கு விஷ்ணு சிலைகளில், அர்ச்சுனன் நிறுவி வழிபட்ட விஷ்ணு சிலையே இக்கோயிலின் மூலவராக இருக்கின்றது. மற்ற மூன்று விஷ்ணு சிலைகளும் தனித்தனிச் சன்னதிகளாக இடம் பெற்றுள்ளன என்று இக்கோயிலின் தலவரலாறுகள் உரைக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியில் வசித்து வந்த முனிவர் ஒருவர் காசிக்குச் சென்று, அங்கேயே தங்கி சிவபெருமானை வழிபட்டு வந்தார். இந்நிலையில், அவரது தாயின் உடல்நிலை சரியில்லாமல் இருப்பது அவருக்குத் தெரிய வந்தது. உடனே அவர் தனது தாயைக் காண்பதற்காகக் காசியிலிருந்து திரும்பி வந்தார். அவர் பயணத்திற்காகக் கையில் எடுத்துக்கொண்டு வந்த தாழங்குடையில், அவர் வழிபட்டு வந்த காசிவிஷ்வநாதரும் அவருக்குத் தெரியாமல் அமர்ந்துக்கொண்டு வந்தார். அம்முனிவர், பஞ்சபாண்டவர்கள் வழிபட்ட விஷ்ணு சிலைகள் அமைந்த கோயில் பகுதிக்கு வந்தபோது, தான் கொண்டுவந்த குடையைக் கீழே வைத்துவிட்டு, அருகிலிருந்த ஆற்றுக்கு குளிக்கச் சென்றார். அவர் குளித்துவிட்டு வந்தபோது, அங்கிருந்த குடை வெடித்து சிதறியது. பின்னர், அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் வெளிப்பட்டது. அதன்பிறகு அம்முனிவர், அங்கு சிவபெருமானுக்கு தனிச்சன்னதி ஒன்றினை அமைத்தார் என்று சொல்லப்படுகிறது.

“திருமாலுக்கும் சிவனுக்கும் இங்கு ஒரே இடத்தில் சன்னதியிருப்பது சிறப்பாகும். திருமாலும் சிவனும் இணைந்திருக்கும் கோயில்கள் குறிப்பாக 108 வைணவத் தலங்களில் பத்துக்கும் மேற்பட்ட தலங்கள் உள்ளன”[24]. பத்து நதிகள் இணைந்த பாரதப்புழா ஆற்றன் கரையில் அமைந்திருக்கும் இக்கோயிலில் காசி விஷ்வநாதர் சன்னதி அமைந்திருப்பதால், இக்கோயிலில் முன்னோர்களுக்கான(தர்ப்பணம்) வழிபாடு செய்வது அதிக அளவில் நடைபெறுகிறது. கேரள மாநிலத்தில் அதிக அளவில் முன்னோர்களுக்கான வழிபாடு நடைபெறுவது இங்குதான் என்று சொல்லப்படுகிறது. இக்கோயிலில் விஷ்ணுவுக்குரிய சிறப்பு நாட்களில் நான்கு விஷ்ணு சன்னதிகளிலும் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

“கோயிலின் சுவர்களில் அமைந்துள்ள அழகிய சுதைச் சிற்பங்களும், சிற்ப வேலைப்பாடுகளும், அர்ச்சுனன் தவம் செய்த காட்சி, தசாவதாரக் காட்சிகள், கிருஷ்ண லீலா காட்சிகள் போன்றவை சிறந்த வண்ணங்களில் மிளிர்வதும்

கண்கொள்ளாக் காட்சியாகும்”[25]. இவற்றையெல்லாம் பார்ப்பதற்குப் பேரழகாக காட்சியளிக்கிறது. கோயில் தீர்த்தமாகச் சக்ர தீர்த்தம் விளங்குகிறது. கோயில் விமானம் தத்வ காஞ்சன விமானம் ஆகும்.

13. நாவாய் உறையும் நாராயண நம்பி

மலைநாட்டுத் திருப்பதிகளில் திருநாவாய்த் தலமும் ஒன்று. 108 திவ்வியதேசங்களில் இத்தலம் 65-வது தலமாகும். இத்தலம் பாரதப்புழா ஆற்றங்கரையின் வடகரையில் சுமார் 6000 ஆண்டுகளுக்கும் பழமையானதாக விளங்குகிறது. மலைநாட்டுத் திருப்பதிகளில் திருநாவாயும், திருவித்துவக்கோடும் ஆகிய இரண்டு தலங்களும் இவ்வாற்றங்கரையில் அமைந்துள்ளது.

அ) திருத்தலம் அமைந்துள்ள இடம்

திருநாவாய் தலமானது கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் எடக்குளம் என்னும் இடத்திலிருந்து சுமார் இரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் மிகவும் சிறிய ஊர். மிகச்சிறிய ஊராக இருந்தாலும் இயற்கை வனப்புகளும், வயல்வெளிகளும், தோப்புகளும், சோலைகள் இவையெல்லாம் சூழ்ந்து அணிசெய்கின்றது.

ஆ) திருத்தலத்தின் பெயர்க்காரணம்

யோக சித்துகளில் வல்லமை பெற்ற ஒன்பது யோகிகளான 1)சத்துவ நாதர், 2)சாலோக நாதர், 3)ஆதி நாதர், 4)அருளித நாதர், 5)மதங்க நாதர், 6)மச்சேந்திர நாதர், 7)கடயந்திர நாதர், 8)கோரக்க நாதர், 9)குக்குட நாதர் ஆகியோர் முன்னொரு காலத்தில் வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் அனைவருமே யோக சித்திக்கு இன்றியமையாதவனாய்ச் சொல்லப்படும் உச்சாடனம், மோகனம், ஸ்தம்பனம், மாரணம், ஆகர்ஷணம், வித்துவேஷணம் ஆகியவற்றில் ஒப்பற்றவர்களாக விளங்கியதாகச் சொல்லுவர். இந்த நவயோகிகளும் ஒரு சமயம் எம்பெருமானைக் குறித்து தவம் செய்ததாகவும், அப்போது பெருமான் இவ்வனைவருக்கும் இத்தலத்தில் நேரில் சேவை

சாதித்ததாகவும் சொல்லப்படுகிறது. அதனால் இத்தலம் 'நவயோகி ஸ்தலம்' என்று ஆனதாகவும், பின்னாளில் மிகவும் சுருங்கி 'நாவாய்' என்று ஆனதாகவும் சொல்லுவர். பின்னர் 'திரு' என்ற அடைமொழியையும் சேர்ந்து 'திருநாவாய்' என்றழைக்கப்பட்டது. நம்மாழ்வார் இத்தலத்தைத் திருநாவாய் என்றே மங்களாசாசனம் செய்துள்ளார். ஆனால், திருமங்கையாழ்வார் இத்தலத்தை 'நாவாய்' என்றே மங்களாசாசனம் செய்கின்றார்.

இ) திருப்புலியூரும் ஆழ்வார்களும்

திருநாவாய் இறைவனைப் பற்றி நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பதின்மூன்று பாசுரங்ளில் மங்களாசாசனம் செய்துள்ளனர். திருநாவாய் இறைவனைப் பூசனைகள் செய்யப் பூக்களுக்குத் தட்டுப்பாடின்றி அமைந்த திருத்தலம் என்று நம்மாழ்வார் தம் பாசுரங்களில் குறிப்பிட்டிருப்பதனைக் காணலாம். "வெறிந்தண்மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்", "சோலைகள் சூழ் திருநாவாய்", "நீள் ஆர்மலைச் சோலைகள் சூழ் திருநாவாய்", "வண்டு ஆர் மலைச் சோலைகள் சூழ் திருநாவாய்", "கொந்து ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்" என்று திருத்தலத்தின் சிறப்பினை கூறுகின்றார்.

ஈ) திருத்தலத்தின் அமைப்பு

திருநாவாய்த் தலத்து இறைவனை நாவாய் முகுந்தன், நாராயணன் ஆகிய பெயர்களில் அழைக்கின்றனர். "இத்தலத்தில் இறைவன் ஆதி காலத்தில் நாராயணன் என்ற பெயருடன் வீற்றிருந்த நிலையில், தெற்கே முகம் பார்த்தவண்ணம் காட்சி தந்தாக நம்புகின்றனர். ஆனால், தற்போது இருக்கும் இறைவன் நாவாய் முகுந்தன், நாராயணன் என்ற பெயர்களுடன், நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். இவ்வாறு மாற்றம் பெற்றதற்குக் காரணம் இன்னதென காரணம் தெரியவில்லை"[26].

இறைவியினை மலர்மங்கை நாச்சியார் என்றப்பெயர்களில் அழைக்கின்றனர். கோயில் சுற்றுப்பகுதியில் கணபதி, லட்சுமி, ஐயப்பன்

ஆகியோருக்குத் தனித்தனிச் சன்னதிகள் உண்டு. கோயிலுக்கு எதிரே உள்ள ஆற்றின் மறுகரையில் பிரம்மனுக்கும், சிவனுக்கும் தனி கோயில் உள்ளது. ஆகையால் இத்தலத்தை மும்மூர்த்திகள் தலம் என அழைக்கின்றார்கள். மிகப்பழமையான இக்கோயிலின் உட்புறச் சுவர்களில் காலத்தால் அழியாத பல ஓவியங்கள் இன்றும் உள்ளன. "மலைநாட்டிலுள்ள திவ்வியதேசங்களிள் அனைத்திலுமே இறைவனும், பிராட்டியும் ஒரே சன்னதியில் சேர்ந்தே காட்சியளிப்பது வழக்கம். ஆனால் இதற்கு மாறாக இத்திருத்தலத்தில் இலட்சுமி தேவிக்குத் தனிச் சன்னதி அமைந்திருக்கிறது"[27]. இவ்வாறு தனிச்சன்னதி இங்கு மட்டுமே காணப்படுகிறது.

முன்னொரு காலத்தில் மகாலட்சுமியும், கஜேந்திரன் என்ற யானையும் திருநாவாய் தலத்திலுள்ள செங்கமலப் பொய்கையில் இருந்த தாமரைப் பூக்களைப் பூசைகள் செய்து வந்தனர். ஒருநாள் இலட்சுமி பூக்களைப் பறித்த காரணத்தால் கஜேந்திரனுக்குப் பூக்கள் கிடைக்காமல் போயிற்று. இறைனுக்குப் பூசைகள் செய்ய தாமரை மலர்கள் கிடைக்காமல் வருத்தம் கொண்டான் கஜேந்திரன். தனது நிலை குறித்து இறைவனிடம் முறையிட்டது. உடனே இறைவன் இலட்சுமியை தாமரை மலர்களைப் பறிக்க வேண்டாம் என்று பணிந்து, தன்னுடன் ஏக சிம்மாசனத்தில் வந்து அமரும்படி சொன்னார். இலட்சுமியும் அதன்படி செய்தார். இதனால் மறுபடியும் கஜேந்திரனுக்குத் தாமரை மலர்களை எடுத்து வந்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. தாமரை மலர்களால் பூசைகள் செய்த கஜேந்திரனுக்கு இறைவனும், இலட்சுமியும் இத்தலத்தில் நேரில் காட்சியளித்ததாக நம்பிக்கை. இதன் காரணமாக இத்தலத்தில் உறையும் இறைவனை 'நாவாய் முகுந்தன்' என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகச் சொல்லுவர்.

இலட்சுமி தேவி தாமரை மலர்களைக் கொண்டு இறைவனைப் பூசித்த காரணத்தால் 'மலர் மங்கை நாச்சியார்' என்னும் பெயரைப் பெற்றதாகத் தலவரலாற்றின் மூலம் அறிய முடிகிறது. இலட்சுமியும், கஜேந்திரனும் தாமரை

மலர்களைப் பறித்த பொய்கை ‘செங்கமல ஸரஸ்’ என்ற பெயரில் இன்றளவும் அழைக்கப்படுகிறது. கோயில் விமானம் வேத விமானம் ஆகும்.

காசியில் நடப்பது போல இத்தலத்தில் ஏராளமானோர் முன்னோர்களுக்குப் பித்ரு தர்ப்பணம் கொடுக்கிறார்கள். கேரள மாநிலத்தில் பித்ரு தர்ப்பணம் கொடுப்பதில் இத்தலம் முதன்மை வகிக்கிறது.

தொகுப்புரை

- குமரி மாவட்டத்தில் அமைந்துள்ள கோயில்களில் திருவண்பரிசாரம் கோயிலில் மட்டுமே ஊஞ்சல்சேவை நடத்தப்படுகிறது என்ற செய்தியும் அறியமுடிகிறது. மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருமதில் சுவர்களிலும், உள்சுற்றுச் சுவர்களிலும் திருமண்காப்பிட்டதைத் திருவண்பரிசாரம் தலத்தில் மட்டுமே காணமுடிகிறது. மற்ற திருப்பதிகளில் காணமுடிவதில்லை எனற செய்தியும் இவ்வியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- தமிழகத் திருப்பதிகளுக்கும் மலைநாட்டில் அமைந்துள்ள திருப்பதிகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன(சடங்குகள், கட்டிட அமைப்பு, பூசைகள் செய்வோர்). தமிழகத்தில் காணப்படும் இரண்டு மலைநாட்டுத் திருப்பதிகளில் திருவண்பரிசாரம் தலமானது வடகலை அமைப்பு முறையில் காணப்படுகிறது. மற்றொரு தலமான திருவட்டாறு கேரள பாணியில் அமைந்திருக்கிறது.
- மலைநாட்டுத் திருப்பதிகளில் போத்திமார்கள் மட்டும் பூசைகள் செய்கின்றனர். பிராமணர்கள் பூசைகள் செய்ய இயலாது என்ற செய்தியும் குறிப்பிடப் பட்டுள்ளது.
- கேரளாவில் அமைந்துள்ள மலைநாட்டுத் திருப்பதிகளில் திருவனந்தபுரம் தலம் மட்டுமே தமிழகக்கோயில் கட்டிடப் பாணியில் அமைந்துள்ளது. இத்தலத்தின் பெருமை சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிறது என்ற தகவலும் பாடல்கள் உறுதி செய்வதனை அறியலாம்.
- வன்னிமரக்காய்களைத் துலாபாரம் கொடுக்கும் வழக்கம் திருவாறன்விளைத் திருத்தலத்தில் காணப்படுகிறது என்படையும் இவ்வின் மூலமாக அறியலாம்.

- ❖ கேரளாவில் அமைந்துள்ள திருத்தலங்களில் மிகவும் உயரமான கொடிமரத்தினைக் கொண்டுள்ள இரண்டாவது தலமாகத் திருவாறன்விளை விளங்குகிறது எனச் சுட்டி காட்டிப்பட்டுள்ளது.
- ❖ திருச்செங்குன்றூர் தலத்தை விஷ்ணுக் கோயில் என்றே அழைக்கின்றனர் என்பதும் இவ்வியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ மலைநாட்டுத் திருப்பதிகளில் இறைவனை ஊர்வலமாக எடுத்துச்சென்று நீராட்டுகின்றனர். இந்நிகழ்வை ஆறாட்டு என்னும் பெயரில் வழங்குகின்றனர் எனறத் தகவலும் அறியலாம்.
- ❖ நினைத்த நேரத்தில் மோட்சம் தரக்கூடிய 15 தலங்களில் திருக்கடித்தானம் தலமும் ஒன்று என்பதும் அறியலாம்.
- ❖ திருவல்லவாழ் தலத்தில் பெண்களுக்கு அனுமதியில்லை. வருடத்தின் முக்கிய இரண்டு தினங்களில் மட்டும் பெண்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.
- ❖ நாரதீய புராணத்தை இயற்றச் செய்த பெருமைக்குரிய தலமாகத் திருவண்வண்டூர் திகழ்கிறது என்பதும் இவ்வியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ பஞ்சபாண்டவர்களால் புதுப்பிக்கப்பட்ட ஐந்து தலங்கள் காணப்படுவதால், அத்தலங்களைப் பஞ்சபாண்டவர் தலம் என்றே அழைக்கின்றனர்.
    1) திருச்செங்குன்றூர் – தர்மனால் புதுப்பிக்கப்பட்டது,
    2) திருவாறன்விளை – அர்ச்சுனனால் புதுப்பிக்கப்பட்டது,
    3) திருப்புலியூர் – பீமனால் புதுப்பிக்கப்பட்டது(பீம சேத்திரம்),
    4) திருவண்வண்டூர் – நகுலனால் புதுப்பிக்கப்பட்டது(நகுலன் சேத்திரம்),
    5) திருக்கடித்தானம் – சகாதேவனால் புதுப்பிக்கப்பட்டது.
- ❖ திருகாட்கரை தலத்தில்தான் ஓணம் பண்டிகை தோன்றியதாகப் புராணவரலாறுகள் கூறுகின்றன.
- ❖ பரசுராமனால் கட்டப்பட்டத் தலமாகத் திருகாட்கரை விளங்குகிறது.
- ❖ திருமூழிக்களம் அக்காலத்தில் மிகப்பெரிய கலாகக்ஷேத்திரமாக விளங்கியிருக்கிறது. மேலும் பரதன் மற்றும் லட்சுமணன் இணைந்து

வழிப்பட்ட தலம் என்ற சிறப்பினையும் பெற்றிருக்கிறது என்பதும் பற்றி இவ்வியலில் கூறப்பட்டுள்ளது.

- ❖ காசிக்குச் செல்ல இயலாதவர்கள் திருவித்துவக்கோட்டு காசி விஷ்வநாதரை வணங்கினால் அதற்கான பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இங்கு காணப்படுகிறது. இக்கோயில் அமைந்துள்ள பகுதியில் வாழும் மக்கள் அதிக அளவில் தமிழ் பேசுகின்றனர் என்ற செய்தியும் இவ்வியலில் சொல்லப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், நூற்றியெட்டுத் திருப்பதி அந்தாதி, ப. 6
2. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 234
3. ஆ.எதிராஜன், 108 வைணவ திவ்வியதே ஸ்தல வரலாறு, ப. 443
4. மேலது., ப. 443
5. மேலது., ப. 446
6. அ.கா.பெருமாள், ஆதிகேசவப் பெருமாள் ஆலயம், ப. 33
7. மேலது., ப. 43
8. தேவராஜன், வைணவ திவ்விய தேசங்கள் 108 (பாகம் - 1), ப. 43
9. மேலது., ப. 746
10. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 51
11. ஆ.எதிராஜன், 108 வைணவ திவ்வியதேச ஸ்தல வரலாறு, ப. 437
12. மேலது., ப. 431
13. மேலது., ப. 424
14. மாலை மலர், ஆகஸ்ட் – 07 – 2018
15. தேவராஜன், வைணவ திவ்விய தேசங்கள் 108 (பாகம் - 2), ப. 42
16. மேலது., ப. 41
17. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 91
18. தேவராஜன், வைணவ திவ்விய தேசங்கள் 108 (பாகம் - 1), ப. 10
19. ஆ.எதிராஜன், 108 வைணவ திவ்வியதேச ஸ்தல வரலாறு, ப. 416
20. மாலை மலர், மே – 11 – 2018
21. மாத்ருபூதேஸ்வரன், 108 வைஷ்ணவ திருத்தல மகிமை, ப. 227
22. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 180
23. மேலது., ப. 180
24. ஆ.எதிராஜன், 108 வைணவ திவ்வியதேச ஸ்தல வரலாறு, ப. 404
25. மேலது., ப. 403
26. தேவராஜன், வைணவ திவ்விய தேசங்கள் 108 (பாகம் - 1), ப. 782
27. மேலது., ப. 782

இயல் – 3

ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் ஆழ்வார்களின் இறைநெறி

மலைநாடானது இயற்கைச் செல்வத்தைத் தம்மோடு கொண்டு செழிப்புடன் விளங்குகிறது. மூன்றாம் இயலில், ஆழ்வார்கள் பற்றியச் செய்திகளையும், ஆழ்வார்கள் அருளிய நூல்களின் எண்ணிக்கையும், ஆழ்வார்களின் தமிழ்ப் பற்றினையும், மலைநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்களையும், அவர்களின் இறைநெறியியானது எவ்வாறெல்லாம் வெளிப்படுகிறது என்பதனையும், மலைநாட்டு இறைவனை ஆழ்வார் எவ்வாறெல்லம் சிறப்பிக்கிறார் என்பதனையும், ஆழ்வார்கள் இறைவனைத் தனது பாசுரங்களின் வழியே எப்படி அனுபவித்தனர் என்பதனையும் **"ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத்திருப்பதிகள் நூலில் ஆழ்வார்களின் இறைநெறி"** என்னும் இவ்வியலில் ஆராயப்படுகிறது. மலைநாட்டித் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள் மூவர் மட்டுமே. ஆகையால் அம்மூன்று ஆழ்வார்களின் வரலாறுகளை மட்டுமே இவ்வியலில் கொடுக்கப்படுகிறது.

இறைநெறி

இறைவனை அடைவதற்கான கருவியாய் விளங்குவதே சமயம். ஒவ்வொரு சமயமும் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையே மையப்படுத்தி நிற்கின்றது. அதுபோன்றே இறைவனைத் தனது பக்தியின் வழியே அடைய நினைக்கின்றான் மனிதன். சகோதர மனிதர்களிடம் இதயக்கனிவு இல்லாதவருக்கு இறைவனிடம் பக்தி பிறக்க முடியாது என்ற உறுதியினை வைணவ மக்கள் கொண்டுள்ளனர்.

உபநிடதங்கள் கூறும் தியானம் அல்லது உபாசனையைப் பக்தி என்றும், இறை பற்றிய முழுமையான ஞானத்தை அமைதியாக, தியான நிலையிலிருந்து பெறுதலே பக்தி என்றும் கூறுவதுண்டு. “பத்தி என்ற சொல் உணர்த்தும் பொருள், பெரியோர்களிடத்தும், இறைவனிடத்தும் காட்டும் அன்பு”[1] என்றும் கூறுவர். ‘பத்தி’ என்பது தமிழ்ச்சொல்; பக்தி என்பது வடசொல்; இவ்வாறு வடசொல்லாக இருப்பினும், ‘பத்தி’, ‘பக்தி’ என்னும் இரண்டு சொற்களும் ஒரே பொருண்மையைக் குறிக்கும் வகையிலே அமையப்பெற்றுள்ளன. பக்தி, பத்தி என்னும் இவற்றை ‘இறை’ என்றும் சொல்லாலும் வழங்கலாம். அதாவது இறை பற்றிய முழுமையான ஞானத்தை அமைதியாக, தியான நிலையிலிருந்து பெறுதலே பக்தி என்பதாகும்.

பக்தி என்பது வெறும் உணர்ச்சிவயப்பட்ட ஒன்றாக விளங்குவதில்லை. உள்ளத்தையும் அறிவையும் பண்படுத்தி நிற்கும் பொருளே ‘பக்தி’ என்பர். ‘பக்தி’ மோட்சத்தோடு இணைந்து நிற்பது ஆகும். ஞானத்தின் விளைவாக விளைந்த கனியாக பக்தியைக் கூறுவர். “ஆயிரக்கணக்கான பிறவிகளில் தவமும், ஞானமும், சமாதியும் பழகுவதால் மக்கள் பாவம் தேயப்பெறும்போது பக்தி பிறக்கிறது”[2] என்று கூறுகின்றார் ப.அருணாசலம்.

“பக்தி நெறியை மேற்கொள்பவர்கள் பக்தர் எனப்படுவர். பத்தர் எனினும் பித்தர் எனினும் ஒன்றேயாகும். உலகில் நோயால் கொள்ளும் பித்தும், மருளால் கொள்ளும் பித்தும் துன்பம் தருவன. அருளால் கொள்ளும் பித்தும் அளவிலா இன்பம் தருவது”[3]. பக்தி நிலையின் உண்மையை விளக்க அறிஞர்கள் பக்தியோகம் என்று வழங்குகின்றனர். “பக்தியோகம் அதனை எட்டு அங்கங்களாக வகைப்படுத்தி ந.சுப்புரெட்டியார் தனது நூலில் குறிப்பிடுகிறார்”[4].

பக்தியோகம்	
எட்டு அங்கங்கள்	விளக்கம்
1.இயமம்	அகிம்சை சத்தியம், திருடாமை, காமத்தை அடக்குதல், பொருளைச் சேர்க்க முற்படாமை
2.நியமம்	தூய்மை, உள்ளத்தைக் கொண்டு மன நிறைவுபெறுதல், விரதம், தவம் முதலியன செய்தல், வேதாந்த பரிச்சயம் செய்தல், எல்லாச் செயல்களையும் இறைவனிடம் சமர்ப்பித்தல்
3.ஆசனம்	பதுமாசனம் முதலிய ஆசனங்கள்
4.பிராணாயாமம்	மூச்சைக் கட்டுப்படுத்தி ஆளுதல்
5.பிரத்தியாகாரம்	புலன்களை உலகப் பொருள்களினின்றும் திருப்புதல்
6.தாரணை	பகவானுடைய திருமேனியை மனத்திற் கொள்ளுதல்
7.தியானம்	இடைவிடாது இறைவனை நினைத்தல்
8.சமாதி	இறைவனை நேரில் கண்டாற் போன்ற நிலையினை அடைதல்

பிரபக்திநெறி என்பது சரணாகதி அடையும் நெறியாகும். இந்நெறியினை அனைவரும் எளிதாக அனுபவிக்க முடியும். இந்நெறியை உபதேசித்தவர் நம்மாழ்வார். இதனால் நம்மாழ்வாரைப் பிரபந்த ஜனகூடஸ்தர் என்று வழங்குகின்றனர். பிரபந்த ஜனகூடஸ்தர் என்றால், பிரபக்தி நெறியினைப் பின்பற்றும் வைணவர்கள் அனைவருக்கும் தலைவர் என்பது பொருள். இவர் பிரபக்தி செய்வது அர்ச்சாவதாரத்திலாகும். திருமங்கையாழ்வார் மேற்கொண்டதும் இம்முறையினையே ஆகும்.

“திருமாலை வழிபடுபவர்கள் இறைவனை எவ்வாறெல்லாம் வழிபடவேண்டும் என்பதற்காக ஐந்து நெறிகளை வகுத்து வைத்திருக்கின்றனர்”[5]. அவ்வைந்து நெறிகளில் ஒன்றாகவே பக்திநெறியும் விளங்குகிறது.

பக்தி நெறி	
திருமால் வழிபாட்டினர்	
கருமயோகம்	வேள்விகள் செய்தல், விரதம் எடுத்தல், மந்திரமோதல்
ஞானயோகம்	யோகத்தின் முதிர்ந்தநிலை தெய்வ அனுபவமாக யோகம் பழகும் காலத்தை வளர்த்து இறைவனைச் சிந்தித்தல்.
பத்தியோகம்	இடையறாத சிந்தனையாகிய ஞானயோகத்தாலே விளையும் அனுபவத்தை அன்பு வடிவமாக்குதல்.
பிரபத்தியோகம்	இறைவன் அருளையே புகலாக அடைந்துவிடுதல்.
ஆசாரிய அபிமானம்	ஆசாரியன் பெருங்கருணைத் திறத்தில் தான் ஒடுங்கி அவனையே புகலாகக் கொண்டு நிற்றல்.

“தெய்வபக்தி செய்யச் சாதி, மத பேதங்கள் கிடையா; அவர்கள் தெய்வத்தைப் பத்தியுடன் தொழுதாலே அருளைப் பெறலாம்; எக்குலத்தில் பிறந்தாலும் தொண்டர் அனைவரும் ஒரு குலத்தவரே”[6] இதனைத்தான் ஆழ்வார்களின் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இறைவனிடம் உயிர்களாகிய நாம் செலுத்தும் ஆழ்ந்த அன்பையே ‘பக்தி’ என்கின்றோம். இறைவனின் உருவத்தைத் தம் நெஞ்சில் நிறுத்தி, இடைவிடாமல் அவனையே நினைத்துக் கொண்டிருப்பது பக்தி. “இதனை ஒன்பது நிலைகளாகக் கூறுவர்.

1. இறைவன் திருநாமத்தைக் காதால் கேட்டல்.
2. இறைவன் திருந்நாமத்தை உச்சரித்தல்.

3. இறைவனை இடைவிடாமல் எப்போதும் நினைந்திருத்தல்.
4. இறைவனுடைய திருவடிகளுக்குத் தொண்டு செய்தல்.
5. இறைவனுக்குப் பாமாலை சூட்டியோ, பூமாலை சூட்டியோ வழிபடல்.
6. இறைவனை வணங்குதல்.
7. இறைவனுக்கு அடிமையாதல்.
8. இறைவனைத் தோழமை உணர்வோடு வழிபடல்.
9. தன்னையே அவனிடம் ஒப்படைத்து விடல்[7].

இத்தகைய நிலைகளில் அனைத்திலுமே நாம் இறைவன் மீது உள்ளன்போடு பக்திக் கொள்ளல் வேண்டும். ஆழ்வார்களும் இவ்வாறே பக்திக் கொண்டுள்ளனர்.

இறைவன் மீது அன்பு பெருகி அவனை இடையுறாது நினைத்துக் கொண்டிருத்தலும். அவனையே உயிராகக் கருதுதலுமே பக்தியின் இயல்பு. இறைவனை அடைவதற்குரிய நெறிகளில் எளிமையானது, மனித இயல்புக்கு ஏற்றதுமான நெறி, இறைநெறியாகும். இத்தகைய இறைநெறியே பெரும்பாலும் ஆழ்வார்கள் கடைப்பிடிக்கின்றனர். ஆழ்வார்களும் தம்முடைய ஐம்புலன்களையுமே திருமாலின் பணிக்காகவே பயன்படுத்தியவர் ஆவர். “பக்தி என்பது எட்டு வகைகளில் பரிணயிப்பதாகக் கூறுவர்.

1. இறையடியார்கள் பக்கம் அன்பு செலுத்துதல்.
2. இறைவனை ஆராதிப்பதால் உகப்படைதல்.
3. தானே இறைவனை ஆராதித்தல்.
4. இறைவனிடம் ஆடம்பரமின்றி இருத்தல்.
5. இறைவனைப் பற்றிய கதைகளைக் கேட்குமிடத்தில் பக்திகொள்ளுதல்.
6. பக்தியின் காரியமான குரல் தழுதழுத்தல், கண்ணீர் சொரிதல், மயிர்கூச்செறிதல் போன்றவை.
7. எப்பொழுதும் இறைவனை நினைத்தல்.
8. இறைவனிடமிருந்து வேறு பலன்களை எதிர்பாராதிருத்தல்”[8].

மேற்கூறிய எட்டு வகைகளும் ஆழ்வார்களின் மனநிலையோடு பொருந்தி வருவதை அவர்தம் பாசுரங்களில் அறியலாம். பக்திநெறியினை உலகெங்கும் பரவச்செய்தவர் நம்மாழ்வார்.

ஆழ்வார்கள்

ஆழ்வார் என்ற சொல்லுக்கு "இறைவனுடைய குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்கள் என்று பொருள் கூறுவர். "ஆழ்வார்" என்பதை "ஆள்வார்" என்ற சொல்லின் திரிபாகக் கொண்டு "நம்மை ஆள்வார்" என்று பொருள் உரைப்பதும் உண்டு. இந்தப் பொருளில், ஆழ்வார்களும் ஆண்டவன் மீது மெய்யன்பு செலுத்தி நம்மை ஆளும் தலைவர்கள் ஆகின்றனர்"[9]. ஆகையாலே ஆழ்வார்கள் இறைவனோடு கலந்து வாழ்ந்தனர் என்பது தெளிவுப்படுகிறது. மேலும் "இறைமைக் குணங்களில் ஆழ்ந்து படுவோர், வேறொன்றில் கண்வையாதே பகவத் குணங்களிலே ஆழங்காற் பட்டிருந்தமையால் இவர்களுக்கு ஆழ்வார்கள் என்று பெயராயிற்று"[10] என்றும் விளக்கம் கூறுகின்றனர். ஆழ்வார்களிடம் அன்பு மிகுந்து நிற்கிறது என்பதனையும் அறியமுடிகிறது. ஆழ்வார்கள் எனப்படுவோர் இறைவனின் அருட்கடலில் அழுந்தி திளைத்தவர்கள் என்றும் கூறலாம்.

வைணவத்தை வளர்த்தவர்களில் முக்கியப் பங்கு பன்னிரு ஆழ்வார்களையேச் சாரும். தான் மட்டும் இறைவனை அடைய முற்படுவது இன்பத்தைத் தராது. தன்னோடு மக்கள் அனைவரும் இறைவனை அடைய முற்படுதலே இன்பத்தைத் தரும் என்று நினைத்து நிற்பவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் எத்தனைபேர் என்ற கேள்வி எழுந்ததும் பன்னிருவர் என்றே கூறுவோம். ஆனால் சிலர் ஆழ்வார்கள் பத்துபேர் என்றே கூறினர். "ஆழ்வார்கள் பதின்மர்(பத்துப் பேர்) என்று பூருவாசாரியார்கள் கூறுவர்"[11]. இக்கருத்தினை மெய்பிக்கும் வகையிலே,

"பொய்கையார் பூதத்தார் பேயார் – புகழ்மழிசை
அய்யர் அருள்மாறன் சேரலர்கோன் – துய்யபட்ட
நாதன் அன்பர்தாள்தூளி நற்பாணர் நற்கலியன்
ஈதிவர் தோற்றத் தடைவாமிங்கு" (உபதேச. மா. 4)

என்னும் உபதேச இரத்தின மாலை பாடலிலும், மணவாள மாமுனிகள் ஆழ்வார்கள் பத்துபேர் என்று பாடியுள்ளார். பின்னர், பெரியாழ்வாரின் மகளான ஆண்டாளையும், நம்மாழ்வாரின் சீடரான மதுரகவியாழ்வார் ஆகிய இருவரையும் சேர்த்தே பன்னிரு ஆழ்வாராகக் கொள்கின்றனர்.

ஆழ்வார்களை, சமயம் வளர்த்த வள்ளல்களாகவே போற்றப்படுகின்றனர். பன்னிரு ஆழ்வார்கள் யார்யார் என்பதனைத் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவதனைக் கீழ்காணும் பாடல் வரிகளில் உறுதிசெய்யலாம்.

“பொய்கை பூதன் பேயார் பொன்மழிசைக் கோன்மாறான்
செய்ய மதுரகவி சேரர்பிரான் – வையகமெண்
பட்டர்பிரான் கோதை தொண்டர் பாதப்பொடி பாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு”[12]

1)பொய்கையாழ்வார், 2)பூதத்தாழ்வார், 3)பேயாழ்வார், 4)திருமழிசையாழ்வார், 5)நம்மாழ்வார், 6)மதுரகவியாழ்வார், 7)குலசேகராழ்வார், 8)பெரியாழ்வார், 9)ஆண்டாள், 10)தொண்டரடிப் பொடியாழ்வார், 11)திருப்பாணாழ்வார், 12) திருமங்கையாழ்வார் ஆகியோரே பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். தமிழைப் பக்திமொழியாகவும், ஞானத்தை வழங்கும் மொழியாகவும் திகழச்செய்த பெருமை ஆழ்வார்களையேச் சாரும்.

“ஆழ்வார்கள், உள்ளொளியால் கவிகளாய், பக்திநெறியிலே சென்று பகவத் அநுபவம் பெற்றவர்கள்”[13]. இவ்வாழ்வார்கள் திருமாலின் பெருமைகளை உள்ளத்தை உருக்கும் வண்ணம் பலவாறாகப் பாடியுள்ளனர். அப்பாடல்களின் தொகுப்பே ‘நாலாயிர திவ்வியப் பிரபந்தம்’. நாலாயிர திவ்வியப் பிரபந்தமானது 24 பிரபந்தங்களுள் அடங்கியிருப்பதினைக் கீழ்காணும் பாடலில் காணலாம்.

“வையகம் எண் பொய்கைபூ தம்பே யாழ்வார்
மழிசையர்கோன் மகிழ் மாறன் மதுர கவிகள்
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டு சித்தன்

பூங்கோதை தொண்டரடிப் பொடிபா ணாழ்வார்
ஐயன்அருட் கலியன்எதி ராசர் தம்மோடு
ஆறிருவர் ஓரொருவர் அவர்தாம் செய்த
துய்ய தமிழ் இருபத்து நான்கிற் பாட்டின்
தொகை நாலாயிரமும் அடி யோங்கள் வாழ்வே” (தேசிக.பி.,பிர.சா. 17)

இந்நாலாயிர திவ்வியப் பிரபந்தம் வைணவர்களின் தமிழ் வேதநூலாகவும் விளங்குகிறது. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த நாதமுனிவர் ஆழ்வார்கள் பாடியப் பாடல்களைத் தொகுத்து, அதற்கு இசை வகுத்து, நாலாயிர திவ்விய பிரபந்தம் என்ற பெயரில் வெளியிட்டார். இவற்றில் 24 பிரபந்தங்களும் 4000 பாடல்களும் உள்ளன. இவை முதலாயிரம், இரண்டாம் ஆயிரம், இயற்பா, திருவாய்மொழி என்று நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. இயற்பாவினைத் தவிர மற்ற மூன்று பகுதிகளில் உள்ளவை இசைப்பாடல்களாகும். பன்னிரு ஆழ்வார்களுடன் திருவரங்கத்து அமுதனார் அருளிய இராமானுச நூற்றந்தாதியையும் சேர்த்தே நாலாயிர திவ்விய பிரபந்தமாக அமைந்திருக்கிறது.

பிரபந்த பாசுரங்கள் எட்டு வகைப் பொருள்கோள்களையும், பத்துவகை அழகுகளையும் பெற்றுள்ளது. வாழ்த்து, வணக்கம், இயல்புரைத்தல் என்ற எல்லாவகைகளிலும், இறைவனை வணங்கும் பாசுரங்களும், அந்தாதிதொடையினைப் பெற்ற பாசுரங்களும், எதுகை, மேனையில் வரக்கூடிய பாசுரங்களும் அமைந்துள்ளது.

நாலாயிர திவ்விய பிரபந்தம் என்னும் தமிழ்வேதம் தமிழ் இலக்கணத்திற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. குறிப்பாக “அகப்பொருள் துறைகளைப் பின்பற்றி ஆண்டாள், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய நால்வரும் அதிக பாசுரங்களைப் பாடியுள்ளனர்”[14].

ஆழ்வார்கள் வரலாறு

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்!"   (பாப். பாட். 15)

என்பதே மகாகவி பாரதியார் வகுத்துக் காட்டும் சமூகநெறி. அதற்கு நல்ல விளக்கங்களாகும் ஆழ்வார்களின் வரலாறுகள். அரசர், அந்தணர், வேளாளர், பாணர், குறவர் என்று பல்வேறு குலங்களில் ஆழ்வார்கள் பன்னிருவரும் உதிக்குமாறு இறைவன் அருள் செய்தது இவ்வுண்மையை வலியுறுத்துவதற்கேயாகும்.

அ) நம்மாழ்வார்

சமய உலகில் ஏனைய ஆழ்வார்களை விடவும் மேம்பட்டவராகக் கருதப்படுபவர் நம்மாழ்வாரே ஆவர். வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்த இவர் திருவரங்கனால் 'நம்மாழ்வார்' எனப் பாராட்டப்பட்டார். இவர் உடையநங்கைக்கும், காரிக்கும் மகனாக பிறந்தார். இவர் வேளாண் குடியினைச் சார்ந்தவர். இவர் அவதரித்ததுமே சடமென்னும் வாயுவை முனிந்ததால் 'சடகோபன்' என்றும், பிறந்ததும் அழுவது, தாய்ப்பால் அருந்துவது முதலியனவான உலக இயற்கைக்கு மாறாக இருந்ததால் 'மாறன்' என்றும் பெயரினைப் பெற்றார். மேலும், பிற மதங்களாகிய யானைகளுக்கு அவர் அங்குசம் போன்றவர் ஆதலில் 'பராங்குசர்' என்றும், மகிழம் பூவை அணிபவர் ஆதலின் 'வகுளாபரணர்' என்றும், திருக்குருகூரில் பிறந்தமையால் 'குருகைக்காவலர்' என்றும், வைணவர்கள் இவரைத் 'திருவாய் மொழிப் பெருமாள்', 'திருவழுதி வளநாடன்' என்றும் பலப்பெயர்களைப் பெற்று விளங்குகிறார்.

பிறந்தது முதல் உலகியல் நாட்டமில்லாமலிருந்த இவரைப் பிறந்த பன்னிரண்டாம் நாளிலேயே இறைவன் திருமுன்பு கொண்டு விட்டனர். தினமும் அங்குள்ள புளிய மரத்தடியில் பதினாறு வயதுவரை இறைவனையே

நினைத்திருந்தார். நம்மாழ்வார் வேளாளர் குலத்தில் பிறந்தார். ஆழ்வார் இறைவனையே முப்பத்தியைந்து ஆண்டுகாலம் நினைத்திருந்து பின்பு பரமபதம் அடைந்தார்.

நூல்கள்	**பாசுரங்கள்**
1) திருவிருத்தம் (ரிக்வேதசாரம்)	100
2) திருவாசிரியம் (யஜீர் வேதசாரம்)	7
3) பெரிய திருவந்தாதி (அதர்வணவேதசாரம்)	87
4) திருவாய்மொழி (சாமவேத சாரம்)	1102
	1296

தண்பொருநையாறு பாயும் தென்நாட்டில் நற்றமிழ் மரபில் தோன்றி, தமிழ் மொழியின் ஏற்றத்திற்கும் வைணவத்தை வாழ்விப்பதற்கும் வந்தவர் நம்மாழ்வார். இவருடைய பாசுரங்கள் அனைத்தும் தத்துவப் பெட்டகமாக விளங்குகிறது. தமிழ் இலக்கிய மரபில் ‘மடல்’ எனும் இலக்கிய வகையைப் புதிதாக அறிமுகம் செய்தவர் நம்மாழ்வார்.

அகத்துறை மரபாக விளங்கிய ஓர் இலக்கிய உத்தியைப் பின்பற்றி; பக்தி இலக்கியத்தில் தம்மை நாயகியாகப் பாவித்து திருமாலைத் தலைவனாகக் கொண்டு புதிய நோக்கில் மடல் இலக்கியம் உருவாக்கியவர். “நம்மாழ்வாரையும், மதுரகவியாழ்வாரையும் கி.பி.9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கடைசி ஆழ்வார்கள் என்று கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் கூறுகின்றார்”[15].

ஆ) குலசேகராழ்வார்

இறைவனான இராமபிரான் மீது பக்திக்கொண்ட குலசேகராழ்வாரைக் குலசேகரப் பெருமாள் என்று அழைப்பர். திருமாலின் திருமார்பில் அணிந்துள்ள

கௌஸ்துப மணியின் அம்சமாய் இவ்வாழ்வார் அவதரித்தார் என்று நம்பப்படுகிறது. குழந்தையின் அழகைக் கண்ட பெரியோர் இவருக்குக் குலசேகரன் எனப்பெயரிட்டனர்.

வளர்பிறைச் சந்திரன் போல் வளரும் இச்சிறுவன் பல கலைகளையும் கற்று போரிலும் ஆற்றல் மிக்கவனாய், மன்னர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் திகழ்ந்தார். நால்வகை சேனைகளுடன் படையெடுத்துச் சென்று பாண்டியனையும், சோழனையும் தோற்கடித்து புகழ்பெற்றான்.

நூல்	**பாசுரங்கள்**
பெருமாள் திருமொழி	105

குலசேகராழ்வார் சேர அரச மரபைச் சார்ந்தவர். இவர் அரசராயிருந்தும் சமயப் பற்று காரணமாக நாட்டைத் துறந்தவர். திருமங்கையாழ்வாரும், தொண்டரடிப் பொடியாழ்வாரும், குலசேகராழ்வார் ஆகிய மூவரும் சமகாலத்தவர்கள். இவர் வடமொழியியிலும் தேர்ந்து விளங்கினார். வடமொழியில் முகுந்த மாலை என்னும் பிரபந்தம் ஒன்றை வடமொழியிலே பாடியுள்ளார்.

குலசேகர ஆழ்வார் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இக்காலத்திலே இராமாயணம் தமிழகத்தில் மிகவும் பெருமை பெற்று விளங்கியது. குலசேகராழ்வார் பாசுரங்கள் தூய தமிழ் நடையும், இன்னோசையும் கொண்டவையாக விளங்குகின்றது. இவ்வுண்மை இவரது பாடல்கள் உணர்த்துகின்றன. குலசேகர ஆழ்வார் தன்மகன் திருடவிருதனுக்கு மணிமுடி சூட்டிய பின் திவ்விய தேசப் பயணம் மேற்கொண்டார். இவ்வாறாகக் குலசேகர ஆழ்வார் மன்னராய்த் தோன்றி, ஆழ்வாராய் மிளிர்ந்து, தென்பாண்டி நாட்டில் திருப்பள்ளி கொண்டிருக்கின்றார்.

இ) திருமங்கை ஆழ்வார்

வைணவ வரலாற்றில் திருமங்கையாழ்வாரின் பங்கு மிகவும் சிறப்புடையது. திருமங்கை என்னும் பதியில் அவதரித்தமையால் இவர் இப்பெயரினைப் பெற்றார். இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலே வாழ்ந்தவர். இவருடைய தந்தை சோழ மன்னரின் தளபதிகளுள் ஒருவராக இருந்தவர். மேலும் இவரை நீலன், கலியன், கலிகன்றி, பரகாலன், ஆலிநாடன், குறையற்கோன் போன்ற பெயர்களிலும் அழைப்பர். இவர் கள்ளர் மரபைச் சார்ந்தவர்.

இறைவன் கையில் ஏந்தும் சாரங்கம் என்னும் வில்லின் அம்சமாய்ப் பிறந்த இம்மகவினைக் கண்டு தந்தை மகிழ்வுற்று "நீலன்" என்று பெயரிட்டார். பொது கலைகளையும் போர்கலைகளையும் இச்சிறுவன் கற்றான். போர் வீரர்கள் இவரைக்கண்டு அஞ்சும் அளவுக்கு வலிமை பெற்றுத் திகழ்ந்தார் நீலன். நீலனுக்கு அறுவர் தொண்டாற்றினர். நீலன் கலியைக் கடிந்ததால் கலியன் எனப் பெயர்பெற்றார்.

நூல்கள்	**பாசுரங்கள்**
1) பெரியதிருமொழி	1084
2) திருக்குறுந்தாண்டகம்	20
3) திருநெடுந்தாண்டகம்	30
4) திருஎழுகூற்றிருக்கை	1
5) சிறிய திருமடல்	1
6) பெரிய திருமடல்	1
	1137

வடமொழி நூலகர் கூறுகின்ற கவிதையின் நால்வகையான ஆசு, மதுரம், வித்தாரம், சித்துரம் ஆகிய நாற்கவியிலும் வல்லவராகத் திருமங்கை மன்னன் விளங்கியதால் "நாலு கவிப் பெருமாள்" என்றும் இவர் பாராட்டப்படுகின்றார். திருமாலின் மீது அளவற்ற பக்தி கொண்டவர். பாகவதர்களுக்கு அன்னமிட்டு உபசரிப்பதை அரும்பணியாகக் கொண்டவர், இதனாலே வறுமையடைந்தார்.

திருமங்கையாழ்வார் பாடல்களிலே தமிழகத்து சரித்திரக் குறிப்புகள் பலவற்றைக் காணலாம்.

ஆழ்வாரின் பாடல்கள் அனைத்தும் செந்தமிழின் சிறப்பையும், இனிமையையும் காட்டும் சிறந்த பாடல்களாகக் காணப்படுகிறது. திருமங்கை மன்னனைப் போல் பல்கலைத் திறம் படைத்தவர்கள் எவரும் இன்றுவரை உருவாகவில்லை என்று கூறுகின்றனர். “நாட்டுப்புறவியல் அறிஞர், தத்துவ அறிஞர், வரலாற்று அறிஞர், நிலவியல் அறிஞர், இயற்கையியல் அறிஞர், இனவரைவியலர் என்று நாம் போற்றிப் பாராட்டும் வண்ணம் ஒரு பல்துறை அறிஞராக, பல்வேறு அனுபவங்களின் வயப்பட்ட ஒரு பண்பாளராகத் திகழ்ந்த பெருமைக்கு உரியவர் திருமங்கையாழ்வார்”[16] என்று போற்றிப் புகழும் அளவிற்குச் சிறப்பு பெற்று விளங்கியிருக்கிறார்.

மலைநாட்டுத்திருப்பதிகளும் ஆழ்வார்களும்

மலைநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள் மூவர் மட்டுமே. 1) நம்மாழ்வார், 2) குலசேகராழ்வார், 3) திருமங்கையாழ்வார் ஆகிய மூவரைத்தவிர மற்ற ஆழ்வார்கள் மலைநாட்டுத் திருப்பதிகளில் மங்களாசாசனம் செய்யவில்லை.

- **நம்மாழ்வார்**

மலைநாட்டுத் திருப்பதிகள் பதிமூன்றில் அதிக திவ்வியதேசங்களை மங்களாசாசனம் செய்தவர் நம்மாழ்வார். 1)திருவண்பரிசாரம் (1-பாசுரம்), 2)திருவட்டாறு (11-பாசுரம்), 3)திருவனந்தபுரம் (11-பாசுரம்) 4)திருவாறன்விளை (11-பாசுரம்) 5)திருச்செங்குன்றூர் (11-பாசுரம்), 6)திருக்கடித்தானம் (11-பாசுரம்), 7)திருவல்லவாழ்(11-பாசுரம்), 8)திருவண்வண்டூர் (11-பாசுரம்), 9)திருப்புலியூர் (11-பாசுரம்), 10)திருகாட்கரை (11-பாசுரம்), 11)திருமூழிக்களம் (11-பாசுரம்), 12)திருநாவாய் (11-பாசுரம்) ஆகிய பன்னிரண்டு திருப்பதிகளில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

நம்மாழ்வார் 108 திவ்வியதேசங்களில் 36 திவ்விய தேசங்களைப் பற்றி மங்களாசானப் பாசுரங்களைப் பாடியுள்ளார். 36 திவ்வியதேசங்களை மங்களாசாசனம் செய்திருப்பினும் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் அதிக பாசுரங்களைப் பாடிய பெருமை நம்மாழ்வாரையேச் சாரும்.

- **குலசேகராழ்வார்**

குலசேகராழ்வார் மலைநாட்டில் பிறந்தவராகினும் அங்குள்ள திருப்பதிகளில் திருவித்துவக்கோட்டு தலத்தினை பற்றி மட்டுமே 10 பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார். மீதமுள்ள தலங்களை மங்களாசாசனம் செய்யவில்லை. குலசேகராழ்வார் 108 திவ்விய தேசங்களில் 7 திவ்விய தேசங்களைப் பற்றி மங்களாசாசனம் செய்துள்ளார்.

- **திருமங்கை ஆழ்வார்**

மலைநாட்டுத் திருப்பதிகளில் திருமங்கையாழ்வார் மூன்று திருப்பதிகளில் மங்களாசாசனம் செய்துள்ளார். 1) திருநாவாய் (2- பாசுரம்), 2) திருமூழிக்களம் (3-பாசுரம்), 3) திருப்புலியூர் (1-பாசுரம்). மற்ற பத்து திருப்பதிகளில் மங்களாசாசனம் செய்யவில்லை. திருமங்கையாழ்வார் 108 திவ்வியதேசங்களில் 86 திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்துள்ளார். பன்னிரு ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் மட்டுமே அதிகப்படியான திருப்பதிகளை மங்களாசாசம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. திருவண்பரிசாரமும் ஆழ்வாரின் இறைநெறியும்

திருவண்பரிசாரத்து இறைவனைப் பற்றி நம்மாழ்வார் ஒரு பாசுரத்தால் மங்களாசானம் செய்துள்ளார். திருவண்பரிசாரத்தில் குடிக்கொண்டிருக்கும் இறைவனை கைங்கரியம் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றார். "கைங்கரியம் என்பது பகவானுக்குச் செய்யும் தொண்டு என்பது பொருள்; நாம் பிறப்பில் பெற்றுள்ள கருவிகரணங்களைக் கொண்டு அவனுக்கே பணி செய்தவாறிருக்க வேண்டும் என்பதே இதன் பொருள்"[17]. கைங்கரியம் செய்ய நினைக்கும் ஆழ்வார்

இறைவனது இந்நிலையை நினைத்து வருத்தம் கொள்கிறார். இதனையே சிரம மனம் சூழும் என்னும் ஆசார ஹிருதயம் நூற்பா வரிகள் மெய்பிக்கிறது.

கைங்கரியத்தை மூன்று வகையாகக் கூறுவர். “1) தனக்கு மட்டும் இன்பம் கிடைக்க வேண்டும் என்னும் அகங்காரத்தோடு பகவானுக்குச் செய்வது. 2) தனக்கும், பகவானுக்கும் இன்பம் கிடைக்க வேண்டும் என்று பொது நோக்குடன் செய்வது. 3) தான் செய்யும் கைங்கரியம் ஈசுவரனுக்கு மட்டும் இன்பம் அளிக்க வேண்டும் என்கிற அத்தியந்த பாரதந்திரிய எண்ணத்தோடு செய்வது”[18]. இம்மூன்றினுள் இறைவனுக்கு மட்டும் இன்பம் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்கின்ற கைங்கரியமே சிறந்தது.

இறைவனின் இந்த நிலைக்கு காரணமாக, பாண்டியநாட்டுத் திருப்பதிகளான திருக்கோளூரிலும், திருப்புளியங்குடியிலும் ஆடாமல் அசையாமல், இடது வலமாகக் கூட மாறாமல் வளர்ந்திருப்பதினாலோ, அல்லது உனது திருவடிகளை நாடி வந்து சரணடைபவர்களைக் காப்பதற்காகப் பல்வேறு அவதாரங்களை எடுத்து மக்களின் துன்பத்தைப் போக்கியதனால் ஏற்பட்ட நிலையோ, அல்லது அன்றே பிறந்து அன்றே வளர்ந்து இந்த பூமியினை வளர்ந்தனால் ஏற்பட்ட நிலையோ என்றேல்லாம் நம்மாழ்வார் நினைத்துக்கூறி, எந்த பிரச்சனையாக இருப்பினும் அதனை என்னிடம் கூற வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகிறார்.

இறைவனை வேண்டியருளிய நம்மாழ்வார், இறைவன் பரமபத்ததில் இருக்கும் நிலையையும் நினைத்துப்பார்க்கிறார். பரமபதத்தில் நித்தியசூரிகளுடன் இருப்பவன் இறைவன். நித்தியசூரிகள் என்பவர்கள் பரமபதத்தில் பகவானுக்கு அணுக்கராக இருந்து தொண்டு செய்வோர் என்று பொருள். நித்தியசூரிகள் இறைவனை எப்போதும் பாதுகாத்துக்கொண்டு இருப்பர்.

இறைவன் பரமபதத்தில் கையில் திருவாழி, திருச்சங்கு முதலிய எல்லா ஆயுதங்களையும் அணிந்துகொண்டு காட்சியளிக்கிறார். இவ்வாறு காட்சியளிக்கும்

இறைவனைப் பார்த்த நித்தியசூரிகள் அவரது சிரமத்திற்கு அஞ்சி "வாழ்க பல்லாண்டு" என்று மங்களாசாசனம் செய்வர்.

பரமபதத்திலே இந்நிலையென்றால் இம்மண்ணுலகில் என்னநிலையென்று இறைவனைப் பற்றி நினைத்துப்பார்க்கிறார் ஆழ்வார். "மக்களின் தாபத்திரயம் என்று சொல்லக்கூடிய மூவகை துன்பங்களான தன்னைப்பற்றி வருவன, பிற உயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தைப் பற்றி வருவன"[19] இவை அனைத்தும் போக்குவதற்கு இறைவன் இவ்வுலகில் வந்து உலவுகின்றதாக கூறுகின்றார். அழகிய திருமேனியினைக் கொண்ட இறைவன், பல ஆயுதங்களைச் சுமந்து கொண்டு இம்மண்ணுலகில் வருவதனைக் காணும் போது ஆழ்வாருடைய மனமானது துன்பம் கொண்டு வருத்தம் கொள்கிறது. உலகையோ காக்கும் இறைவன் தனக்கு துணையாக எவரையும் வைத்துக்கொள்ளாமல் தானே திருவாழியையும், திருச்சங்கையும் சுமக்கின்றான்.

திருவாழியும், திருச்சங்கும் பகைவர்க்கே ஆயுதமாக இருப்பவை, ஆனால் பாகவதநுபத்தில் ஆழங்கால்பட்டவர்களுக்கு இவ்வாயுதங்கள் அனைத்தும் அணிகலன்களாகவே இருக்கின்றன. திருவாழியும், திருச்சங்கும் இறைவனுன் முக்கிய அடையாளமாக எடுத்துக்கொண்டாலும் வில்லையும், வாளையும் சுமப்பதற்கு ஒருவர் இல்லையே என்றும் ஏக்கம் கொள்கிறார் ஆழ்வார். இக்கருத்தினையே,

"ஆளும் ஆளார்; ஆழியும்
சங்கும் சுமப்பார்தாம்;
வாளும் வில்லும் கொண்டுபின்
செல்வார் மற்றில்லை" **(திருவாய். 8.3:3)**

என்னும் பாசுரத்தில் அறியலாம். மேலும் மாடாதிபதிகள் தங்களுடைய முக்கோலையும் ஒரு சீடர் கையிலே கொடுத்து செல்கின்றனர். ஆனால் இறைவனோ அழகினையே தனது வடிவமாகவும், மிருதுத்தன்மையையே

இயல்பாகவும் கொண்ட உமக்கு இந்த ஆயுதங்களைச் சுமக்க ஆள் வைக்க வேண்டாமோ என்றும் ஆழ்வார் நினைக்கின்றார்.

இறைவனின் அழகினைக் குறித்துக் கம்பனின் பாடல் நம்மாழ்வாரின் பாடலோடு ஒப்பிடலாம். இறைவனின் அழகையும், அவர் நடக்கும் போது மாறிமாறியிடும் திருவடிகளிலும் வீசுகின்ற திருத்தோள்களிலும் சொட்டும் அழகினைக் குறித்து சொல்லவே இயலாது என்பதனை,

“மையோமர கதமோ? மறி
கடலோ? மலைமுகிலோ?
ஐயோ! இவன் வடிவென்பதோர்
அழியா அழகுடையான்”   (கம்ப-அயோத்-கங்கைப்பட-1)

என்னும் பாடல் வரிகளில் கம்பன் இறைவனை வருணிக்கின்றார். இறைவனின் இத்தகைய தோற்றத்தைக்காணும் போது மேகமானது தனியே நடப்பது போலவும், ஆண்யானை கம்பீரமாய் நடப்பது போலவும் இறைவனான திருமாலின் நடை இருப்பதாகவும் கம்பர் கூறுகின்றார்.

இத்தகைய பேரழகினைக் கொண்ட திருவடிக்கும், திருத்தோள்களுக்கும் மங்களாசாசனம் செய்ய யாரும் இல்லை என்று ஆழ்வார் கவலை கொள்கிறார். இவ்வாறாகத் திருக்குருகூரில் திருப்புளியாழ்வார் திருவடியிலே இருந்துக்கொண்டு திருவண்பரிசாரத்து இறைவனுக்கு அடிபணிய நினைக்கின்றார் நம்மாழ்வார்.

இந்நகர் வீதிகளிலே அதிகமான மக்கள் தங்கள் சொந்த வேலைக்காக வருவதும் போவதும் என இருப்பதை ஆழ்வார் பார்க்கின்றார். அம்மக்கள் திருவண்பரிசாரத்திற்குச் செல்கின்றனர், சென்று மீண்டும் திரும்பி வருகின்றனர் என்றே ஆழ்வார் நினைக்கின்றார். இவ்வாறாக நினைக்கும் ஆழ்வார் இறைவனுக்கு உதவிகரமாக இருப்பதற்கு எவரும் இல்லாத இம்மண்ணுலகில், சங்கு சக்கரங்களை சுமந்துக்கொண்டு அவரின் ஒரு பக்கத்தில் கூடவே திரியும் அடியவன் ஒருவன் திருநகரின் திருப்புளியங்குடியில் இருக்கின்றான் என்று அங்கு

செல்லும் மக்கள் திருவண்பரிசாரத்து இறைவனிடம் தெரிவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

ஆனால் மக்கள் எவரும் தம்மிடம் வராத காரணத்தால் இனி என்ன செய்வது என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார் ஆழ்வார். இறைவனிடம் "அடிமையென்று திருப்புளியங்குடியிலே உளர்" என்று சொல்ல வேண்டும் என்பது அவரின் பேராசையாக இருந்தது. நேரடியாகவே இறைவனிடம் கேட்க துணிந்த ஆழ்வார்; உமக்குப் பணி செய்ய திருவுள்ளம் பற்றியிருக்கும் நாள் எதுவோ என்று வினவி நிற்கின்றார்.

"இறைவனை ஆளும் தலைவனாக ஏற்றுக் கொண்ட நிலையில், ஆழ்வார்கள் தம்மை அடிமைகளாகவே எண்ணுகின்றனர்"[20]. ஆழ்வார்கள் அடிமைநிலையை ஏற்றுக் கொண்டு தொண்டு புரிதலுக்கு வைணவத்தில் கைங்கரியம் என்ற பெயரிலே அழைக்கின்றனர். ஆள்பவனுக்கு எத்தகைய பண்புகள் உண்டோ அதுபோன்றே "பக்தனுக்கும் இருக்க வேண்டிய பண்புகளாகச் சிலவற்றைச் சுட்டுவர். அவையாவன,

1)விவேகம்(உணவில் கட்டுப்பாடு)

2)விமோகம்(பிற பொருள்களில் பற்றற்றும் இறைவனையே பற்றி நிற்றல்)

3)அப்பியாசம்(இறைவனைத் தொடர்ந்து நினைத்தல்)

4)கிரியை(பிறர் நலம் கருதிச் செய்வது)

5)கல்யாணம்(எல்லோருக்கும் நன்மையை விரும்புவது)

6)சத்யம்

7)ஆர்ஜவம்(நேர்மை)

8)தயை

9)அகிம்சை

10)தானம்

11)நம்பிக்கை

12)முகமலர்ச்சி”[21].

இவற்றின் மூலம் நம்மாழ்வார் இறைவன் மீது கொண்டுள்ள இறைநெறியால், என்றும் இறைவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதனை உணர்த்தி; இறைவனின் அழகையும், அவரை அடைய மேற்கொள்ளும் செயல்பாடுகளையும் இவருடைய பாசுரத்தின் மூலம் அறிய முடிகிறது. அதோடு இறைவனின் அழகினைக் கண்டு அனுபவிக்க வேண்டும் என்பதனையும் நமக்கு ஊட்டுகின்றார்.

2. திருவட்டாற்று ஆழ்வாரின் இறைநெறியும்

திருவட்டாற்று எம்பெருமானைப்பற்றி நம்மாழ்வார் மட்டுமே பதினொரு மங்களாசாசனப் பாடல்களைப் பாடியுள்ளார். இந்த பதினொரு பாசுரங்களும் ‘அருள் பெறுவார்’ என்னும் தலைப்பில் திருவாய்மொழியில் அமைந்து நாலாயிர திவ்விய பிரபந்தமாகக் கொடையளிக்கிறது. நம்மாழ்வார் திருவட்டாற்று எம்பெருமான் மீது கொண்டுள்ள பக்தி திறத்தைத் காணலாம்.

இறைப்பற்றுகொண்ட அனைத்து மனிதர்களுக்கும் இறைவனை அடைய வேண்டும் என்ற ஆசை இருக்கும். வைணவ பக்தர்கள் நம்மாழ்வாரின் பக்தியினைக் குறித்து ஆராய்கின்றனர். காரணம் எம்பெருமானைப் பெறவேண்டுமென்று ஆழ்வாருக்கு விருப்பம் அதிகமா? அல்லது ஆழ்வாரைப் பெறவேண்டும் என்று எம்பெருமானுக்கு விருப்பம் அதிகமா? என்பதே ஆகும். இந்தக் கேள்விக்கு நம்மாழ்வாரோ; எம்பெருமானுக்கே என்மீது கொண்ட விருப்பம் அதிகமென்று பதில் கூறுகின்றார்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில், சீவான்மா வேட்டையில் நித்தமும் ஈடுபட்டுள்ள எம்பெருமான் திருவட்டாற்றில் வந்து உயர்ந்த இடத்தில் வீடு அமைத்துக்கொண்டு தங்கியுள்ளான். காரணம் ஆழ்வாரைத் திருநாட்டில் கொண்டு சென்று சேவிக்க வேண்டும் என்ற நிலையில் இருப்பதனை,

“மண்ணுலகில் வளம்மிக்க

வாட்டாற்றான் வந்துஇன்று

விண்ணுலகம் தருவானாய்

விரைகின்றான், விதிவகையே” (திருவாய். 10.6:3)

என்னும் பாடல் பெருமான் நம்மாழ்வாரின் மீதுகொண்ட விருப்பத்திற்கு வலுசேர்க்கும் விதத்தில் அமைந்திருப்பதனை நம்மால் உணரமுடிகிறது.

பெருமான் நம்மாழ்வாரைச் சேவிக்க இம்மண்ணிலகில் சுதந்திரமற்று இருக்கின்றான். இது என்னவொரு அதிசயம் என்று பெருமானின் நற்குணங்களை நினைக்கின்றார் ஆழ்வார். அவ்வண்ணமே பெருமானைச் சேவிக்க முற்படும் நம்மாழ்வாருக்குத் தனியே பெருமானைச் சேவிப்பதினால் தனக்கு இன்பம் கிடைக்காது, ஆகையால் நாட்டுமக்களோடு சேர்ந்து பெருமானைச் சேவிக்கலாம் என்று மக்களைப் பார்க்கின்றார்.

ஆனால் அம்மக்களோ உணவிற்காகவும், உடைக்காகவும் அலைகின்றவராய் இவ்வுலகில் உள்ள ஐம்புல இன்பங்களில் அடிமையாகி இருக்கின்றனர். அவர்களை இந்நிலையிலிருந்து நீக்கி எம்பெருமானிடம் அழைத்துச்சென்று பெருமானது நற்குணத்தினை சேவிக்கச்செய்யலாம் என்று ஆழ்வாரின் மனதில் எண்ணுகின்றார். ஆனால் இறைவனோ ஆழ்வாரைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்வதிலேயே கண்ணும் கருத்துமாய் விரைந்துக் கொண்டிருப்பதினால் மக்களின் சேவைக்கு உதவிபுரிவதாக தெரியவில்லை. ஆகையால் ஆழ்வாரும் இன்ப துன்பங்களுக்கு உட்படுகின்ற அவருடைய நெஞ்சோடும் இறைவனைச் சேவிக்கின்றார்.

தம்நெஞ்சத்திடம், பல சிறப்புகளைக் கொண்ட இறைவனைபற்றி உமக்குத் தெரியும், அப்படிப்பட்ட இறைவன் என்னை ஆட்கொள்ளவே இம்மண்ணுலகில் காண்கிறான் என்று கூறி நம்மாழ்வார் இன்பம் பெறுவதைக் காணலாம். இவ்வாறாக நம்மாழ்வார் இறைவன் மீது கொண்ட பற்றினை அறிய முடிகிறது.

நம்மாழவார், இறைவனானவன் திருவாழியாழ்வார் முதலிய நித்திய சூரிகளிடம் காட்டும் அருளையெல்லாம் தமக்கும் அருளுகின்றார் என்றார். இதனையே,

“அருள் பெறுவார் அடியார்தம்
அடியனேற்கு அழியான்
அருள்தருவான் அமைகின்றான்;
அதுதமது விதிவகையே” **(திருவாய். 10.6:1)**

என்னும் பாசுரம் கூறுகிறது. அத்தோடு மட்டுமல்லாது, தான் இறைவனைப் பற்றி இருப்பதினால் மற்றவர்கள் மீது பாயும் அருள் நம்மாழ்வார் மீதும் வெள்ளம் போல் வருகின்றதாகவும் ஆழ்வார்கள் கருதுகிறார். நாமும் நம் பிறவி பயனை அடைய வேண்டிய எண்ணம் ஏற்பட்டு, அதனை அடைய நம்மாழ்வார் பின்பற்றிய வழியினைப் பின்பற்றினால் அதனை அடையலாம் என்னும் கருத்தினையும் ந.சுப்புரெட்டியார் உணர்ந்து கூறுகின்றார்.

ஆழ்வார் தனது நெஞ்சத்தோடு, தம்மை பரமபதத்திற்கு அழைத்துச் செல்லவே எம்பெருமான் காத்திருக்கின்றான் அதனால் ‘அவன் வழியே செல்லப் பார்’ என்று கூறிகொள்கிறார். இதன் மூலம் எம்பெருமான் இந்த மண்ணுலகில் வந்து நிற்பது ஆழ்வாரை கொண்டு செல்வதற்கே என்னும் கருத்தும் அறியமுடிகிறது. அதுமட்டுமின்றி தனது நெஞ்சத்தோடு ஆழ்வார் கூறிக்கொள்வது என்னவென்றால், இறைவன் தான் வேண்டியதற்கு மேலானவற்றையே தமக்கு தந்தருளினார் என்று கூறினார்.

பொய்ந்நின்ற ஞானம், பொல்லா ஒழுக்கு, அழுக்குடம்பு ஆகிய இவற்றையெல்லாம் போக்க வேண்டும் என்றே ஆழ்வார் வேண்டினார். ஆனால் இறைவன், மடை திறந்த வெள்ளம் போல பலவற்றையும் அருளினார். என்னென்னவென்றால், இறைவனான ‘கேசவன்’ தன் குழலழகினைக் காட்டி தனை ஆட்கொண்டு, தம் பிறவி வினை அனைத்தும் விலகிட; இறைவனைப்

பற்றிய பாடலை தன்னை ஒரு கருவியாகக் கொண்டு பாடுவித்தான் என்று ஆழ்வார் கூறுகின்றார்.

அதோடு மட்டுமல்லாது இவ் உலக இன்பங்களிலிருந்தும் தம்மை மீட்டார் என்றும் கூறினார். இத்தனைக்கும் காரணம் இறைவனின் திருநாமத்தைச் சொன்னதினாலே என்கின்றார். ஆகையால் இறைவனின் நாமத்தைச் சொன்னால் வீடு பேறு அடையலாம் என்ற உணர்வினை நம்மாழ்வார் ஊட்டுகின்றார். திருவட்டாறு இறைவனும் ஆழ்வாருக்கு வீட்டுலகம் தருவதற்காகவே விரைகின்றான். இதனை,

“மண்ணுலகம் வளம்மிக்க
வாட்டாற்றான் வந்துஇன்று
விண்ணுலகம் தருவாவாய்
விரைகின்றான்” (திருவாய்மொழி 10.6:3)

என்று ஆழ்வாரே சொல்கின்றார். பரமபதத்தில் இறைவனுடைய திருக்குணங்கள் பகல்விளக்குப்போல் ஒளியற்றும், ஒளிகுன்றியும் காணப்படுகிறது. இந்த உலகில் அக்குணங்கள் இருட்டறையில் விளக்குபோல் ஒளிர்வதால் வளம் மண்ணுலகில் மிக்குவதாயிற்று. திருமாலின் குணங்களை வைணவர்கள் ‘திருகல்யாண குணங்கள்’ என்று குறிப்பிடுகின்றனர்.

“இறைவன் எல்லாக் குற்றங்களுக்கும் எதிரிடையாக இருப்பவன். அதாவது இருளுக்கு ஒளி போலவும், பாம்புக்குக் கருடனைப் போலவும் திகழ்பவன். தன்னைச் சரணடைந்தவருடைய துன்பங்களைப் போக்குபவன். இடத்தாலும், காலத்தாலும், பொருளாலும் அளவுபடுத்தப் பெறாதவன். அதாவது, இன்ன காலத்தில் உள்ளான்; இன்ன காலத்தில் இல்லான் என்கிற கால அளவு இல்லாத நியதியான். இன்ன இடத்தில் உள்ளான்; இன்ன இடத்தில் இல்லான் என்கிற தன்மை இல்லாதவன்”[22].

இறைவன் ஆழ்வாருக்கு பரமபதத்திற்குச் செல்லும் வழியினைக் காண்பிக்க இருக்கின்றாரே தவிர இன்னும் காட்டவில்லை. ஆனால் செல்லும் வழியினைக் காட்டுவது உண்மை. இதனை மனத்தில் நினைத்தவண்ணம் தாம் பெற்ற பேறுகளை விரல்விட்டு எண்ணிப்பார்க்கின்றார் ஆழ்வார்.

“தலைமேல தாளிணைகள்
தாமரைக்கண் என்அம்மான்
நிலைபேரான் என்நெஞ்சத்து
எப்பொழுதும்” (திருவாய்மொழி 10.6:6)

ஆழ்வாரைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லவரும் இறைவன் ‘செழும் பறவைதான் ஏறி’ வந்தான். அவ்வாறு வந்த இறைவன் தனது திருவடிகள் இரண்டையும் ஆழ்வாரின் தலையின் மீது வைத்தருளினான். அழகிய திருக்கண்களால் ஆழ்வாரைக் குளிர நோக்கிநின்றான். என்றும் மாறாமல் அவருடைய இதயத்தில் நிரந்தரமாகக் குடிக்கொண்டான். இவை அனைத்தும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தது.

நம்மாழ்வார் இறைவனை அடந்த பிறகு இவ்வுலக வாழ்க்கை என்பது இன்பம் தராது என்பதனை உணர்ந்தும், நமக்கு உணர்த்தியும் நிற்கின்றார். இறைவனை வேண்டினால் அவனது அருள் கிட்டும் என்பது நம்மாழ்வாரின் பாசுரங்கள் உறுதி செய்கிறது. இப்பாசுரங்களை ஆராய்வதன் மூலம் நம்மாழ்வார் திருவட்டாற்று இறைவன் மீது கொண்ட பக்தி திறனானது வெளிக்கொணர முடிகிறது.

3. அனந்தபுரத்து அண்ணலாரும் ஆழ்வாரின் இறைநெறியும்

இறைவனுக்குக் கைங்கரியம் செய்யவேண்டும் என்பது வைணவப் பெரியோர்களின் நம்பிக்கை. அதன்படியே நம்மாழ்வாரும் இறைவனுக்குக் கைங்கரியம் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றார். அவ்வாறு நினைக்கும் ஆழ்வார் எவ்வாறெல்லாம் கைங்கரியம் செய்யலாம் என்று தம்பாசுரங்களில்

குறிப்பிட்டுக்காட்டுகிறார். அதோடு மட்டுமல்லாது அவைசெய்வதால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்பதனையும் கூறுகின்றார்.

நாம் எத்தனையோ துன்பங்களைக் கடந்திருப்போம். அத்தனை துன்பங்களும் நாம் இறைவனின் திருநாமத்தை உச்சரிக்கும் போது அத்துன்பங்கள் ஒன்றுமில்லாதவையாக மாறிவிடும். இதனை உணர்ந்த நம்மாழ்வார் திருவனந்தபுரத்து இறைவனைக் "கேசவா" என்ற மூன்றெழுத்து மந்திரத்தை உச்சரிக்கின்றார். இக்கருத்தினை ஆண்டாளும் "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில்தூசு ஆகும்" என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு கேசவா என்று நம்மாழ்வார் இறைவனை அழைக்கின்றார்.

"இந்த உலகில் தீச்செயலை மேற்கொள்ள நினைப்பவர் சிறிதும் தாமதிக்காது உடனே செய்து முடிப்பதும், நற்செயலை மேற்கொள்ள நினைப்பவர் பார்ப்போம், பார்ப்போம் என்று காலத்தை நீட்டிக்கொண்டே போவதும் இயல்பாகும்" (ந.சுப்புரெட்டியார்,பக்-36) என்று ந.சுப்புரெட்டியார் இம்மக்களின் இயல்புகளாகக் கூறுகின்றார். ஆனால் நம்மாழ்வார் அனந்தபுரத்திற்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் தோன்றிய அன்றைய தினமே செல்ல வேண்டும் என்று கூறுகின்றார். ஆழ்வாருடைய விருப்பமும் அதுவே. இக்கருத்தினையே 'புகுதும் இன்றே' என்று குறிப்பிடுகிறார். மேலும் செல்ல வேண்டும் என்ற நினைப்பு வந்த உடனே சென்றோமானால் இப்பிறவி மட்டுமல்லாது ஏழு பிறவிகளிலும் எவ்விதமான தீங்குகளும் ஏற்படாது என்று எண்ணுகின்றார். இக்கருத்தினை,

"இன்றுபோய்ப் புகுதிராகில்
எழுவையும் ஏதல் சாரா" **(திருவாய். 10.2:2)**

என்னும் பாசுரம் உறுதி செய்கிறது.

நம்மாழ்வார் இறைவன் குடியிருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தவுடன் சென்றால் கிடைக்கும் நன்மைகளைக் கூறுவதுடன், அவருடைய

திருநாமத்தைச் சொன்னால் கிடைக்கும் நன்மைகளையும் கூறுகின்றார். இறைவனுக்கு ஆயிரம் திருப்பெயர்கள் உள்ளன. அவற்றில் ஒருபெயரினைச் சொன்னாலே அனைத்து நன்மைகளும் கிடைக்கும். இதனையே,

“பேரும்ஓர் ஆயிரத்துள்
ஒன்றுநீர் பேசுமினே” **(திருவாய். 10.2:3)**

நம்மாழ்வார் இவ்வரிகளில் மெய்ப்பிக்கிறார். ‘ஆயிரம்’ என்பது கணித எண்ணிக்கை அல்ல; எண்ணற்றவை என்பதே பொருள். இறைவனின் ‘திருபெயர்களில்’ ஒன்றனைக் கூறுவதாக இருப்பினும் அவற்றைப் ‘பேசுமின் கூசமின்றி’ சொல்ல வேண்டும். இவ்வாறு ஒரு பெயரினைச் சொன்னாலும் அதுவே ஆயிரமாகி பெருமை சேர்க்கும். இறைவனின் நாமத்தினை வாயினால் பாடி மனத்தால் சிந்தித்தால் திருவனந்தபுரமே பரமபதமாகிவிடும் என்று நம்மாழ்வார் கூறுகின்றார்.

ஆழ்வாரின் அருளமுதை உணர்ந்த பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் “வைகுந்தத்தில் தேவர்களின் நடுவே அமர்ந்து காட்சி கொடுக்கும் இறைவன்; நம்மை போன்றோர்க்கும் காட்சி கொடுக்கவே திருவனந்தபுரத்திலே எழுந்தருளி இருக்கின்றான். அவனது திருப்பெயரினைச் சிந்திக்கக் கூடியவர்கள் பரமபதத்தினை அடைவது உறுதி என்றும்; ‘இராமன் இருக்கும் இடமே அயோத்தி’ என்றார் போல, அவன் விரும்பியுறையும் இடமே பரமபதம்”[24] என்று திருவனந்தபுரத்து இறைவனைப்பற்றி கூறுகின்றார்.

இறைவன் அடியவர்களை காப்பதற்காகவே பரமபத்தைத் துறந்து அனந்தபுரத்தில் குடிக்கொண்டிருக்கிறார். இறைவன் இவ்வுலகினைக் காப்பதையே தனது தொழிலாகவும் கொண்டிருக்கின்றார். அப்படிப்பட்ட இறைவனைத் தூய மலர்களால் அர்ச்சனை செய்யக்கூடிய பேறு கிடைத்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள் என்றே ஆழ்வார்கள் கூறுகின்றனர்.

கைங்கரியம் என்பதற்குப் பொருள் கூறும் ஆழ்வார், பக்தியுடன் தூய நீரையும், நறு மலர்களையும் கொண்டு அர்ச்சனை செய்து, இறைவனின் திருப்பெயரினை நினைத்தல் வேண்டும் இவ்வாறு செய்தால் அதிக நன்மைகள் கிடைக்கும் என்று கூறுகின்றார். அதோடு இவ்வுலகில் நாம் பிறந்த பிறப்பிற்கே பிறவிப்பயன் கிடைக்கும் என்றும்,

“புண்ணியம் செய்து நல்ல
புனலொ மலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம்
இப்பிறப்(பு) அறுக்கும்; அப்பால்” **(திருவாய். 10.2:5)**

இவ்வரிகளில் ஆழ்வார் கூறுகின்றார். அவ்வாறே நின்றுவிடாமல் ஆழ்வார் கூறுவதாவது, கைங்கரியமாக மலர்கள் முதலியவற்றுடன் இறைவனுக்குப் பணிசெய்ய வேண்டும் என்பதில்லை. மாறாக இறைவன் குடிக்கொண்டுள்ள திருக்கோயிலின் வாயிலைத் தூய்மை செய்தாலே போதுமானது என்றும் கூறுகிறார்.

இவ்வாறாக இறைவனுக்கு எவ்வாறெல்லாம் கைங்கரியம் செய்யலாம் என்பதனை ஆழ்வார் நன்கு விளக்கிக்காட்டியுள்ளார். அதுமட்டுமல்லாது இறைவன் மீது கொண்ட பக்தி நெறியினையும் அவருடைய பாசுரங்களின் வழியே உணரமுடிகிறது.

4. திருவாறன்விளையும் ஆழ்வாரின் இறைநெறியும்

இறைவனான திருமால் தாமரை மலரில் அமர்ந்திருக்கும் திருமகளுடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் இந்த ஏழுலகிலுள்ள மண்ணுயிர்களுக்கு இன்பத்தைக் கொடுத்து ஆனந்தமாய் திருவாறன்விளைத் திருத்தலத்திலே வீற்றிருக்கின்றான். ‘இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற’ திருவாறன்விளை இறைவனை வலம்வரக்கூடிய நாள் எந்நாளோ என்று ஏக்கம் கொள்கிறார் ஆழ்வார். இதனையே,

“இன்பம் பயக்க, எழில்மலர்

மாதரும் தானும் இவ் ஏழுலகை,

இன்பம் பயக்க இனிதுடன்

வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள் பிரான்,

அன்புற்று அமர்ந்தஉறை கின்ற

அணிபொழில் சூழ்திரு வாறன்விளை,

அன்புற்று அமர்ந்த வலஞ்செய்து

கைதொழும் நாள்களும் ஆகும்கொலோ!” (திருவாய் 7.10:1)

என்னும் பாசுரவரிகள் கூறுகிறது. இந்தப் பாசுரத்தை உணர்ந்தே “அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இத்திருப்பதியில் விளங்கும் இறைவனின் குணத்தை ‘ஆனந்தவளர்ச்சி’ என்று குறிப்பிடுகிறார்”[25].

கோயிலின் வலம்வருதலில் அதிக விருப்பம் கொண்ட நம்மாழ்வார், திருவாறன்விளைத் தலத்தினைத் தூய்மையான, நறுமணம் கமழும் அழகிய மலர்களால் தூவி வலம் வந்து, கைகளால் தொழுது வணங்கும் நாள் எந்நாளோ? என்றும், செழுமையான பொழில் சூந்து திருவாறன்விளைத் தலத்தினை வலம்வந்தால் தீவினைகள் அனைத்தும் தன்னைவிட்டு போகும் என்றும் கூறுகின்றார்.

ஆழ்வார்கள் கோயிலை வலம்வர விரும்புவதைப் போன்று “கேரளாவில் எல்லா மக்களும் கோயிலை வலம் வரும் வழக்கத்தினைத் தவறாமல் கடைபிடிக்கின்றனர்”[26] என்பதனை ந.சுப்புரெட்டியார் தன் நூலில் பதிவு செய்துள்ளார். மேலும், ஆழ்வார் திருவாறன்விளைத் திருத்தலத்தின் சிறப்புகளாகக் கூறியவை, இன்றும் இத்தலத்தில் நடைபெறுகிறது என்பதனையும் ஆசிரியர் கூறுகிறார். “இந்தத் திவ்விய தேசத்திற்கு யாத்திரையாக எழுந்தருளும் பக்தர்கள் ஆழ்வார் கூறும் ஏக்கங்களோடு, நறுமணங் கமழும் சந்தனச் சேற்றைத் திருமதிலிலே தூவி வழிபாடு செய்யும் வழக்கத்தினை இன்றும் காணலாம்”[27].

திருவாறன்விளைக்குச் செல்வதற்காக ஆழ்வார் மிகுந்த ஆசை கொள்கிறார். இக்கருத்தினை,

“கூடுங்கொல் வைகலும் கோவிந்த
னைமது சூதனைக் கோளரியை,
ஆடும் பறவை மிசைக்கண்டு
கைதொழுது அன்றி அவனுறையும்
பாடும் பெரும்புகழ் நான்மறை
வேள்வி ஐந்து ஆறுஅங்கம் பன்னினர்வாழ,
நீடு பொழில்திரு வாறன்
விளைதொழ வாய்க்குங்கொல் நிச்சலுமே” (திருவாய் 7.10:3)

என்ற பாசுர வரிகள் உறுதிசெய்கிறது. திருவாறன்விளை செல்ல ஆசைப்படும் ஆழ்வார், அத்தலத்தின் புகழினைப் பாடுவதால் ஏற்படக்கூடிய பலனையும் உரைக்கின்றார். அதாவது இறைவனின் திருவடிகளை நெஞ்சில் இருத்தி வணங்கவேண்டும். அவ்வாறு செய்தால் நம்மேல் கலந்திருக்கின்ற தீயவினையானது விலகிச் சென்றுவிடும் என்கிறார்.

மேலும், இத்திருத்தலத்தினை உளமார எண்ணித் தொழுதோமானால் தீயவைகள் அனைத்தும் கெட்டுவிடும் என்று கூறுகிறார் ஆழ்வார். இதன்மூலம் ஆழ்வார் கூறவருவது என்னவெனில் திருவாறன்விளை திவ்விய தேசத்திற்குள் நுழைந்தோம் என்றாலே நம்முடைய எல்லா துன்பங்களும் தொலைந்துபோகும் என்பதாகும்.

திருவாறன்விளைத் தலத்திலே யானையைக் காத்த இறைவன் நம்மையும் காப்பதற்காகவே குடிகொண்டிருக்கின்றான். அப்படிப்பட்ட இத்தலத்து இறைவனைச் சரணம் அடைய வேண்டிய இடம் என்றும், அதற்கு இறைவனையே கருவியாக வந்து உதவினான் என்கின்றான் ஆழ்வார். இத்திருப்பதியின் சுவையினை அறியாதவர்களுக்கு மட்டுமே பரமபதம் அடையவேண்டும் என்ற

நாட்டம் இருக்கும். இதன் சுவையினை உணர்ந்தோரால் மட்டுமே பரமபதத்தினை ஒரு பொருட்டாகவும் நினைக்கத்தோன்றாது. இறைவனே இத்தலத்தில் இருக்கின்றபோது பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்பதே ஆழ்வாரின் எண்ணம்.

"தீவினை உள்ளத்தின் சார்வல்ல
ஆகித் தெளிவிசும்பு ஏறலுற்றால்
நாவின் உள்ளும் உள்ளத்து உள்ளும்
அமைந்த தொழிலினுள்ளும் நவின்று
யாவரும் வந்து வணங்கும்
பொழில்திரு வாறன் விளையதனை
மேவி வலஞ்செய்து கைதொழக்
கூடுங்கொல் என்னும்என் சிந்தனையே" (திருவாய் 7.10:9)

என்னும் இப்பாசுரத்தில், தீய வினைகள் அனைத்தும் நீங்கி, தாம் பரமபதத்தினை அடைந்தாலும் ஆழ்வாருடைய திருவுள்ளமானது திருவாறன்விளையினை அடைய வேண்டும், அங்கேயே வாழவேண்டும் என்பதாகும்.

இத்தகைய செய்திகளின் மூலம் நம்மாழ்வார் திருவாறன்விளைத் திருத்தலத்தினை அடைய வேண்டும் என்ற பேராசை கொண்டிருக்கிறார் என்பதும், அத்தலத்தினை அடைந்தால் கிடைக்கும் நன்மைகளும், தலத்தின் சிறப்புகளையும் அறிய முடிகிறது.

5. திருச்செங்குன்றூரும் ஆழ்வாரின் இறைநெறியும்

நம்மாழ்வார் திருச்செங்குன்றூர் இறைவனைத் தனது இதயத்தில் குடிவைத்திருப்பதாகக் கூறுகின்றார். இதனை,

"திருச்செங்குன் றூர்ரில் திருச்சிற்றா றதனுள்
கண்டஅத் திருவடி என்றும்,
திருச்செய்ய கமலக் கண்ணும்செவ் வாயும்
செவ்வடி யும்செய்ய கையும்,

திருச்செய்ய கமல வுந்தியும் செய்ய
கமலைமார் பும்செய்ய வுடையும்
திருச்செய்ய முடியும் ஆரமும் படையும்
திகழஎன் சிந்தையு ளானே” (திருவாய். 8.4:5)

என்னும் பாசுரத்தில் காணலாம். சிவந்த தாமரை போன்ற கண்களும், செவ்வாயினையும், சிவந்த திருப்பாதங்களையும், சிவந்த கைகளையும், சிவந்த தாமரை போன்ற உந்தியும், சிவந்த திருமகள் குடியிருக்கும் திருமார்பும், செவ்விய ஆடையும், ஒளித்தரக்கூடிய பொன்முடியும், ஆரமும், படைகளும் கொண்டு திருச்செங்குன்றூர் இறைவன் ஆழ்வாரின் இதயத்தில் குடியிருக்கிறார்.

இதயத்தில் வீற்றிருக்கச் செய்து, ஆழ்வாரின் புகலிடமான திருச்செங்குன்றூர் தலம் விளங்குகிறது. இத்தலமானது சாதாரணமான தலமன்று; மிகவும் புகழ்பெற்றத்தலம். காரணம், இத்தலத்திலே உள்ள இறைவன் மதம் கொண்ட யானையின் தந்தங்களை முறித்ததும், யானையின் பாகனை அழித்ததும், எதிரிகளை அழித்ததும், கம்சனை அழித்தும் புகழ்பெற்ற இறைவன் எழிந்தருளியிருக்கும் தலமாகும். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற தலமாகவும் விளங்குகிறது. புகழ் பெற்ற இத்தலத்தினையே ஆழ்வார் புகலிடமாகக் கொண்டிருக்கின்றார்.

“நம்மாழ்வாரின் பாசுரத்தை நினைத்தே ஆசாரிய ஹிருதயம் இந்த திவ்விய தேசத்தில் சூரன், வீரன் முதலிய குணங்கள் விளங்கும் என்கின்றார்”[28]. இந்த செய்தியும் இத்தலத்தின் சிறப்பை மிகைப்படுத்திக் காட்டுகின்றன என்பதனை அறியலாம்.

இறைவனைத் தனது இதயத்தில் கொண்டிருக்கும் நம்மாழ்வார், திருச்செங்குன்றூரினைத் தனது புகலிடமாகவும் கொண்டுள்ளார். அத்தகைய திருச்செங்குன்றூர் இறைவனானவன் தனக்கு தந்தையாகவும், மூவுலகைக் காக்கும் மும்மூர்த்திகளில் ஒருவனாகவும் விளங்குகின்றான். அந்த இறைவன் மட்டுமே

தனக்குத் துணையாக இருக்கின்றதாக ஆழ்வார் கூறுகிறார். “திருச்செங்குன்றூர் இறைவனின் பெருமைகளைப் பலவாறாகப் பேசி இனியராகின்றார் குருகூர் வள்ளல்”[29]. நம்மாழ்வார் இறைவனைப் பற்றி புகழ்ந்து பாடியது போன்று குருகூர் வள்ளலும் பாடியுள்ளார் என்ற செய்தியினையும் அறியலாம்.

திருச்செங்குன்றூர் தலமானது நம்மாழ்வாருக்கு அச்சமற்றப் புகலிடமாக இருக்கிறது என்று ஆழ்வார் பல இடங்களில் கூறுகின்றார். தேவர்களுக்கெல்லாம் நாயகனாக விளங்கும் இறைவனே தனக்கும் இறைவன் என்று கூறும் ஆழ்வார், இறுதியில் அந்த இறைவனையே சரணடைந்தார். இப்போது தன்னைத்தவிர வேறு எவருக்கும் இவ்வாய்ப்பானது கிடைக்கவில்லை என்றும் கூறுகின்றார். மற்ற திவ்விய தேசங்களில் குடியிருக்கும் இறைவன்கள் அனைவரும் திருச்செங்குன்றூர் இறைவனைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் இல்லை என்ற உண்மையினை தாம் அறிந்திருந்தும், ஆழ்வாரின் உயிரானது இத்தலத்து இறைவனைத் தவிர வேறு ஒருவரை விரும்பாது என்று கூறுகின்றார். இதனை,

“அல்லதுஓர் அரணும் அவனில்வேறு இல்லை;
அதுபொருள் ஆகிலும், அவனை
அல்லதுஎன் ஆவி அமர்ந்துஅணை கில்லாது” (திருவாய். 8.4:5)

என்னும் பாசுர வரிகளில் காணலாம். இவ்வரிகள் நம்மாழ்வார் திருச்செங்குன்றூர் இறைவன் மீதுகொண்டப் பக்தி நெறியினை வெளிகாட்டுகிறது.

இத்தலத்தின் மீது நம்மாழ்வார் கொண்டுள்ள ஈடுபாடு மிகவும் தெளிவாகப் புலப்படுகிறது. இறைவனைத் தனது இதயக்கமலத்தில் வைத்திருந்தும், இத்தலத்து இறைவனே ஆழ்வாருக்குக் காவலனாக விளங்கினார் என்பதும், ஆழ்வார் இறைவன் மீதுகொண்டப் பக்தி திறமும் அறியப்படுகிறது.

6. திருக்கடித்தானமும் ஆழ்வாரின் இறைநெறியும்

இறைவன் இரவு பகலென்று பாராமல் தன்னையே நினைத்து வாழுமாறு ஆழ்வாருக்கு அருள் செய்தான். இறைவன் தனக்கு மட்டுமே அருள் புரிவான்,

வேறெவர்க்கும் அருளமாட்டார் என்று ஆழ்வாரே நினைத்துக்கொள்கிறார். மேலும் தேவர்களும் தாம் பெற்ற பேற்றினைப் பெறவில்லை என்னும் நினைக்கின்றார்.

இறைவன் திருக்கடித்தானத்திலும், ஆழ்வாருடைய இதயத்திலும் குடிக்கொண்டிருக்கின்றதாக,

“திருக்கடித் தானமும் என்னுடைச் சிந்தையும்
ஒருக்கடுத் துள்ளே உறையும் பிரான்கண்டீர்” (திருவாய். 8.6:2)

என்ற பாசுரத்தில் ஆழ்வார் குறிப்பிடுதலை ஆராயலாம். இப்பாசுரத்தினை படித்தாலே ஆழ்வாரானவர் இறைவனை எத்தகைய இடத்தில் வைத்து போற்றுகின்றார் என்பது தெரிகிறது. இறைவன் தனது இதயத்தில் வீற்றிருப்பதன் நோக்கம், என்னுடைய தீயவினைகள் அனைத்தையும் போக்குவதற்காகவே என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

“சோழநாடு, பாண்டியநாடு, மலைநாடு என்றாற் போல் ‘நெஞ்சநாடு’ என்ற ஒரு நாட்டை ஆழ்வார் குறிப்பிடுகின்றார்”[30]. இவ்வாறு கூறக்காரணம், இத்திருத்தலத்திலே இறைவன் வீற்றிருப்பது போன்று இதய கோயிலில் இறைவன் வீற்றிருக்கின்றான். இதன்காரணமாக நெஞ்சநாடு என்று குறிப்பிடுகின்றனர்.

இதயகோயிலில் வீற்றிருக்கக்கூடிய இறைவன் ஆழ்வாரது தீயவினைகள் அனைத்தையும் தீர்த்தார். ஆழ்வாரின் இதயத்தில் வீற்றிருக்கும் இறைவனே திருக்கடித்தானத்திலும் வீற்றிருக்கின்றான். இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனை வணங்கினால், அந்த நேரத்திலே நம் துன்பங்கள் அனைத்தும் காணாமல் போகும் என்றும், ஆழ்வார் வலியுறுத்துகிறார். ஆழ்வாரின் இதயத்தில் குடிக்கொண்ட இறைவன் தனியாகக் குடியேறவில்லை மாறாக திருக்கடித்தானம் என்ற திவ்வியதேசத்துடன் சேர்ந்து குடிபுகுந்துவிட்டான் என்றும் கூறுகிறார். இக்கருத்தினை,

“கோயில்கொண் டாந்தன் திருக்கடித் தானத்தை
கோயில்கொண் டான்அத னோடும்என் நெஞ்சகம்
கோயில்கொள் தெய்வன்எல் லாம்தொழ, வைகுந்தம்
கோயில்கொண் டகுடக் கூத்தவன் மானே” **(திருவாய் 8.6:5)**

என்னும் பாசுரம் மெய்பிக்கிறது.

திருக்கடித்தானம் என்ற திருப்பதியினை உயர்த்தி கூற வேண்டிய தேவையானது ஒன்றும் இல்லை; அத்தலத்தினை இதயத்திலே நினைத்தாலே போதும் என்று ஆழ்வார் கூறுகின்றார். இம்மண்ணுலம், விண்ணுலகம், மேலுலகம் இவை அனைத்தும் இறைவன் குடியிருக்க மிக சிறந்த இடங்களாகும். ஆனாலும் அவற்றின் மீது ஆசைக்கொள்ளாமல், ஆழ்வாரின் இதயத்தையும், அவ்விதயத்தில் வசிக்கக் காரணமாக இருக்கக்கூடிய திருக்கடித்தானம் தலத்திலும் குடிகொண்டுள்ளவே தனது விருப்பமாகக் கொண்டிருக்கிறார் என்று ஆழ்வார் கூறுகின்றார்.

இதன்மூலம் இறைவன் ஆழ்வார் மீது கொண்ட அன்பும், ஆழ்வாருக்கு இறைவன் மீதுக் கொண்ட இறை உணர்வினையும் பற்றி அறிந்துகொள்ளலாம்.

7. திருவல்லவாழும் ஆழ்வாரின் இறைநெறியும்

(திருமங்கை ஆழ்வாரும் திருவல்லவாழும்)

இந்த மண்ணுலகில் உள்ள பந்தம் என்று சொல்லக்கூடிய தந்தை, தாய், மக்கள், சுற்றம், உற்றவர் என்ற வாழ்வைத் துறந்து, இந்த வாழ்வானது நிலையில்லாதது என்பதனை உணர்ந்து, இறைவனான திருமால் குடியிருக்கக்கூடிய திருவல்லவாழ் என்ற திருப்பதியினை வாயால் சொல்லுமாறு திருமங்கையாழ்வார் தனது நெஞ்சிடம் கூறுகிறார். இவ்வாறு கூறும் ஆழ்வார், முதலில் சிற்றின்பத்தினைக் களையவேண்டும் என்கிறார். சிற்றின்பம் என்று ஆழ்வார் குறிப்பிடுவது மங்கையரால் பெறும் இன்பத்தினைக் குறிப்பிடுகின்றார்.

முதலில் சிற்றின்பத்தினைப் பற்றிக் கூறிய ஆழ்வார் பிறகு செல்வ நிலையிலாமையைப் பற்றி பேசுகிறார். உயர்ந்த வெண்கொற்றக் குடையின்கீழ் மன்னர் மன்னர்களாய் வீற்றிருந்து யானைகள் புடைசூழ வாழ்ந்தவர்களும் மாண்டனர் என்பதனை எடுத்துக்காட்டாகக் கூறி, தனது நெஞ்சத்திடம் திருவல்லவாழ் தலத்திற்குச் செல்வாயாக என்று கூறுகின்றார். இதில் "வாழ்ந்தவர்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை என்ற செல்வநிலையில்லாமையை உணர்த்துகிறார் திருமங்கையாழ்வார்"[31].

இவ்வாறாகத் திருமங்கையாழ்வார் இம்மண்ணுல வாழ்வில் கொண்ட பற்றும், சிற்றின்பங்களும், செல்வங்களும் இவை போன்ற அனைத்தும் நிலையில்லாதவை என்பதனை விளக்கி திருவல்லவாழ் தலத்து இறைவனின் சன்னதியினை அடைய வேண்டும் என்று கூறும் பக்திநெறியினை அறியமுடிகிறது.

(நம்மாழ்வாரும் திருவல்லவாழும்)

தோழிக்குத் தலைவி கூறுவது போன்று திருவல்லவாழ் இறைவனை நினைத்து பாசுரங்கள் அமைத்து பாடுகின்றார் நம்மாழ்வார். பல்வேறு சிறப்புகள் கொண்ட திருவல்லவாழ் திருத்தலத்திற்கு நான் என்று செல்வேன் என்று தன்னைத் தலைவியாகப் பாவித்து இறைவனைத் தலைவனாகப் பாவித்து தோழியிடம் கூறுவது போன்று பாடுகின்றார். இதனை,

"மாயோன் நோக்கு நல்லீர்
வைகலும்வினை யேன்மெலிய
வானார் வண்கமுகும்
மதுமல்லிகை யும்கமழும்
தேனார் சோலைகள்சூழ்
திருவல்ல வாழ்உறையும்
கோனாரை, அடியேன்
அடிகூடுவ(து) என்றுகொலோ? (திருவாய் 5.9:1)

என்ற பாசுரத்தில் உணரலாம். மற்றொரு பாசுரத்தில், இனிய மொழியினைப் பேசக்கூடிய தோழிகளைப் பார்த்து தலைவி, வண்டுகள் தொடர்ந்து இசைக்கும் இந்தத் திருவல்லவாழ் தலத்தில் வீற்றிருக்கும் தலைவனின் திருப்பாதங்களை நான் எப்போது கண்டு மகிழ்வேன் என்று கூறுகிறார்.

இப்பாசுரங்களை உதாரணமாக எடுத்துக்கொண்டாலே நம்மாழ்வார் தன்னைப் பெண்ணாகப் பாவித்து தலைவனை நினைத்து பாடும் இந்தப் பக்திநெறியானது மிகவும் தெளிவுற அறியமுடிகிறது.

8. திருவண்வண்டூரும் ஆழ்வாரின் இறைநெறியும்

நம்மாழ்வார் பராங்குச நாயகியாகி, நாயகனான திருவண்வண்டூர் இறைவனிடம் தூதுவிடுகிறார். முதலில் குருகினங்களைத் தூதுவிடுகிறார். இவ்வாறு குருகினங்களைத் தூதுவிடுவதனை,

“வைகல்பூங் கழிவாய் வந்து
மேவும் குருகினங்காள்!
செய்கொள் செந்நெல் உயர்திரு
வண்வண் டூருஉறையும்,
கைகொள் சக்கரத் தென்கனி
வாய்ப்பெரு மானைக்கண்டு
கைகள் கூப்பிச் சொல்லீர்
வினையாட்டியேன் காதன்மையே” (திருவாய். 6.1:1)

என்னும் பாசுரத்தில் அறியலாம். முதலில் குருகினங்களைத் தூதுவிட்ட நாயகி பின்பு பறவை கூட்டங்களையும், அன்னப்பறவைகளையும், பூங்குயிலையும், கிளிகளையும், நாகண வாய்ப்புள்ளினங்களையும், வண்புனங்களையும் தூதாக விடுகின்றாள். இவற்றையெல்லாம் தூதாக விடுவதன் காரணம் தன் நிலையினைக் குறித்து நாயகானான இறைவனிடன் சென்று சொல்லிவிட்டு, மீண்டும் இறைவன் எப்படியெல்லாம் இருக்கின்றான் என்பதனையும் நேரில் கண்டு கூறிடவே இவற்றையெல்லாம் தூதாக விடுகின்றார்.

இதன்மூலம் நம்மாழ்வார் இறைவனைப் பற்றி அறிந்துக்கொள்ள தான் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்தும் அவருடைய பக்தியைப் பறைசாற்றுகின்றதனை அறியமுடிகிறது.

9. திருப்புலியூரும் ஆழ்வாரின் இறைநெறியும்

நம்மாழ்வார் தன்னைத் தோழியாக தன்னைப் பாவித்து அன்னையர்க்குக் கூறுவது போன்று பாசுரங்களை அமைத்துப் பாடுகின்றார். அழகிய சோலைகளும், கரும்பும், செந்நெல்லும் சூழ்ந்து செழிப்பாகக் காணப்படும் திருப்புலியூரில் வீற்றிருக்கும் தலைவனைப் பற்றி மட்டுமே எந்நேரமும் பேசுகின்றாள். இதனைத் தவிர வேறு எதனையும் பேசவில்லை என்று அன்னைக்குத் தோழி கூறுகின்றாள். அதுமட்டுமின்றி தான் அணியும் ஆடைகளும், அணிகலன்களும், தன்னையும் குறித்து எந்தக் கவலையும் கொள்ளாமல் தலவனின் நினைப்பில் மூழ்கியிருப்பதாகவும் தோழி கூறுகிறாள்.

இவ்வாறாகப் பதினொரு பாசுரங்களும் ஆழ்வார் தன்னைத் தோழியாகப் பாவித்து பாடக்கூடிய பாசுரங்களாகவே அமைந்து இன்பமளிக்கின்றன. இவ்வாறாக தோழிகூற்றாக அமைத்து ஆழ்வார் இறைவன் மீது கொண்ட இறைநெறி வெளிப்படுவதனை நம்மால் உணரமுடிகிறது.

10. திருக்காட்கரையும் ஆழ்வாரின் இறைநெறியும்

நம்மாழ்வாரால் பாடப்பட்ட அனைத்து திருப்பதிகளுக்கும் அவர் நேரில் செல்லவில்லை என்பதும்; அவற்றில் சில திருப்பதிகளுக்கு மட்டுமே நேரில் சென்றார் என்பதும்; அவர் தனது மனதிலே இறைவனை நிலைநிறுத்தி பாடினார் என்றும் பல்வேறு பாசுரங்களில் பதிவு செய்துள்ளமை அறியலாம். இக்கருத்தினை ந.சுப்புரெட்டியாரும் “உலகம் எங்கும் இறைவன் சந்நதியே என்றும், தம்முடைய நெஞ்சமே இறைவனுக்குச் சிறந்த திருப்பதி என்றும் முடிவு செய்து கொண்டவர் எல்லா திருப்பதிகளையும், எல்லா மூர்த்திகளையும் ஒரே இடத்தில் கண்டார் என்றும் கதை தோன்றியதில் வியப்பில்லை”[32] என்று கூறுகிறார்.

நம்மாழ்வார் திருப்புளியங்குடியில் இருந்த வண்ணமே மற்றித்திருப்பதிகளை நினைத்துப் பாடினார் என்பதற்குக் 'குருபரம்பரைக் கதைகள்' சான்றாக விளங்குகிறது என்று ந.சுப்புரெட்டியார் தம் மலைநாட்டுத்திருப்பதிகள் நூலிலே குறிப்பிட்டுள்ளார். பலசெய்திகளும் ஆழ்வார் திருத்தலங்களுக்கு நேரில் செல்லவில்லை என்பதற்குச் சான்று பகர்கிறது. உதாரணமாகப் பார்த்தோமானால் ஆழ்வாரின் பாசுரங்கள் அனைத்தும் அந்தாதி முறையில் அமைந்திருப்பதினால், அவர் ஒரே இடத்தில் இருந்த வண்ணமே பாடல்கள் பாடினார் என்பது தெரிகிறது. ஆனால் இவை உண்மையா என்பதும் ஆய்வுக்குட்பட்டதே. நம்மாழ்வாருக்குத் திருக்காட்கரைத் தலத்திலே குடியிருக்கும் இறைவனின் அருட் செயல்களையெல்லாம் பார்க்கும் போது தனது நெஞ்சானது உருகிறது என்கிறார். இதனால் ஆசைகள் அளவில்லாமல் பெருக்கெடுத்து ஓடுவதாகவும் ஆழ்வார் கூறியுள்ளார். ஆழ்வாரின் இந்த வாக்கினை நினைக்கும் போது பேராசிரியரின் நெஞ்சும் உருகி நிற்பதாகக் கூறுகிறார்.

"நினைதொறும் சொல்லுந்தொறும்
நெஞ்சிடித்து உகும்
வினைகொள் சீர்பாடிலும்
வேம்எனது ஆருயிர்" **(திருவாய். 9.6:2)**

என்னும் இப்பாசுரத்தில், இறைவனின் அருட் செயல்களையெல்லாம் நினைக்கும் போதும், சொல்லும் போதும் தன் நெஞ்சானது உருகிநிற்கிறது. இதனை ஓதும் போது என் உயிரானது இன்புறும் என்கின்றார் ஆழ்வார். அத்தகைய இறைவனுக்கு எப்படி கைங்கரியம் செய்வது என்று அறியாது ஏக்கம் கொண்டு நிற்கின்றார். இறைவன் அவருடைய அன்பினால் என்னை ஏமாற்றி என் நெஞ்சத்தில் குடிபுகுந்திருக்கின்றான். அத்தகைய இறைவனை நான் அறிவேன் என்கிறார்.

இதன்மூலம் ஆழ்வார் இறைவனின் பெருமைகளைக் கூறி, அவர் தன்னுள் எவ்வாறு வந்தார் என்பதனையும், அத்தகைய தன்மையினைக் கொண்ட

இறைவனுக்கு அடிமை செய்து, அவனுக்குக் கைங்கரியம் மேற்கொள்ள வேண்டும் என்று மனதார எண்ணும் ஆழ்வாரின் இறை உணர்வானது அறியமுடிகிறது.

11. திருமூழிக்களமும் ஆழ்வாரின் இறைநெறியும்

நம்மாழ்வார் தன்னை தலைவியாக நினைத்து, திருமூழிக்களத்து இறைவனைத் தலைவனாக நினைத்து பறவைகளைத் தூதாக அனுப்புகின்றார். முதலில் செங்கால் நாரையைத் தூதாக அனுப்புகின்றார். அவ்வாறு செல்லவிருக்கும் நாரையைப் பார்த்து தலைவி, நாரையே நீ தலைவன் வீற்றிருக்கும் தலத்திற்கு என்னுடைய தூதுவராகச் சென்று, மீண்டும் திரும்பி வந்து என் தலையின் மீது உமது கால்களை வைத்து ஆசிர்வதிப்பாயாக என்று கூறி அனுப்புகின்றார்.

தொடர்ந்து குருகினங்களையும், கொக்கினங்களையும், அழகிய மேகங்களையும், வண்டினங்களையும், குயிலினங்களையும், அன்னப் பறவைகளையும் தலைவி தூதாக விடுகின்றாள்.

இவ்வாறாகத் தலைவி கூற்றாக அமைத்து, திருமூழிக்களத்து இறைவனை நினைந்து நம்மாழ்வார் பிரிவில் வாடுவது போன்று பாசுரங்கள் அமைந்திருக்கின்றன. இதன்மூலம் இறைவன் மீது கொண்ட ஆழ்வாரின் பக்தி நெறியானது புலப்படுகிறது,

12. திருவித்துவக்கோடும் ஆழ்வாரும்

திருவித்துவக்கோட்டு இறைவனை நினைத்து குலசேகராழ்வார் வேண்டுவதாகப் பாசுரங்களை அமைத்து பாடுகின்றார்.

“தருதுயரம் தடாயேல் உன்
சரண்அல்லால் சரணில்லை;
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ்
வித்துவக்கோட்டு அம்மானே!” (பெரு. திரு. 5:1)

என்ற இப்பாசுரத்தில், திருவித்துவக்கோட்டு இறைவனே! நீயே எனக்குப் பல இன்பத்தையும் தந்து, மீண்டும் அந்த இன்பத்தை நீயே மீண்டும் எடுத்துக்கொண்டாலும் சரி; ஆனால் நான் சரணடைய உன் திருவடியைத்தவிர வேறு இடம் இல்லை என்கின்றார். இவ்வாறு கூறும் ஆழ்வார், இதற்கு ஒரு உதாரணமும் கூறுகிறார். பெற்றத் தாயானவள் கோபத்தில் தன் குழந்தையை வெறுத்து வெளியே தள்ளினாலும், பின்பு அக்குழந்தையானது தாயின் அன்பினை நினைத்து அழுது துடிக்கும். அக்குழந்தையின் நிலையே தனது நிலை என்று ஆழ்வார் கூறுகின்றார்.

இவ்வாறாகக் குலசேகராழ்வார் திருவித்துவக்கோட்டு இறைவனைப் பற்றிய பாசுரங்களில், நம் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு உதாரணங்களையும் கூறி, தனக்கு அருள் புரிய வேண்டும் என்னும் ஆழ்வாரின் செயலும், ஆழ்வாரின் பக்தி ஓட்டமும் அறியமுடிகிறது.

13. திருநாவாயும் ஆழ்வாரின் இறைநெறியும்

(நம்மாழ்வாரும் திருநாவாயும்)

நம்மாழ்வார் தன்னைத் தலைவியாகப் பாவித்து, திருநாவாய் இறைவனைத் தலைவனாக பாவித்து, அத்தலைவன் வாழக்கூடிய திருநாவாய்த் தலத்திற்குச் செல்ல நினைத்துப் பாடுகின்றார்.

“நாவாய் உறைகின்ற என்நாராயண நம்பீ!
ஆவா! அடியேன் இவன் என்று அருளயே” **(திருவாய் 9.8:7)**

இப்பாசுரத்தில், திருநாவாய் என்னும் திருப்பதியில் வாழும் தலைவனே, தன்னைத் தரிசனம் செய்ய எனக்கு அருள்வாயாக என்று வேண்டுகிறார். பல தீயவினைகளைக் கொண்டுள்ள அடியேனுக்கு உன்னைச் சேவிக்கும் வாய்ப்பு உண்டோ என்று வினவும் ஆழ்வார்; அத்தகைய இறைவனைத் தம் சிந்தையில் வைத்து வணங்கினாலே தம் தீயவினைகள் அனைத்தும் விலகிவிடும் என்றும் கூறுகின்றார்.

நம்மாழ்வார் திருநாவாய்த் தலத்தின் சிறப்புகளைப்பற்றிக் கூறி அங்கு வாழும் இறைவனின் புகழினையும் உரைத்து, தானும் அத்தலத்தை அடைய நினைக்கும் ஆழ்வாரின் பக்திநெறி நம்மையும் மெய்சிலிர்க்க வைக்கிறது.

(திருமங்கையாழ்வாரும் திருநாவாயும்)

திருமங்கையாழ்வார் திருநாவாய்த் தலத்தில் வீற்றிருக்கும் இறைவனை திருநறையூர் என்னும் தலத்திலும் கண்டதாகக் கூறிகின்றார். மேலும் இறைவனை திருக்கோட்டியூரில் வைத்து கண்டேன், அவனை திருநாவாய்த் தலத்திற்க்கும் சென்று காண்பேன் என்கின்றார். இதில் இறைவனை எங்காவது எப்படியும் காணவேண்டும் என்று நினைக்கும் இறை நெறியினை அறியலாம்.

தொகுப்புரை

- ❖ சமயம் என்பது இறைவனை அடைவதற்கான ஒரு கருவியாய் விளங்குகிறது.
- ❖ பக்தி, பத்தி ஆகிய இரண்டு சொற்களுக்கும் ஒரே பொருண்மை என்பதனை அறிய முடிகிறது.
- ❖ திருமாலை வழிபடுபவர்கள் மேற்கொள்ளும் பக்திநெறியினை அட்டவணைப் படுத்தி காட்டப்பட்டுள்ளது. பக்தியின் நிலைகளையும் வகைப்படுத்தி காட்டப்படுள்ளது.
- ❖ ஆழ்வார்கள் வரலாறு குறித்து விளக்கப்பட்டுள்ளது.
- ❖ மலைநாட்டு திருப்பதிகளை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள் எத்தனைபேர் எனபதும், ஆழ்வார்களின் இறைநெறியினை குறித்து ஆயப்பட்டுள்ளது.
- ❖ பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வாரே அதிக பாசுரங்களை பாடியுள்ளார். அதற்கு அடுத்தபடியாக திருமங்கையாழ்வார் அதிக பாசுரங்களைப் பாடியுள்ளார். நம்மாழ்வார் அதிக பாசுரங்களைப் பாடியிருப்பினும், திருமங்கையாழ்வாரே அதிக திவ்விய தேசங்களைப் பாடியுள்ளார் என்பது ஆய்வில் அறிய முடிகிறது.
- ❖ நம்மாழ்வார் திருப்புளியங்குடி என்னும் தலத்தில் இருந்தவண்ணம் மற்ற திவ்விய தேசங்களை நினைத்து பாடியுள்ளார் என்பதும் பல பாசுரங்களின் வழியே அறியலாம்.
- ❖ நம்மாழ்வார் தன்னை தலைவியால பாவித்து இறைவனை தலைவனாக பாவித்து அதிக பாசுரங்களைப் பாடி தனது பக்தி திறத்தினை வெளிப்படுத்தி காட்டியுள்ளார். மேலும் பல கூற்று நிலைகளை அமைத்து இறைவனை புகழ்ந்தும் பாடியுள்ளர்
- ❖ இறைவனுக்கு கைங்கரியம் செய்ய வேண்டும் என்று அதிக பாசுரங்களில் ஆழ்வார்கள் உணர்த்தி சென்றுள்ளனர்.

- சோழநாடு, பாண்டியநாடு, மலைநாடு என்பது போல நெஞ்சநாடு என்ற ஒரு நாடு இருக்கிறது என்று நம்மாழ்வாரின் பாசுர வரிகளை உணர்ந்து ந.சுப்புரெட்டியார் கூறியுள்ளார்.
- ஆழ்வார்கள் இறைவனிடம் குருகினங்களையும், பறவை கூட்டங்களையும், பூங்குயிலையும், கிளிகளையும், அன்னப்பறவைகளையும், கொக்கினங்களையும், அழகிய மேகங்களையும், வண்டினங்களையும் தூதாக விட்ட செய்தானது அறியப்படுகிறது.
- இறைவனின் புகழினை எவ்வாறெல்லாம் ஆழ்வார்கள் தங்கள்பாசு ரவரிகளில் வெளிப்படுத்துகிறார்கள் என்பதும், இறைவனுக்கு எவ்வாறெல்லாம் கைங்கரியம் செய்ய வேண்டும் என்பதும் பற்றி அறிய இவ்வியல் ஆராயப்படுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. ப.அருணாசலம், பக்தி இலக்கியம், ப. 127
2. மேலது., ப. 144
3. ந.சுப்புரெடியார், பரகாலன் பைந்தமிழ், ப. 523
4. மேலது., ப. 524
5. ப.அருணாசலம்,பக்தி இலக்கியம், ப. 142
6. ஸ்வாமி, ஸ்ரீ எம்பெருமான் தரிசனம், ப. 1
7. இரா.தண்டாயுதம், சமய இலக்கிய விளக்கம், ப. 12
8. பா.பொன்னி, ஆழ்வார்கள் ஆரா அமுதம், ப. 25
9. ந.சுப்புரெட்டியார், சில நோக்கில் நாலாயிரம், ப. 337
10. டி.சி.பார்த்தசாரதி அய்யங்கார், நாலாயிர திவ்விய பிரபந்தம், ப. 8
11. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ தர்சனர் 1008(பாகம்-8), ப. 85
12. தேவராஜன், வைணவ திவ்விய தேசங்கள் 108(பாகம்-2),ப. 6
13. ப.அருணாசலம், பக்தி இலக்கியம், ப. 98
14. டாக்டர் துரை இராசாராம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ப. 430
15. வ.த.இராம சுப்பிரமணியம், நாலாயிர திவ்விய பிரபந்தம், ப. 7
16. ச.முருகன், வைணவ வேதம், ப. 222
17. ப.அருணாசலம், வைணவ சமயம், ப. 66
18. மாருதிதாசன், முமுட்சுப்படி, ப. 167
19. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 5
20. பா.பொன்னி, ஆழ்வார்கள் ஆரா அமுது, ப. 92
21. பா.அருணாசலம், வைணவ சமயம், ப. 54
22. ந.சுப்புரெட்டியார், முக்திநெறி, ப. 49
23. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 36
24. மேலது., ப. 39

25. மேலது., ப. 58
26. மேலது., ப. 59
27. மேலது., ப. 60
28. மேலது., ப. 79
29. மேலது., ப. 81
30. மேலது., ப. 95
31. நாராயண வேலுப்பிள்ளை, நாலாயிர திவ்விய பிரபந்தம், ப. 357
32. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 164

இயல் - 4

ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் வைணவத் தத்துவங்கள்

தத்துவம் என்றாலே நம் நினைவுக்கு எட்டுவது உண்மை என்பதே ஆகும். ஒவ்வொரு சமயங்களும் தங்களுடைய சமயங்கள் மட்டுமே முதன்மையானவை என்று காட்டிக்கொள்ளும் முனைப்போடு நடந்துக்கொண்டிருக்கும் போது உண்மையை மட்டும் பிரதிபலிக்கக்கூடிய சமயங்களும் இருந்தன. சமயமானது மனிதனை நல்வழிப்படுத்தும் உபகரணமாகவும் விளங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட சமயத்தில் இறைவனை நல்வழியில் எவ்வாறெல்லாம் அடையலாம் என்பதனைச் சில வரையறைகளை உருவாக்கி அதன்வழியே நடக்க முயற்சிக்க வேண்டும். இவ்வாறு உருவாக்கும் வரையறைகளை தத்துவங்கள் என்று வழங்குகின்றோம். பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரும் வைணவ சமயக் கருத்துகளைத் தத்துவங்களாகத் தம் படைப்புகளில் கூறியுள்ளார்.

ந.சுப்புரெட்டியார் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் ஒவ்வொரு திருத்தலத்தின் சிறப்பையும், அத்தலத்தின் வரலாறுகளையும், கோயில் அமைப்பு முறைகளையும், ஆழ்வார்களின் பக்தி திறத்தினையும் பற்றி கூறுவதற்கு முன்னர், ஆழ்வார்கள் கூறும் வைணவ தத்துவங்களை முன்வைத்தே நூலினை நகர்த்திச் செல்கிறார். இவ்வாறு ஆழ்வார்கள் கூறும் தத்துவங்களையும்,வைணவ நம்பிக்கைகளையும் **"ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் வைணவத் தத்துவங்கள்"**என்னும் இவ்வியலில் ஆராயப்படுகிறது.

வைணவ தத்துவங்கள்

வைணவம் தென்னாட்டில் தமிழ் மண்ணில் தொன்நெடுங்காலமாக வளர்ந்து வந்திருக்கிறது. இதனை மெய்பிக்கும் வகையிலே சங்க இலக்கியங்களும், பிற வரலாற்று ஆதாரங்களும் தமிழகத்தில் வைணவத்தின் தொன்மைக்குச் சான்றாக

விளங்குகிறது. வடமொழியில் உள்ள தேசங்களில் உபநிடதங்களிலும் சூத்திரங்களாகச் சொல்லப்பட்டுள்ள வைணவத் தத்துவங்களையும் வாழ்நெறிகளையும் வழிபாட்டு முறைகளையும் வடமொழி அறியாத தமிழர் அறிந்து பின்பற்றி உயர்வும் நலமும் பெறும் நோக்கோடு தமிழில் இன்னிசைப் பாக்களாகவும் இயற்பாவாகவும் ஆக்கி பண் அமைத்து பாடியும் ஆடியும் வைணவம் வளர்த்த பெருமை தமிழ் ஆழ்வார்களையே சாரும். ஆழ்வார்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் பின்னாளில் தொகுக்கப்பட்ட பாடல்களைப் பாடி வைணவத்தை மட்டுமின்றி தமிழ் இலக்கியக் கலைவளத்தையும் வளர்த்த சிறப்பு வைணவத்திற்கு அப்பால் தமிழ்கூறும் நல்லுலகம் கொண்டாடுகிறது.

“பாரத நாட்டு சமய – தத்துவ சிந்தனையாளரில் விசிஷ்டாத்வைத தத்துவத்தை உருவாக்கி வைணவத்துக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் பாரதத்துக்கும் புத்துயிர் ஊட்டிய தமிழ்ப் பெருந்தகை ராமானுசர் ஒப்பில்லாத இடம் பெற்று ஒளிர்கிறார். இராமானுசர் விசிஷ்டாத்வைதக் கொள்கையை உருவாக்குவதற்கு ஆழ்வார்களில் முதன்மையானவராக, ‘வேதம் தமிழ் செய்த மாறன்’ என்று சான்றோர் போற்றும் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியே வழிகாட்டுவதாகக் கொள்வர்”[1].

படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களில் நடுவணதாகக் காத்தல் தொழில் புரியும் இறைவன் திருமால். அத்தகைய இறைவனைப் பக்தி செய்து, வழிபட்டு, சரணடைந்து விடுதலை பெற முடியும் என்ற வைணவக் கொள்கைகளைப் பாடிய ஆழ்வார்கள் அந்தண, அரச, தீண்டத்தகாத மற்றும் பிறக்குலங்களிலிருந்து தோன்றினார்கள். பக்தி செலுத்துவதற்கும், வழிபடுவதற்கும், சரணடைவதற்கும் சாதி, குலம், செல்வம், ஆண் – பெண் பேதங்கள் எதுவும் தடையாக இருக்க முடியாது என்று எடுத்துரைத்தவர்கள் அவர்களே.

பக்தி இலக்கியங்களைத் தோத்திர நூல்கள், சாத்திர நூல்கள் என இருவகையாகப் பகுத்து கூறுலாம். சாத்திர நூல்கள் தத்துவங்களை விளக்குவதற்கும், தோத்திர நூல்கள் இறைவனை புகழ்ந்து பாடுவதாகவும் அமைந்துள்ளது. சாத்திர நூல்களில் உள்ள தத்துவங்களைத் தனியே கோவையாக விளக்க முடியும். தோத்திர நூல்களில் இறைவனின் புகழைப் பக்தி சுவை கமழ பாடப்படுபவை; இவற்றில் உள்ள தத்துவக் கருத்துக்களைக் கோவையாக அமைத்துக்கூற இயலாது.

“இவ்வுலகில் மூன்று தத்துவங்கள்(Priniciples) உள்ளன. இது வேதம், உபநிடதம், கீதைகள் இவற்றைச் சார்ந்த சாத்திரங்கள், ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளது”[2]. இவற்றைப் பற்றி அறிந்துகொள்ளும் அறிவே தத்துவ ஞானமாகும்.

“வைணவப் பெரியோர்கள், தங்கள் நெறியினை 1)தத்துவம், 2)இதம் 3)புருஷார்த்தம் என மூன்று நிலைகளில் விளக்குவர். எது பொருள்? என்ற வினாவினை எழுப்பித் தத்துவத்தை ஆராய்வர். எது நெறி? என்ற வினாவினை எழுப்பி, ‘இதத்தை’ விளக்குவர். இவற்றுள் தத்துவம் என்பதனை, ஈசுவரன்(இறைவன்), சித்து(உயிர்கள்), அசித்து(உலகம்) என்ற பாகுபாட்டிலும்; இதம் என்பதனைக் கருமயோகம், ஞானயோகம், பிரபத்தி யோகம், ஆசாரிய அபிமானம் என வகைப்படுத்தியும்; புருஷார்த்தத்தைப் பகவத் கைங்கர்யம், பாகவத கைங்கர்யம் எனப் பிரித்தும் விளக்குவர். ‘தத்துவம்’ என்பதனைத் திருமாலாகக் கொள்வதும் உண்டு. ‘திருமகள் கொழுநனான நாராயணனே மிகவுயர்ந்த தெய்வம்’ என்னும் தத்துவத்தையும் அப்பரமன் பால் செய்யும் பத்தி பிரபத்திகளே ‘உபாயம்’ என்னும் இதத்தையும் அப்பரமானை அனுபவித்து அடிமை செய்து ஊகிப்பதே மேலான சிரேயஸ் என்னும் புருஷார்த்தத்தையும் தன்னுள்ளே கொண்டுள்ளது விசிட்டத்துவித மதம் என எழுதுவர்”[3]. ஆகவே வைணவ சமயத்தில் உள்ள கொள்கைகளைத் தத்துவம், இதம், புருஷாத்திரம் என்று சுருக்கமாகக் கூறுவதனை அறிய முடிகிறது.

1. திருவண்பரிசாரத்துத் திருவாழ்மார்பன் - தத்துவம்

"உலகமெல்லாம் இறைவனுக்கு உடல்" என்ற கொள்கை வைணவ சமயத்தில் மிகவும்முக்கியமான ஒன்றாகும். இறைவனையும் உலகத்தையும் தனித்தனியாகப் பிரித்தல் என்பது இயலாது. இக்கொள்கையை மெய்ப்பிக்கும் வகையில்,

"அடியோ மோடும் நின்னொடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு". (திருப்பல். 2)

என்னும் இப்பாசுரமானது, இறைவன் ஆன்மாவாகவும் நாம் அவனுக்கு உடலாகவும் இருக்கக்கூடிய நிலையானது என்றென்றும் உண்டு என்பதனை வைணவப் பெருமக்கள் கூறுவர். ஆகையாலே ந.சுப்புரெட்டியாரும் இக்கருத்தினை உணர்ந்து கொண்டு "இவ்வுலகத்திற்குச் செய்யும் தொண்டு உண்மையில் ஆண்டவனுக்குச் செய்யக்கூடிய தொண்டாகும்"[4]என்று கூறுகிறார்.

இறைவனின் உடலாகிய உலகிற்குச் செய்யும் தொண்டு; உலகிற்கு நன்மை செய்வதுடன் அதனை உடலாக உடைய இறைவனுக்கும் நன்மையாக அமையும் என்ற உள்ளார்ந்த பொருளை மனதில் கொண்டு திருமழிசையாழ்வாரும்,

"அன்பில் அன்றி ஆழியானை
யாவர் காண வல்லரே" (திருச்.விருத்.76)

என்னும் பாசுர வரிகளில் படைத்துள்ளார்.ந.சுப்புரெட்டியாரும் இக்கருத்துடன் "நம்மிடையே வாழ்ந்த காந்தியடிகள் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த மேலான நெறியும் இதுவே"[5] என்று ஒப்பிட்டு காட்டுகிறார். இக்கருத்தினைத் தாயுமானவரும்,

"அன்பர்பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்(து)
எய்தும் பராபரமே" (தாயு.பாட.–பரா.கண். - 155)

என்னும் இப்பாடல் வரிகள் மெய்ப்பிக்கிறது.

2. திருவட்டாற்று எம்பெருமான் - தத்துவம்

வைணவ சமயத் தத்துவப்படி இறைவனுக்கு உருவம் உண்டு. இதனைத் ‘திவ்வியமங்கள விக்கிரகம்’ என்று அழைக்கின்றனர். இறைவனின் உருவத்தைப் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்று ஐந்து வகைகளில் வருணிக்கப்படுகிறார். “வைணவச் சமயத்தில் இறைவனின் ஐந்து நிலைகளுக்கு நீரின் ஐந்து நிலைகளை உவமையாகக் கூறுவர்.

1) **பரத்துவம்(வியாபகம்) –** (இறைவன் எங்கும் நிறைந்திருந்து அருள்பாலித்தல்). அனைவரிடத்திலும் பொதுவாக விளங்கும் மழை நீர் போன்றது; திருநாடு என்று புகழப்படும் பரமபதத்தில் திருமாமணி மண்டபத்தில் சீரிய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருத்தல்.
2) **வியூகம்(அணிவகுத்தல்) –** (அணிவகுத்து நின்று அருள்பாலித்தல்). திருப்பாற்கடல் போன்றது. பார்க்கடலுள் பையத்துயின்ற பரமன் நிலை வியூகம் ஆகும். கேசவன் தொடங்கி தாமோதரன் ஈறாக இருக்கும் மூர்த்திகள் ஸ்தானம் வியூகம்.(கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், டிஷிகேசவன், பத்மநாபன், தாமோதரன்)
3) **விபவம்(ஆற்று நீர் போன்றவை) –** (மனித உருவில் காட்சியளித்தல்). வானவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போதெல்லாம் பகவான் பல்வேறு அவதாரங்கள் எடுத்து அவர்களின் துன்பங்களைக் களைந்து அவர்களைக் காப்பாற்றுகிறார். துஷ்டர்களை வதைத்து சாதுக்களைப் பரிபாலித்து, பல வைபவம் நிறைந்த செயல்களைச் செய்ததாலே விபயம் எனப் பெயர் பெற்றது.
4) **அந்தர்யாமித்துவம்(அருவநிலை) –** (மறைந்திருந்து அருள் பாலித்தல்). பூமிக்குள்மறைந்திருக்கும் நீரைப்போன்றது. பகவான் எங்கும்

நிறைந்திருக்கிறார். பிரம்மதேவன் தொடங்கி ஈ, எறும்புவரை அனைத்திலும் உயிருக்கு உயிராய் இருந்து செயலாற்றுகிறார்.

5) **அர்ச்சாவதாரம்(குளத்து நீர்) –** (சிலை வடிவம்). பகவானுடைய ஐந்து வடிவங்களில் அர்ச்சாவதாரமே தலைசிறந்தது. அகில உலகத்திலும் வழிபாடு என்பது ஆர்ச்சாவதாரத்தில்தான் இருக்கிறது. புண்ணியத்தலங்கள் பலவற்றிலும் பகவான் எழுந்தருளியிருக்கும்நிலை அர்ச்சவதாரமாகும். இறைவனின் உருவ வழிபாட்டால்தான் நமக்குப் பக்தி செழிக்கும். எம்பெருமானுடைய உருவத்தை மனதில் நினைத்து, அவனைத் தியானித்து அவனுடைய அருளைப் பெறுவது அர்ச்சாவதாரத்தில்தான்”[6]

இந்த ஐந்து நிலைகளில் எழுந்தருளியிருக்கும் வடிவங்களில் “அர்ச்சாவதாரத்தில் ஏனைய நிலைகளில் அநுபவிக்கத்தக்கனவான குணங்கள் யாவும் நிறைந்திருக்கும் என்பது வைணவர்களின் நம்பிக்கை”[7] என்பதைப் பேராசிரியர் இந்நூலில் குறிப்பிட்டு காட்டுகிறார். இக்கருத்தினை மெய்ப்பிக்கும் வகையிலே ஆழ்வார்களும் அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு 108 திவ்வியத் தேசங்களிலும் உறைந்திருக்கும் இறைவனை நாலாயிரம் பாசுரங்களில் அருளியுள்ளனர்.

3. அனந்தபுரத்து அண்ணலார் - தத்துவம்

“வைணவ சமயத்தில் முடிந்த முடிவான குறிக்கோள் இறைவனுக்கு அடிமை செய்வதாகும்”[8]. இதற்கு விளக்கம்கூறும் பேராசிரியர் ஏதோ ஒரு விதத்தில் இறைவனுக்கு கைங்கரியம் செய்ய வேண்டும் என்பதாகும்.கைங்கரியம் செய்யவேண்டும் என்றே எல்லா ஆழ்வார்களும் வற்புறுத்தியுள்ளனர். “வைணவப் பெரியார்கள் கருதுவது என்னவெனில், முக்தி அடைந்த பிறகு பரமபதத்தில் எம்பெருமானுக்குச் செய்யும் தொண்டினை அர்ச்சவதாரத்தில் செய்யும் வாய்ப்பாகப் பெறுவதைக் கிடைத்தற்கரிய பேறாகக் கொள்வர்”[9]. இதன்வழியே ந.சுப்புரெட்டியாரும் இக்கருத்தினை உணர்ந்தே இவ்வுலகில் அனைவருக்கும்

தன்னால் இயன்ற தொண்டினைச் செய்ய வேண்டும் என்று தன் படைப்பில் வெளிக்காட்டுகிறார்.

4. திருவாறன்விளைத் திருக்குறளப்பன் - தத்துவம்

"வைணவ தத்துவப்படி வைகுந்த நாதனாகிய நாராயணனே முழுமுதற் கடவுள். அவனே எல்லா உலகங்களையும் படைத்தவன். ஒரு காலத்தில் பிரளயத்தில் அழியாமல் காப்பவனும், சில சமயம் தன் திருவயிற்றில் வைத்து புரப்பவனும் அவனே"[10]. ஆகையாலே,இவ்வுலகில் அனைத்தையும் காப்பவனான திருமாலைவைணவ மக்கள் முதன்மைக் கடவுளாக வைத்து வழிபடுகின்றனர்.

இக்காரணத்தினால் நம்மாழ்வார் இறைவனை அடையவேண்டும் என்ற உணர்வு தோன்றி,

"எங்கு வந்து உறுகோ? என்னை ஆள் வானே!
ஏழுல கங்களும் நீயே;
அங்கு அவர்க்கு அமைந்த தெய்வங்களும் நீயே;
அவற்றுஅவை கருமமும் நீயே;
பொங்கிய புறம்பால் பொருள்உள வேனும்;
அவையுமோ நீ; இன்னே ஆனால்,
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே;
வான்புலம் இறந்ததும் நீயே. (திருவய். 8.1:6)

என்னை ஆள்கின்றவளே! ஏழுலகங்களும் நீ இட்ட வழக்கு; அந்த உலகங்களிலே அவரவர்களுக்குச் சமைத்து வைத்த தெய்வங்களும் நீ இட்ட வழக்கு; அந்த அந்தத் தெய்வங்களுக்குச் செய்யப்படுகின்ற ஆராதன உருவமாக செயல்களும் நீ இட்ட வழக்கு; ஒன்றிற்கு ஒன்று விரிந்ததாய் அண்டத்துக்குப் புறம்பாய் அதற்குக் காரணமாகவுள்ள மகத்து முதலான தத்துவங்களும் நீ இட்ட வழக்கு; காரண நிலையில் சுருங்கிக் கிடக்கின்ற சித்து, அசித்துகளும் நீ இட்ட வழக்கு; இங்ஙனம் எல்லாமாய் நிற்கும் உன்னை அடியேன் எவ்வாறு வந்தடைவேன். இவ்வாறு ஆழ்வார் கூறும் கருத்து ஆராயத்தக்கது.

5. திருச்செங்குன்றூர்அப்பன் - தத்துவம்

“பரமபத நாதனாகிய நாராயணன் இவ்வொருவர் உள்ளத்திலும் அந்தர்யாமியாய் இருந்து கொண்டு அவருடைய செயல்கட்கும் ஏவுபவனாயிருக்கின்றான் என்பது வைணவ சமயக்கோட்பாடு”[11]. இக்கருத்தினை எல்லா ஆழ்வார்களுமே தங்கள் பாசுரங்களில் வலியுறுத்தியுள்ளனர். இந்நிலையில் இறைவனானவன், நாம் நன்மை செய்வதன் விளைவாகச் சொர்க்கத்திற்கும், தீயவை செய்வதன் விளைவாகச் நரகத்திற்கும், நல்வினை மற்றும் தீவினை செய்வதன் காரணமாக மீண்டும் பிறவியெடுத்தல் ஆகிய அனைத்து நிலைகளிலுமே நமக்குத் துணையாய் இருக்கின்றான். மேலும், இறைவன் அழகையே தனது திருமேனியாகக் கொண்டுள்ளார். இத்திருமேனியைக் காண்போர்க்குத் தியானம் பிறக்க உறுதுணையாக இருக்கின்றான். அதுமட்டுமின்றி, அனைவரையும் காப்பவனாய், நமது இதயத்தில் குடிகொண்டிருப்பவனாய், பெரிய பிராட்டியாருடன் இருக்கின்றான் என்று வைணவ நூல்கள் கூறுகின்றன.

அந்தயாமித்துவத்தைத் திருமழிசையாழ்வார் மிக அழகாகக் குறிப்பிடுகிறார். “காஞ்சியில் உள்ள உலகளந்த பெருமாள் கோயிலின் வெளிப்பிரகாரச் சன்னதிகளாக ஊரகம், பாரகம் விளங்குகிறது. வெஃகாணை என்பது, திருவெஃகா ஆகும்; திருவெஃகா காஞ்சியிலுள்ள சொன்ன வண்ணம் செய்த சன்னதி. இறைவனுக்கு நாம் செய்யும் தொண்டினை ஏற்றுக்கொள்வதற்காக ஊரகத்தில் நின்று பார்ப்பதாகவும், பாடகத்தில் வீற்றிருந்து பார்ப்பதாகவும், திருவெஃகாவில் சாய்ந்து பார்க்கின்றதாகவும் கருதுகின்றார் ஆழ்வார். தாம் ஞானப்பிறப்பை அடைவதற்கு முன்னர் இவ்வாறு காட்சி தந்த இறைவன், அதனை அடைந்த பிறகு இறைவனின் இந்தச் செயல்களையெல்லாம் இதயத்தில் வைத்திருப்பதாக ஆழ்வார் கூறுகின்றார்”. இதனை,

"நின்றதுஎந்தை ஊராகத்து,
இருந்ததுஎந்தைபாடகத்து
அன்றுவெஃக ணைக்கிடந்த(து)
என்னிலாத முன்னெலாம்,
அன்று நான்பி றந்திலேன்பி
றந்ததன்பின்ம றந்திலேன்,
நின்றதும் இருந்த ததும்கி
டந்ததுஎன் நெஞ்சுளே" (திருச்.விருத். 64)

என்னும் பாசுரத்தில் ஆராய்ந்துணரலாம்.

விஷ்ணுவை இடைவிடாமல் எந்நேரமும் தம்மனதில் நிலைநிறுத்துவதால் 'விஷ்ணு சித்தர்' என்ற பெயருடன் விளங்குபவர் பெரியாழ்வார். மேற்சொன்ன கருத்தையே தம் உள்ளம் கவர்ந்து கூறுவதாக அமைந்த பாசுரத்தினைக் காணலாம்.

"அரவத்து அமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப்
பள்ளிகொள் கின்ற பிரான்" (பெரி.திரு. 5.2,10)

ஆழ்வார்களுள் நாயகராக விளங்குபவர் நம்மாழ்வார். நம்மாழ்வாரும் அந்தர்யாமித்துவத்தைப் பல இடங்களில் படைத்துக் காட்டியுள்ளார். ஆழ்வார்களின் வழியே நாமும் அந்தர்யாமித்துவத்துவம் வடிவில் இருக்கும் இறைவனுக்குத் தொண்டுசெய்து அவரை நம் இதயத்தில் வைத்து நிலைநிறுத்தி வைத்திருக்க வேண்டும்.

6. திருக்கடித்தானத்து உறை திருமால் – தத்துவம்

இறைவன் வீற்றிருக்கும் நிலைகள் ஐந்து நிலைகளில் அமைந்திருக்கிறார் என்பது வைணவ சமயத் தத்துவம். இறைவன் ஐந்து நிலைகளில் இருப்பினும் எந்தநிலையிலும் அவரது ஆற்றல் குறைவதில்லை.இத்தகைய ஆற்றல் பெற்ற இறைவனை ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் அவருடைய ஐந்து நிலைகளில்

ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிலைகள் கலந்து வருவதைக் காணலாம்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில் திருமங்கையாழ்வாரின் பாசுர வரிகளைப் பார்க்கலாம்,

"வேங்க டத்துஅரி யைப்பரி கீறியை
வெண்ணெய் உண்டுஉர லினிடை யாப்புண்ட
தீங்க ரும்பினை, தேனைநன் பாலினை
அன்றி என்மனம் சிந்தைசெய் யாதே"   (பெரிய. திரு.7.3:6)

இதன்பொருள், 'வேங்கடத்து அரி' என்ற தொடர் திருவேங்கடமுடையானைக் குறிக்கிறது; இது அர்ச்சாவதார நிலை. 'பரிகீறியை' என்பது குதிரை வடிவமாக வந்த சேசி என்ற அரக்கனைக் கொன்ற எம்பெருமான்; இது விபவதார நிலை. 'உரலிடை யாப்புண்ட தீங்கரும்பு' என்பது யசோதையால் உரலிடைக் கட்டுண்ட பாலகிருட்டிணனைக் குறிக்கிறது; இதுவும் விபவதார நிலையையே குறிக்கிறது. எனவே இப்பாசுரத்தில் இறைவனின் ஐந்து நிலைகளிலே இரண்டு நிலைகளான அர்ச்சாவதார நிலையும், விபவதார நிலையும் கலந்து வந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

இறைவனின் ஐந்து நிலைகளில் இரண்டு நிலைகள் ஒரே பாசுரத்தில் பயின்று வந்தமையைத் திருமங்கையாழ்வாரின் படைப்பில் கண்டோம். ஆனால் ஐந்து நிலைகளிலும் ஒருசேர வந்துள்ளமையைப் பேயாழ்வாரின் படைப்பில் காணலாம்.

"பாற்கடலும் வேங்கடமும்
பாம்பும் பனிவிசும்பும்,
நூற்கடலும் நுண் நூல
தாமேரைமேல், - பாற்பட்(டு)
இருந்தார் மனமும்
இடமாகக் கொண்டான்
குருந்துஒசித்த கோபால
கன்"   (மூன்றாம். திரு. 32)

இப்பாசுரத்தில் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை ஆகிய ஐந்து நிலைகளுமே வருகிறது. குருந்த மரத்தை முறித்தெடுத்த கண்ணன் என்பது விபவாவதார நிலையைக்குறிக்கிறது. இவனே திருப்பாற்கடலிலும் (வியூகம்), திருவேங்கடத்திலும் (அர்ச்சை), பரமபதத்திலும் (பரத்துவம்), யோகியர் மனத்திலும் (அந்தர்யாமித்துவம்) எழுந்தருளியிருப்பதாகக் கூறியிருப்பதால் எல்லா நிலைகளிலும் இருப்பவன் இறைவன் திருமாலே ஆவர்.

இப்பாசுரங்கள் அனைத்துமே ஒரே கருத்தினை மட்டுமே முன்வைக்கிறது. இறைவன் ஐந்து நிலைகளிலே அமைந்திருப்பினும் அவர் ஒருவரே என்பதாகும். எத்தகைய நிலையில் இறைவன் இருப்பினும் அதாவது ஆற்றலும் அவனது கொடைகளும் என்றுமே குறைவதில்லை என்பதும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

7. திருவல்லவாழ் உறையும் கோனார் – தத்துவம்

“நமது சமய நூல்கள் அன்பைப் ‘பக்தி’ எனவும், காதலைப் ‘பிரேமன்’ எனவும் பிரித்து பேசுகின்றன. பக்தியைக் காட்டிலும் பிரேமமே சிறந்தது. இப்பிரேமன் என்னும் காதல் இலக்கணத்தை வெளியிட எழுந்த இலக்கணங்களும் இலக்கியங்களும் பலப்பல. இத்துணை உயரியதும், தூயதுமான காதல் இவ்வுலக மக்களிடையே நிகழ்தல் அரிதாகும் என்றும், தெய்வத் தன்மை வாய்ந்த நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற சீரியோரிடையேதான் இஃது அரும்பா நிற்கும் என்பது அறிஞர்கள் கருத்து”[12] என்னும் கருத்தினை முன்னிறுத்தி ந.சுப்புரெட்டியார் அன்பு என்பது எவ்வழியிலெல்லாம் வெளிக்கொணரப்படுகிறது என்பதனைக் கூறுகிறார். “பரம்பொருளும் ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான தொடர்புகள் ஏற்பட்டுள்ளன என்று வைணவ தத்துவம் கூறுகிறது”[13].

	இறைவன்	ஆன்மா
1.	தந்தை	மகன்
2.	காப்பவன்(நியாமகன்)	காக்கப்படுபவன்
3.	ஆண்டான்	அடிமை

4.	நாயகன்	நாயகி
5.	அறிபவன்	அறியப்படு பொருள்
6.	உடையவன்	உடைமை
7.	உடல்	உயிர்
8.	தாங்குவோன்(தாரகன்)	தாங்கப்படுபொருள்
9.	நுகர்பவன்	நுகரப்படுபொருள்

இவற்றுள் 'நாயகன் – நாயகி பாவனை' மிகவும் முக்கியமான (தலைவன் – தலைவி உறவு) ஒன்றாகும். நாயகன் – நாயகி என்பது வடமொழி சொற்கள். தலைவன் – தலைவி என்பதே தமிழ் சொற்கள். தலைவன் – தலைவி என்ற சொற்கள் உலகியற் காதலரை உணர்த்துகிறது. ஆனால் நாயகன் – நாயகி என்ற சொற்கள் தெய்வீக காதலரை உணர்த்துவதால் இச்சொற்களையே பயன்படுத்துகின்றனர்.

நாயகன் – நாயகி என்ற தொடர் வைணவர்களிடையே நீண்ட நாட்களாகவே வழக்கில் இருந்து வருகின்றது.இந்த உறவு முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும் சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து வருகின்ற பாடல்களைத் தேவாரத்திலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் காணலாம். புருடோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன்னர் உலகிலுள்ள ஆன்மாக்கள் அனைத்தும் பெண் தன்மையை அடைந்து நிற்கும். எனவே, ஆழ்வார்கள், குறிப்பாக நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பெண் தன்மையை எய்திப் பல திருக்கோயில் மூர்த்திகளைத் தம்காதலால் நுகர்வதை அவரவர்களின் பாசுரங்களில் காணலாம்.

"தண்டகாரண்ய முனிவர்கள் இராமபிரானது பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர் மங்கையர்களாகிக் கண்ணனைக் கூடினர் என்ற வழக்கு ஒன்றிருந்திருக்கிறது"[14]. ஆனால்ஆழ்வார்கள் மறுபிறவிக்குக் காத்திருக்காமல் அப்போதே பெண்மை நிலையை அடைந்து இறைவனாகிய புருடோத்தமனை அடைய காதலிக்கின்றனர்.

நம்மாழ்வார் போன்றவர்களிடத்தில் சில நேரங்களில் ஞானம் தலைதூக்கி நிற்கும்; சில நேரங்களில் காதல் உயர்ந்து நிற்கும். இந்த இரண்டு நிலைகளில் இருந்தும் ஆழ்வார்கள் பாசுரங்களை பாடியுள்ளனர். இதனை,

"ஞானத்தில் தம்பேச்சு;
பிரேமத்தில் பெண்பேச்சு" (ஆசா.ஹிரு. 118)

என்னும் பாடல் வரிகளிகளில் குறிப்பிடப்பட்டிருகிறது. அதாவது ஞான நிலையில் இருக்கும் போது ஆண்மைத் தன்மையிலே நின்று பேசுவர். காதல் நிலையில் இருக்கும் போது பெண் தன்மை அடைந்து பெண் பேச்சாகப் பேசுவர். அந்நேரத்தில், ஆழ்வாருக்குப் 'பராங்குச்சர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கி 'பராங்குச நாயகி' என்ற பெண்மைப்பெயரினைப் பெற்று வழங்கப்படுவர்.

இவ்வாறாக ஆழ்வார்கள் பெண்மை நிலையில் இருந்துக் கொண்டு என்பெருமானை காதலால் ஆட்கொள்ளும் போது அவர்கள் தாய், தோழி, தலைவி என்ற இம்மூவருள் ஒருவருடைய தன்மையிலிருந்துக் கொண்டு கூற்றுக்கள் நிகழ்த்துவர். இதன் காரணமாகப் பாசுரங்களும், தாய் சொல்லுவது போன்ற வடிவம் கொண்டு 'தாய்ப்பாசுரம்' என்றும், தோழி சொல்லுவது போல உருவெடுத்து 'தோழிப் பாசுரம்' என்றும், தலைவி பேசுவது போல வடிவம் கொண்டு 'மகள் பாசுரம்' என்றும் பெயர்களைப் பெற்று அமைந்திருக்கிறது. இங்ஙனம் மூன்று வகையாகக் கூற்றுக்கள் நிகழ்ந்து பாசுரங்கள் வெளிவந்தாலும் பாசுரங்கள் பேசுகின்றவர்கள் ஆழ்வார்களேயாவார்.

இக்கருத்தினை உணர்த்த ந. சுப்புரெட்டியார், ஓர் ஆறானது பல வாய்க்கால்களாகப் பிரிந்தாலும் அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றாகவே இருக்கும் என்பதனை நாம் அறிவோம்; அவ்வாறே, ஆழ்வார்களது சொல்மாலைகள் மூன்று நிலைகளாக வழிந்து புறப்பட்டாலும், அவை ஆழ்வார்களது பாசுரங்களாகவே தலைக்காட்டி நிற்கும் என்று கூறுகின்றார்.

8. திருவண்வண்டூர் தேவாதிதேவன் – தத்துவம்

“வேதாந்தங்களில் குறிப்பிடப்படும் பக்தி ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்கும். ஆழ்வார்கள் இறைவன் மீது கொள்ளும் காமம் ‘பகவத் விஷயகாமம்’ என்று வழங்கப்பெறும். இவ்வாறு இறைவன் மீது இவர்கள் கொள்ளும் காமம் மங்கையர் மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது. இவ்வாறு வேறுபட்டதாயினும் சிற்றின்ப நுகர்ச்சியான காதலுக்குக் கூறப்படும் அகப்பொருள் துறைகள் யாவும் இந்த பகவத் விஷ்யகாமத்திற்கும் கூறப்படும்”[15].

காதல் சுவையில் சிறிதும் பொருத்தமின்றி பக்திச் சுவையின் அடிப்படையிலே பாசுரங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு இருக்கும்போது காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் படைக்கப்படிருப்பதற்குக் காரணம், உடல்நலத்திற்குக் காரணமாகிய வேப்பிலை உருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கள் வெல்லத்தை வெளியில் பூசிக்கொண்டு உண்பது போலவும், கொயினா மாத்திரைகட்கு சர்க்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் திணிப்பது போலவும் சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலைநாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் கூறுவர்.

இவ்வாறு “ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து எம்பெருமானை வேண்டும் பொழுது அவர்களது பாசுரங்கள் தாய்ப் பாசுரமாகவும், தோழிப் பாசுரமாகவும், தலைவிப் பாசுரமாகவும் வடிவம் கொண்டு அமையும் என்பதனை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைப் படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இப்படி மூவகையாகப் பாசுரங்கள் பரிணமித்துச் செல்வதற்குரிய உட்கருத்தினை ஆன்றோர்கள் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர். மூன்று நிலைகளையும் மூன்று பிரஜ்ஞாவஸ்தைகள் என்று குறிப்பிடுவர்”[16]. பிரஜ்ஞாவஸ்தை என்பது மூன்று காலத்தையும் அறியும் அறிவின் நிலை.

முதல் நிலை: ‘ஓம் நம: நாராயணாய’ என்பது மூன்று வைணவ மறைகளுள் முதன்மையானதும் தலைமையானதுமாகும். இம்மூல மந்திரத்தில் பரந்த பொருளை

உட்கொண்டிருக்கிறது. இதில் மூன்று சொற்கள் அடங்கியிருகின்றன. இவற்றுள் ‘ஓம்’ என்னும் சொல்லின் பொருளையே ஏனைய இரண்டு சொற்களும் விரித்து கூறுகின்றன. இந்த இரு சொற்களின் பொருளையே ‘துவயம்’ என்னும் இரண்டாவது மறை விரித்துக்கூறுகிறது. இந்துவயத்தின் பொருளையே ‘சரமசுலோகம்’ என்ற மூன்றாவது மந்திரம் மேலும் விவரிக்கிறது. திருமந்திரத்திலுள்ள மூன்று சொற்களிலும் ‘பிரணவம்’ அறிவுடைய ஆன்மாவின் அடிமைத்தன்மையையும், ஒருவனைப் பிரதானமாகக் கொண்டிருப்பவனின் தன்மையும், ‘நாராயணாய’ என்பது அறிவுடைய ஆன்மா இறைவனுக்குப் புரிய வேண்டிய அடிமைத் தொழிலையும் உணர்த்துகின்றன.

‘ஓம்’ என்பது பிரிந்திருக்கும் நிலையில், அ+உ+ம என்று மூன்று எழுத்துகளாய் உள்ளது. இம்மூன்று எழுத்துகளும் மூன்று சொற்களாக நின்று, மூன்று பொருள்களைத் தருகின்றது. அ – என்னும் எழுத்து, இறைவனைக் குறிக்கிறது. அகரத்தில் ஏறி மறைந்துள்ள வேற்றுமை அடியவனாம் தன்மையை உணர்த்துகிறது; உ – என்பது மற்றவர்க்கு அல்லாமல் இறைவனுக்கே உடைய தன்மையைக் குறிக்கிறது. ம – என்பது சீவனைக் குறிக்கிறது. இவ்வாறு மூன்று எழுத்துகளும் மூன்று பொருளை வெளிப்படுத்துகிறது.

இரண்டாம் நிலை: திருமந்திரத்தின் இரண்டாவது சொல்லாக ‘நம’ விளங்குகிறது. நம என்பதனை ந+ம என்று இரண்டாகப் பிரிக்கலாம். ம – என்பது ‘எனக்கு உருயவன்’ என்பதைக் குறிக்கும். ந – என்பது ‘அல்லன்’ என்னும் எதிர்ப் பொருளைக் குறிக்கும். நம – என்னும் சொல் ‘தனக்குத்தான் உரியன் அல்லன்’ என்ற பொருள் கிடைக்கிறது. ஆகையால் ‘நான் பிறருக்கு (இறைவனுக்கு) உரியவன்’ என்னும் பொருளை உணர்த்தி நிற்கிறது. இப்பொருண்மையினை உணர்ந்த ந.சுப்புரெட்டியார் இதற்கு உதாரணமாகப்,“பெண் பிள்ளையைப் பெற்று வளர்ப்பவள் தாய். அப் பெண் தக்க வயதை அடைந்ததும் பேராண்மைக்கு இருப்பிடமாகவுள்ள தலைவனிடம் கழிபெருங் காதலையுடையவளாகின்றாள்; அவன் இருக்கும் இடத்தைப் போய்ச் சேர வேண்டும் என்று பதறுகின்றாள்;

ஆனால் அவளது பதற்றத்தைத் தடுத்து நிற்கின்றாள் தாய். தலைவனே தலைவி இருக்கும் இடத்திற்கு வரவேண்டும் என்பது நடைபெற வேண்டிய ஒழுங்குமுறை என்றும், அங்ஙனமின்றித் தலைவியே தலைவனிருக்குமிடத்திற்குப் புறப்படுவது குலமரியாதைக்குச் சிறிதும்பொருந்துவதன்று என்றும் நினைக்கின்றாள் தாய்"[17] என்று கூறுகிறார்.

மூன்றாம் நிலை: திருமந்திரத்தில் மூன்றாவது சொல்லாக 'நாராயணாய' விளங்குகிறது. நாராயணாய = நார + அயன + ஆய. ர – என்பதற்கு வடமொழியில் 'அழிவுள்ளது' என்று பொருள். ந – என்பது 'இல்லை' என்று பொருள். இவை இரண்டும் சேர்ந்து 'நர' என்பது 'நார' என்றாகும்போது, 'அழிவில்லாத பொருள்களின் திரள்' என்றாகிறது. 'அயன' என்பதற்குப் "பெருமான் அப்பொருள்களைத் தனக்கு ஆதாரமாக உடையவன்(எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருப்பவன் என்பதும் ஒரு பொருளாம்) என்பதும் வேறு ஒரு பொருளாம்"[18]என்று குறிப்பிடுவர். 'ஆய' என்னும் வேற்றுமையானது, "சோதனன் ஈசுவரனுக்கு எல்லாத் தொண்டுகளையும் புரிய வேண்டும்"[19]என்பதனைத் தெரிவிக்கிறது.

"இம்மூன்று நிலைகளையும் நம்மாழ்வாருக்கு எல்லாக் காலங்களிலும் இருந்தன. இதனால்தான் ஞானநிலைகள் என்று கூறாமல் அனுபவநிலைகள் என்று குறிப்பிடுகின்றார். திருவெட்டெழுத்தின் மூன்று சொற்களாலும் குறிப்பிடப் பெறும் பொருள்களைப்பற்றிய ஞானம் ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தும் இருக்கும் என்பதை உணர்த்தவே இவ்வாறு குறிப்பிடப் பெற்றது"[20] என்று ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

9. திருப்புலியூர் மாயபிரான் – தத்துவம்

வைணவ சமயத்தில் முக்கிய மந்திரமாக மூன்று மந்திரங்களைக் கடைப்பிடிக்கின்றனர். "முக்தியை அடைய விரும்புகின்றவர்கள் மூன்று மந்திரங்களையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்"[21]. அவையாவன, திருமந்திரம்,

துவயம், சரமசுலோகம். இம்மூன்று மந்திரங்களில் மிகவும் முக்கியமானது திருமந்திரமே.

1. திருமந்திரம் – ஓம் நம நாராயணாய.
2. துவயம் – ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே ஸ்ரீமதே நாராயணாய நம.
3. சரமசுலோகம் – பாரதப்போரின் தொடக்கத்தில் கண்ணன் பார்த்தனுக்குச்சாரதியாக இருந்து அருளிய கீதையின் பதினெட்டாம்இயலில் உள்ள வாக்கியங்களாகும்.

"திருமந்திரத்தையே வேதங்கள் விரும்பின என்றும்; விஷ்ணு காயத்ரி, னபித்தரியோபநிடதம், மகோப நிடதம், சூபாலோப நிடதம் ஆகிய நூல்கள் இதனைச் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து இவ்வுண்மையை அறியலாம். அஷ்டாட்சர பிரம வித்யை, கருட புராணம், பாரதம் முதலிய நூல்களும் இம்மந்திரத்தையே போற்றியுரைப்பதனால் முனிவர்களும் இதனையே ஆதரித்தார்கள்"[22].

நாராயணா என்னும் சொல்லையே ஆழ்வார்களும் விரும்பினர் என்பதும் இதன் மூலம் அறியலாம். இறைவனின் சிறப்பினைக் காட்டிலும் அவனைக் குறிக்கும் திருநாமங்களுக்கே சிறப்புகள் அதிகம். காரணம், நாமத்திற்கு உரிய இறைவன் அருகில் இல்லாமல் தூரமாக இருப்பினும்; அவனைப் பற்றிய நாமத்தினைப் பக்தியுடன் சொன்னாலே வேண்டுவன கிடைக்கும்.

10. திருக்காட்கரை அப்பன் – தத்துவம்

இறைவனுடைய அடியார்கள் இறைவனை அனுபவிக்கப் பல்வேறு வழிகளை பயன்படுத்துகின்றனர்.

- சிலர் இறைவனின் திருநாமங்களை சொல்லிச் அனுபவிப்பர்; சகஸ்ர நாம அர்ச்சனை இம்முறையிலிருந்தே தோன்றியதாகக் கருதுகின்றனர்.

- சிலர் இறைவனின் திருக்கல்யாண குணங்களைச் சொல்லிச் சொல்லி அனுபவிப்பர். (எ.கா) “இறைவனுடைய எளிமை குணத்தில் நம்மாழ்வார் ‘எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே’ என்று ஈடுபட்டு அதனால் தன்னையே மறந்து ஆறு மாதம் மோகித்துக் கிடந்தார் என்ற செய்தியை உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்”[23].
- சிலர் இறைவனுடைய வடிவழகை வருணித்துப் பேரின்பம் கொள்வர்.
- சிலர் இறைவன் கோயில் கொண்டுள்ள திவ்விய தேசங்களின் வளங்களையுப் பேசியும், அவ்விடத்தில் அபிமானமுள்ள வனவர்களின் பெருமைகளைப் பேசியும் அனுபவிப்பர்.

11. திருமூழிக்களத்து விளக்கு – தத்துவம்

பின்னானார் வணங்கும் சோதி திருமூழிக்களத்தானாய்! என்று திருமங்கையாழ்வாரால் போற்றிப்புகழப்பெற்றவன் திருமூழிக்களத்து எம்பெருமான். பரத்துவம், வியூகம், அவதாரம், அந்தர்யாமித்துவம், அர்ச்சவதாரம் ஆகிய எம்பெருமானுடைய ஐந்து நிலைகளில் முதல் நான்கிலும் சம்பந்தம் பெறாதவர்கள் ‘பின்னானார்’ என்றுகுறிப்பிடப்படுகிறார்கள். ஏனைய நான்கு நிலைகளிலும் அனுபவிக்கக் கூடிய எல்லாத் திருக்குணங்களும் நிறைந்திருப்பது அர்ச்சவதாரத்தில்தான்.

இந்த அர்ச்சவதாரமானது எக்காலத்தும் அழியாது நின்று எத்தகையோருக்கும் காட்டியளிக்கும். அவ்வாறு நின்று அவர்களுக்கு வேண்டிய அருளைப் பொழிகின்றார். இவ்வுலகில் வீற்றிருக்கும் இறைவன், உலக மக்களைக் காக்கவே எழுந்தருளி இருக்கின்றான் என்பது வைணவ சமயத்தாரின் கொள்கையாகும். பிற சமையத்தினரைக் காட்டிலும் வைணவ சமத்தினர் இறைவனுக்கு உருவம் உண்டு என்பதில் நம்பிக்கை அதிகம்.

12. திருவித்துவக்கோட்டு அம்மான் – தத்துவம்

உளவித் தொழில் செய்பவர்கள் பெரும்பாலும் தாம் உளவு செய்யும் நிலத்திற்கு அருகிலேயே வீடு அமைத்துக் கொண்டு அதில் குடியிருப்பர். அவ்வாறு குடியிருந்து அந்த பயிர்களைத் தங்கள் குழந்தையினைப் போன்று பாதுகாப்பர். இவைதான் உண்மையாக உளவு தொழில் செய்பவர்களின் உண்மையான அறிகுறி. இதனை கருதிதான் வள்ளுவப் பெருந்தகையார்,

“செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்” (குறள் - 1039)

என்று கூறியிருக்கின்றார். நம் நாட்டில் பொதுவாக அதிக அளவில் உழவுத் தொழிலே ஈடுபடுகின்றனர். மலைநாட்டிலும் இந்நிலையைச் சிறப்பாகக் காணலாம். மலைநாட்டில் உள்ள நிலங்களில் பெரும்பாலும் வீடுகள் அமைந்திருக்கும். அங்கு உளவுத் தொழில் அதிக அளவில் நடைபெறுகிறது.

இத்தகைய நிலவுலகில் இறைவன் அனைவரையும் காக்கும் பொருட்டு, “பயிர்த்தலையிலே குடில் அமைத்துக்கொண்டு பயிர்களைப் புரந்து உழவனைப் போலவே இந்நில உலகில் 108 திவ்விய தேசங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து ஆன்மாக்களை உய்விக்கிறான் என்பது வைணவ உலகின் நம்பிக்கை”[23]. இவ்வாறாக ஆன்மா என்னும் பயிர்களைக் காக்கும் இறைவனைப், ‘பக்தி உழவன்’ என்ற பெயரினைச் சூட்டி திருமழிசையாழ்வார் அழைக்கின்றார். இதனை,

“வித்தும் இடவேண்டும்
கொல்லோ விடைஅடர்ந்த
பத்தி உழவன்
பழம் புனத்து” (நான். திரு. 27)

என்னும் பாசுரத்தின் மூலம் அறியலாம். மலைநாட்டுத் திருப்பதிகள் பதிமூன்றும் நீர்வளமும், நிலவளமும் நிறைந்த இடங்களாய் அமைந்து, ‘மாயோன் மேய காடுறை உலகமாகத்’ திகழ்கின்றன.

13. நாவாய் உறையும் நாராயணநம்பி - தத்துவம்

வைணவ சமயத்தின் முடிவான குறிக்கோள் என்னவென்றால் இறைவனுக்கு அடிமை செய்வதாகும். அதிலும் குறிப்பாக இறைவனுக்கு உகப்புக்காகவே செய்வது மிகவும் சிறந்தது என்பது அச்சமயத்தின் சிறந்த கொள்கையாகும்.

தொகுப்புரை

- மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வைணவத் தத்துவங்கள் குறித்து இவ்வியலில் தொகுத்து கூறப்பட்டுள்ளது.
- ந.சுப்புரெட்டியார் வைணவத் தத்துவங்களைக் குறித்து கூறும் கருத்துக்களும் அறிய முடிகிறது.
- வைணவ சமயத்தில் உருவ வழிபாட்டினை முக்கியமாக கடைப்பிடிக்கின்றனர்.
- பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் ஆகிய ஐந்து நிலைகளையும் பற்றி இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.
- வைணவ நம்பிக்கைகள் குறித்தும் இவ்வியலில் அறிய முடிகிறது.
- வைணவ மக்கள் இறைவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்றே நினைக்கின்றனர் என்பது பற்றி இவ்வியல் முழுவதும் அறியமுடிகிறது.
- இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள உறவு முறைகளைக் குறித்து அட்டவணைப் படுத்தி இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.
- திருமந்திரத்தின் வலிமையைக் குறித்தும், அம்மந்திரத்தின் விளக்கங்கள் குறித்தும் இவ்வியலில் நன்கு அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும், ப. 25
2. ஸ்வாமி, ஸ்ரீ எம்பெருமான் தரிசனம், ப. 19
3. அருணாசலம், வைணவ சமயம், ப. 48
4. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 1
5. மேலது., ப. 2
6. எம்.நாராயணவேலுப்பிள்ளை, பன்னிரு ஆழ்வார்களும் அவர்கள் அருளிய பிரபந்தங்களும், ப. 5
7. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 15
8. மேலது., ப. 39
9. மேலது., ப. 40
10. மேலது., ப. 52
11. ஈசுவர பிரகரணம், தத்துவத் திரவியம், ப. 57
12. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 104
13. மேலது., ப. 104
14. மேலது., ப. 105
15. மேலது., ப. 120
16. ஸ்ரீ மணவாளமாமுனிகள், ஆசாரஹிருதயம், ப. 133
17. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 122
18. மாருதிதாசன், முமுட்சுப்படி, ப. 161
19. மேலது., ப. 165
20. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 124
21. ந.சுப்புரெட்டியார், முக்திநெறி, ப. 6
22. ந.சுப்புரெட்டியார், மலைநாட்டுத் திருப்பதிகள், ப. 139
23. மேலது., ப. 159
24. மேலது., ப. 199

முடிவுரை

ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலில் இறைநெறி என்னும் இவ்வாய்வானது ந.சுப்புரெட்டியாரின் படைப்பு ஆளுமையையும், ஆழ்வார்களின் இறை நெறியினையும் வெளிப்படுத்துகிறது. வைணவ இலக்கியமாகத் திகழக்கூடிய ஆழ்வார்களின் பாசுரங்கள் பண்டையகால தமிழ் மக்களின் பக்தி நிலைகளையும், வழிபாட்டு முறைகளையும், இறை தொண்டினையும், சமயக் கருத்துகளையும் வெளிப்படுத்துகின்றன.

ஆழ்வார்கள் திருமால் குடிக்கொண்டிருக்கும் 108 திவ்விய தேசங்களுக்குச் சென்று மங்களாசாசன பாசுரங்களைப் பாடியுள்ளனர். 108 திருத்தலங்களில் 106 தலங்கள் இம்மண்ணுலகிலும், இரண்டுத் தலங்கள் விண்ணுலகிலும் அமைந்திருக்கிறது. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த தலங்களுக்குப் ந.சுப்புரெட்டியார் நேரில் சென்று அத்தலங்கள் குறித்த புனித நூல்கள்களைப் படைத்து அனைவருக்கும் பயன்படுமாறு படைத்துள்ளார். நேரில் செல்ல இயலாதவர்களுக்கு இந்நூல்களைப் படித்தாலே கோயிலுக்குச் சென்ற அனுபவம் கிட்டும்.

இறைநெறியானது அனைவரிடமும் இருக்க வேண்டிய ஒன்றாகும். ஆழ்வார்கள் தன்னையே இறைவனுக்கு அடிமையாகக் கொண்டவர்கள். அதுமட்டுமின்றி தான் மட்டும் இறைவனை அடைதல் இன்பம் பயக்காது. தன்னோடு மற்றவர்களும் இறைவனை அடைதலே இன்பம் பயக்கும் என்ற ஆழ்வார்களின் பக்தி திறனானது இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது. ஆழ்வார்கள் இறைவனுக்கு எவ்வாறெல்லாம் தொண்டு செய்யலாம் என்று அறிவுறுத்துகின்றனர். இந்தச் செய்திகள் அனைத்தும் ஆழ்வார்கள் பாசுரங்கள் வெளிப்படுத்தியுள்ளமையும் ஆய்வில் வெளிப்படுகின்றன.

வைணவ சமயம் முழுவதும் தத்துவங்களை முதன்மைப் படுத்தி நிற்கின்றன. தத்துவம் என்பதன் விளக்கமான சித்து, அசித்து, ஈசுவரம் ஆகியவைக் குறித்தும் ஈசுவரனுக்கு ஐந்து நிலைகளாகச் சொல்லப்படும் பரத்துவம், வியூகம், விபயம், அந்தர்யாமித்துவம் ஆகியவை குறித்தும் ஆழ்வார்களின் பாசுரங்களில் பயின்று வந்துள்ளமையும் அறிய முடிகிறது. ஆழ்வார்கள் நினைத்த அந்தபொழுதிலே தன்னைப் பெண்ணாகப் பாவித்து பாடக்கூடிய வலிமையைப் பெற்றிருந்தார் என்பதும், இறைவனைத் தலைவனாக நினைத்து ஆழ்வார் தன்னைப் பெண்ணாக நினைத்து பாசுரங்கள் அமைந்திருக்கிறது என்பதும், இறைவனுக்கு ஆழ்வார்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்த வண்ணமே தூது விட்டார் என்பதும் பற்றி அறியமுடிகிறது.

தூது விடுதல் என்பது வைணவ இலக்கியத்திலும் அமைந்திருப்பதற்கு ஆழ்வார்களின் பாடல்களே உதாரணமாக அமைந்திருக்கிறது. ஆழ்வார்கள் இறைவனின் பெருமைகளைப் பாடும் போது வெறுமனே இறைவனை மட்டும் புகழ்ந்து பாடுவது இல்லை. இறைவன் வீற்றிருக்கும் தலத்தின் பெருமைகளையும் சேர்த்தே பாசுரங்களாக அமைத்திருக்கிறார் என்பதனை அறியலாம். ஆழ்வார்கள் கூறியது போன்றே ந.சுப்புரெட்டியார் திருத்தலங்களுக்குச் செல்லும் போது அதன் இயற்கை அமைப்புகளைக் கண்டுகளித்து அதனைத் தன் எழுத்துக்களின் மூலம் நம்மையும் அனுபவிக்கத் தூண்டும் விதத்தில் அமைந்திருக்கிறது என்பதும் இவ்வாய்வில் அறிய முடிகிறது.

வைணவ சமயத்தினை வளர்த்த சான்றோர்களே ஆழ்வார்கள். அத்தகைய ஆழ்வார்கள் வளர்த்த சமயத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து தத்துவங்களும் மனிதனைப் பண்படுத்துவற்கே ஆகும். இவ்வுண்மையை உணர்ந்தோமானால் இம்மண்ணுலகில் நாம் தோற்றம் பெற்றமைக்கான பேறு கிடைத்துவிடும். இறைவனின் நாமத்தினை ஒருமுறை சொன்னாலே அவை ஆயிரம் முறை சொல்வதற்குச் சமம் என்ற உண்மையும், இறைவனின் நாமத்தினை வாயால் சொல்லவில்லையென்றாலும் மனதால் நினைத்தாலே போதுமானது, அவ்வாறு

மனதால் நினைத்தாலே இறைவன் அருள் புரிவான் என்றும் ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் கூறியுள்ளமையை அறிய முடிகிறது.

108 திருப்பதிகளை ஏழு வகைகளாகப் பிரித்து வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றே மலைநாட்டுத் திருப்பதிகள். ஆழ்வார்கள் சென்று பாடிய இத்தலங்களைப் பற்றி நூல் படைத்துள்ள ந.சுப்புரெட்டியார், அத்தலங்கள் அமைந்துள்ள இடங்களைக் குறித்தும் கூறியுள்ளார். இடையிடையே மலைநாட்டின் வளங்களைப் பற்றியும் விளக்கியுள்ளார். திருமால் குடியிருக்கும் அத்தலங்களின் சிறப்புகளை ஆழ்வார்களின் பாசுரங்களோடு பொருத்திப் பார்த்துள்ளார்.

ஒரு ஊரைப் பற்றி கூறும்போது அதன் சிறப்புகளை மட்டும் சொன்னால் போதாது என எண்ணிய ந.சுப்புரெட்டியார் அத்தலத்திற்கு எவ்வாறு செல்லலாம், எங்கு தங்கலாம், எப்போது இறைவனைத் தரிசிக்கலாம் என்ற அனைத்து தரவுகளையும் கூறியுள்ளார். ஆகையால் ந.சுப்புரெட்டியாரின் மலைநாட்டுத் திருப்பதிகள் நூலானது பலருக்கும் திருத்தலப் பயண நூலாகவே அமைந்துள்ளது என்பதும், இந்நூல் ந.சுப்புரெட்டியார் இறைவன் மீது கொண்ட பக்தி வெளிப்பாடானது வெளிப்படுத்தும் நூலாக அமையப்பெற்றுள்ளது என்பது, இந்நூல் வைணவ மக்கள் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகள் குறித்தும் அறிந்து கொள்ள உதவும் ஒரு ஆய்வு பெட்டகமாகவும் அமைந்திருக்கிறது போன்ற பல கருத்துக்களும் இவ்வியலின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

ஆழ்வார்களின் பக்தித் திறனானது பல்வேறு நிலைகளில் வெளிப்படுகிறது. அத்தகைய ஆழ்வார்கள் பல வழி முறைகளைப் பயன்படுத்தி இறைவனுக்குக் கைங்கரியம் செய்துள்ளனர். ஆழ்வார்களின் பாசுரங்களை உணர்ந்த ந.சுப்புரெட்டியாரின் பக்தி உணர்வு படைப்புகளில் சிறந்த உதாரணங்களைக் கொண்டு தெளிவான நடையில், பாமரமக்களுக்கும் எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் அமைந்துள்ளது.

ந.சுப்புரெட்டியார் சைவ சமயத்தினைச் சார்ந்தவராக இருந்த வண்ணம் வைணவ சமயப் படைப்புகளில் சிறந்து விளங்கினார். இவ்வாறு பலநிலைகளிலும் ந.சுப்புரெட்டியாரின் பக்தி நிலை வெளிப்படுகிறது. பலத்துறைகளைச் சார்ந்த நூல்களைப் படைக்கும் ஆற்றல் கொண்டவராக இருப்பினும், இவர் சிறந்த பல சமய நூல்களையும் படைத்துள்ளார்.

இவ்வாறு ந.சுப்புரெட்டியார் பலதுறைகள் சார்ந்து விளங்கு பல்கலைக்கழகம் போன்று பல துறைசார்ந்த நூல்களைப் படைத்திருப்பினும் சமய நூல்கள் இவரின் சமய ஈடுபாட்டினை வெளிக்காட்டுகிறது என்பதே இவ்வாய்வின் முடிவாக அமைகின்றது.

துணைநூற் பட்டியல்

-

1. அறிவுடைநம்பி.ம.சா.,
அபிதா சபாபதி - பக்தி சோலை
கலைஞர் பதிப்பகம்,
19,கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600017

2. அரங்கசாமி. ஜெ - திருமங்கையாழ்வாரின்
பக்திநெறி
ஆர்.ப.பப்ளீசர்ஸ்,
தஞ்சாவூர் – 5
மு.ப. – 2006

3. அருணாச்சலம். ப - பக்தி இலக்கியம்
முல்லை நிலையம்,
தி.நகர், சென்னை-600017
இ.ப-2007

4. அருணாசலம். ப - வைணவ சமயம் (ஓர் அறிமுகம்)
9,பாரதியார் நகர் முதல் தெரு,
தி.நகர்,
சென்னை - 600017

5. இராமசுப்பிரமணியம். வ.த.
(உ.ஆ) - நாலாயிர திவ்வியப்
பிரபந்தம் (தொ-2)
முல்லை நிலையம், 9, பாரதிநகர்,
முதல்தெரு, தி.நகர்,
சென்னை – 600017.
மு.ப. – 2000

6. எதிராஜன் - 108 வைணவ திவ்யதேசம்
ஸ்தல வரலாறு
ஸ்ரீ வைணவ சித்தாந்த நூற்
பதிப்புக் கழகம்
காரைக்குடி

7. கமலக்கண்னன் .இரா.வ(உ.ஆ) - நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
வர்த்தமானன் பதிப்பகம்
தியாகராய நகர்,
சென்னை – 600 017
இ.ப. 2001

8. கீர்த்தி(தொ.ஆ) - பாரதியார் கவிதைகள்
அருணா பப்ளிகேஷன்ஸ்,
சென்னை – 600 049
மூ.ப. - 2011

9. கெம்பு ஆறுமுகம் - ஸ்ரீ மார்கண்டேய புராணம்
அநுராகம்,
தி.நகர், சென்னை-600017
இ.ப-2007

10. கெம்பு ஆறுமுகம் - ஸ்ரீ விஷ்ணு புராணம்
அநுராகம்,
தி.நகர், சென்னை-600017
இ.ப-2005

11. கெம்பு ஆறுமுகம் - நாரதர் புராணம்
அநுராகம்,
தி.நகர், சென்னை-600017
இ.ப-2005

12. சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம் - சமயத் தமிழ் – தெ.போ.மீ.களஞ்சியம்IV காவ்யா பதிப்பகம், சென்னை – 600024. மு.ப. – 2007

13. சரவணன். ப - சிலப்பதிகாரம் சந்தியா பதிப்பகம், அசோகா நகர், சென்னை-600083 மு.ப. - 2008

14. சிதம்பரனார். சாமி - ஆழ்வார்கள் அருள்மொழி ஸ்ரீ செண்பகா பதிப்பகம் தி.நகர், சென்னை. மு.ப-2012

15. சீனிவாசன். ம.பெ - திவ்வியப்பிரபந்தம், சாகித்திய அகடாமி, மு.ப 2010

16. சீனிவாசன். ம.பெ. - ஆழ்வார்களும் தமிழ் மரபும் மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம்- 608001 மு.ப – 2010

17. சுப்புரெட்டியார். ந - அர்த்த பஞ்சகம் வேடர் வேங்கடம் வெளியீட்டகம், அண்ணாநகர், சென்னை-600040 மு.ப-1994

18. சுப்புரெட்டியார். ந - நவவிக சம்பந்தம்
பாரதியார் நிலையம்,
சென்னை - 600108
மு.ப -1994

19. சுப்புரெட்டியார். ந - வைணவ உரைவளம்
பாரதியார் நிலையம்,
சென்னை -600108
மு.ப. 1985

20. சுப்புரெட்டியார். ந - பரகாவன் பைந்தமிழ்
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை-600108
மு.ப-1992

21. சுப்புரெட்டியார். ந - விட்டுசித்தன் விரித்த தமிழ்
பாரி நிலையம் ,
சென்னை
மு.ப-1987

22. சுப்புரெட்டியார். ந - முக்திநெறி
பாரிநிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை.
மு.ப. – 1982

23. சுப்புரெட்டியார்.ந - வைணவமும் தமிழும்
கழக வெளியீடு,
154,டி.டி.கே சாலை,
சென்னை,
மு.ப. – 1998

24. சுபாஷ் சந்திரபோஸ். ச - நன்னூல் எழுத்ததிகாரம்
இயல் ,23பி/ 2739,
தொப்புள் பிள்ளையார் கோவில்,
தெற்கலங்கம் தெரு,
தஞ்சாவூர் -613001

25. துரைசாமி (உ.ஆ) - நாலாயிர திவ்வியப்
பிரபந்தம்(தொ-2)
முல்லை நிலையம், 9, பாரதிநகர்,
முதல்தெரு, தி.நகர்,
சென்னை – 600017.
மு.ப. – 2000

26. தேவராஜன் (உ.ஆ) - வைணவ திவ்விய
தேசங்கள் (பாகம் - 2)
ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,
சென்னை – 6000017.
மு.ப. – 2002

27. நடராசன். தி.சு - திறனாய்வுக் கலை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
சென்னை – 600 098
மூ.ப. – 2012

28. நாராயணப்பிள்ளை - பன்னிரு ஆழ்வார்களும் அவர்கள்
அருளிய பிரபந்தங்களும்
நர்மதா பதிப்பகம்,
சென்னை – 600017
மு.ப. – 2000

29. நாராயணப்பிள்ளை. எம்(உ.ஆ) - நாலாயிர திவ்வியப்
பிரபந்தம்(தொகுதி 1-2)
முல்லை நிலையம், 9, பாரதிநகர்,
முதல்தெரு, தி.நகர்,
சென்னை – 600017.
மு.ப. – 2000

30. பட்சிராஜன். தி - வைணவம் வளர்த்த பெரியோர்
பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை -600014
மு.ப-1999

31. பரணிதரன் - கேரளஆலயங்கள்
கலைஞன் பதிப்பகம்,
தியாகராய நகர்,
சென்னை-600017
மூ. ப-2002

32. பாலசுப்பிரமணியம். சிற்பி,.
நீலபத்மநாபன் - புதிய தமிழ் இலக்கிய வரலாறு
சாகித்திய அகாதெமி,
புதுடில்லி – 110 001
மு.ப. – 2013

33. புருசோத்தமன். வி.பு. - நாலாயிர திவ்யபிரபந்தம் ஒரு
கண்ணோட்டம்
ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம்,
2, மாடப் ஹவுஸ் பேக்,
சி .ஐ .டி. நகர்,
சென்னை – 600035

34. பூமா வெங்கடகிருஷ்ணன் - ஸ்ரீ வைஷ்ணவ முத்துக்கள்
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.
மு.ப. – 2007

35. பூமா வேங்கடகிருஷ்ணன் - ஸ்ரீ பைரவ முத்துக்கள்
(முதல்பகுதி)
கீதாசார்யம், 7,தெற்கு மாடவீதி,
திருவல்லிக்கேணி,
சென்னை-600005

36. பூவை கலியாண சுந்தர முதலியார் - தாயுமானவர் பாடல்கள்
கழக வெளியீடு,
(திருநெல்வேலி தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிட்)
522, டிடி.கே.சாலை சென்னை-18
மு.ப- 2000

37. பேரின்பன். தேவ - தமிழ் தத்துவம்
NCBH
சென்னை- 600098
மு.ப-2006

38. பொன்னி. பா - ஆழ்வார்களின் ஆராஅமுதம்
திருக்குறள் பதிப்பகம்
சென்னை – 600 078.
மு.ப. – 2011

39. மணிவண்ணன். அம்பை - சமய இலக்கியமும்
கோயில்கலையும்
J.J. பப்ளிகேஷன்ஸ்,
கோ.புதூர், மதுரை-625007
மு.ப-2006

40. மாத்ருபூதேஸ்வரன் - 108 வைணவ திருத்தல மகிமை
நர்மதா பதிப்பகம்,
சென்னை – 600 017.
மு.ப. – 2004

41. மாருதிதாசன் - ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்
நர்மதா பதிப்பகம்,
தியாகராஜ நகர்,
சென்னை-600017
மு.ப-2000

42. வேலுப்பிள்ளை. ஆ - தமிழர் சமய வரலாறு
குமரன் புத்தக இல்லம்,
கொழும்பு,
சென்னை-6
மு.ப-2011

43. ஜெயத்ரட்சகன். எல் - ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
ஆழ்வார்கள் ஆய்வு மையம்
29,திலகர் தெரு , தியாகராய நகர்,
சென்னை-600017

44. ஜெயதரட்சகன். எஸ் - ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
ஆழ்வார்கள் ஆய்வு மையம்,
சென்னை – 600 017

45. ஜோதிமணி. க - ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பணி
Centenary Committee
Publications,
Anna Nagar West,
Chennai – 600040.
மு.ப. – 2018

46. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் - ஸ் தர்சனர்1008(பாகம்-1)
கலைஞர் பதிப்பகம்
தி.நகர், சென்னை-600017
மு.ப-2002

47. ஸ்ரீ மணவாள மாமுனிகள் - ஆசார்யஹ்ருதயம்
ஸ்ரீ ஸ்தர்சனர்ட்ரஸ்ட்
திருச்சி -620017
மு.ப-1966

48. ஸ்வாமி - ஸ்ரீ எம்பெருமானார் தரிசனம்
அரராகம், தியாகராயநகர்,
சென்னை 600017
மு.ப-2000

வடநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

திருவேங்கடத்தில் தொடங்கும் பக்திப்பயணம்
சிங்கவேள் குன்றம், நைமிசாரண்யம், துவாரகை,
அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம்,
கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பத்ரிகாச்சிரமம், ஆகிய
திருத்தலங்களை சேவித்துவண்ணம் சாளக்கிராமத்தில்
நிறைவு பெறுகின்றது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939430-7-6

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

வடநாட்டுத் திருப்பதிகள் 1980

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் எஸ் சூரியமூர்த்தி



அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். சூரியமூர்த்தி)

திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலங்களாக இருப்பவை அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களாகும். இங்கு எம்பெருமான் தன்னுடைய சுவாமித்துவத்தையும் செளலப்பியத்தையும் புலப்படுத்திக் கொண்டு, அடியவர்கள் தம் உடம்பினால் கைங்கரியம் செய்து மகிழ்வதற்குப் பாங்காக எழுந்தருளியுள்ளான். வைணவர்கள் இவற்றை 108 என்று கணக்கிட்டுள்ளார்கள். இவற்றுள் சோழ நாட்டிலுள்ளவை 40; பாண்டிய நாட்டிலுள்ளவை 18; மலைநாட்டிலுள்ளவை 13; நடுநாட்டிலுள்ளவை 2; தொண்டை நாட்டிலுள்ளவை 22; வடநாட்டிலுள்ளவை 12; திருநாடு ஒன்று. இந்தக் கணக்கைப் பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்,

> ஈரிருப தாம்சோழம்;
> ஈரொன்ப தாம்பாண்டி;
> ஓர்பதின்மூன் றாம்மலைநா(டு);
> ஓரிரண்டாம்—சீர் நடுநாடு;
> ஆறோடு ஈரெட்டுத்தொண்டை
> அவ்வடநா(டு) ஆறிரண்டு;
> கூறுதிரு நா(டு)ஒன் றாக்
> கொள்.

என்ற வெண்பாவால் அறியலாம், இந்த வடநாட்டுத் திருப்பதிகட்கு நம்மை இட்டுச் செல்லுகின்றார் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் இந்த நூலின் மூலமாக.

சைவ சமயத்தைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், ஆழ்வார்கள் பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுத் தம் மனத்தைப் பறிகொடுத்தவராதலால் வைணவ தத்துவத்தைப் பேசும்போதும், எம்பெருமானின் அநந்த கல்யாண குணங்களை எடுத்துரைக்கும் போதும், அவனுடைய வெற்றிச் செயல்களையும் வீரச் செயல்களையும் எடுத்துக் கூறும்போதும், வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், விரிந்த மனநிலையோடும் தம்மையே மறந்த நிலையை எய்தி விடுகின்றார். திருவேங்கடத்தில் தொடங்கும் இவர்தம் பக்திப் பயணம் சிங்கவேழ் குன்றம், நைமிசாரண்யம் துவாரகை, அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம், கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பதரிகாச்சிரமம் ஆகிய திருத்தலங்களைச் சேவித்த வண்ணம் சாளக்கிராமத்தில் நிறைவு பெறுகின்றது; பாற்கடலையும் பரமபதத்தையும்கூட இப்பயணத்தில் தரிசனம் செய்து வைத்து விடுகின்றார்; நாமும் இவருடன் பயணத்தை மேற்கொண்டு இத்திருத்தலங்களையெல்லாம் சேவித்த பேற்றைப் பெற்றுவிட்டதான திவ்விய அநுபவத்தைப் பெறுகின்றோம்.

இத்திருத்தலப் பயண நூலில் திருத்தலங்களின் இயற்கைச் சூழ்நிலைகள், அங்குத் திருக்கோயில் கொண்டிலங்கும் எம்பெருமான்களின் சிறப்புகள் இவற்றையும்; பிருந்தாவனம் கோவர்த்தனம் இவ்விடங்களில் கண்ணன் கன்றுகளை மேய்க்கும்போது ஆற்றிய வீரச் செயல்கள், ஆயர்பாடியில் வளரும்போது ஆற்றிய அருஞ் செயல்கள் ஆகியவற்றையும்; திருப்பாற்கடலிலும் பரமபதத்திலும் எம்பெருமானின் இருப்பையும் கண்டு மகிழ்கின்றோம். இத்தனைக்கும் மேலாகப் பிரபத்தியின் பெருமை, புருஷகாரத்தின் மகிமை, எம்பெருமானின் திருவடிகளின்

சீர்மை, பிரணவத்தின் அருமை, திருமந்திரத்தின் சிறப்பு இத்தத்துவங்களில் ஈடுபடுகின்றோம். இத்திருத்தலப் பயணத்தில் எம்பெருமான்களைப் பற்றிக் காட்டப் பெறும் ஆழ்வார் பாசுரங்கள் ஆராவமுதமாய் இனிப்பதையும் உணர்கின்றோம்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவை முறையாகப் பயன்று பெற்றவர்; அரும்பாடுபட்டு அத்துறைகளிலெல்லாம் பல நூல்களை எழுதிப் புகழ் அடைந்தவர். பதினேழு ஆண்டுகள் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர். அங்கு அரும்பாடுபட்டுத் தமிழ்த் துறையை உருவாக்கியிருக்கும் அவரது உரன், திறன் வியந்து மகிழ்ந்து போற்றுதற்குரியவை. இதனைத் தவிர உழைப்பின் உருவமாய்த் திகழும் பேராசிரியர் ரெட்டியார் பல உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கிய வர். ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கும் தகுதியும், திறமையும் உடையவர். என்ன செய்தாலும் இவர் அதனைத் தாம் செய்ததாக ஒப்புக்கொள்வதில்லை. இறைவன் திருவுள்ளக் குறிப்பினால் நடைபெற்றதாகக் கொண்டு மகிழ்வர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதி யில் பணியாற்றும் பேறு பெற்றமையால் ஏழுமலையா னின் திருவருள் இவர்மீது பாய்கின்றதாகக் கொள்வதே சரியாகும். ஓய்வுக் காலத்தில் சமய, தத்துவ நூல்களை எழுதிக் கண் போன்ற காலத்தைப் பொன் போன்று போற்றுவர். இவர்தம் முயற்சி வெல்க! வாழ்க!

—எஸ். சூரியமூர்த்தி

ந.சுப்பு ரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,)
பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

கா.விநோதினி

பதிவு எண் : 5885

நெறியாளர்

முனைவர் இரா.தனலெட்சுமி

உதவிப் பேராசிரியர்

இலக்கியத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 010

நவம்பர் - 2019

நன்றியுரை

தமிழ் பல்கலைக்கழக இலக்கியத்துறையில் **“ந.சுப்பு ரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள்”** என்னும் தலைப்பில் ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பை மேற்கொள்ள வாய்ப்பளித்த பெரும்மதிப்பிற்குரிய மாண்பமை **துணைவேந்தர்** அவர்களுக்கும் மதிப்பிற்குரிய **பதிவாளர்** அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டிற்கான தலைப்பைத் தெரிவு செய்து, ஆய்வின் ஒவ்வொரு நிலையிலும் அறிவுரைகள் வழங்கி வழிநடத்திய ஆய்வு நெறியாளர் உதவிப்பேராசிரியர் முனைவர் **இரா.தனலெட்சுமி** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாய்வு சிறப்புற அமைவதற்குப் பல அறிவுரைகள் வழங்கிய இலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் **ஜெ.தேவி** அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறையின் பேராசிரியர்களான முனைவர் **க.திலகவதி,** முனைவர் **பெ.இளையப்பிள்ளை**, முனைவர் **அ.இரவிச்சந்திரன்** அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாய்வுக்குத் தேவையான நூல்களைத் தந்துதவிய தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தார்க்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை ஈன்று எடுத்து என்னை வாழ்வின் உயர்நிலைக்கு செல்ல உறுதுணையாக இருக்கும் என் பொற்றோர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு செய்வதற்கு உதவிய நண்பர்களுக்கும், அன்புள்ளங்களான முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா. வினோதினி

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

உ.ஆ	-	உரை ஆசிரியர்
கு.	-	குறள்
ப.	-	பக்கம்
ப.ஆ.	-	பதிப்பாசிரியர்
பக்.	-	பக்கங்கள்
பா.	-	பாடல்
பா. எண்.	-	பாடல் எண்
மு.ப.	-	முதற்பதிப்பு
வ.எண்	-	வரிசை எண்

பொருளடக்கம்

இயல்கள்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1
ஒன்று	ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும்	4
இரண்டு	ஆழ்வார்களின் பக்தியும் எண்ணிக்கையும்	29
மூன்று	திருவேங்கடத்தின் வரலாறுகள்	60
நான்கு	பிருந்தாவனத்தில் கண்ணனின் வரலாறு	79
	முடிவுரை	99
	துணைநூற் பட்டியல்	100

முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அவற்றுள் சிறப்புவாய்ந்த ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளில் பக்திநெறிமுறைகள் எனும் தலைப்பில் இடம் பெற்றுள்ள ரெட்டியார் நூல்கள் பலவற்றை ஆராயும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வடநாட்டுத் திருப்பதிகளின் வரலாறு, கண்ணன் பற்றிய திருப்பாசுரங்கள் பாடிய ஆழ்வார்களின் வரிசையில் இவரது படைப்பின் மூலம் எவ்வாறு வெளிப்படுத்தி காட்டுகிறார் என்பதை இவ்வாய்வு ஆராய்கின்றது.

ஆய்வுத் தலைப்பு

ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள் என்பது ஆய்வுத் தலைப்பாகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

ஆய்வு எல்லை

ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் மற்றும் தமிழ் இலக்கிய நூல்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள் போன்றவை இவ்வாய்வின் எல்லையாக அமைகிறது.

ஆய்வின் கருதுகோள்

ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும், ஆழ்வார்களின் பக்தியும் எண்ணிக்கையும், திருவேங்கடத்தின் வரலாறு, பிருந்தாவனத்தில் கண்ணனின் வரலாறு முதலிய செய்திகளோடு ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள் தரும் உலகியல் சார்ந்த கருத்தும் பக்தி சார்ந்த கருத்துக்களை விளக்கும் வகையில் இவ்வாய்வின் கருதுகோள் அமைகின்றன.

முதன்மை தரவுகள்

ந.சுப்புரெட்டியாரின் படைப்புகளான வடநாட்டுத் திருப்பதி என்னும் நூல் முதன்மைதரவாக அமைகிறது.

துணைமைத் தரவுகள்

ஆய்விற்கு துணைபுரிந்த பிற இலக்கிய நூல்கள், ஆய்வேடுகள் ஆகியவை துணைமைத் தரவுகளாக அமைகின்றன. நாலாயிர திவ்விய பிரபந்தம், ஆழ்வார்களின் ஓர் எளிய அறிமுகம், வடவேங்கடமும், திருவேங்கடமும், 108 வைணவதிவ்விய தேசங்கள் ஆகிய நூல்கள் துணைமைத் தரவுகாளக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

பக்தி சார்ந்த படைப்பு நூல்களை பல்வேறு நோக்கில் கூறியுள்ளதால் விளக்கமுறை ஆய்வாகவும், வடநாட்டுத்திருப்பதிகளின் பக்தி நெறிமுறைகள் ஆா;வார்களால் மங்களசாசனம் இயற்றப்பெற்று திருத்தலப் பயனம் ஆழ்வார்களின் செய்திகள் ஒப்பிட்டு காணப்பெற்றுள்ளமையால் ஒப்பீட்டு ஆய்வாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

சமூகத்தில் நிகழும் வன்முறைகளுக்கு காரணம் ஆசையே. இதனை பக்திநெறியின் மூலம் பழங்காலத்தில் எவ்வாறு விளக்கியுள்ளனர் என்பதை எடுத்துக்கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

ஆய்வேட்டின் அமைப்புமுறை

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

இயல் –1 : ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும்

இயல் – 2 : ஆழ்வார்களின் பக்தியும் எண்ணிக்கையும்

இயல் – 3 : திருவேங்கடத்தின் வரலாறுகள்

இயல் – 4 : பிருந்தாவனத்தில் கண்ணனின் வரலாறு

இயல் ஒன்று

ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும் என்னும் முதல் இயலில் சுப்புரெட்டியாரின் அறிமுகம், வைணவ திருத்தலமும், வைணவ அதிகாரிகளும் வைணவம் அறிமுகம், வைணவ வழிபாட்டு முறை, வைணவத்தை பற்றிய என்பத்திரண்டு வார்த்தைகள் ஆகிய தலைப்புகளை உள்ளடக்கியதாக இவ்வியல் அமைகின்றன.

இயல் இரண்டு

ஆழ்வார்களின் பக்தியும் எண்ணிக்கையும் என்னும் இரண்டாம் இயலில் ஆழ்வார்களின் எண்ணிக்கை, பக்தி, வேங்கடத்தின்மீது காதல், வடவேங்கடத்தை மங்களசாசனம் செய்துள்ள ஒன்பது பேர்களின் பக்தி நெறிமுறைகள் பற்றியும் இவ்வியல் ஆராய்கின்றது.

இயல் மூன்று

திருவேங்கடத்தின் வரலாறுகள் என்னும் மூன்றாம் இயலில் வேங்கடம்மேவிய விளக்கு, சங்க கால வடவேங்கடம், இன்றைய திருவேங்கடம், திருவேங்கடத்தின் புகழ், திருமலையின் இயற்கை காட்சிகள், சங்ககால இலக்கிய குறிப்புகள், திருமலை பெயர் விளக்கம், திருத்தலப் பயணம் ஆகியவை பற்றி இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

இயல் நான்கு

பிருந்தாவனத்தில் கண்ணனின் வரலாறு என்னும் நான்காம் இயலில் கண்ணனின் வாழ்க்கை வரலாறு, பழமையான கோவில்கள், புதியகோவில்கள், கேசியின் வாயைக் கீண்ட வரலாறு, இருவகை மரம், மாலை நேரத்தில் கண்ணன், ஆயர்பாடியில் கண்ணன் வெண்ணை உண்ட வரலாறு ஆகியவற்றை பற்றி இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

துணைநூற் பட்டியல்

ஆய்விற்கு பயன்படுத்தப்பட்ட நூல்கள் அகரவரிசையில் துணைநூற் பட்டியல் பகுதியில் தரப்பட்டுள்ளன.

இயல் ஒன்று
ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்புகளும்

1.0. ந.சுப்புரெட்டியாரின் அறிமுகம்

தமிழ்நாட்டில் சோழவளநாடு சோறுடைத்து என்ற பெருமை பெற்ற சோழநாட்டின் தலைநகர் இன்றைய திருச்சி மாவட்டத்தில் தாய் திருமதி காமாட்சி அம்மாள் ஊரான லால்குடி வட்டத்தில் உள்ள பெரகம்பியில் 27.8.1916இல் பிறந்தார். தந்தைய திருநல்லப ரெட்டியாரின் ஊரான முசிறி வட்டத்தில் உள்ள கோட்டாத்தூரில் வளர்ந்தார்.

படிப்பு

மூன்று வயதிலேயே தந்தையை இழந்தார். அதனால் தாய்மாமன் தயவில் தாயின் அரவணைப்பில் கேட்டத்தூரில் இருந்த தொடக்கப்பள்ளியில் சேர்ந்து படித்தார். துறையுர் ஜமீந்தார் நடுநிலைப் பள்ளியிலும், முசிறியில் இருந்த ஜில்லாபோர்டு உயர்நிலைப் பள்ளியிலும் படித்துத் தேர்ந்தார். பின்னர்திருச்சியில் புனித ஜோசப் கல்லூரியில் வேதியியல் பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றார். சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து எல்.டி. பட்டத்தைப் பெற்றார். பின்னர் 1951 இல் எம்.ஏ., தமிழ், 1970 இல் முனைவர் பட்டம் ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

இவரது பணி

1941 முதல் 1950 வரை அவர் துறையூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளியில்தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். இருநூறாக இருந்த மாணவர் எண்ணிக்கையை ஆயிரமாக மாற்றினார். துறையூரைச் சுற்றி ஐந்து உயர்நிலைப் பள்ளிக் கூடங்கள் தொடங்கவும் செய்தார் அதற்கு காரணமாகவும் இருந்தார்.

கல்லூரிப் பணி

கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்களின் பரிந்துரையின்பேரில் காரைக்குடி டாக்டர் அழகப்பாசெட்டியார் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறையை உருவாக்கிய வருடம்

1950 அந்தக் கல்லூரியில் தலைவராகவும் பேராசிரியராகவும் 1960 வரை பணியாற்றினார். தாய்மொழி தெலுங்காக இருந்தாலும் தமிழின் மீது இருந்த தணியாத தாகம் காரணமாக வித்வான் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டங்களைப் பெற்றார்.

பல்கலைக்கழகப் பணி

1960 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை புதிதாக உருவாக்கவும் அதன் பேராசிரியராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் கிடைத்த ஊதியத்தை விடக்குறைவு என்றபோதிலும் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார். இதற்கு அவர் சொன்ன காரணம் என்னவெனில்

முதலில் பள்ளியில் தலைமை ஆசிரியர், பின்னர் கல்லூரியில் பேராசிரியர் – துறைத்தலைவர் இப்பொழுது பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் – துறைத்தலைவர் எனப் பள்ளி தொடங்கி பல்கலைக்கழகம் வரை எனது பணி விரிவடையக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன் என்றார்.

தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறை ஆந்திர அரசு திருப்பதி தேவஸ்தானம், பல்கலைக்கழகம் மாணியக்குழ ஆகியவை தலா ரூ.15,000 வழங்க மொத்தம் ரூ.60,000/- நிதியத்துடன் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் திரு.ந.சுப்புரெட்டியார் அவர்கள் தலைமையில் உருவானது. அங்குதான் தமிழில் 1970 இல் முனைவர் பட்டத்தையும் பெற்றார். 1977 ஓய்வு பெற்றபோது தமிழ் ஆய்வுத் துறையாக அது உயர்ந்திருந்தது.

அங்குள்ள தெலுங்கு பேசும் தமிழர்களுக்காக ஐந்து உயர்நிலைப் பள்ளிகளையும் நான்கு கல்லூரிகளையும் தமிழ்த்துறைகளையும் நிறுவியவர்.

இன்றைக்குத் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகம் தமிழ்த்துறை ஆய்வு வசதிகளுடன் சிறந்து விளங்குகிறது எனில் அதற்கான அடித்தளம் அமைத்து வித்திட்டவந.சுப்புரெட்டியார் அவர்கள்தான் எனில் அது மிகையாகாது.

சென்னையில் பிற பணிகள்

1978 – 79ல் சென்னைத் தமிழ் அகாதெமி வெளியிட்ட தமி; அகரமுதலியின் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் 1989 இல் சென்னைப் பல்கலைக்கழகம் எமிரைட்ஸ் பேராசிரியராகவும் தெற்கு ஆசிய பண்பாட்டுக் கலாச்சார மையம் கௌரவ இயக்குநராகவும் நியமித்து பெருமை படுத்தின.

சாகித்திய அகாதெமி ஆலோசனைக்குழு உறுப்பினர் தமிழக அரசு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்கு குழு உறுப்பினர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகங்களின் அகாதெமி கவுன்சில் உறுப்பினர் எனப் பல்வேறு பதவிகளை வகித்தார்.

நேர்மையானவர், கண்டிப்பானவர் என்பதுடன் சட்ட விதிகளுக்கு மாறாக எதையும் செய்யத் துணியாதவர். பொறுப்புகளையும் கௌரவங்களையும் நாடிச் செல்லாதவர். ஆனால் இவரின் பணியின் காரணமாக இவைகள் இவரைத் தேடி வந்தன. உதாரணமாக

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழம் உருவாக காரணமாக இருந்தவர். அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் இவரை நியமிக்க பரிந்துரைகள் வந்திருப்பதாகவும் பேச்சு வார்த்தைகள் நடைபெறும் என வகைபடுத்தப்பட்டார். நம்பகமான வட்டத்திலிருந்து தகவல் வந்தது துணைவேந்தர் என்னும் மிகப்பெரிய பதவியே அவரைத் தேடி வந்த போதிலும் இவர் அதை ஏற்கத் தயக்கம்காட்டியதுடன் அதற்கான விரிவான விளக்கத்தையும் அளித்தார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி ஏற்றுக்கொள்வது பெருமையான செய்திதான். ஆனால் தராசுத் தட்டில் முள்ளைப்போன்று உண்மையாகவும் நேர்மையாகவும் நடுநிலையோடு செயல்படுவேன் என்று எது சரியோ அதை மட்டும் செய்வேன். நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளை அனுமதிக்க மாட்டேன் என்று உறுதியாகச் சொன்னவர். பல்வேறு காரணங்களால் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி அவருக்கு கிடைக்காமல் போனாலும் எவ்வளவு பெரிய பதவியாக இருந்தாலும் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டார் என்பதற்கு இதைவிடவேறு சான்று தேவையில்லை.

விருதுகள்

தமிழக அரசின் கலை மாமணிவிருதும், திரு.வி.க விருது, தினத்தந்தி சி.பா. ஆதித்தனார் விருதும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பி.லிட் பட்டம், ஆழ்வார் ஆய்வு மையத்தின் ராமானுஜர் விருதும், கம்பன் கழகத்தின் பேராசிரியர் ராதாகிருஷ்ணன் விருதும், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் விருதும், உலகத் திருக்குறள் மையத்தின் திருக்குறள் விருதும் எனப் பல விருதுகளைப் பெற்ற பெருமை உடையவர்.

நூல்கள்

பணியிலிருந்து 36 ஆண்டுகள் மட்டும் ஓய்விற்குப் பிறகு 29 ஆண்டுகள் என இவரது தமிழ்ப்பணி 65 ஆண்டுகள் நீடித்தது. அவரது வாழ்வில் எழுதிக் குவித்த மொத்த நூல்களின் எண்ணிக்கை 135. அவற்றில் ஓய்விற்குப் பிறகு 1977 முதல் 2006 இல் மறையும் வரை 29 ஆண்டுகளில் மட்டும் இவர் எழுதிய நூல்கள் 100க்கும் அதிகம். 2008 இல் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் ரூ.5 லட்சம் தொகையை வழங்கி இவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கினார்.

அறக்கட்டளை

ரூ.5 லட்சம் தொகையை வைப்பு நிதியாக்கி அதன் மூலம் கிடைக்கும் வட்டியில் திரு.ந.சுப்புரெட்டியார் அவர்கள் படித்த பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் எடுக்கும் முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசாக தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இல்வாழ்க்கை

1936 இல் செல்லபாப்பா என்ற நங்கையை இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். பன்னிரெண்டு ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லா நிலைகண்டு உற்றார், உறவினர்களின் ஆலோசனையின் படி கோயில் குளங்களுக்கு சென்றுவந்தார்கள். பின்னர் 1949 இல் துறையூரில் ராமலிங்கம் என்ற மகனையும் 1953 காரைக்குடியில் ராமகிருஷ்ணன் என்ற மகனையும் படிக்கவைத்து திருமணம் செய்து அழகு பார்த்தார்.

சென்னையில் உள்ள முதல் மகன் ராமலிங்கம், அவர்களுக்கு இரண்டு மகள்களும், அமெரிக்காவில் உள்ள இரண்டாவது மகன் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு இரண்டு மகன்களும் உள்ளனர். இரண்டு மகன்களின் குழந்தைகளான பேரக் குழந்தைகளையும் கண்டு இன்புற்றார்கள்.

நிறுவியுள்ள அறக்கட்டளைகள்

பேராசிரியர் முனைவர் ந.சுப்புரெட்டியார் – திருமதி க.செல்லபாப்பா அம்மாள் என்ற பெயரில் கீழ்க்கண்ட பல்கலைக்கழங்களில் தமிழ்த்துறை– ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம் சென்னை போன்ற இடங்களில் அறக்கட்டளைகளையும் நிறுவியுள்ளார்.

சான்றோர்கள் தொடர்பு

இந்திய கவர்னர் ஜெனரல் – சி.ராஜகோபாலச்சாரியார்

இந்திய ஜனாதிபதி – டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன்

இந்திய ஜனாதிபதி – ஆர்.வெங்கட்ராமன்

இந்திய ஜனாதிபதி – டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

பீகார் கவர்னர் –டாக்டர் வி.அனந்தசயனம் ஐயங்கார்

தமிழக முதல்வர்கள்

திரு.கே.காமராஜ், டாக்டர் சி.என். அண்ணாதுரை, டாக்டர் மு.கருணாநீதி, டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன், திரு. டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், டாக்டர் மா.பொ.சிவஞானம் போன்ற முதல்வர்களிடம் நன்கு அறிமுகமானர்.

தமிழ் விற்பன்னர்கள்

திரு.கி.வா.ஜகந்நாதன், திரு.வி.க., திரு.கே.ஏ.பி. விசுவநாதன், பேராசிரியர் அவ்வை துரைசாமிப்பிள்ளை, கம்பராமாயணம் எஸ்.கே.ராமராஜன், ராயசொக்கலிங்கம், கோமு குப்புசாமி ரெட்டியார் ஆகிய தமிழ் அறிஞர்களுடன் நட்பு கொண்டவர்.

தொழில் அதிபர்கள்

டாக்டர் என்.மகாலிங்கம், சேர்மன் – சக்தி குரூப்– பொள்ளாச்சி, டாக்டர் ஆர்.எம். அழகப்பா ரெட்டியார்– நிறுவனர் அழகப்பா குரூப் கல்லூரி, காரைக்குடி போன்றவர்களிடம் அறிமுகம் பெற்றவர்.

முக்கிய பிரமுகர்கள்

தந்தை ஈ.வி.ராமசாமி, நிறுவனர் திராவிடர் கழகம்,

பி.ரங்கசாமி ரெட்டியார் – வகுப்புத் தோழர் – வழக்கறிஞர், திருச்சி

ஆர்.காந்தி, மூத்த வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம், தனது இறுதிக்காலத்தில் அண்ணாநகர் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

இவரது வெளியீடுகள்

1949 இல் 33 வயதில்	– கவிஞர் உள்ளம்
1957 இல் 41 வயதில்	– தமிழ் பயிற்றும் முறை! அறிவியல் பயிற்றும் முறை கலிங்கத்துப்பரணி – ஆராய்ச்சி
1958 இல் 42 வது வயதில்	– அனுவின் ஆக்கம் காலமும் கவிஞர்களும், மனித உடல் (மொழிபெயர்ப்பு)
1961இல் 45 வது வயதில்	– கல்வி உளவியல்
1962இல் 46 வது வயதில்	– அறிவுக்கு விருந்து, இளைஞர் வானொலி
1963 இல் 47 வது வயதில்	– அதிசய மின்னனு, தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
1964 இல் 48வது வயதில்	– இல்லற நெறி, ராக்கெட்டுகள்

1.2. வைணவ திருத்தலமும் வைணவ அதிகாரிகளும்

திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலங்களாக இருப்பவை அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளிருக்கும் திவ்விய தேசங்களாகும். இங்கு எம்பெருமான் தன்னுடைய சுவாமித்துவத்தையும் சௌலப்பியத்தையும் புலப்படுத்திக்கொண்டு அடியவர்கள் தம் உடம்பினால் கைங்கரியம் செய்வதற்கு எழுந்தருளினார்.

1.2.1. வைணவம் அறிமுகம்

உலகநாடுகள் அனைத்தையும் சேர்த்து ஒரே வீடாக என்னினால் அந்த வீட்டின் பூஜை அறைதான் இந்தியா என்பார்கள். ஆன்மீக சான்றோர்கள் அப்படிப்பட்ட ஆன்மீக புண்ணிய பூமியான நமது பாரத தேசத்தில் மக்களின் வாழ்க்கையை செம்மைப்படுத்த வாழ்வியல் உண்மையை உணர்ந்து வாழ வாழ்க்கையில் முழுமைபேச்சு அடைய இந்த புண்ணிய பூமியானது நமது பாரத தேசத்தில் எத்தனையோ சமயங்கள் தோன்றி வளர்ந்துள்ளது. அவற்றுள் மிகவும் தொண்மையானதாகவும் மக்களுக்கு எளிமையாக ஆன்மீகத்தை உணர்ந்துகொள்வதற்கேற்ப எளிய வழிமுறைகளை சொல்லுவது ஸ்ரீவைணவமே.

“மக்களை உய்விக்க வந்த மாபெறும் நதியே வைஷ்ணவ சமயமாகும். உயிர்கள் எத்தனையோ பிறவிகள் பிறந்து அவற்றில் செய்த அத்தனை புண்ணியங்களும் திரண்டால்தான் வைஷ்ணவனாகப் பிறக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று சான்றோர்கள் வாக்கு.”

மேலும் கற்பக மரத்தின் அடியில் நின்றுகொண்டு என்ன நினைக்கிறோமோ அவையெல்லாம் உடனே கிடைக்குமாம் அதைப்போலவே வைஷ்ணவ சமயமான கற்பக மரத்தின் நிழலில் இருந்து பகவானையே கேட்டாலும் அவன் தன்னைக்கொடுத்து விடுவான் அத்தனை பெருமையும ஆற்றலும் வாய்ந்தது இந்த வைணவ சமயமாகும்.

உலக மதங்கள் பலவற்றிலும் உயர்வற உயர்ந்து விளங்குவது ஸ்ரீவைஷ்ணவ சமயம்தான். எல்லோரையும் நாம் வைஷ்ணவர் என்று சொல்லமுடியாது. இதற்கு ஓர் உதாரணம் காட்டலாம். கங்கை நதி மிகவும் புனிதமானது என்று நாம் அனைவரும் அறிவோம். அது தன்னிடம் ஸ்நானம் செய்து மூழ்குபவர்களின் பாவங்களைப் போக்குகிறது. நல்லகதிக்கு நம்மை கொண்டுசெல்கிறது. ஆனால் அந்த நதியில் ஏராளமான தவளைகளும் முதலைகளும் கூட வசிக்கின்றது. அவையும் மோட்சம் செல்லுமா என்றால் நிச்சயம் இல்லை. கங்கை தனது புனிதத்தை உணர்ந்து ஸ்நானம் செய்கிறவர்களின் பாவதத்தை மட்டுமே போக்குகிறாள் என்று புராணம் கூறுகிறது.

அதேபோல் திருமாலை முழுமுதற்கடவுகளாக நம்பி வணங்கி வழிபடும் மக்களுக்கு மட்டுமே வைஷ்ணவர் என்று பொருந்தும். வைஷ்ணவர் என்றால் பிறர் துன்பம்கண்டு பொறுக்கமுடியாத இரக்ககுணம் கொண்டவர்கள் என்று பொருள்.

வைணவம் என்றால் திருமால் சம்பந்தம் உடையது என்றும் வைணவர் என்றால் பிறர் துன்பம் கண்டு பொறுக்க மாட்டாத இரக்க குணம் கொண்டவர் என்று பொருள்படுகின்றது. திருமாலை முழுமுதல் கடவுளாக கொண்டு வழிபடுவதால் இது வைணவம் எனப்பெயர் பெற்றது. வைணவன் பிற உயிர்கள் படும் துன்பத்தைக் கண்டு இரங்குவானாயின் அவன் திருவருள் தொடர்புடையவன் ஆவான்.

இவ்வைணவர் எனும் சொல்,

குறிக்கோள் ஆயிரத்துள இவை பத்தும்

திருக்குறங்குடி யாதன் மேல்

அறியக் கற்று வல்லார் வைட்ணவர்

ஆழ்கடல் ஞாலத்துள்ளே

வைன்மை யாவதுண் கோயில் வாழும்

வைணவன் என்னும் வன்மை கண்டாயோ[1]

வைணவம் மிகவும் தொண்மை வாய்ந்தது. வேதங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் திருமாலைப் பற்றிய குறிப்புகளை வைணவ ஆகமங்களான வைகாசனம் மற்றுமு பாஞ்சராத்திரம் எனும் இரு ஆகமங்களில் குறிக்கப்படுகின்றன.

திருமாலைப் பற்றி எழுந்த அரிய பக்திப் பனுவல் நாலாயிர திவ்யப் பிரபந்தம் ஆகும். எனவே பழமை வாய்ந்த வைணவ சமயமானது ஆழ்வார்கள் காலத்தில் தொடங்கினது. கம்பராமாயணம் வில்லிபாரதம் ஆகிய இரு பெரும் நூல்களும் இவ்வைணவம் மேலும் செழித்து வளர்வதற்கு காரணமாக அமைந்தது.

வைணவ கோட்பாட்டிற்கு அடிப்படையாக உள்ள நூல்கள் வேதத்திலுள்ள வைணவம் ஒரு புதிய தனிச்சமயமாக ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது என்று கருத இயலாது. வைணவமும் பிற்காலத்தில் தனியொரு மதமாகத் தழைத்து வளர்ந்தது. இந்து மதமே வைணவத்தின் அடிமரம், இந்து மத்தின்

பழமையும் பெருமையும் வைணவத்திற்கு உண்டு எனலாம்.

ஏகமூர்த்தி மூன்று மூர்த்தி நாலு மூர்த்தி

நன்மைசேர்

போக மூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி யையன்னில்

மூர்த்தியாய்

நாகமூர்த்தி சமய ணமாய் நலங்கடந்து

அகமூர்த்தி ஆயவண்ணம் என் சொலரதி தேவனே[2]

வைணவம் இந்து மதக் கிளைகளுள ஒன்றாக பரிணமித்தது என்பதே சாலப் பொருந்தும். வைணவம் ஒரு புதிய தனிச்சமயமாக ஏதோ காலத்தில் யாரோ ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது என்று கருத இயலாது. வைஷ்ணவர் என்றால் தான் வாழ்வது மட்டும் அல்ல இந்த உலகமும் உலகத்தில் வாழும் அத்தனை உயிர்களும் துன்பமின்றி இன்பத்தோடு வாழவேண்டும் என்னும் கருத்திற்கேற்ப வாழக்கூடியவர்கள் ஆவர்.

1.2.2. வைணவத் திருத்தலம்

வைணவர்கள் திருத்தலங்களை 108 என்று திவ்விய தேசத்தின் மூலமாக கணக்கிட்டுள்ளார்கள். வைணவ சமயத்தில் இருந்த டாக்டர் சுப்புரெட்டியாரால் வைணவ தத்துவத்தைப் பேசும்போது எம்பெருமானின் அந்த கல்யாணகுணங்களை எடுத்துரைக்கும்போதும் அவனுடைய வெற்றிச்செயல்களையும் வீரச்செயல்களையும் எடுத்துக்கூறும் போது வியக்கத்தக்க ஈடுபாட்டோடும் தோய்ந்த உள்ளத்தோடும் எம்பெருமானை வணங்கவேண்டும் என்று சுப்புரெட்டியாரின் கருத்து ஆகும்.

திருவேங்கடத்தில் தொடங்கி இவரின் பக்தி பயணம் பல்வேறு திருத்தலத்திற்கு சென்று எம்பெருமானை சேவித்த வண்ணம் அவருக்கு உண்டு என்பதை நாம் அறியலாம்.

ஸ்ரீ வைஷ்ணவன் என்போர் யார் எனக்கேட்பின்

வகுப்பேன் அதனைக் கேட்பீரோ! [3]

பிறருடையத் துன்பம் தன்தென என்னும்

பெருங்கணத்தவனே வைஷ்ணவனாம்

உறு துயத் தீர்த்தம் அதில் கர்வங் கொள்ளான்

உண்மை வைஷ்ணவன் அவனாகும்

உறவென மனிதர்கள் உலகுள யாரையும்

வைஷ்ணவன் ஆவான்[4]

ஆகம அடிப்படையில் வைகாநசம், பாஞ்சராத்திரம் என்று வைணவம் இரண்டாகப் பிளவு படடது. தமிழகத்தில் வைணவம் வடகலை தென்கலை என இரண்டாகப் பிளவுபட்டது. இறைவனது பக்தனுக்கும் இடையே உள்ள உறவு சமயச்சடங்குகள், ஆலய வழிபாடுகள், சமயச் சின்னங்கள் ஆகியவற்றை தமிழக வைணவம் இரு மரபுகளாக செயல்பட்டது.

நாமும் சுப்புரெட்டியார் மேற்கொண்ட பயணத்தை அடையவேண்டும். திவ்விய அனுபவத்தை பெருக்கவேண்டும் திருத்தல பயணத்தில் தொடரவேண்டும். ரெட்டியாரவர்கள் பல ஆண்டு உணர்வு ஒன்றாகப் பழகிய சமய வேறுபாட்டினை திவ்விய பிரபந்தமாகவும் நலமுனர்ந்து சுவைக்காகவும் தம்முடைய பாணியில் தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டும் என்று விரும்பியவர்.

பலவிதமான வித்தியானங்களை நன்கு கற்றறிந்தவர். இலக்கியம், சமயம், திறனாய்வு, அறிவியல், ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு போன்ற 74 நூல்களை படைத்துள்ளார். இவ்வாறு இவருடைய திருத்தல பயணத்திலும் வாழ்க்கை பயணத்திலும் மகிழ்ச்சியாக முன்னேறிச் சென்றார்.

1.3. வைணவ வழிபாட்டு முறை

தூய்மையான பண்பு நலன்களின் வடிவமாகத் திருக்கோயில்களில் எழுந்தருளி இருக்கும் ஆராதனம் வைணவர்கள், திருஅவதாரம் என்பர். இறைவன் நமக்களித்த பொறிகளைக் கொண்டு அவனோடு தொடர்பு கொள்ளுதல் ஆராதனம் எனப்படும்.

வைணவத்தின் வழிபாடு அனைவருக்கும் பொதுவானது இல்லங்களில் நிகழ்த்தப்பபெறுவது சுவர்த்த வழிபாடு என்றும், திருக்கோயில் உலக நலம் கருதி

செய்யபெறும் வைணவனம் என்பது ஆண்டவன் திருவருளாலும் நிறைவுபெறுகின்றது. ஆழ்வார்கள் அருளியச் செயல்கள் ஆழ்ந்து ஈடுபடவும் அதனை அனுபவிக்கவும் எம்பெருமானை சேவித்தல் ஆகும்.

வைணவர்கள் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய மெய் பொருளாக போற்றப்படுவது தத்துவம், ஹரிதம், புருஷாத்தம் ஆகிய மூன்று தத்துவங்கள் ஆகும். தத்துவத்தை சித்து (அறிவுடையபொருள்) சேதனம், அசித்து (அறிவில்லாத பொருள்) அசேதனம் (ஈஸ்வரன்) என்று மூன்றாக பிரிப்பர். பரம்பொருளான ஈஸ்வரன் சித்து, அசித்து மோட்சம் அடைவதற்குச் சாதனமாக அனுஷ்டிக்கப்படும் உபாயமே வைணவம் ஆகும்.

வைணவ நடைமுறையின் தலையாய கொள்கையே அனைவரும் இன்புற்று வாழவேண்டும் என்பதுதான். அவனை வைத்துதான் இரண்யனை வெல்லமுடியும் என்பதை வைணவ உலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வைணவம் தொடர்பாகவும் பேராசியரிர் பல சிறந்த நூல்களைப் படைத்திருக்கிறார். வைணவச் செல்வம், வைணவ உரைவளம், வைணவமும் தமிழும் ஆகிய நூல்களை டாக்டர் சுப்புரெட்டியார் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமாலை ஆழ்வார்கள் அவதரித்து செய்து அறிவென்னும் ஞானச் சுடர் விளக்கை ஏற்றிவைத்தார். உலகம் உள்ளவரைக்கும் நின்று விளங்கும்படியான வைணவ நடைமுறைகளை கொண்டு விங்கப்பட்டது. எம்பெருமானை முக்கியமாகக் கொண்டு வழிபட்டார் டாக்டர் சுப்புரெட்டியார்.

திரு ஆய்ப்பா, திருப்பதி

கடலைகள் தோற்கும் கரும்பிறவி வெள்ளத்

துடல் நரகத் துள்நின்றுழலா – தடைநெஞ்சே

ஆழ்வார்கள் பாட்டால் அலங்கரித்த மால்பதிகள்

மூவாறு முப்பத்து மூன்று[5]

என்பது வைணவத்தின் வழிபாட்டு முறையாகும்.

1.3.1. வைணவத்தைப் பற்றிய என்பத்தியிரண்டு வார்த்தைகள்

எம்பெருமானார் பரமபதத்திற்னு எழுந்தருளும்போது எல்லோரும் உய்யும் பொருட்டுத் தம்முடைய திருவடி முதலியவற்றுக்கு பிரசாத்திதருளியவை இவைகள் ஆகும்.

- ✶ எப்போதும் ஐம்பொறிகட்கு வசப்படுதல் கூடாது
- ✶ சாமானிய சாத்திரங்களில் எப்பொருள் பற்றுடையவராய்இருத்தல் கூடாது.
- ✶ ஐம்புல விஷயங்களையும் சமமாக நோக்கும் மனப்பான்மைவேண்டும்.
- ✶ மகாபாகவதர்களை அடைதலே மோட்சத்திற்கு காரணம் என்று எண்ணி அவர்கள் கட்டளையின்படி நடந்துகொள்ளவேண்டும்.
- ✶ வைணவர்களின் ஒழுக்கங்களே பகவானை அடைவிக்கும் என்று நினைத்தல் கூடாது.
- ✶ வைணவர்களின் ஒழுக்கங்களே பயனாக நினைக்கவேண்டும்.
- ✶ வைணவர்களை ரகவசமாக அழைக்கக்கூடாது.
- ✶ வைணவர்களைப் பார்க்கும் பொழுது நாமே முதலில் கைகூப்பவேண்டும்.
- ✶ பகவத் சந்திகளை வைணவர்கள் சேர்க்கையாக அல்லது சமூகமாக எழுந்தருள வேண்டும்.
- ✶ வைணவர்கள் பகவத் ஆசாரிய அனுபவம் செய்து கொண்டிருக்ககேட்டு மகிழ்ச்சியடையாமல் இடையில் குற்றங்களை எடுத்துச்சொல்லல் அபசாரம் ஆகும்.
- ✶ வைணவர்கள் திருமேனியில் நிழலை மிதிக்கக்கூடாது.
- ✶ வைணவர்களின் மீது தன்நிழல் படும்படி நடக்கக்கூடாது.
- ✶ முன்சம்சாரிகளைத் தொட்டு வைணவர்களைத் தொடலாகாது.
- ✶ ஏழையான வைணவன்முன் தன்டனிட அசட்டை செய்வது அபசாரமாகும்.
- ✶ வைணவர்கள் அடியேன் என்று சொல்லமுன் தென்டனிட அவர்களைப் போற்றாமல் அலட்சியம் செய்தல் பெரிய அபசாரமாகும்.
- ✶ வைணவர்கள் முன்னிலையில் தன்னுடைய நற்குணங்களை சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

* வைணவச் சின்னங்களைத் தரித்துக் கொண்டு புலன்களை அடக்கவேண்டும்.
* வைணவர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.
* வைணவர்கள் தன்னை அவமானப்படுத்தினாலும் அவர்களிடத்தில் பகைமை பாராட்டாது. வானா இருக்கவேண்டும்.
* வைணவர்களுக்குப் பரமபதத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணம் வேண்டும். வைணவர்களுக்கெல்லாம் நன்மை மாத்திரமே செய்யவேண்டும்.
* வைணவர்களை பற்றிய செய்திகளை டாக்டர் சுப்புரெட்டியார் வைணவச் செல்வம் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

செய்யப்பெற்ற திவ்விய தேசங்கள் திருத்தலங்கள் 108 என்பது முடிந்த முடிவு. வடநாட்டுத் திருப்பதிகள் 10, 11, 12, 13, 14 எனப் பலவகைக் கருத்துகள் உள்ளன.

திருநாடு என ஒன்று கொள்ளாமல் அதனையும் வடநாட்டுடன் சேர்த்து 13 திருப்பதிகளைக் காட்டுவார். 108 திருப்பதிபெருமாள் ஆசிரியர்.

திருப்பாற்கடலை நீக்கி 11 எனச் சொல்வர். 108 திருப்பதித் திருப்புகழில் திரு ஆய்பாடி இவ்வாறு திருதலப் பயணங்களை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பான சாஸ்திரங்களில் நுவலப்பெற்று உறுதியிடம் பெற்றுள்ள வைணவ அதிகாரிகள் பதின்மார்களாக வகும்பூண்டிருப்பார்.

1.அத்வேஷகள் : உலகத் தலைவனான திருமாலையும், தங்களுடைய கூர்மையான பார்வையாலும், இரக்கத்தோடு கூடிய நினைவாலும் அப்படிப்பட்ட தொடுதலினாலும், மச்ச கூர்ம பட்சிகள் தங்கள் முட்டைகளை விருத்தி செய்து தங்களைப் போலாக்குமாப் போல உலகத்தாருடைய சர்வ பாவங்களையும் கடைக்கண் நோக்கு கருணையோடு தொடுதல் ஆகியவற்றில் போக்காநின்ற வைணவர்களை வெறுக்காமல் இருப்பவர் இவர்கள்.

2.அநுகூலர்கள் : வாசுதேவனுடைய உற்சவ சிறப்பிலும்மகாபாகவத் உற்சவத் தொண்டுகளிலும் ஈடுபட்டு இடைவிடாமல் அவர்களுக்கு துணையாக இருப்பவர்கள் ஆவர்.

3.திருநாமதாரிகள் : நினைத்த மாத்திரத்திலும் நாவினால் உச்சரித்த மாத்திரத்திலும் கண்களால் கண்டு சேவித்த மாத்திரத்தில் எல்லாப் பாவங்களையும் நசிப்பிக்கத்தக்க சீமற் நாராயணனுடைய திருநாமத்தை தரித்துக் கொண்டிருப்பவர்கள்.

4.சங்ராங்கபைர்கள் : சங்கம், சக்கரம், ஊர்த்துவ, துளசிமணி, நளிகாட்சி, மாலிகைகளைத் தரித்தவர்களாய் சங்கு சக்கரம் தரியாதவர்களுடைய திருமேனிகளை மாலிகைகளைத் தரித்தவர்களாய், சங்கு சக்கரம்தரியாதவர் திருமேனி பார்க்கக்கூடாதென்ற பிரமாணங்களை அறிந்தவர்களாய் இருப்பவர்கள் ஆவர்.

5.மந்திரபாடிகள் : நினைத்த மாத்திரத்தில் எம்பெருமானுடைய இணைத்தான அடிகளாகிய பரமபதத்தை நல்கக்கூடிய எட்டெழுத்து மந்திரத்தை இடைவிடாது ஜெபித்துக்கொண்டு இருப்பவர்கள்.

6.வைணவர்கள் : சிற்றின்பத்தைத் துச்சமெனக்கருதி எம்பெருமானிடம் ஒன்றையும் விரும்பாமல் அவன் திருவடிகளை அடைவதையே பலனாகக் கருதிப் பக்தியை உபாயமாக எண்ணியிருப்பவர்கள் இவர்கள்.

7.ஸ்ரீ வைணவர்கள் : கர்மம், ஞானம், பக்தி முதலான இதர சாதனங்கள் போகங்கள் யாவற்றையும் துறந்து அதனால் தூயமனத்துடன் எம்பெருமானிடம் சாதன அறிவின் பக்தி உள்ளவராக இருப்பார்கள்.

8.பிரபந்தர்கள் : எல்லாவற்றிலும் வைத்திருக்கும்ஆசையாகிய பற்றை யறுத்து "உண்ணும் சோறும் பருகம் நீர் தின்னும் வெற்றிலையும எலாம் கண்ணனே"[6] என்று கொண்டு எல்லாம் பாரங்களையும் அவன் திருவடிகளில் வைத்திருப்பவர்கள் இவர்கள்.

9.ஏகாந்திகள் : எம்பெருமானைத் தவிர இதர தேவதைகளையும் இதர விஷயங்களையும் பக்தியை உபாயமாகக் கருதுவதையும் துறந்து அவன் திருவடிகளையே சாதனமாகக் கருதி ஆறு எனக்கு நின் பாதமே சரணாகத் தந்தை தொழிந்தால் உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன் எதைதாவியும் உனதே.

10.பரணமகாந்திகள் : முன் சொன்னவர்கள் போலவே யாவற்றையும் விட்டுக் கண்ணனை உபாயமாகக் கொண்டு அவனே சுவாமி என்றும் தம்மை அவனுடைய சொத்தென்று நினைத்து அதாலே தமக்கொரு சம்பந்தமும் இல்லாமல் இருப்பார்கள்.

திருமந்திரத்தின் சிறப்புகளை இத்தத்துவங்களில் ஈடுபடுத்துகின்றோம். இத்திருத்தலப் பயணத்தில் எம்பெருமானை பற்றி சிறப்பாக டாக்டர் சுப்புரெட்டியாரின் படைப்புகளில் நாம் காணலாம்.

1.3. வைணவ உரைவளமும் சுப்பு ரெட்டியாரும்

இந்து சமயங்களில் தொன்மையும் தூய்மையும் சைவ வைணவங்களுக்கு உண்டு. சைவத்தால் அரண் சூழ்ந்தும் வைணவத்தால் அரண்சூழ்ந்தும் மக்கள் இதிகாசப் புராணங்களைத் தக்கவைத்துக்கொண்டனர். நம்பிக்கையின் ஈர்ப்பு இரு சமயங்களிலும் நின்று நிலைபெற்றுள்ளன. இலக்கிய ஆக்கத்தில் இதிகாசங்களும் புராணங்களும் மக்களுக்குக் கதைச் சொல்லிகளாக விளங்கின என்பதை மறுதலிக்கவியலாது. மறுபுறம் சைவ வைணவத்தை வீழ்ச்சியுறச் செய்த முயற்சிகள் நடந்தன. வைணவத்தில் உரைகள் மிகுதி என்னும் தொடர் நாடெங்கும் ஒலிக்கத் தொடங்கியது. நாலாயிரத் திவ்விய இயக்கத்தால் மீண்டும் சைவ வைணவ சமயங்கள் தமிழகத்தில் தழைத்தன. சைவத்தில் பாடல்கள் மிகுதி. வைணவத்தில் உரைகள் மிகுதி என்னும் தொடர் நாடெங்கும் ஒலிக்கத் தொடங்கியது.

இவற்றைத் தொகுத்துப் பார்த்து பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் வைணவ உரைவளம் என்ற நூலைப் படைத்துள்ளார். அதன் நோக்கத்தன்மையை நாம் காணமுடிகிறது. வைணவ உரைவளம் நூலுக்கு உழுவலன்பன் ராமானுஜன் என்பவர் அணிந்துரை நல்கியுள்ளார். ஆசிரியர் சுப்புரெட்டியார் வைணவ உரைகள் என்னும் கடலில் மூழ்கி முத்தெடுத்து வந்து அவற்றில் தாம் கண்டவற்றை ஐதீகம், இதிகாசம், சம்வாதம் என்ற மூவகையில் அடக்கி ஆழ்வார் பாசுரங்களுடன் இயைபுபடுத்திக் காட்டுகிறார்.

நூல் முகத்தில் வில்லிபுத்தூராழ்வார் பாடலை எடுத்துக்காட்டித் தொடங்கி ஏற்புரை ஒன்றும் தந்துள்ளார். நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் ரெட்டியார் இதனுள் நிகழும் திருப்பாசுரங்கள் ஒவ்வொன்றும் செவிக்கினிய செஞ்சொல்லாகியது.

சொற்சுவை பொருட்சுவைகளில் சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளார். இதில் இடம் பெறும் உரைநயம் குறித்த பதிவு எண்ணத்தக்கது.

1.3.1. உரைகளின் நயம்

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றது போன்று வியாக்கியான்களும் இறைவனுடைய திருவள்ளுவருக்கு முற்றும் இலக்காய் காணப்பட்டது. இந்த உரைகளுள் ஈட்டின் நடையழகு தனிச்சிறப்புவாய்ந்தது. பொருளுணர்வோடு பயிலப் பயிலப் பேரின்பம்பயப்பது, சொல்லாற்றல் பொருளாற்றால் ஆனது.

1.3.2. ஐதிகங்கள்

இந்த நூலில் ஐதிகங்கள், இதிகாசங்கள், சம்வாதங்கள் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஐதிகம் என்பது சம்பிரதாயம் அடியாக வந்த ஒரு வார்த்தை அதாவது முன் நடந்ததைத் தெரிவிப்பது. எ.கா. முற்காலத்தில் எம்பெருமான் வாழ்க்கைபட்டால் கலேசப்பட்டுத்தானே இருக்கவேண்டும் என்றாராம் பிறகு வெளியில் எழுந்தருளிய பின் நஞ்சீயர் நம்பிள்ளையை நோக்கி பார்த்தீரே இவருடைய எண்ணத்தை? என்ன பாசுரம் என்று எடுத்துக்காட்டியுள்ளார்.முன்நடந்ததைப் பின்னால் சொல்வதால் இஃது ஐதிகம் என்று ந.சுப்புரெட்டியார் எடுத்துரைக்கிறார்.

1.3.3. இதிகாசம்

இதிகாசம் என்பது ஒரு வரலாறு. அல்லது கதைபோல் வருவது. தேனுகன் ஆவி போயுருமாறு கண்ணன் புரிந்த தீரச் செயலும் பாசுரத்தில் வரும் குறிப்பாகும்.

1.3.4. சம்வாதம்

சம்வாதம் சம்பாஷணை, உரையாடல் ஏடு வின்றி நின்றவர் என்ற தொடரை விளக்குவதற்கு நம்பிள்ளை, நஞ்சீரியரிடையே நடைபெற்றதைப் போன்றது. அதாவது

அர்ச்சுணன் தான் எம்பெருமானப் பெற்றானோ? எம்பெருமானுடைய அரளிச் செயல் என்று இவ்வளவே கொண்டு அமையும். இத்தகைய சம்வாதங்களை பாசுரத்தின் பொருளுக்குப் புதிய ஒளி காட்டுவனாக இருக்கும் என்று ந.சுப்புரெட்டியார் கூறுகிறார்.

1.3.5. சரீர சரீரிபாவனை

வைணவ தத்துவத்தின் உயரிய கருத்துக்களில் இது மிகவும் முக்கியமானது. எம்பெருமானார் கோஷ்டியிலே உபயவேதாந்த ஆன்மாவுக்கு ஞான ஆனந்தங்களும் அடிமையும் நிரூபமாகச் சொல்லப்பெறுகின்றது. அவரது அடியேன் உள்ளான் உடல் உள்ளான் என்பதன் பொருளைத் தெரிந்து வந்தார்.

அடியேன் செய்யும் விண்ணப்பமே அடியேன் சிறியஞானத்தன் ஒருவன் அடியே உள்ளானே இந்த இடத்திலெல்லாம் வெறும் ஆன்மா செயற்படமுடியாதது ஆகையால்

வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது

நீர்க்கு இனிது என்று

உண்பவோ நீருண் பவர்[7]

வான்திகழும் சோலை

மதினரங்கர் வண்புகழ்மேல்

ஆண்ட தமிழ்மறைகள்

ஆயிரமும்[8]

வைணவ உரையில் சில பெரியோர்களின் இயற்பெயர்கள் சம்பிரதாயமாக மாறி வழங்கப்பெறும் வைணவத் திருத்தல திருவரங்கம் திருமலை என்றும் சம்பிரதாயமாக வழங்கப்பெற்று வருகின்றன.

முதலாயிரத்தில்

சீமா லிகன் அவனோடு

தோழமை கொள்ளவும் வல்லாய்

சாமா றவனைநீ யெண்ணிச்

சக்கரத் தால்தலை கொண்டாய்[9]

பலவிதமான பாசுரங்களை தெரிந்தெடுத்து உரைத்தன்மை எடுத்துக்கொண்டு வைணவ உரைச்சிறப்பைப் புலப்படுத்தினார். இவ்வாறு 255 பாசுரங்களுக்கு வைணவ உரைகளைத் தொகுத்து அதில் அமைந்துள்ள உரைநுட்பத்தை எடுத்து வைணவ சமயத்தில் தத்துவங்களை அறியச் செய்துள்ளார்.

ஒரு தொகுப்பு முறையாக இருந்தாலும் வைணவ இலக்கிய கொள்கை ஆக்கங்கள் இவை என உணர்ந்து அறிஞர் சுப்புரெட்டியார் வைணவ உரைவளத்தை மிகவும் சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

1.4. ந.சுப்புரெட்டியாரின் கல்வி உளவியல்நோக்கு

ஆசிரியர் எனும் ஐந்தெழுத்து மந்திரம், மாணவர் நாளும் உச்சரிக்கும் மந்திரம் அறியாமை இருள் அகற்றும் அற்புதத்திற்கு உரியவன். அன்பு, கருணை, மனிதநேயம், பாரபட்சமின்னை ஒரு தாயின் கருவறை மற்றொன்று வகுப்பறை, இந்தியாவின் எதிர்காலமே வகுப்பறையில்தான் அடங்கியுள்ளது என்று சுப்புரெட்டியார் விளக்கமளிக்கிறார்.

ஆசிரியர் என்னும் சொல்லுக்கு குற்றம் களைபவர் என்று பொருள். எனவேதான்ஆசிரியரை தான் குற்றமற்றவராக இருந்து தன்னிடம் கற்ப வருபவரைக் குற்றமற்றவராக்கும் அறப்பணியை ஆசிரியர் பணி என்பதை பேராசிரியர் எடுத்துரைக்கிறார்.

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகில் அறிவோடு உயர்குணம் இணையவும்[10]

அமைப்பவரே நல்லாசிரியராவர். மேன்மையான குணமும், கருணையும், கடவுள் வழிபாடும், பல்நூல் தெளிவும் எளிதில் உணர்த்தும் வல்லமையும் மேன்மையும் உலகில் காணமுயும் என்றால் அது ஆசிரியரால் என்பதை விளக்கியுள்ளார்.

ஆசிரியர் செய்யும் தொழிலே தெய்வம் என்றும், என் கடன் பணிசெய்தல் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். ஆசிரியர் தன்னுடைய அறிவை வளர்க்கும் கவனத்துடன் தொட்டணைத் தூறும்மணற்கேனி போலும் நல்லதோறும் பழமையான கருத்துக்களை இந்த சமுதாயத்தின் மீது மிகுந்த அக்கறையோடு பதிவு செய்தல் வேண்டும் என்கிறார்.

நல்ல சமுதாயத்தை, தலைமுறையை உருவாக்க வேண்டும். அவர்கள் பாடம் புகட்டும் முறையில் பல உத்திகள் மாற்றங்கள் தேவை என்பது சுப்புரெட்டியாரின் எண்ணமாகும்.

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தால்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில்
அதுவும் ஒன்றே இறைவன்
பெற்ற அருள் ஆசிரியர் தொழில்[11]

என்று ஆசிரியர் தொழிலை பெரிதான வகையில் மனதில் கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார்.

1.4.1. சமுதாயக்கடமை

மாணவர்களின் நடத்தை பண்பாடு எண்ணங்கள் கொள்கை பழக்கவழக்கங்கள், மனநலம், நம்பிக்கைகள், சமூக சூழ்நிலை இவற்றை உற்றுநோக்கி நல்லொழுக்கம் உள்ளவர்களாக ஆக்கவேண்டும். ஏட்டுக்கல்வி மட்டுமல்லாது நடப்பியல் கல்வியை உலகியல் சார்ந்த அறிவோடு கற்பித்தல் வேண்டும். புதிய கருத்துக்களை உள்வாங்கி

பசுமரத்தாணி போல் பதிய வைக்கும் செயலால் நல்வழிகாட்டியாகவும் இணைப்பாகவும் விளங்கவேண்டும். காலத்திற்கு ஒவ்வொத கூடாத பழக்கவழக்கங்களைப் போக்கி எது தேவையானதோ அதனை அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

1.4.2. மனதை கவர்தல்

ஆள்பாதி ஆடைபாதி என்பது பழமொழி ஆசிரியர்கள் தோற்றத்தால் கவர்தல், தெளிவாக நகைச்சுவையாக பாடம் எடுத்தல் தோழமையோடு பொறுமையோடு அன்போடு இருத்தல் வேண்டும். தன்னலம், ஆணவம், செருக்கு, இறுமாப்பு, அதிகார வெறி, போட்டி மனப்பான்மை, பழிவாங்கும் குணம் ஆகியவை மனதைப் புலப்படுத்தும் குணங்கள் அறவே கூடாது என்று பேராசிரியர் எடுத்துரைக்கின்றார்.

மேலும் ஆசிரியர் தன் வாழ்நாள் முழுவதும் படித்துக்கொண்டே இருக்கவேண்டும். கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக என்கிறது குறள். அறிந்தோறும் அறியாமை கண்டாற்றால் என்ற குறளுக்கேற்ப வாழ்தல்வேண்டும். மாணவ பருவத்தில் படித்ததைவிட மிகமிக ஆழமான படித்து மாணவர்களின் ஐயம் தீர கல்வி புகட்டவேண்டும் என்று ந.சுப்புரெட்டியார் குரல் எழுப்புகிறார்.

1.5. சுப்புரெட்டியாரின் படைப்பில் சமுதாய நோக்கு

இலக்கியங்கள் தாம் தோன்றியுள்ள காலத்து மக்களுக்கு சமுதாய விழிப்புணர்வினையும் சூழ்நிலையினையும் எடுத்துக்காட்டும் இயல்பினது என்பதை ஆய்வாளர்கள் நன்கு அறிவர். பழந்தமிழரின் வரலாற்றைக் காண்பதற்கு இலக்கியம் சான்றாக அமைகிறது. இதனை சுப்பு ரெட்டியார் ஓயாது உழைத்து தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கையை நமக்க ஆக்கித் தந்துள்ளார். அதனை தொடர்ந்து சுப்புரெட்டியாரின் பண்முகம் என்ற படைப்பையும் படைத்துள்ளார்.

வாழ்க்கை ஒரு கலை. வாழ்வினை வெற்று வாழ்வாக்காது பயனுள்ள வகையில் பெருவாழ்வாக்கும் அழகியமணி மொழிகளையும் கூறுகின்றார். அத்தகைய மணிமொழிகளை கலைவடிவாக்கிச் சமுதாயத்தில் பல நல்ல சிந்தனைகளை விதைத்துப்

பல்லாயிரக்கணக்கான நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட ஆளுமையாக விளங்கியவர் பேரா.ந.சுப்புரெட்டியார் ஆவார். இவரை ஒத்தபேராசிரியர் பலரும் மொழிய மட்டும் பேசிக்கொண்டிருந்த காலத்தில ராக்கெட்டுகள், அதிசய மின்னணு அம்புலிப் பயணம், தொலை உலகச் செலவு வானொலி, தொலைக்காட்சி, தொழில்நுட்பம், நமது உடல்போன்ற மொழிக்கு அப்பாற்பட்டு நவீன அறிவியலைத் தமிழ் மொழியில் விவரித்தார். சமுதாயம் சீர்பட வேண்டும் என்ற நல்லநோக்கமும் எண்ணமும் காலந்தோறும் படைப்பாளிகளுக்கு இருந்து கொண்டே இருக்கிறது.

அந்தவகையில் இளங்கோவடிகள் நெறிப்பட வாழ்க்கையை வெளிக்காட்டும் சிலப்பதிகாரம் எம் காவியம் படைத்தார். கம்பர் தமிழ்ப் பண்பாட்டிற் ராமகாதை வடித்தார். மானுடம் செம்மையுற்ற வள்ளுவன் தமிழில் உலகப் பனுவலாக திருக்குறளை இயற்றினார். தாயுமானவர் உண்மை உரைத்தார். வள்ளலார் உருகி அருளொளி ஏற்றினார். மகாரர் இன்னாசெய்யாமையை வலியுறுத்தினார். மார்க்ஸ் –ஏஸ் கேல்ஸ் மூலதனத்தை உருவாக்கினார் காலந்தோறும் சமுதாயம் மேம்பட வேண்டும் என்ற நல்ல நோக்கம் எல்லோருக்கும் இருந்திருக்கிறது. ஆகையால் தம்மால் இயன்றவை தமது படைப்புகளில் வழி சமுதாய மேம்பாட்டிற்குப் பாடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் முன்னோர் வழி நின்று ந.சுப்புரெட்டி தமது சமகால மக்களுக்கு தேவையான நல்லறம் சார்ந்த பல்வேறு படைப்புகளைப் பெருங்கொடையாக வழங்கியுள்ளார். இவரின் படைப்புகளில் பெரும் பகுதி சமுதாயத்திற்குப் பயன்படும்படியே அமைந்துள்ளது என்ற கருத்தாக்கத்தில் இக்கட்டுரை சில செய்திகளை விளக்க முற்பட்டுள்ளது.

1.5.1. மனித வாழ்வில் அறம் - நீதி

இன்றைய சமுதாயத்தில் பணம் ஆற்றலுடையதாகக் கொடுங்கோல் ஆட்சி புரிகிறது. அதனால் பலரின் வாழ்க்கையில் அமைதியும், இன்பமும் இல்லை. அதனால் ஏழைகள் வாடுகிறார்கள், செல்வந்தர்கள் வருந்துகிறார்கள். கல்லாதவர் ஏங்குகிறார்கள், கற்றவர்களும் துன்பப்படுகிறார்கள். நிகழ்கால வாழ்க்கைப் பேராட்டம் எதிர்கால

கவலைகள் இவை இரண்டும் உள்ள வரை சமுதாய அமைப்பில் நிலைத்த வெற்றியாகும். இன்றைய வாழ்க்கை முறையைப் பொருளாதார அடிப்படையில் ஆய்ந்து பழந்தமிழ் இலக்கியங்கள் இன்றைய சூழலில் எங்கனம் பொருந்துகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். அகப்பொருள் அறம் பற்றிக் கூறுமிடத்து பாலதாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப[12]

தலைவன் தலைவியை எழுவாயாக வைத்துக்காட்டும் நிலையில் முன்னதாக மேலும் நீதியைப் பற்றி விளக்குமிடத்து தொடக்கத்திலேயே நீதி நெறி வழுவாது ஆட்சி புரிந்த தமிழக வேந்தர்கள் நீதி வழங்கிய முறையும் அதன்பால் அவர்கள் கொண்டிருந்த ஊற்றத்தையும் எடுத்தியம்புகிறார். உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்பாக அரசுகள் செய்யவேண்டிய கடமைகள் சாதியொழிப்பு என்ற பெயரில் நடக்கும் முறையற்ற செயல்களை ந.சுப்புரெட்டியார் வெளிப்படையாக சுட்டிக்காட்டுகிறார்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
உடம்பை வளர்த்தேனே உயிர் வளர்த்தேன
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே[13]

என்று உடலோம்பலின் இன்றியமையாமைய அந்நாளிலே தெளிவுற வலியுறுத்துகிறார். இவர்களின் வழியில் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் நமது உடல் (1974) எனும் நூலை தமிழச் சமுதாயத்திற்கு தந்துள்ளார். இந்நூலில் பாமரரும் புரிந்துக்கொள்ளும் வகையில் எளிய தமிழில் அறிவியல் வழியில் உடற்கூறுகளின் பணி உடலின் வழி உள்ளம் இயங்குதல், உடலோம்பலின் அவசியத்தை காலத்தேவைக்கேற்ப எடுத்துரைத்துள்ளார். வைணவ இலக்கியங்கள் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட ஆசிரியர் பகுத்தறிவுப் பாதையை உருவாக்கி மக்கள் சாதி சமயப் பிடியிலிருந்து விடுதலைப் பெற்று நிகரான வாழ்க்கை வாழவேண்டும் என்று கூறுகிறார்.

விடுதலைப்பெற்று ஒரு நிகராக வாழவழிவகுத்த தந்தை பெரியாரின் சிந்தனைகளையும், தமிழ் மொழியில் உலக இலக்கியமான திருக்குறளை இயற்றிய தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாழ்வியற் சிந்தனைகளையும் திருக்குறளுக்கு புதியதோர் உரையையும் காலத்தேவைக்கேற்ப எடுத்துரைத்திருப்பது சிறப்பு.

மேலும் நிகழ்காலத்தோடு சமரசம் செய்யாமல் சாதியம் மறுத்து சமத்துவம் பேசி பெண்மையைப் போற்றி இந்திய விடுதலைக்காக பாடிய மகாவி பாரதியாரின் கொள்கையை ஆசிரியர் பாரதியம் எனும் நூலின் வழி விவரித்திருப்பது தனிச்சிறப்பு. இவ்வாறாகப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தமிழ் இலக்கிய உலகிற்கு எண்ணற்ற படைப்புகளைத் தந்து தனக்கெனத் தனித்த ஒரு தடத்தை உருவாக்கியுள்ளது. இவருடைய படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக சமுதாய படைப்பு அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாய நோக்கை தொடர்ந்து பலகோணப் பார்வையுடன் வகைப்படுத்தவும் இலக்கிய வகைகள் இனம் பிரிதலும் தனிநிலக் கவிதை காப்பியமாகவும் இலக்கியப்பொருள் நோக்கில் அமைந்த ஒரு பாடுபொருளாகவும் வகை, வடிவம் புலவர்தம் மனநிலை பொறுத்தவாறு அமைய வேண்டும் என்பதை சுப்புரெட்டியார் கூறுகிறார். இவர் இலக்கியத்தையும் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இரு பிரிவாக பிரிக்கின்றார். அடிகளால் மிகுந்த பொருள்களால் சிறந்து மக்கள் வாழ்வையொட்டி அவர்கள் வாழ்வியலைச் செம்மைப்படுத்தி இன்பம் நல்க தோன்றியவை பேரிலக்கியமாகும்.

பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே
அள்ளி அனைத்திடவே என் முன்னே
ஆடி வருந்தேனே[14]

என்ற பாடலையும் இங்கு சான்றாகத் தருகிறார் பா வகைகளை பயன்படுத்தி என்னென்ன இலக்கியங்களை எத்தகையது என்பதை சுப்புரெட்டியார் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் விவரிக்கிறார். இவர் பல்வேறு படைப்புகளை படைத்து இந்த தமிழ்மண்ணிற்கு நன்மை செய்துள்ளார் என்பது மிகையாகாது.

தொகுப்புரை

ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும் எனும் இவ்வியலில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் அறிமுகம், வைணவம் அறிமுகம், வைணவத்திருத்தலம் பற்றியும் இவரின் படைப்புகள் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. ந.சுப்புரெட்டியாரின் வைணவச் செல்வம், ப.111
2. மேலது, ப.116
3. வைணவமும் தமிழும், ப.162
4. மேலது, ப.167
5. ந.சுப்புரெட்டியாரின் வைணவச் செல்வம், ப.90
6. மேலது,ப.90
7. மேலது, ப.132
8. மேலது, ப.135
9. ந.சுப்புரெட்டியாரின் வைணவச் செல்வம், ப.150
10. மேலது,ப.151
11. மேலது, ப.120
12. மேலது, ப.122
13. வைணவமும் தமிழும், ப.125
14. மேலது, ப.122

இயல் இரண்டு
ஆழ்வார்களின் பக்தியும் எண்ணிக்கையும்

2.0. முன்னுரை

ஆழ்வார்களின் பக்தியும், சிந்தனையும் முற்காலத்தில் தொடங்கி தற்காலம் வரை பக்தி என்னும் பரவசம் நிலவி வருகிறது. இதைக் கற்றவர்களுக்கு ஆழ்வார்களின் பாடல்களின்மேல் ஆர்வம் ஏற்பட்டு பக்தியின் விளைவாக எழுச்சி தோன்றுவதாக அமையும்.

2.1. ஆழ்வார்களின் விளக்கம்

பகவானின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்களை ஆழ்வார்கள் என்று சொல்லுவார்கள். கடவுள் ஒருவர் என்று இருக்கவேண்டும் என்று இல்லை. எதிலும் தீவிரமாக ஆழ்பவர்களை ஆழ்வார்கள் என்று அழைக்கலாம்.

துக்கத்தில், துயரத்தில், சந்தோஷத்தில் ஆழ்வாரும் உண்டு. இறைவனின் ஆழ்கடலில் நீந்துபவர்களை ஆழ்வார்கள் எனலாம்.

ஆசைப்பட்டு ஆழ்வார் பலர் என்று திருமழிசை ஆழ்வாரே நான்முகன் திருவந்தாதியில் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட இறைவனை காண வாஞ்சையாய் இருந்த ஆழ்வார்கள் இறைவனை உயிராக கொண்டு எழுதிய பாடல்,

நீயே உலகெலாம் நின் அருளே நிற்பனவும்
நீயே தவத்தேவ தேவனும் - நீயே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து
இருசுடரும் ஆய இவை [1]

என இறைவனை போற்றி பாடுகிறார்கள்.

நீதால் எல்லா உலகமும்
பூமியில் நிலைத்திருப்பவை எல்லாம் உன் அருள்
நீதான் தேதவர்களுக்கெல்லாம் தேவன்

நீதான் நெருப்பு நீதான் மலை, நீதான் எட்டுத்திசை

தான் சூரியன், சந்திரன்[2]

இப்படியாக நாலாயி திவ்வியபிரபந்தம் ஆழ்வார்களை பற்றிச் சிறப்பாக சொல்லுகிறது. எம்பெருமானுடைய அருளினால் ஆழ்ந்துணரும் அறிவைப் பெற்று வேதமாகிய கடலில் மூழ்கியவர்கள்.

“ஆங்குக் கிடந்த மந்திரத்தினார்ந்த விசேஷங்களாகிய முத்துக்களையும், பவளங்களையும் எடுத்து மாலையாகத் தொடுத்து இப்பாருலகிற்கு அளித்தவர்களே ஆழ்வார்கள் ஆவார்கள்.”[3]

எம்பெருமானின் மங்கள குணத்தில் ஆழப்படுபவர்கள் என்றும் ஆழங்கால்படுபவர்கள் என்றும் நம் பூர்வாசாரியர்கள் ஆழ்வார்கள் என்ற விளக்கம் தந்துள்ளார்கள். பக்தி பூர்வமான அறிவியல் ஆழங்கால்பட்டவர்கள் ஆகையால் அவர்கள் ஆழ்வார்கள் ஆயினர்.

எம்பெருமானுடைய எல்லையற்ற திருக்குணங்களில் அவனருளால் ஆழ்ந்து ஈடுபட்டவர்களே ஆழ்வார்கள். அத்தகைய உயர்ந்த ஞானத்தை உடையவர்கள் உலகம் உய்யத் தோன்றியவர்கள், ஒப்பற்ற நூலை படைத்தவர்கள் ஆழ்வார்கள் ஆவார்கள்.

“ஆழ்வார்கள் இயல்பு, வடிவம், குணம், செயல்கள் போன்றவற்றை ஆழ்வார்கள் அனுபவித்து பேசப்படுகின்ற எம்பெருமானின் பரவச நிலையினை உடையவர்கள் ஆழ்வார்கள் ஆவார்கள்.”[4]

வைணவத்தின் முழுமுதற் கடவுள் திருமால் ஆவார். திருமாலின் கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்டவர்கள் ஆழ்வார்கள்.

ஆழ்வார் என்ற பட்டம் நேரடியாக கடவுள் என்ற பொருள் (ஆழ்வார் திருவரங்கத் தேவர்) என்று சோழ சாசனங்களில் வருகிறது. நாலாயிற திவ்விய பிரபந்தத்தை இயற்றியவர்கள் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை.

அந்திம வம்சம் பஞ்சம் குலம் என்று அப்போது அழைக்கப்பட்ட பாணர் சாதியில் பிறந்தவர், தொண்டிரப் பொடி ஆழ்வார். சாதித்து வாழ்பவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் திருவரங்கத் தேவர் என்று சோழ சாசனங்களில் இருந்து வருகிறது.

இறைவனுடைய குணத்திலும்அவருடைய அன்பிலும் பக்தியிலும் இறைவனின் ஆழத்தையும் பக்தி என்னும் குணத்தில் ஆழ்பவர்கள் ஆழ்வார்கள் ஆவார். ஆழ்கடலில் கடப்பவர் ஆழ்வார்கள் எனலாம்.

உ.உ. ஆழ்வார்களின் பக்தி

பெயரும் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும் – உயிரும்
தருமனையே நோக்கும் ஒண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு[5]

நதி கடலையே நோக்கும்; தாமரைப்பூ சூரியனை நோக்கும்; உயிரானது எமனை நோக்கிச் செல்லும்; உணர்வு மட்டும் பகவானைச் சென்றடையும் என்னும்போது ஆத்மா என்பது அழிவில்லாதது.

அதன் குறிக்கோள் பகவானைச் சென்றடைகிறது. உடம்பு விழுந்துவிடும். சொல்லும் சக்தி இருக்கும்போதே திருமாலைவழிபடுங்கள், யாகம் செய்யுங்கள், தந்திரங்கள் செய்யுங்கள், மந்திரங்கள் ஒதுங்குங்கள், ஆனால் இறைவனை மனதார வணங்க வேண்டும். பகவான் என்றும் உள்ளவன். அவனவன் நினைத்துப் பார்த்தால் போதும், பாற்கடலுக்கோ வேங்கடத்துக்கோ போக வேண்டியதில்லை. உன் உள்ளத்திலே கோயில் கொண்டிருக்கிறான் என்று ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றனர்.

திருக்கோவிலூருக்கு ஒருமுறை பொய்கை ஆழ்வார் சென்றார். நல்லமழை, இருள் ஒரு முனிவருடைய ஆசிரமத்தில் மழைக்கு ஒதுங்கினார்.

சிறிய இடம் ஒருவர் மட்டும் படுக்கலாம். படுத்துக்கொண்டார். சற்று நேரத்தில் அங்கே பூதத்தாழ்வார் வந்தார் ஒருவர் படுக்கலாம் எனில் இருவர் உட்காரலாம் என்று இருவரும் உட்கார்ந்தார்கள். சற்று நேரத்தில் மூன்றாவதாக பேயாழ்வார் வந்து சேர்ந்தார். இருவர் உட்காரலாம் எனில் மூவர் நிற்கலாம் என்று அவரும் ஒதுங்க மூவரும் நின்று கொண்டிருந்தார்கள். இருளில் அவருடன் நான்காவதாக ஒருவர் இருப்பதை உணர்ந்தார்கள்.

இவர்களோடு நெருக்கத்தை விரும்பிய பகவான் இவர்களை நெருக்கத் தொடங்கினார். யார் இப்படி நெருக்குகிறார்கள் என்று காண்பதற்கு வையம் தகளியர் என்று பொய்கையாரின் பாடல்கள் இந்தபாடலை பாடியதால் புறவிருள் அகன்றது.[6]

பகவானை அவர்களால் தரிசிக்க முடிந்தது. பகவாநே நீ என்று கடலைக் கடைந்தாய் எப்போது இவ்வுலகத்தை நீரால் நிரப்பினாய் எந்த உருவத்தை விரும்புகிறோமோ அது அவன் உருவம் எந்தப் பெயரை கொடுக்கிறோமோ அது அவன்பெயர். எவ்விதமாய் சிந்தித்து இடைவிடாமல் தியானம் செய்வீர் அந்த விதமாகவே இருப்பான் சக்கரத்தான் என ஆழ்வார்கள் திருமாலைப் போற்றி வணங்குகிறார்கள்.

கடலும் மலையும் வானமும் காற்றும் உடலும் உயிரும் அவனாக இருக்கும்போது நீ அவனைப் புகழ்ந்தால் என்ன? பழித்தால் என்ன?

ஆழ்வார்கள் திருமாலை மட்டும் தொழுவதில் ஒரு மனத்தவர்கள். தேனுடைக் கமலத் திருவினுக்கரசே! திருவடி அடைந்தேன்[7]

எம்பெருமானுடைய மேன்மைகளைத் தம்முடைய தாழ்வுகளையும் வெளியிட்டுக்கொண்ட எம்பெருமானின் அடைக்கலம் புகும்போது இங்ஙனம் செய்யவேண்டும் என்பது சாத்திரவிதி ஆர்த்தின கனத்தாலே தம்முடைய இந்த திருத்தலத்தால் என்பாரங்கள் குறைந்தன என்று ஆழ்வார்கள் நல்வினையும தீவினையும் தீவினை செய்தல் ஆகிய இருவகை குற்றங்களுக்காக தம்மிடம் நிறைந்திருப்பனவாகச் சொல்லிக் கொண்டனர் ஆழ்வார்கள்.

வால்நிலை முறுவல் சிறுநுதல் பெருந்தேன்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன் அதனைப் பிழை எனக் கருதி
பேதையேன் பிறவி நோய் அறுப்பான்
ஏன் இலேன் இழுந்தேன்; எண்ணினேன் என்றி
இளையவர் கல்வியின் திறத்தை நாணினேன்[8]

மாதர்களுடைய முறுவல் அழகையும் தோள் அழகையும் முலை அழகையும் வாய் வெருவிக்கொண்டு நெடுநால் வரையில் சபலமாய்த் திரிந்தேன். பகவத் விஷயத்தில் ஓர்

இதிகாசம், வைணவ அடியார் ஒருவரிடம் இணைபிரியா நண்பர் ஒருவரைப் போல் தாம்பூலம் வைத்துக்கொள்ளும் பை ஒன்று இருந்து வந்தது.

இதில் "சாளக்கிராம வடிவத்தில் எம் பெருமான் தங்கி இருந்தார். இதைக் கண்ட ஆழ்வார் பக்தி என்னும் தமர் உகந்தது எவ்வுருவம்தானே ஆம்"[9]

என்று கல்லையோ மண்ணையோ வணங்கினாலும் அதனை எம்பெருமானின் மேனியாக சிறப்பித்து கூறுகின்ற நடையில் அமைகிறது.

எம்பெருமானின் உலகளந்த அற்புதமான செயலின் தன்மையை என்னால் அறிய முடியவில்லை என்கிறார் ஆழ்வார்.

தெய்வப் பெண் என்று போற்றப்படும் யசோதை உருவில் வந்த பேயான பூதனை உயிரின் எல்லையாகக் கண்ட எம்பெருமானே! உலகை அளக்கும் போது நின் ஒரு திருவடி பூமிமுழுவதும் வைத்தது. மற்றொரு திருவடியோ அண்டத்துக் அப்பாலுள்ள நீர்ப் பரப்பு வரையில் ஓங்கி வளர்ந்தது.

அன்று கர்ப்பத்தில் இருந்த காலத்தில் திருவரங்கத்துப் பெருமானுடைய கல்யாண குணங்களை அவனருளாலே கண்டு கொண்டேன். அவனை கைகூப்பி வணங்கினேன். அவனைப் பற்றி அறிய வாய்ப்பு இல்லாதவர்களே! அத்தகைய நான் இன்று கடல், நீர் போன்ற திருமேனியை எம்பெருமானை மறப்பேனா?

மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்(து)
இயங்கும் ஏறி கதிரோன் தன்னை முயங்கமருள்
தோழியால் மறைத்த தென்? நீ திருமாலே!
போராழிக் கையால் பொருது[10]

என்று அளவு கடந்த அன்பையும் பக்தியையும் உடையவர்கள் ஆழ்வார்கள்.

2.3. ஆழ்வார்களின் எண்ணிக்கை

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்

4. திருமழிசை யாழ்வார்

5. பெரியாழ்வார்

6. ஆண்டாள்

7. திருமங்கையாழ்வார்

8. திருபாணாழ்வார்

9. குலசேகரயாழ்வார்

10. நம்மாழ்வார்

11. மதுரகவியாழ்வார்

12. தொண்டரடிப் பொடியாழ்வார்

ஆழ்வாகர் பனிரெண்டு பேர். ஆனால் வடநாட்டுத்திருப்பதியை பத்து பேர் மட்டுமே மங்களாசாசனம் செய்துள்ளனர்.

1. பொய்கையாழ்வார்

ஒரு காட்சி இது திருவேங்கடமலையில் வாழும் குறவர்கள் தங்கள் தினைப் புனங்களில் பட்டி மேயும் யானையைத் துரத்துவான் வேண்டிப் பரன்களில் இருந்தபடியே தங்கள் கையிலிருந்து மாணிக்கக் கட்டியை யானையின் மீது எறிகின்றனர். அப்போது அங்குத் திரியும் மலைப்பாம்புகள் யானையின் மீது கண்டு எறிந்த இரத்தினத்தை மின்னலாகவும் எண்ணி மயங்குகின்றன. மின்னலுடன் இடி தோன்றும் என அஞ்சிப் பாம்புகள் புற்றினுள் புகுந்து கொள்கின்றன.

ஊரும் வரி அரவம் ஒண்குறவர் மால்யானை

பேர எறிந்த பெருமணியைக் காருடைய

மின்னென்று புற்றடையும் வேங்கடமே

மேலசுரர் எம்மென்று மாலது இடம் [11]

என்பது பொய்கை யாழ்வாரின் சித்தரிக்கும் சொல்லோவியம் முதலாழ்வார்கள் காட்டும் திருமலைக் காட்சிகள் இக்காட்சிகளைக் காண்பதற்குமுன் இம்மூன்று பக்த மணிகளைப் பற்றி சிறுகுறிப்பு.

ஒருவரை ஒருவர் அறியாது ஓடித்திரியும்யோகிகளாக இருந்து வந்த இவர்களை எம்பெருமான் திருகோவிலூரில் ஓர் இரவில் சந்திக்க வைத்த வரலாற்றை நாம் அறிவோம்.

நீயும் திருமகளும் நின்றாயால் குன்யெடுத்துப்
பாயும் பனிமறுத்த பண்பாளா வாசல்
கடைகழியா உள்புகா காமர் பூங்கோவில்
இடைகழியே பற்றி இனி[12]

என்பது இந்த நிகழ்ச்சிக்கு அகச்சான்றாக அமைகிறது. பரபக்திக்கு பொய்கையாழ்வாரும் பரஞானத்திற்கு பூதத்தாழ்வாரும், பரமபக்திக்கு பேயாழ்வாரும் எடுத்துக்காட்டுகளாக திகழ்கின்றனர் என்பது வைணவப் பெருமக்களின் கொள்கையாக சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

மயர்வரமதி நலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் இருள் தருமா ஞாலத்தில் இருக்கும் போகூத எம்பெருமான் திருவருளால் விளைந்தன என்பதும் அவர்களின் நம்பிக்கையாகும்.

விஷய நியமமே உள்ளது[13]

விஷய நியமமே இந்தப் பிரபஞ்சத்திற்குள் உள்ளது என்படி குணபூர்த்தியுள்ள இடமே விஷயமாகை என்பது பரத்துவம். வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளிலும் சௌலப்பியம் முலிய குணங்கள் நிறைந்துள்ள இடமே விஷயமாகை எனலாம்.

இங்குச் சொன்ன சௌலப்பியத்திற்கு எல்லை
நிலம் அர்ச்சாவதராம்[14]

என்பது முழுச்சுப்படி என்பதனை விளக்கும் வகையில் பொய்கையாழ்வாரும் தமதுகருத்தை எவ்வுருவமும் அவ்வுருவமும் தானே என்று மொழிவர்.

திருவேங்கடலை திருவரங்கத்தைக் காட்டிலும் முதலாழ்வாரின் உள்ளத்தைக் கவர்ந்தது பொய்கையாழ்வார்.

வினைச்சுடரை நந்துவிக்கும்

வேங்கடமே வானோர்

மனச்சுடரைத் தூண்டும் மலை[15]

முதலாழ்வார்கள் மூவருள் முதல்வர் இவர். இவர் முத்திதரும் நகரங்கள் ஏழனுள் முக்கியமாம் கச்சியம் பதியில் திருவெஃகா என்று போற்றப்படுகின்ற யதோத்காரி சன்னதி (சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில்) அருகில் உள்ள பொய்கையில் பொனமயமானதாமரை மலரில் எம்பெருமானின் ஐம்படைகளுள் ஒன்றாகிய பாஞ்சசன்னியம் என்னும் திருச்சங்கின் அம்சமாய் அவதரித்தார்.

எம்பெருமானின் உலகளந்த அற்புதமான செயலின் தன்மையை என்னால் அறியமுடியவில்லை என்கிறார். ஆழ்வார். தெய்வப்பெண் என்று போற்றப்படும் யசோதை உருவில் வந்த பேயான பூதனை உயிரின் எல்லையைக் கண்ட எம்பெருமானே

எட்டுத்திக்குகளோடு கூடிய பூமியையும் அத்திக்குகளில் இருக்கும் தேவதைகளையும் படைத்து அவர்களுக்கான செயல்களையும் அளவில்லாத கல்யாண குணங்களையும் அளவற்ற பெருமையுடையவனும் திருப்பாற்கடலைக் கடைந்தவனும், கடல்போன்ற நிறமுடையவனும் ஆகிய எம்பெருமானால் உருவாக்கப்பட்டவை ஆகும்.

மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்(து)

இயங்கும் ஏறி கதிரோன் தன்னை முயங்கமழுள்

தோராழியால் மறைத்த தென்? நீ திருமாலே

போராழிக் கையால் பொழுது[16]

தன்னை அண்டியவர்களை எவ்வகையாலும் காப்பான் என்பதை இப்பாசுரம் கூறுகிறது. திருமாலே பாரதப் போர்க்களத்தில் யாவரும் மயங்கும்படி சங்கை வாய் வைத்து ஊதினவனும் ஆவார்.

உன் ஐஸ்வர்யத்தில் ஒரு திவலையைக் காப்பதற்காக அனைவர்க்கும் உயிரான உனக்கேயன்றோ பேராபத்தை எம்பெருமானின் உலகைக் காத்த செயல்கள் நாம் நினைத்துக் கவலைப்படும் படியான பழியாகி விட்டதே என்கிறார் ஆழ்வார்.

பழிபாவம் கையகற்றிப் பல்காலும் நின்னை

வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ – வழுவின்றி

நாரணன்தன் நாமங்கள் நன்குணர்ந்து நன்கேத்தும்

காரணங்கள் தாமுடையார் தாம்[17]

அறியாது செய்து செயல்களுக்காக ஏற்படும் பழி அறிந்து செய்யும் தீச்செயல்களால் ஏற்படும் பாவம் ஆகிய இரண்டையும் போக்கி எப்போதும் உன்னைச் சாஸ்திரப்படி போற்றவேண்டும்.

முதலாழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் சைவ வைணவப் பிணக்குகள் பண்டிதர்களிடம் அதிகமாக இருந்தன இரண்டு தெய்வங்களும் ஒன்றே என்று கூறும் முதல் குரல் பொய்கையாருடையது. இந்தக்கருத்தைப் பொய்கையார் பல இடங்களில் வலியுறுத்துகிறார்.

2. பூதத்தாழ்வார்

திருமலையிலே வாழும் வானரங்கள் எம்பெருமானுக்கு செய்யும் பூசனைகளைக் காட்டுவர்.

போதறிந்து வானரங்கள்

பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த

போதரித்து கொண்டேத்தும்

அதிகாலையில் முனிவர்கள் துயில் விட்டெழுமாப்போல குரங்குகளும் எழுந்து பூத்த சுனைகளிலே சென்று நீராடி அங்குள்ள செவ்வியல் பூக்களைப் பறித்துக்கொண்டு போய் ஏனும் ஒன்றைச் சொல்லித் துது செய்து பணியா நிற்கும் என்கிறார் ஆழ்வார்.

அன்பே தகளி என்ற ஒப்பற்ற திருவந்தாதியை அளித்த பூதத்தாழ்வாரின் திருவடிகளை வணங்குவதாக பக்தியோடு திருநாமங்களை ஓதுபவர்களுக்கு அவன் நித்திய சூரிகளொடு ஒத்த பெருமையைப் பரமபதத்தில் கொடுத்துக் காத்தருள்வான் என்கிறார் ஆழ்வார். ஒவ்வொரு ஆழ்வார்களும் பகவானை போற்றி வணங்குகின்றனர். பரமபதத்திலிருந்து உலகினர்க்கு அதிலிருப்பதாக கருதப்படும் எம்பெருமானுடைய

திருவடிகளை உபாயமாக அடைவர்கள் நான்முகன் முதலானதேவர்களும் அடைய முடியாத பரமபதத்தை சென்றடைவர் என்று தமக்கு எம்பெருமான் செய்யும் நன்மையை இப்பாசுரத்தில் குறிப்பிடுகிறார் என்று சுப்புரெட்டியார் எடுத்துரைக்கின்றார். தம்முடைய நெஞ்சினை எம்பெருமானுக்காக கோயிலாகக் கொண்டு பரஞானமாகிய விளக்கினை முதற்பாசுரத்தில் ஏற்றினார். இப்பாசுரத்தில் தம்முடைய பக்தி நிலைகளை இதழ், அல்லி, தாது ஆகியவற்றோடு கூடியது.

தாமரை மலராக உருவம் செய்து அம்மலராலே அவனைப் போற்றுகிறார் ஆழ்வார். என்னுடைய நெஞ்சினை எம்பெருமான் எழுந்தருளியிருக்கக்கூடிய அழகிய நகராக அமைத்து அதில் சிநேகமாகிற முக்தியை அடைவேன்.

“நிலவுலகில் அவதரித்த எம்பெருமானுடைய எளிமை வாய்ந்தவருடைய திருவடிகளை எப்படி நான் வணங்காமல் இருக்கமுடியும்”[19] என்கிறார் பூதத்தாழ்வார்.

பூமியிலே அவதரித்து ஓங்கி நின்ற நீர்நிறைந்த கடல்போன்ற நிறமுடைய எம்பெருமானே! அன்று மூவடி நிலத்தை மாவலிச் சக்கரவர்த்தியிடம் யாசித்துப் பெற்றாய்.

இதர விஷயங்களில் பற்றற்று எம்பெருமானிடத்துள்ள பெருங்காதலால் அவன் திருநாமங்களைச் சொல்லிப் புகழும் பாக்கியசாலிகள் அவனை அடைவர் என்கிறார் ஆழ்வார்.

ஓங்கி உலகளந்த உத்தமனின் திருவடிகளையே விரும்பி அனுபவிப்பாயாக என்று தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகிறார். கடல்போல் ஆழ்ந்த மனமே! முன்பு திருவிக்கிரம அவதாரம் செய்யும்போது உன் ஒரு திவடியை உயரத் தூக்கியவரைக்கும் எதிர்த்த நமுசி முதலான பகைவர்களது எம்பெருமானை உண்மையான அன்பினைக் கொண்டு பற்றவேண்டும்.

பூதனையின் விருத்தாந்தத்தை இப்பாசுரத்தில் கூறுகிறார் ஆழ்வார். பேய்மகளாகிய பூதனை யசோதப் பிராட்டியைப் போல அன்புடையவளாக நடித்து, உண்ணைத் தூக்கி எடுத்து பால் பொருத்தித்தலால் ஒளிவிட்டு அழகுடன் உள்ள தன்மார்க்கத்தைக் காட்டி குழந்தாய்

மனமகிழ்ச்சிப் பாலினைப்பருகு என்று சொன்னால். ஆகையினால் அன்று சிறுகுழந்தையாயிருந்த நீயும் அதிகமான குழந்தைத் தனத்தினால் உண்மையாகவே பால்குடிப்பவனைப் போல நடித்து வெளியில் மகிழ்ந்துகொண்டு உயிரை கவர்ந்த எம்பெருமானே சிறந்தவர்.

பெருகு மதவேழம்
மாப்பிடிக்கு முன் நின்று
இருகண் இளமூங்கில்
வாங்கி - அங்கிருந்த
தேன் கலந்து நீட்டும்
திருவேங்கடம் கண்டிர்
வான்கலந்த வண்ணன் வரை[20]

திருமலையில் மதப்பெருக்கால் செருக்கித்திரியும் ஆண்யானை ஒன்று அது தன் காதலியாகிய பெண் யானையைக் காண்கிறது. அதனைக் கடந்து அப்பால் செல்ல மாட்டாது அதற்கு இனிய உணவு ஈந்து அதன் மனம் நிறைவிக்க விரும்புகிறது.
அம்மலையிலுள்ள மூங்கிற் குருத்தோன்றினைப் பிடுங்குகின்றது. அதனை அருகில் உள்ள மலை முழைஞ்சிலிருந்த ஒரு தேனடையில் தோய்த்து அப்பிடியின் வாயில் ஊட்டுகின்றது. குளோப்ஜாமுனை ஊட்டுவது போல இதனை ஆழ்வார் ஒரு பாடல் வாயிலாக கட்டுகிறார். இவ்விதமாக திருமலையை பூதத்தாழ்வார் காட்டுவார்.
இவர் மாமல்லன் என்ற அனைவராலும் பாராட்டப்படும் நரசிம்மவர்ம பல்லவனால் தோற்றுவிக்கப்பட்ட தொண்டைநாட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்) மாமல்லபுரத்தில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசி திங்கள் அன்று பிறந்தவர். திருமாலைப் பூதம் எனப் பல இடங்களில் பாடியிருப்பதால் பூதத்தாழ்வார் எனப் பெயர் பெற்றது.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகுஞ் சிந்தை இடுதிரியா நன்புருகி[21]

பேயாழ்வார்

சென்னை மயிலாப்பூரில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித்திங்ள் சதய நட்சத்திரத்தில் பிறந்தவர். திருமாலின் மீது கொண்ட பக்தியால் அழுழு சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தவர் போல விளங்கியதால் இப்பெயர் பெற்றார்.

இறைவனின் நந்தகம் என்னும் வாளின் அம்சமாக தோன்றியவர்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கண் அணிநிறமும் கண்டேன் – செருக்கினரும்
பொன்னாழி கண்னே் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று[22]

பேயாழ்வாரோ பரம் பதத்தோடும் பாற்கடலோடும் இம்மலையைச் சேர்த்து பேசுகின்றனர். திருவேங்கட பெருமாளுக்கு ஏற்பட்ட கழிப்பெருங்காதல் அற்புதமாக மாறினது. திருமொழியில் என்ன கோவைகளை கண்டு கழிக்கலாம். திருவேங்கடத்தில் பிறந்தாலும் அங்கு ஒரு பொருளாக இருந்தாலும்போதும். அங்கு ஏதாவதொரு பொருளாக இருந்தாலும் போதும் என்று சொல்கிறார் பேயாழ்ார். திருவேங்கட மலையில்வாழும் என பெயர் ெ பற்றால் அறிவற்ற விலங்கும் பிறவியும் தமக்கு போதும் என்கிறார்.

பண்டு எல்லாம் வேங்கடம்
பாற்கடல் வைகுந்தம்
கொண்டு அங்கு உறைவார்க்குக்
கோயில் போல்[23]

மலையில் பாயும் கானாறு காட்டு நெறி, கருவுரை என்ற நிலை தமக்கு அமைப்பின்போதும் என்று ஒன்றாகப் பிரித்து கூறுகிறார். இறுதியாக எம்பெருமான் திருமலையில் ஏதேனும் ஆவனே என்று சொல்லி தம் ஆசைக்கு தலைக்கட்டி விடுகின்றார். இந்தத் திருமொழியை அடியொற்றி முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் பேயாழ்வார் திருவேங்கடமுடையான் மீது எல்லையில்லாத அன்பையும பக்தியையும் நம்பிக்கையையும் உடையவராக இருந்தார்.

தாழ்ந்த சடையும், நீண்ட முடியும், மவும் சக்கரமும், பாம்பும், பொன்நானும் திருமலையின் காட்சி தரும் எந்தையின் இரண்டு உருவங்களின் அம்சங்கள்

தாழ்சடையும் நீண்டமுடியும் ஓண்மழுவும் சக்கரமும்

சூழரவும் பொன்நானும் தோன்றுமால் சூழும்

திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு

இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து[24]

என்ற இந்தப் பேயாழ்வாரின் பாடல் திருப்பதியின் பிரபலத்துக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. பேசுவார் எவ்வளவு பேசுவார் அவ்வளவே வாச மலர்த்துழாய் மார்வன் என்கிறார் பேயாழ்வார். அவனுக்கு உவமை என்று சொல்லாமல் அவனுக்கு உவமை அவன்மட்டும்தான் என்று சொல்கிறார். அவன்நிறம் வெள்ளையா சிவப்பா, பச்சையா, கறுப்பா என்றெல்லாம் எங்கலால் எண்ணிப்பார்க்கமுடியாது. இலக்குமி கணவனின் பொழிவை வர்ணிக்கவே முடியாது. பெருத்த தாளையுடைய தாமரை மலரில் பிறந்த பெரிய பிராட்டியின் மணாளனா எம்பெருமானின் தாமரை மலர்களை திருமாலை வணங்குவேன் என்கிறார்.

ஒரு காட்சி இது பேயாழ்வார் காட்டும் யானையோ அதுமூலமே! என்று ஓலமிட்டழைத்த கசேந்திரன் மரபுவழி வந்தது போலும் அது புரியம் வழிபாட்டுச் செயலை ஒரு சமத்காரம் பொலியப் பேசுகின்றார் ஆழ்வார். வழிபட்டுச் செல்லும் அடியார்கள் வாய்கொப்பளித்து கை கால்களை நீரால் தூய்மை செய்து கொண்டு மலர்களை எடுத்துப்போவது வழக்கமாகும். திருமலையிலுள்ள ஆண் யானை யொன்று இந்நெறியை மேற்கொள்ளுகிறது. இக்காட்சியினை ஆழ்வார்

“புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து கையால் மிகுமாத்தேன் கண்டுகளிறு”[25]

என்ற பாசுரத்தால் விளக்குகின்றார். கன்னத்திலிருந்தும் மந்தகத்திலிருந்தும் பெருகியொழுகும் மத நீரால் வாய்கொப்பளிக்கின்றது யானை. அருவிபோல் கால்வரை பெருகிவழியும் மதநீரினால் கால்கழுவுகின்றது. இங்ஙனம் திருமலையிலுள்ள திருமலையப்பன் ஆழ்வார் கொண்ட அன்பை சுப்புரெட்டியார் வெளிப்படுத்துகிறார்.

திருமழிசையாழ்வார்

தொண்டை நாட்டுத் திருமழிசை எனும் ஊரில் சித்தார்த்தி ஆண்டு தைத்திங்கள் பார்க்கவமுனிவர் கனஅம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் திருமாலின் சுதர்சமன் எனப்படும்

கணிகண்ணன் போகின்றான் காமரும் பூங்கச்சி

மணிவண்ணா நீ கிடக்க வேண்டா – துணிவுடைய

செந்நாப் புலவனும் போகின்றான்

புலவன் யான் சொல்கின்றேன் நீயும் உன்றன்

பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்[26]

பாடல்களின் வாயிலாக விளக்குகின்றார். பல்லவ மன்னன் தனது செயலுக்கு மன் வருந்தி வரவேண்டும் என்ற ஏக்கத்துடன் திருமழிசையுடன் சீடனும் இறைவனும்காஞ்சிக்குத் திரும்பினாராம்.

நீராடுவதற்கு ஒரு சிறிய கட்டணம் செலுத்துதல்வேண்டும். நீராடி ஈர ஆடையுடன் கண்ணனை சேவிக்கின்றோம். இந்த மூர்த்தியைத்தான் திருமழிசையாழ்வார் “துவரைக் கோனாய் நின்ற மாயன்”[27] என்று குறிப்பிடுகின்றார். முழுப்பாசுரத்தையும் சிந்திக்கின்றோம்.

சேயன் அணியன்

சிறியன் மிகப் பெரியன்

ஆயன் துவரைக் கோனாய்

நின்ற மாயன் அன்(று)

ஓதிய வர்க்கத்தனைக்

கல்லார் உலகத்தில்

. . . . மெய்ஞ்ஞானம் இல்[28]

பார்த்தசாரதி பாரதப்போர் நடந்த காலத்தில் பார்த்தனும் உபதேசித்த சரம சுலோகத்தை அந்தந்த திருவாக்கை எம்பெருமானுக்கு துவரை நாதனைத் திருமழிசையாழ்வார் ஆகியோர் மங்களசாசனம் செய்துள்ளனர்.

தானே தன்னந் தனியே சங்கற்பித்துத் தன்னுள்ளே

உலகங்களையெல்லாம்தந்தவனான பரம்பொருள்

ஏழு நாட்கள் தவம் செய்தான் இராமன் வருணன் வரவில்லை. இராமன் கோபங்கொண்டுள்ளான். இதனை திருமழிசையாழ்வார் கூறுகிறார்.

அலைஅறிவு ஓய்ந்து கிடந்த கடல்காற்று வீசுவதால் எங்கும் அலையெறியப்பெற்று. மீண்டும் காற்று ஓய்ந்த அவ்வலையெறிவு அடங்கிக் கடல் சாந்தமாவது போல பகவத் சங்கல்ப்பம் உண்டாகும்போது நிலைத் திணைப் பொருள்களும் இயங்குதினைப் பொருள்களும் தோன்றின. அப்படி அழிவுள்ள பொருள்கள் எல்லாம் தோன்றும்போது அழிவில்லாத எம்பெருமான் மூலமே பாதத்தில் வந்து சேர்கின்றது என்பது ஆழ்வாரின் கருத்து.

எம்பெருமான் திருப்பாற்கடலில் கண் வளர்ந்ததையும் திருவரங்கம் பெரிய கோயில் பொருந்தி வாழ்வதையும் பள்ளி கொண்டுள்ள விதத்தை யாராலும் அறிய முடியாது. முதலில் படைக்கப்பட்ட நீரில் கண்கள் வளரப்பட்டுஅருள் பொருளாய் இருப்பவனே எம்பெருமான்.

இத்தகைய “எம்பெருமான் அவனது கிருபையினால் நான் அறிந்த விதம் என்ன ஆச்சரியம், அவருடைய புகழ் அவருடையதிருபாதம் எனக்கு கிடைத்தாயிற்றே பரமபதத்தில் நித்திய சூரியனாக விளங்கும் எம்பெருமானே உம்மைபோன்றுவேன்.”[29]

மாறாய தானவனை வளீஉகிரால் மார்விரண்டு

கூறாகக் கீறிய கோளரியை – வேறாக

ஏத்தி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்

சார்த்தி யிருப்பார் தவம்[30]

எதிர்த்து நின்ற இரணியனது மார்பைக் கூர்மையான நகங்களால் இருபிளவாகப் பிளந்த பெருவலிமை மிக்க நரசிம்ம மூர்த்தியைச் சிறப்பாக ஏத்த வல்லவர் யார்?

“இத்தகைய அடியார்களும் அவர் பெருமானை பற்றுவதைவிட அவனது அடியார்களைப் பற்றுவதே சிறந்தது என்பதாம். பரம பதத்தை அளிப்பவன்தான் எம்பெருமான் உலகங்களையெல்லாம் நடத்துவது நீயே.”

நான் கர்ப்பத்திலிருந்து தொடங்கி எம் பொருமானாலே காக்கப்பெற்றவன். ஆகையாலே பெரிய பிராட்டியார் நித்திய வாசம் செய்ய இருக்கும்போது நினைப்பேன் நான் இறந்தபிறகு எம் பெருமானை நினைத்துக்கொண்டிருப்பேன்.

கருவிருந்த நாள் முதுலா காப்புப் பெற்றேன்

ஆதலின் அவனை என்றும் மறந்தறியேன்"[31]

என்பது திருமழிசையாழ்வாரின் கருத்தாகும்.

பெரியாழ்வார்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் குரோதன ஆண்டு ஆனித்திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் முகுந்தப்பட்டவர் என பல வடநாட்டுத் திருப்பதிகளின் பெயர்களைக் கூறும்போது சாளக்கிராமத்தையும் சுட்டுகிறார் பெரியாழ்வார். இளம்பிராயத்தில் கண்ணன் செய்த சிறுகுறும்புகளைப் பாட்டில் இட்டுக்காட்டுகிறார்.

சாளக்கிராமம் உடைய நம்பி

சாய்த்துப் பருகிட்டுப் போந்துநின்றான்[32]

என்று ஓர் இடைப்பெண் கறந்து அடுப்பேற வைத்திருந்த பாலைத் திருவமுது செய்ததை எடுத்துக்காட்டுகிறார் பெரியாழ்வார். இவர் சூழ்ந்த எல்லா உலகங்களாயும் இருப்பவன் இவன்தான் என்கிறார். அந்தர்யாமியாக இருக்கும் இறைவனின் இருப்பைக் காட்டிய ஆழ்வார் அவதார தத்துவத்தையும் காட்டுகிறார். மான்களும் யானைகளும் குதிரைகளும் திரியும் காடும் கடந்து வில்லையும்அம்மைபயும் துணையாகக் கொண்டு சேது கட்டி, மதில் நீர் இலங்கை வாழ் அரக்கர் தலைவனின் முழக்கம் செய்துள்ளனர் என்பதை சுட்டிக்காட்டுகிறார்.

சாளக்கிராமம் அடைநெஞ்சே! என்று ஒரு முறைக்கு ஒன்பது முறையாக தம் நெஞ்சை ஆற்றுப்படுத்தி ஆழ்வார் கீழ்வரும் பாடலின் வழியாக நமக்கும் உபதேசம் செய்கின்றார்.

தாரா ஆரும் வயல்சூழ்ந்த

சாளக்கிராமத்து அடிகளை

காரார்புறவின் மங்கை வேந்தன்

கலியண் ஒலிசெய் தமிழ்மாலை

ஆர்ஆர் உலகத்து அறிவுடையார்

அமரர் நன்னாட்டு அரசு ஆளப்

பேராயிரமும் ஓதுமின்கள்

அன்றி இபையே பிதற்றுமினே[33]

என்பது அவர்தம் உபதேசம் வைகுண்ட பதவியில் நாட்டமுள்ளவர்களை நோக்கி அறிவுடை மாந்தீர்! எம்பெருமானின் பேராயிரத்தை (சகஸ்ர நாமத்தை) ஓதுங்கள். முரட்டு சமஸ்கிருத மொழியிலுள்ள அவற்றை ஒது வல்லமை இல்லையெனில் தேனினும் இனியச் செந்தமிழ் அமைந்த இத்திருபாசுரத்தை ஒதுக்குங்கள் இதனால் பேற்றிற்கு குறை எதுவும் இல்லை. அன்றியவை ஓதுமின்கள் என்னால் பிதற்றுமினே என்று கூறுகின்றார்.

குடி, குலம், சமயம், தொழில் ஏற்றம், வாழ்ந்துவரும் ஊர் இவற்றின் சம்பந்தமாக வரும் பேர்கள் தன் முனைப்புக்கு இடமாகி அழிவதற்கே உரியனவாக இருக்கவேண்டும்.

இத்திருக்கோயில் உள்ள இடத்தை விசாலபுரி என வழங்குவர். எல்லாப் பக்ககங்களிலும் திருக்கோயில் பணிவரைகளால் சூழப்பெற்றுள்ளது. திருக்கோயிலின் முன்புறமிருப்பது நாராயனமலையாகும்.

வலப்புறம் இருப்பது நீலகண்ட மலையாகும். வழியில் திருத்தலப் பயணிகள் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது போலோ பதரிவிசால் கிஜை போலோ பதரிநாராய புகழ்பாடினார் பெரியாழ்வார்.

வடதிசை மதுரை சாளக்கிராமம்

வைகுந்தம் துவரை அயோத்தி

இடம் உடை வதரி இடவகை உடைய

எம்பெருமான் இருக்கை[34]

என்று உரைக்கிறார் பெரியாழ்வார் எம்பெருமானின் மீது காதல் கொண்டு பல்வேறு விதமாக பாடி புகழ்ந்துள்ளார் என்பது கருத்து. இமயமலையில் உள்ள திவ்விய

தேசங்களுள் முதலாவதாக நாம் சேவிப்பது இந்தத் திருத்தலமே. கண்டம் என்பது இத்திருத்தலத்தின் திருநாமம். கடி என்னும் சிறப்புச் சொல்லாகவும் பொருள்படுகின்றது. இது வைணவ மந்திரங்களில் முதலாவதாக அமைகிறது.

நம நாராயண என்ற முதற் சொல் பொருளையும் நம துவயம் என்ற இரண்டாவது சொல்லையும்த திருமந்திரம் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். கண்டம் கடிநகரை நோக்கிச் செல்லும் நம்முடைய மனதில் இந்த எண்ணங்கள் குமிழிட்டு எழுகின்றார்.

இன்று தேவப்பிரயாகை என்று வழங்கப்பெறும் இடமே கண்டம் கடிநகர் ஆகும். இது போகும் வழியில் கடல் மட்டத்திற்கு மேல் அமைந்துள்ளது. கண்டம் கடிநகரைப் பற்றி பெரியாழ்வார் பதினோரு பாசுரங்களின் மூலம் மங்களசாசனம் செய்துள்ளார். இங்குள்ள எம்பெருமான் புருடோ;தமன் நீலமேகம் பெருமாள் என்கிற திருநாமம் இவருக்கும் உண்டு. நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டத்தினை சேவை சாதிக்கிறார். பெரியாழ்வார் இவரை பல்வேறு விதமாகபோற்றி சேவிக்கிறார்.

மூன்றெழுத் ததனை மூன்றெழுத் ததனால்

மூன்றெழுத் தாக்கி மூன்றெழுத்தை

ஏன்றுகொண் டிருப்பார்க்கு இரக்கம் நன் குடைய

மூன்றடி நிமிர்ந்து மூன்றினில் தோன்றி

மூன்றினில் மூன்றுரு ஆனான்[35]

கண்டம் என்னும் கடிநகமே[35]

ஆழ்வார் எம்பெருமானின் பெருமையில் ஈடுபடுவதிலும் நாம் ஆழங்கால் படுவோம், வைணப தத்துவங்களின் கரூவூலமாகத் திகழும் எம்பெருமானின் சிறப்பை பற்றி கண்போம். சில திவ்விய தேசங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களும் கண்டம் கடிநகரில் இருந்து சேவை சாதிப்பதை ஆழ்வார் திருவுள்ளம் எண்ணிக் களிக்கின்றது.

புருட்டோத்தமன் இருக்கை... கண்டம் என்னும் கடிநகரே என்று பாசுரங்கள் தோறும் காணச் செய்கின்றார் ஆழ்வார். அவன் சந்நிதியில் மீண்டும் ஒருமுறை பெரியாழ்வார் தேனூறும் திருமொழியை வாய்விட்டு ஓதி பரிபூரண பிறம்மானந்தம் நிலையை அடைவோம்.

பெரியாழ்வாரின் கருத்து பல செய்திகளை அறிந்த வண்ணமாய் கோவர்த்தனம் என்னும் இடத்திற்கு ஏகுகின்றோம் கண்ணபிரான் பசுக்களுக்குப் புல்லும் நீரும் நல்கி வந்த்ததனால் அவனுக்கு கோவர்தனம் என்றுதிருநாமம் வழங்கப்பட்டுள்ளது. இந்த திருநாமத்தை இந்த மலைக்கு இட்டு வழங்கவேண்டும். இதை நினைத்து பெரியாழ்வார்

தன்பேர் இட்டுக்கொண்டு தரணிதண்ணில் தாமோதரன் தாங்கு[36]

அழகான ஒருசிறுகுன்றே குன்று மரங்கள் நிறைந்து அழகாக் காட்சி தருகின்றது. இதனை நினைத்துதான் பெரியாழ்வார்

குரவிற் கொடிமுல்லைகள் நின்று உறங்கும்

கோவர்த்தனம்

கோவர்த்தனத்தைப் பெரியாழ்வார் ஆண்டாள் நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் மங்கள சாசனம் செய்துள்ளார்கள்.

காளியன் பொய்கை கலங்கப்பாய்ந் திட்டவன்

நீள்முடி ஐந்திலும் நின்று நடஞ்செய்து[38]

கண்ணன் அம்மடுவிற்கு அருகிலுள்ள கடம்ப மரத்திலேறி அங்கு குதித்து அந்நாகத்தின் படத்தின்மேல் ஏற் நடனம் ஆடி நசுக்கி அதன் வலியடக்கினான். நாக கன்னிகையரின் வேண்டுகோளின்படி அந்தக் காளியைனை கடலில் சென்று வாழும்படி உயிரோடே விட்டருளினான். இதனை பெரியாழ்வார் குறிப்பிடுகின்றார்.

இளமைப் பருவத்துக் கண்ணனின் செயல்களில் ஆழ்வார்கள் ஆஙகால்பட்டு அநுபவித்ததையும் நாம் அறிவோம். மாடுகள் மேய்த்து வீடு திரும்பும் கண்ணன் தன்னை வகைவகையாக அணிசெய்து கொண்டும் குழலூதிக் கொண்டும் தன்னோராயிரம் செய்து ஒழுக்கமாகத் திரும்புகின்றான்.

கண்ணனின் கோலத்தைக் கண்ட ஆயர் பெண்கள் அவன் மீது காமமுற்ற வரலாற்றைப் பெரியாழ்வார் தம்மை அப்பெண்களாக பாவித்து பேசி இனியராகின்றார். இவ்வாறு பல்வேறு முறையில் பெரியாழ்வார் எம்பெருமானையும் கண்ணனையும் புகழ்ந்து பாடியுள்ளார்.

ஆண்டாள்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நள ஆண்டு ஆடித்திங்கள் பூரம் நட்சத்திரத்தில் தோன்றியவர். பூமாத்தாய் அச்சமாகத்துளசி செடிக்கு மத்தியில் உதித்தவர். கோதை என்பது இவரது இயற்பெயராகும்.

திருமலையிலுள்ள ஐயறிவுடைய விலங்கு தன்னை வழிபடும் ஞானத்தைத் தரக்கூடியவன் திருமலையப்பன் என்பது ஆழ்வார் நமக்கு உணர்த்தும் செய்தியாகும். இன்னொரு யானையின் செயலையும் அதன் முடிவையும் காண்போம். மதயானைபோல் எழுந்த மாமுகில்காள் என்று ஆண்டாள் வருணித்ததை நாம்அறிவோம். ஆண்யானையொன்று கரியமாமுகிற் படலத்தை எதிரியானை என்று நினைத்து துதிக்கையை தூக்கிக்கொண்டு வேகமாக ஓடிக் குத்துகின்றது.

இதனைக் கண்ட யாளி ஒன்று அந்த யானையின் மீது பாய்ந்து ஓங்கி அறைந்து அதன் கொம்புகளை முறிக்கின்றது. யானையும் வாய்விட்டுப் பீறிக்கொண்டு மடிந்தொளிகின்றது. ஆயினும் யானை சினந்தணியாமல் அங்கேயே நின்ற வண்ணம் பெருமுழக்கம் செய்து மலையையே அதிரவைக்கின்றது. இப்படியாக ஒரு காட்சி இதனை ஆண்டாள் பல கோணங்களில் எடுத்துரைக்கின்றார்.

கருவறையில் ஆண்டாள், அரங்கமன்னார் சந்நிதியும் உட்பிரகாரத்தில் திருவேங்கடமுடையான் இராமன் திருவரங்கன் சந்திகளும், ஆழ்வார், ஆசாரியார் சந்திகளும் உள்ளன.

ஆண்டாள் கண்ணனை மானசீகமாகக் கண்டு களித்துக் காதல் கொண்ட இடமாகிய பிருந்தாவனத்தில் ஆண்டாள் அரங்க மன்னார் கோயில் அமைக்கத் திருவுளம் பற்றினார்கள் அரங்கசாரிய சுவாமிகள் இவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைத்தவர் வைணவ சமயத்தில் ஊற்றம்பெற்று சிறந்து விளங்கினார்.

திருமாலின் பெரியாழ்வாரின் திருமகளார் ஆண்டாள். கண்ணனை துவராபதிக் காவலன் என்றும் துவராபதி எம் பெருமான் என்றும் நினைந்து காதல் கொண்டு எழுந்ததால் தன்னை,

சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்

துவராபதிக்கு என்னை உய்த்திடுமின்[42]

தன்மீது பரிவுள்ளவர்களை நோக்கி வேண்டுகின்றாள் பெரியாழ்வார் பொங்கும் பரிவால் எம்பெருமானுக்குத் தீங்குவராமல் மங்களாசாசனம் செய்தவர் ஆண்டாள்தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தார்

வேங்கடத்தெம்மான்மீது காதல்

ஆண்டாள் திருமலையப்பன்பால் மேகத்தைத் தூதுவிடுவதாக அமைந்த நாச்சியார்திருமொழியிலுள்ள பதிகம் ஒன்று அன்னையாரின் கழிப்பெருங்காதலைக் காட்டுகின்றனர்.

திருவேங்கடமுடையானைப் பெரியாழ்வாரின் திருமகள் ஆசைப்பட்டுப் பெறாதொழிந்தாள் என்றால் அவனுடைய பெருமை என்னவாகும் எம்பெருமானைப்பித்து பட்ட துக்கத்தினால் என் மேனியழகு கெட்டது.

உடல் இளைத்தமையால் வளையல்கள் கழன்று விட்டது. உமக்காக யாம் செய்யத் தக்கது என்ன? என்று அந்த மேகங்கள் வினவுவதாக உள்ளது. இது ஆண்டாள் எம்பெருமானின்மீது காதல்கொண்டுள்ளதை இத்திருப்பதிகள் விளக்குவதாக அமைந்துள்ளது.

நம்மாழ்வார்

திருநெல்வேலி மாவட்டம் திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரியில் பிரம்ம ஆண்டு வைகாசித்திங்கள் விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தவர். ஆழ்வார்களுள் தலைவராகக் கருதப்பெறும் நம்மாழ்வார் அருளியச்செயல்களில் திருவேங்கடத்தைப் பற்றி வரும் செய்திகள் மிக அற்புதமானவை. விசிட்டாத் வைதத்துவத்தின் உயிர் நாடியாகவும் உலகுக்கு உணர்த்தும் பெருமைகளை இங்கு காணலாம். திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் இந்த ஆா;வாரை புகழ்ந்து பாடுகிறாா்.

தாள் பரப்பி மண் தாவிய ஈசனாகவும்[43]

காட்சி அளித்து அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றான். இத்தகைய எம்பெருமானின் திருவடியில் என்றும் சரண்புகுகின்றார்.

வைணவ சமயத்தின் கொடுமுடியாகத் திகழ்ந்தன சரணாகதி தத்துவம். இதனைப் பிரபத்தி எனவும் வழங்குவர். பிரபக்தியாவது பகவானை உபாயமாகப் பற்றுதல் என்பது நம்மாழ்வார்.

சரணம் ஆகும் தன தாள்
தார்க்கு எல்லாம்
மரணம் ஆனால் வை குந்தம்
கொடுக்கும் பிரான்[44]

என்பது நம்மாழ்வாரின் திருவாக்கு. இறைவனிடம் சரணடைந்துவிட்டாலும் இப்பூர்த்தி நிலையத்தில் வரும்வரை காத்திருப்பதுபோல மரணம் ஏற்படும் வரையில் காத்திருக்கவேண்டியதுதான். பிராரபதகர்மத்தை அனுபவித்தே கழிக்கவேண்டும்.

இறைவன் சஞ்சித கர்மத்தை தீயினில் தூகாசும்படி செய்துவிடுகின்றான். என்பது இத்திருவாய் மொழியின் கருத்தாகும். சாதி வேற்றுமை கருதாது எல்லோரும்எளிதாக பின்பற்றக்கூடிய வழி பிரபத்தி.

விஷய நியமமே உள்ளது[45]

என்று கூறிய பிள்ளை உலக ஆசிரியர் குணபூர்த்தியுள்ள விடமே விஷயமாகை இதனை நம்மாழ்வார் விளக்குகின்றார். திருத்தலப் பயணபலர் அந்த அடவியியல் செல்லுகின்றனர். மணந்துகொண்ட தல வரலாறு கூறுகின்றது. இப்பொழுது இம்மலையில் வாழும் வேடர்கள் செஞ்சு என்ற பெயர்களால் வழங்கப்பெறுகின்றனர். இவர்கள் மரபில் பிறந்த மங்கை யொருத்தியை எம்பெருமான் உகந்து மணந்து கொண்டதாக தல வரலாறு கூறுகின்றது என்று நம்மாழ்வார் இந்த அவதாரத்தில் ஆழங்கால் பாடியிருக்கிறார். அயோத்தியை நிகைக்கும்பொழுது அந்த நகர்க் கோமான் இராமனே நம் நினைவுக்கு வருகின்றான். நம்மாழ்வாரும்

கற்பார் இராமபிரானை அல்லால்
மற்றும் கற்பரோ[46]

என்றல்லவோ கூறிப் போந்தார் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றை கைத்தாளம் கொண்டு பாடி பின்னர்த் தாம்பூலம் பெட்டியிலே அவரைக் கண்வளரச் செய்வார். இங்ஙனம் பல சமயம் இக்குழப்பம் நேரிடுவதுண்டு.

அந்த வைணவரிடம் மகிழ்ச்சியுடன் தந்துவிட்ட எம்பெருமான் அவருடைய கனவில் தோன்றி "மூடனே நான்அடியாரின் தாம்பூலப் பெட்டி. திருக்கோயிலில் மகிழ்வுடன் தங்கியிருந்தேன். அவர் நாம்மாழ்வாரின் திருமொழியை உயிராகவும் ஆன்மாவாகவும் கொண்டவர். அவருடைய தூய்மையான திருவாயில் அமுதம் எச்சில் நீராடும் வாய்ப்பு எனக்கிருந்தது."[47] நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலிருந்து தேனும் பாலும் கன்னலும் அமுதமும் எனத் தித்திக்கும் பாசுரங்க்ள மனதில் கேட்டு மகிழ்ச்சிகள் பொங்கும். நீ அவைகளை எனக்குகிடைக்காமல் செய்ததுடன் சோர்வைதரும் பூசனை கட்கு என்னை உட்படுத்துகிறாய்"[48] என்று கூறிய வைணவர் இந்தக் கனவால் திடுக்கிட்டெழுந்து தடுமாற்றத்திற்கு உள்ளானார். உடனே அவர் விரைந்தோடி "அடியாரை அடைந்து அந்த சாலிக்கிராம எம்பெருமானை அவரிடம் சேர்த்துவிட்டார்."[49]

எம்பெருமான் மனநிறைவுடன் தாம்பூலப் பெட்டியிலே திருக்கோயில் கொள்ளலானார்.

வோவர்த்தனத்தைப் பெரிழயாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் ஆகிய மூவரும் மங்களசாசனம் செய்துள்ளார்கள். திருவேங்கடமாமலை ஒன்றை தொழ நம் வினை ஒழியுமே என்று நம்மாழ்வார் கூறுகின்றார்.

நம்மாழ்வார் கோவர்த்தன மலையருகே கொண்டு மலையைக் குடையாகப் பிடித்த நிகழ்ச்சியை கீழ்வரும் பாடலின் வாயிலாக அறியலாம்.

உண்ண வானவர்கோனுக்கு ஆயர்
ஒருப்படுத்த அடிசில் உண்டதும்
வண்ண மால்வரைய எடுத்து மழைகாத்
.. ..
எண்ணும் தோறும் என்நெஞ்சு எரிவாய்
மெழுகு ஒக்கும்[50]

என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் ஆழங்கால் அனல் வாய்ப்பட்டமெழுகுபோல் உருகுகின்றார். திருவரங்க பெருமான்மீது மோகித்த நிலையில் ஆழ்வார் பாசுரம் தாய்ப் பாசுரமாக முடிவெடுக்கிறார். தம் ஆன்மாவை முற்றும் கவர்ந்து கொண்ட ஆச்சரியமான செயல்களை உடையவன் ஈசுவரன். இதனை,

ஆட்கொள்வான் ஒத்து என்னுயிலி உண்ட மாயன்[51]

என்று நம்மாழ்வாரும் தெரித்தார். மேலும் சற்று தெளிவாகவே இவர் எம்பெருமான் என்னை அடிமை கொள்வான் போலவே புகுந்து என் உடலையும் ஆன்மாவையும் ஒக்கப் புசித்து நின்றானே இது என்ன! என்று வியக்கின்றார்.

ஐம்புலன்கள் மனதைத் தமக்கு உற்ற துணையாகக்கொண்டு உடலின் உள்ளாகவே நன்கு கலந்திருந்து தத்தமக்குரிய பொருளை விரும்பி தங்களின் உயிரை வருத்திக் கொள்கின்றனர். இவற்றை நின் அருளென்னும் தண்டாலடித்து அவற்றின் வலியெடுத்து எனக்கு நற்கதி அளிக்கவேண்டும் என்று துவரை நாதனை நம்மாழ்வார் வேண்டுவதாக குறிப்பிடுகின்றது.

ஏனைய அவதாரங்களைவிட கிருஷ்ணாவதாரத்திலே அதிகமாக ஈடுபட்டவர் அதுவும் வெண்ணெய் களவாடி ஆய்ச்சியர் தாம்பினால் உரலினிடைய ஆப்புண்டிருந்த நிலை என்று மோகித்திருந்தவராய் அந்த செயலை போற்றுகிறார்.

நம்மாழ்வார் பெய்யும் பூங்குழல் பேய்முலை உண்ட பிள்ளைத் தோற்றமும்[52] வஞ்சப் பெண்ணைச் சாவப்பால் உண்டதும் என்று இச்சிரு சேவகத்தில் அழங்கால்பட்டுத் தன்னையே மறக்கின்றார் என்று திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமானை அனுபவிக்கிறார் நம்மாழ்வார். மீண்டும் நம்மாழ்வார் பாசுரத்திற்கு வருவோம் தன்னில் மூவர் முற்றுமாய் தன்னுடைய சங்கல்ப்பமாகிற சொரூபத்திலே மூவராக நின்றவர்கள் பிரம்மன், சிவன், திருமால் ஆகியோரை போற்றி நம்மாழ்வார் விளக்கம் தந்துள்ளார்.

திருமங்கையாழ்வார்

இத்தகைய ஒரு காட்சியைத் திருமங்கையாழ்வார் திருப்பிரிதியை வருணிக்கும்போது இமயமலையின் காட்டுவர் கம்பநாடனும் சித்திர கூட மலையில் இத்தகைய காட்சியொன்றினை மேலும் அழகுபடுத்திக்காட்டுபவன். திருமங்கையாழ்வாரும் திருமலை இயற்கை எழிலும் மலையின் உச்சியில் ஈடுபட்டாலும் அதாவது இறைவன்பால் தம் மனதைப் பறிகொடுக்கின்றனர்.

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் எம் பெருமானின் பல்வேறு அவதாரங்கள் எடுத்து மக்களுக்கு செய்த பல்வேறு நற்செயல்களை எடுத்துக்காட்டி அகமகிழ்கின்றார். "திருவேங்கட முடையான் குருத்தம் ஒசித்த கோபாலனாக வந்தவர்."[53] "கொக்கின் வடிவமாகப் பகாசுரனை வாய்பிளந்து வானுலகத்திற்கு அனுப்பிய வித்தகர்."[54] "கல் நெஞ்சத்தை உடைய பூதனையிடம் பாலமுதம் பருகியதுடன் அவள் உயிரையே குடித்த அற்புதச் செயலைப் புரிந்தவர். கிருதயுகத்தில் வெள்ளை நிறத்தையும், கலியுகத்தில் கறுப்பு நிறத்தையும் துவாபரயுகத்தில் நீலமணி நிறத்தையும் கொண்டிருப்பவர்."[55]

கண்ணனாக இருக்கும் பொழுது மருதிடைத் தவழ்ந்து நளகூபரமணிக்ரிவர்களின் சாபத்தை நீக்கிய பெருமையுடையவர். குன்றம் ஏத்திக் குளிர் மழை காத்து ஆநிரைகளின் துன்பத்தைப் போக்கியவர் என்று திருமங்கையாழ்வார் போற்றி கூறுகிறார்.

உறவினரை நம்பிக்கொண்டு ஒழிந்தேன் அனுபவிக்கத் தகாதவற்றை தகாதவற்றை அனுபவித்த எண்ணற்ற பாவங்களைச் செய்தேன். பல உயிர்களைக்கொ கான்று பலவகைப் பாவங்களைப் பண்ணினேன் எண்ணற்ற யோனிகளில் பிறந்து இளைத்தேன்.

ஒருவிதமான நற்செயல்களை செய்துவிட்டேன் இளமைப் பருவத்தில் பெண்டிற்காகவே அலைந்து சதிர்கேனாகினேன். "உன்னையே அடைக்கலமாகப் பற்றிக் கொண்டேன். முன்னைத் தீவினைகளை எண்ணி என்னைக்கூடாது கைவிடாது ஆட்கொள்ளவேண்டும் என்று அவரைச் சரணமடைந்தார் திருமங்கையார்."[56]

வண்டியில் போகும்போதே இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ள திருமங்கையாழ்வார் திருப்பாசுரங்களில் ஆழங்கால் படுகின்றோம், அசித்து, ஈசுவரன் என்ற மூன்றும் வைணவத்தத்துவங்கள் எல்லா காலத்திலும் இம்மூன்ற தத்துவங்களும் சேர்ந்தே அமையும் இத் திருத்தலத்தைமங்களசாசனம் செய்துள்ளார். பெரிய பிராட்டியாரின் முன்னிலையை கண்டு சரணம் புகுகின்றார் ஆழ்வார். “தேனுடைக் கமலத் திருவினுக்கரே திருவடி அடைந்தே”[57]

பிராட்டியாரை முன்னிட்டு பிரபக்தி காண்பதை எம்பெருமானுடைய மேன்மைகளையும், தாழ்வுகளையும் வெளியிட்டுகொள் என்கிறார் ஆழ்வார் எம்பெருமானிடம் அடைக்கலம் புகும்போது இங்ஙனம் செய்யவேண்டும் சாத்திர ஆர்த்தியின் கனத்தாலே தன்குறைகளை சொல்ல வேண்டும். திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியில் இத்திருத்தலத்தை எம்பெருமானை மங்களசாசனம் செய்து அனுபவிக்கிறார். இத்திருத்தலத்தை சூழ்நிலை காட்டுவதோடு அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கின்றார். குறிப்பிடும் வதரியை அடைந்த பேரின்பம் முகிழ்க்கத் தொடங்குகின்றது. வதரியை அடைவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாகவே பருத்தி ஆடையை நீக்கி கம்பள ஆடையை உடுத்திக் கொள்ளவேண்டும்.

ஒரு சமயம் கம்சனால் ஏவப்பட்ட கேசிகன் என்னும் அசுரன் குதிரையின் வடிவங்ககொண்டு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படித் கணைத்து துரத்திக் கொண்டு ஆயர்கள் அப்பெருமான் தமது திருக்கைகளை நன்றாகப் பெருக்கி நீட்டிக் குதிரையின் வயிற்கொடுத்துக் கேசவன் என்ற திருநாமமும் பெற்றனன் இந்த நிகழ்ச்சியைத் திருமங்கையாழ்வார்.

மாவாயின் அங்கம் மதியாது கீறி

மழை முதுகுன் றெடுத்து ஆயர்தங்கள்

கோவாய் நிரை மேய்த் துலகுண்ட மாயன்[58]

இந்ந நிகழ்ச்சியில் ஆழங்கால் பாடுகின்றார் திருமங்கையாழ்வார்.

குலசேகரஆழ்வார்

சேரநாடுத் திருவஞ்சைக்களத்தில் பராபவ ஆண்டு மாசித்திங்கள் புணர்பூச நட்சத்திரத்தில் திடவரதன் அரசன் என்பவருக்கு மகனாக பிறந்தவர்.

இறைவனையே நினைத்து அவன் அருளை நாடுவதை நோயாளி மருத்துவர்.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்

மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்

மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மாநீ

ஆளா உனது அருளே பார்பன் அடியேன்[59]

தவம்செய்த தவமாம் தையலின் பெருமையை எடுத்தோதுகின்றான். இராமாயண காவியம் முழுதும் பிராட்டியின் பெருமை பொருந்திய சரிதமே என்று வால்மிக பகவானும் வாயோலையிட்டு வைக்கின்றான்.

வாரணாசியில் நகரத்தார் விடுதியில் தங்கியிருக்கும் நம்முடைய மனதில் இந்த எண்ணங்கள் அலையிட்டு எழுகின்றன. இந்த நிலையில் பகலுணவிற்குமேல் இந்த நமக்குத் துணை செய்வதற்கு கென்றே அன்று காலையிலேயே எழுப்புகின்றார். வெண்ணெய் தயிர் இவற்றைக் களவாடியுண்ட நிகழ்ச்சி பல்வேறுவிதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. என்று அரசப் பொறுப்புகளைவிட்டுப் பக்தியில் திருமாலின் கூட்டத்துடன் அவர் அதிக நேரம் செலவழிப்பதைக் கண்ட சபையினர் அரச சகையில் திருட்டுப்போன ரத்தின மாலையை இந்தப் பக்த கோஷ்டியினர்தான் திருடினர் என பழிசுமத்த குலசேகர ஆழ்வார் மிகவும் வருத்தம் கொண்டு,

நான் எம்பெருமானை வணங்குகின்ற பக்தன் நான் அவருடைய அடியேன். நான் அப்படி செய்யமாட்டேன் என்று வாக்குரைத்தால் இவர் பெருமான் மீது கொண்ட பக்தி ஆதலால பல பாசுரங்களை பாடினார்.

தொகுப்புரை

ஆழ்வார்களின் மொத்த எண்ணிக்கையும் அவர்களில் ஒன்பது பேர் மட்டுமே மங்கள சாசனம் செய்துள்ளனர். மங்கள சாசனம் பற்றியும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பக்தி நிலைப்பற்றி இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது. ஆழ்வார்களின் ஆழ்ந்த நிலையில் இறைவனை பாடி பரவசம் அடைந்துள்ளது இவ்வியலின் வாயிலாக அறியமுடிகிறது.

சான்றென் விளக்கம்

1. சுஜாதா ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம், ப.12

2. மேலது,ப.12

3. நாலாயிரதிவ்விய பிரபந்தம் உரையுடன் நான்காம் ஆயிரம் துரை.இராசாராம், மூதறிஞர்.வி.எஸ்.வி.இராகவதாசன், ப.5

4. மேலது,ப.6

5. சுஜாதா ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம், ப.12

6. மேலது, ப.19

7. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.48

8. மேலது,ப.49

9. மேலது,ப.55

10. நாலாயிரதிவ்விய பிரபந்தம், ப.7

11. மேலது, ப.30

12. ந.சுப்புரெட்டியாரின் வடவேங்கடமும் திருவேங்கடமும், ப.98

13. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.23

14.மேலது, ப.23

15. மேலது, ப.5

16.நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ப.17

17. மேலது, ப.63

18. மேலது, ப.94

19. மேலது, ப.61

20. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.8

21. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ப.

22. மேலது, ப.111

23. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.6

24. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்- இயற்பா மூன்றாம் திருவந்தாதி, ப.133

25. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.10

26. பொருண்மை நோக்கில தமிழ் இலக்கிய வரலாறு மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, ப.152

27. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.142

28. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.142

29. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்: நான்முகன் திருவந்தாதி, ப.151

30. மேலது, ப.157

31. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ப.188

32. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.59

33. மேலது, ப.62

34. மேலது, ப.71

35. மேலது, ப.82

36. மேலது, ப.102

37. மேலது, ப.102

38. மேலது, ப.121

39. மேலது, ப.128

40. மேலது, ப.11

41. மேலது, ப.144

42. மேலது, ப.144

43. மேலது, ப.15

44. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.22

45. மேலது, ப.23

46. மேலது, ப.23

47. மேலது, ப.37

48. மேலது, ப.56

49. மேலது, ப.103

50. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.107

51. மேலது, ப.139

52. மேலது, ப.159

53. மேலது, ப.159

54. மேலது, ப.12

55. மேலது, ப.13

56. மேலது, ப.48

57. மேலது, ப.48

58. மேலது, ப.123

59. பொருண்மை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.156

இயல் மூன்று
திருவேங்கடத்தின் வரலாறுகள்

முன்னுரை

இன்பமும் துன்பமும் நிறைந்த இந்த உலகத்தில் நம்முடைய சிந்தை திருவேங்கடத்தின் பாலும் திருவேங்கடமுடையானையும் எண்ணி வட்டமிட்டுக்கொண்டிருந்தால் ஏழுமலையானின் அருள் நமக்கு கிடைக்கும் என்பது நம்பிக்கை. இவ்விதமாக தொடர்கிறது இறைவனின் அருள்

3.1. வேங்கடம் மேவிய விளக்கு

நீலத்திரைக்கடல் ஓரத்திலே
நித்தம் தவம் செய் குமரிஎல்லை வட
மாலவன் குன்றம் இவற்றிறையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு[1]

என்று பாடினார் தேசியகவி பாரதியார். இந்த மாயவன் குன்றமே திருவேங்கடம் என்பது சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. தொல்காப்பிய பாயிரத்திலும், சங்க இலக்கியத்திலும் வடவேங்கடம் என்னும் மலைத் தொடர் இதினிற்றும் வேறுபட்டதாக கூறப்படுகிறது. இன்றுள்ள திருப்பதி மலை மிகவும் புகழ்மிக்கது. இடைக்காலத்தில் இத் திருத்தலம் முக்கியமாக அமைந்ததற்கு காரணம் சமயச் சார்பற்றதாக இருப்பதேயாகும்.

3.1.1. திருப்பதி புகழோங்கிய காலம்

“இன்று பெருமான் மையோன் திருப்பதி மலையைத் திருப்பதி என்றே வழங்குகின்றனர். விவரம் அறிந்தோர் இதனைத் திருமலை என்று கூறுகின்றனர். இம்மலை ஏழுமலை என்றே வழிவழியாக வழங்கப் பெறுகின்றன.”[2] இன்று பேருந்து வழியாகச் செல்வோர் இந்த ஏழுமலையை வரிசையாகக் காணலாம்.

ஒன்றிரண்டு ஆண்டுகட்கு முன்னர் இதுவே ஏறும் வழியாகவும் அமைந்திருந்தது இந்த வழியில் கீழிருந்து மேலே செல்லுங்கால் முதலில் காண்பது

எருத்துமலை (விருஷபாத்திரி)

நீலமலை (நீலாத்திரி)

மைவரை (அஞ்சனாத்திரி)

பாம்புமலை (சேஷாத்திரி)

கருடமலை (கருடாத்திரி)

நாராயணமலை (நாராயணாத்திரி)

வேங்கடமலை (வேங்கடாத்திரி)

என்றவாறு திருப்பதி மலைகள் வரிசையாக அமைந்துள்ளதை காணலாம்.

ஆழ்வார பெருமக்களால் (6-8 நூற்றாண்டுகள்) மங்கள சாசனம் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. வடநாட்டுத் திருப்பதிகள் என்ற பகுதியில் அடங்கும் பன்னிரண்டில் இது முதலாவதாக இடம் பெறுகிறது.

திருவரங்கம் –திருமலை பெருமாள் கோயில். இதனை காஞ்சி என்று வைணவப் பெருமக்களால் போற்றப்பெறுகின்றது. மூன்று திவ்விய தேசங்களுள் இது நடுநாயகமாகத் திகழ்கின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த திருவேங்கடத்தைப் பற்றி 213 பாசுரங்கள் நாலாயிரத்தில் காணப்பெறுகின்றன.

இவற்றைப் பாடியவர்கள் பத்து ஆழ்வார் பெருமக்களாவர். பாடியி விவரம் குறித்து கூறப்பட்டுள்ளது.

பொய்கையாழ்வார் 10 பாசுரங்கள்

பூதத்தாழ்வார் 9 பாசுங்கள்

பேயாழ்வார் 19 பாசுரங்கள்

திருமழிசையாழ்வார் 15 பாசுரங்கள்

திருப்பாணாழ்வார் 2 பாசுரங்கள்

குலசேகர ஆழ்வார் 11 பாசுரங்கள்

பெரியாழ்வார் 7 பாசுரங்கள்

ஆண்டாள் 16 பாசுரங்கள்

திருமங்கையாழ்வார் 62 பாசுரங்கள்

நம்மாழ்வார் 62 பாசுரங்கள்

மொத்தம் 213 பாசுரங்கள் இவர்களால் பாடப்பட்டுள்ளது. இப்பாசுரங்களை திருவேங்கடகலம்பக ஆசிரியர் முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் "பதின்மர் செந்தமிழ்"[3] என்று போற்றிப்புகழ்வர்.

3.1.2. திருவேங்கடத்தின் புகழ்

ஆழ்வார் பெருமக்களால் மங்களசாசனம் பெற்ற திருவேங்கம் பதினொன்றாம் நூற்றாண்டில்தான் பெரும் புகழ் அடையத் தொடங்கியது. இராமானுநர் திருவேங்கடமுடையான் திருக்கோயிலின் பால் காட்டிய அக்கறையும் அவருடைய சொந்தப் பெருமையும் சிறப்புமாக சேர்ந்து திருக்கோயில் புகழை மிகவும் உயர்த்திவிட்டது.

இராமானுசர் திருமலைக்கு மூன்று முறை வந்ததாக அவர் வரலாற்றால் அறியக் கிடைக்கின்றது. இன்று திருமலையில் நடைபெறும் வழிப்பாட்டு முறைகள் யாவும்இராமானுசர் வகுத்தவையே என்று திருமலையொழகு என்ற நூலின் வாயிலாக அறியமுடிகிறது. இராமானுசர் திருவேங்கடமுடையானுக்கு கைங்கரியம் செய்யும் அர்ச்சகர்களுக்கு கட்டுக்குடியிருப்பு வசதிகளையும் பிற வசதிகளையும் செய்துள்ளார். தன் தாய்மாமனாகிய திருமலை நம்பியையே இவற்றையெல்லாம் கண்காணிக்கும் மேலாளராகவும் நியமனம் செய்துள்ளார்.

இராமானுசருடைய சமூகச் சீர்திருத்தமும் அவருடைய தத்துவ ஞானமும் பாமர மக்கள் மனத்தையும் அவருடைய மொழி அறிவு அவருக்கு பலவகையில் கைகொடுத்தது. அவருடைய கீதைப் பேருரையும், பிரம்ம சூத்த்திரம் பேருரையும் அவரை வட நாட்டினருக்கு அறிமுகம் செய்து வைத்தது எனலாம்.

இதனால் இராமானுசரின் புகழ் நாட்டில் நாலாபுறங்களிலும் பரவியது. இதனால் அவர்மிக நெருங்கிய உறவுடன் கைங்கரியம் செய்துவந்த திருவேங்கடமுடையானின்

பெருமையும் சிறப்பும் ங்கும் பரவி திருவேங்கடத்திற்கும் முக்கியத்துவம் ஏற்படலாயிற்று. இவற்றைத்தவிர சைவ வைணவ வாக்குவாதம் பற்றிய வரலாறும் திருமலையின் புகழ் எங்கும் பரவக் காரமாக இருந்தது. இந்த வரலாற்றைச் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பின்பழகிய பெருமாள் சீயர் அருளியதாகும்.

3.1.3. திருவேங்கடத்தின் சிறப்பு

வைணவ தத்துவம் சித்து, அசித்து, ஈசுவரன் என்று மூவகைப்பட்டிருக்கும் இதனைத் தத்துவேத் திரயம் என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும் இந்த திருவேங்கடம் ஆகும்.

இந்த உறவினைச் சரீர சரீரி பாவனை என்று போற்றி உரைக்கின்றார் அப்பெருமக்கள். அசித்தும் எம்பெருமானுடைய படைப்பாகிய அவனுடைய திருமேனியாகத் திகழ்வதால் அதுவும் வழிபாட்டிற்குரியது.

சென்று சேர்திரு வேங்கட மாமலை

ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே[4]

என்ற நம்மாழ்வாரின்பாசுரம் இக்கருத்திற்கு அரண் செய்வதா அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்ன உடனேயே எம்பெருமான் மனமகிழ்ந்து நமக்குத்திருவருள் பாலிக்கும் பெரும் பேசப்பெறுகின்றது.

திருமா லிருஞ்சோலை

மறை என்றேன்; என்னத்

திருமால் வந்து என்

நெஞ்சுநிறையப் புகுந்தான்[5]

என்ற திருவாய்மொழி இதற்குச் சான்றாக நிற்கின்றது. இயற்எழில் நிறைந்த திருவேங்கடத்தை ஆழ்வார் பெருமக்கள் தம்முடைய பாசுரங்களில சிறப்பித்துப் பாடி உள்ளனர். இவை யாவும் கல்நெஞ்சத்தையும் கரையச் செய்யும் இன்பப் பாசுரங்கள்.

கவி நயமும் இசையேற்றமும் பொருட் செறிவும் பொருந்திப் பொலிபவை. இறைவனிடம் அன்பு கொண்டு ஈடுபட்டு நெஞ்சம் நெக்குருகிப் பாடுபவன் சாதாரண

மனிதனாக இருப்பினும் அவன் பாட்டு எவர் உள்ளத்தையும் எளிதில் கவரும். ஆனால் பரம்பொருளின் பேரருளை நிறைவாகப் பெறவேண்டும் என்று பேராவாக் கொண்டு மனம் உருகிநெஞ்சம் கசிந்து பாடும் பக்தர்கள் இசைக் கவிஞர்களாக இருப்பின் அவர்களின் தோத்திரப் பாக்கள் எவ்வளவு உயர் சிறப்பை உடையனவாக இருக்கும் என்பது புலப்படுகின்றது.

திருவேங்கடமலை திருவரங்கதைக் காட்டிலும் முதலாழ்வாரின் உள்ளத்தைக் கவரக் கூடியதாக இருக்கவேண்டும். மனச்சுடரைக் கொண்டு இதயம் என்னும் விளக்கைத் தூண்டுவதாக அமையும் என்பதனை அறியமுடிகிறது. இவரது உள்ளத்தில் சுடர்விட்டெரியும் பக்தி விளக்கு நமக்கு ஓரளவு புலனாகின்றது. மண்ணவர்க்கு மட்டுமன்று விண்ணவர்க்கும் மனச் சுடரைத் தூண்டுகின்ற இம்மலையே திருவேங்டமலை ஆகும்.

“சேரர்கோன் குலசேகரப் பெருமாளுக்குத்திருவேங்கடமலையின் மீது ஏற்பட்ட கழிபெருங்காதல் அற்புதமானது ஓர் இனிய திருமொழியில் அந்த ஆழ்வார் எண்ணக் கோவைகளைக் கண்டு களிக்கலாம்.”[6] நான் திருவேங்கடத்தில் பிறந்தாலும் அங்கு ஒரு பொருளாக இருந்தாலும் போதும் திருவேங்கடமலையில் வாழும் இந்த பெயர் கிடைக்கப்பெற்றாலே போதும். அங்கே வாழும் ஒருகுருகு திருவேங்கட சுனைமீன் வேங்கடகோள் மலையில் பாயும் கானாறு, காட்டு நெறி, கருவுறைப்படி என்ற நிலை நமக்கு ஒவ்வொன்றாகப் பிரித்துக் கூறுகின்றார்.”

இறுதியாக எம்பெருமான் திருமலையில் ஏதேனும் ஆவனே என்று சொல்லி தம் ஆசைக்குத் தலைக்கட்டி விடுகின்றார். இந்தத் திருமொழியை அடியொற்றியே முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார் அவர்களின் திருமொழியும் அமைகிறது.

3.1.4. திருமலையின் இயற்கைக் காட்சிகள்

எங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கெல்லாம் இறைவனும் இருப்பதாகக் கொள்வது தமிழரது கொள்கை. இக்கொள்கையே முருகன் என்ற தமிழ்க் கடவுளின் தத்துவம் என்பதைத் திரு.வி.க. போன்ற இறையன்பு கொண்ட அறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

இக்கொள்கையை ஒட்டிப் பக்தர்கள் இயற்கையில் தோயந்த இறைவனை அனுபவிக்கின்றனர். காட்டிலும் நாட்டிலும் மண்ணிலும் விண்ணிலும் எல்லா இடங்களிலும் காணும் இயற்கையழகுகளில் எம்பெருமானின் அழகுக் கூறுகளில்மனத்தைப் பறிகொடுக்கின்றது.

இத்தகைய மனநிலையைக் கொண்ட ஆழ்வார்களும் இயற்கை அழகினைத் தம் உள்ளத்து அழகுடன் குழைத்துத ன் மனம் விரும்பும் கடவுள் வடிவத்தின் தெய்வீக அழகாக காண்கின்றனர். இத்தகைய இயற்கை அழகு வாய்ந்த தலங்கள் திவ்விய தலங்கள் என்றும் அழைக்கப்படும்

“திருப்பதிகள் என்றும் மதித்து அங்குள்ள திருக்கோயில்களில் கொண்டிருக்கும் எம்பெருமானை வழிபடுவது அவசியம் என்று கருதினார்.”[7]

பூதத்தாழ்வார் காட்டும் காட்சி ஒன்றினைக் காண்போம். திருமலையில் மதப்பெருக்கால் செருக்கித் திரியும் ஆண் யானை ஒன்று அது தன் காதலியாகிய பெண் யானையை காண்கிறது. அதனைக் கடந்து அப்பால் செல்ல மாட்ாது. அதற்கு இனிய உணவு ஈந்து அதன்மனம் நிறைவிக்க விரும்புகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மலை திருவேங்கடமலை ஆகும்.

3.1.5. ஏழுமலையானின் சிறப்பு

“அழகிய உயர்ச்சியில் ஈடுபட்டாலும் அங்குத்திருக்கோயில் கொண்டுள்ள இறைவன்பால் தம் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். பெரிய திருமொழியில் திருமங்கையும் பெருமானின் பெருமையும் எம்பெருமான் பல்வேறு கண்ணாக இருக்கும்போது மருதிடைத் தவழ்ந்து நளகூபர மணிக்ரீவர்களின் சாபத்தை நீக்கிய பெருமையுடையவர் குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்து ஆநிரைகளின் துன்பத்தை போக்கியவர்.”[8]

அகல கில்லேன் இறையும் என்று

அலர்மேல் மங்கை உறைமார்பா

நிகரில் புகழாய் உலகம் மூன்று

உடையாய் என்னை ஆள்வோனே

நிகரில் அமரர் முனிக் கணங்கள்

விரும்பும்திருவேங்க டத்தானே

புகழ் ஒன்று இல்லா அடியேன் உள்

அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே[9]

இறைவன் ஒருவனை காப்பாற்றக்கூடியவன் அன்னை பிள்ளைக்கு முலைப்பாலும் மருந்தைக் குழைத்து ஊட்டுவதுபோல அன்னை உடலுக்கு மருந்து ஊட்டுகின்ற ஆசிரியர்கள் உயிருக்கு மருந்து ஊட்டுகின்ற மூன்று ஆச்சரியமான செயல்களைச் செய்வதன் பதங்களோடு ஒப்பிட்டுப் பொருள் கூறுவர்.

ஏழுமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் பொலியும் திருக்குணத்தை ஆசாரிய ஏழுமலைகளையும் சிறப்புகளை கொண்டு விளங்குகின்றது.

மண்ணோர் விண்ணோர் வைப்பில்

ஏழுலகுக்கும் உயிர்பாசம் வைத்தநிகரில்

வாத்சல்யம் உஜ்வலம்[10]

மக்கள் மனதில் மலைமேலிருக்கும் மாதவன் நிலையான இடம்பெற்றிருப்பது போலவே பக்திச்சுவை கிளர்ந்தெழச் செய்யும் இப்பாடலும் நிலையான இடம் பெற்றுவிட்டது.

இன்று மக்கள் மனமாகிய தேசப் படத்தில் மலையின் பெயரும் மலையன் பெயரும் நெடியோன்குன்றமும் குன்றத்துக்கோயில் கொண்டுள்ள முகில் வண்ணனும் அழியா வாழ்வு பெற்றுத் திகழ்கின்றனர். திருப்பதியும் உலகத்திருத்தலப் பயனிகளின் பேரிடமாகத்திகழ்கிறது.

“அடர்ந்த காடுகள் நெருங்கி இருப்பது இத்திருமலை ஆழ்வார் அச்சம்தரும் விதமாக அமைந்துள்ளது. நாம் அவ்விடத்திற்குச் செல்லும்போது அதனைக் காணமுடியும். வண்டின் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை, கொண்டல் மீது அணவும் சோலை, குயிலினம் கூவுஞ் சோலை”[11] ஆழ்வார்களின் கருத்தாக திகழ்கிறது.

அலைந்து திரியும் கலைத்துப்போன மிருகங்களை அங்கு காணலாம். மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பிளம்புகள் தோன்றுவதையும் காணலாம்.

வாகை நெற்றுகள் காற்றுவீசுவதால் ஒலிக்கின்றன. மூங்கில்கள் உராய்வதால் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பற்றி எரிந்து குறைகொள்ளியாக இருக்குமாற்றைச் சிறப்பாகக் காணலாம். இன்னும்

காய்த்தவாகை நெற்றொலிப்பக்

கல்லதர்வேய்ங் கழைபோய்

தேய்த்ததீலால் விண் சிவக்கும்

சிங்கவேழ் குன்றமே[12]

வாகை செந்தீ வின் முழுவதையும் சிவக்கச் செய்யும் சில சமய சூழல்காற்று சிவந்த நெருப்பினால் வாரிக்கொண்டு விண்முழுவதும் ஓடிப் பரவுகின்றது. மூங்கில் நெருப்பில் வேகின்றபோது ஒலி உண்டாகிறது. அந்த நெருப்பில் கற்களும் கூட வெந்துபோகின்றது. மேலும அந்த மலைச் சூழ்நிலையில் நெல்லி மரங்கள் கல்லிடைகளில் முளைத்து வளர்ந்து அவற்றிடையே வேரோடு கையினால் அந்த வேர்கள் பருத்துப் பாறைகளையும் பிளந்து தள்ளுகிறது. இங்கு அச்சத்தை விளைவிக்கும் அளவில் யானை, சிங்கம், புலி முதலிய விலங்குகள் இங்கும் மங்கும் ஓடித்திரிகின்றது.

எம்பெருமானை அனுபவித்த பிறகு அவன் அருளிய பிரசாதங்களையும் உண்டு அந்த பிரசாதத்தில் தான் நாங்கள் பசியாற்றிக்கொள்ளுகிறோம் என்று திருமலையாகிய மேவிய விளக்கை பல்வேறு ஆழ்வார் திருமலையின் பெருமையையும் சுட்டிக்காட்டியுள்ளார். இது அழியாவாழ்வுபெற்ற திருவேங்கடமுடையான மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஆகும்.

திருவேங்கடமுடையானை அடைவதற்து அவனையே உபாயமாகவிருக்கின்றான். சித்திரகூட மலையில் வரும் காட்சி. இங்கு ஓர் யானை மீது அளவற்ற அன்பு கொண்டுள்ளதாக அமைகிறது. ஒரு மலைஅடுக்கு ஒரு பெரிய தேன்கூடு. அதில் தேன் ததும்பி நிற்கிறது. ஆண்யானை அண்மையில் உள்ளமரக்கிளையை ஒடித்து தனது பெண்யானையைக் கொண்டு தழைக்கொத்தினை ஒடித்து அதனைக் கொண்டு அம்மலை வண்டினை ஓச்சி நிற்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இடம்தான் திருவேங்கடமலை.

இத்திருத்தலம் அமைந்துள்ள இடத்தில் மேகங்கள் அதிர்கின்றது. தோகையை கொண்ட மயில்கள் விரிச்சி உச்சி மலைக்கு ஏறமுடியாமல் தவிக்கின்றது. திருவேங்கட முடையான் மீது இத்திருத்தலத்திற்கு வரும் எல்லோரும் அருள் கிடைத்து மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. திருப்பதி மலை அடர்ந்த காடுகளாகவும் அங்கே பயணம் செய்யும் மக்கள் மனதில் பயம் ஏற்படக்கூடிய நிலையில் அமைந்துள்ளது. மரங்கள் ஒன்றொடொன்று உரசிக்கொண்டு கடும் தீயையும் தருகிறது. அங்கு வரும் விலங்குகள் எல்லாம் ஆராவாரத்துடன் அச்சத்தை தூண்டும் நிலையில் உள்ளது.

ஆனாலும் சிறப்பு வாய்ந்த திருமலையை அடைய விரும்பும் மக்கள் எம்பெருமான் மீது நம்பிக்கை கொண்டுள்ள போது அவர் பலவிதமாக காட்சியளிக்கின்றார். மக்களுக்கும் பலவிதமான அவதாரங்களை எடுத்து உதவுகின்றார்.

3.2. சங்ககால வடவேங்கடம்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ் கூறும் நல்லுலகம்[13]

என்பது தமிழ் கூறும் நல்லுலகத்தை இனம் காட்டும் வகையில் தொல்காப்பியத்திற்கு பனம்பரனாரின் கருத்து போன்றவற்றை குறிக்கும் ஈண்டுத் தென்குமரி என்பது குமரியாறு கடல்கோள் கொண்டது எனவும் வழங்கப்படுகிறது. ஆனால் வடவேங்கடம் என்பது என்ன இக்கால சூழ்நிலையில் எப்படி கருதுகின்றார்கள் இதைப் பற்றி சிந்திப்பதே இவ்வியலின் நோக்கமாக அமைகின்றது. இதற்கு சங்க இலக்கியங்களின் வரும் வேங்கடத்தை குறிப்பாக காட்டலாம்.

3.2.1. சங்க இலக்கிய குறிப்புகள்

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் பட்டினப்பாலை சிறுபானாற்றுப்படைகளில் இவற்றிடையே வேங்கடத்தை பற்றி குறிப்புகளாக திகழ்கின்றது. இதன் இடையே பக்தி நிறைந்த குருந்தொகையில் உள்ளவேங்கடம் என்னும் சொல் சங்க காலமுதல் தற்காலம் வரையில் நிலவி வருகின்றது.

கண்ணார் பாடியுள்ள வேங்கடம் என்னும் தொடர் வேங்கடநெடுவரை என்ற தொடர் நீண்டலத்தொடர் என்ற பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைமகன் பிரிவை கண்ட தோழியும், தலைவியும் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள். இதில் வேங்கடத்தை பற்றி பாடல் கூறுகிறது. இப்படியாக.

ஈன்றுநாள் உலந்த மெண்ணடை மடிப்படி

கன்றுபசி களை இய இயங்கள் யானை

முற்றா மூங்கில் முளை தரு பூட்டும்

வென்வேல் திரையன் வேங்கடம் நெடுவரை

வருதும் யாம் எனத் தோன்றிய

பருவம் காண; அது பாயின்றால் மழையே[14]

ஈன்று அணிமை கழிந்த மெல்லிய நடைவாய்ந்த பெண்யானை அதன் கன்றும் பசியால் வாடுகின்றது. இப்பசியை போக்குவதற்கு பசிய கண்ணினையுடைய ஆண் யானை மூங்கிலின் முற்றாத முலையினைக் கொண்டு உண்பிக்கும். இத்தகைய மலைச் சாரலையுடைய திரையானது வேங்கட மலை அந்த நெடுவரை நல்ல நாட்களில் மலர்ந்த வேங்கை மரத்தின் துணையை அகவி அலைக்கும். அங்கிருக்கும் பறவைகள் கார்ப்பருவத்தில் இதுதான் தலைவன் திரும்பி வருவதாக சொன்ன தலைவன் வரவில்லை.

“வேங்கை மரத்தின் பூக்கள் பல பள்ளிகளையுடைய புலி நிறத்திற்கு ஒப்பானதாக கருதப்படும். கீழே உதிர்த்துவிடுகின்றது. வேங்கை மரத்தின் இடையே நாரத்தை மரங்களும் காணப்படுகின்றது. இவற்றியிடையே அழகிய முசுக்கள் பாய்ந்து தாவுவதல் நாரத்தின் மரங்களும் காணப்படுகின்றது.”[15]

இத்தகைய சூழ்நிலையும் தேன் நாறும் இடங்களை கொண்டது வேங்கடவைப்பு என்று கூறுகின்றது. தேன் நுங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர் வேங்கடம் காட்டுவார். இவர் பால் பொருள் தேடும் பொருட்டு வேற்றுப்புலம் அடைந்த தலைவன் விரைந்து திரும்பி விடுவார். சிகரம் உயர்ந்த பாறைகளையுடைய மலைகள் பலவற்றைக் கடந்து செல்லுகின்றனான்.

சங்க புலவரும் வேங்கடமலையை இதில் எல்லையாக வேங்கடமும் தென் எல்லையாக குமரியும் கூறப்பெற்றுள்ளது. ஆகவே வடவேங்கடம் என்னும் குறிப்பாக மாறுகின்றது. விழவுடைவிழுச்சீர் வேங்கடம் என்ற சொற்றொடரை அடிப்படையாகக் கொண்டு அதனை மையமாககொண்ட ஒரு குறிப்பாக திகழ்கின்றது.

3.2.2. வேங்கடம் பெயர் விளக்கம்

"சங்ககால வேங்கடத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அதாவது வடவேங்கடத்தைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும். வேங்கடம் என்ற சொல்லின் துணை பொருளாக வேம் + கடம் என்ற இரண்டு சொல்லாக பிரிந்து கடம் என்னும் சொல் பாலைநிலத்தை குறிக்கின்றது."[16]

தமிழ் கூறும் நல்லுலகிற்கு வடபால் உள்ள நாட்டுப் பகுதியும் மேலே குறிப்பிட்ட இயற்கையின் அமைப்பிலும் எங்கு நிலம் நீரின்றி அமையப்பெறும்.

பெயன் மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் தவித் துணைப்புறவு இரிக்கும் அத்தம்[17]

3.2.3. வடவேங்கடம்

வடவேங்கடம் இன்னதென ஓரளவு வரையறை செய்யமுடியும். தமிழ்கூறும் நல்லுலகம் வடதிசையில் நீண்ட மலை தொடர்கள் பொறுக்கமுடியாத அடர்ந்த வெப்பம் நிறைந்த காடுகள், சுவடுகள்இவற்றிடையே குன்றுகள் காணப்படும் இடம் ஆகும்.

சங்க நூல்களில் குறிப்பிடும் வேங்கடமானது தென்குமரி வரை ஏனைய சங்க இலக்கிய குறிப்புகளில் வேங்கடமும் இப்பகுதியை குறிப்பாக காட்டுகிறது என்பதை அறியலாம்.

வேங்கடம் என்ற இப்பகுதியானது கிழக்குக் கடற்கரையின் அருகில் திருப்பதி மலைக்கும் வேங்கடம் என்ற பெயர் அமையப்பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களில் வெப்பம் மிகுந்த பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. வேங்கடத்தின் ஒரு பகுதியாகவோ

அல்லது அப்பகுதியின் ஓரத்திலோ இம்மலை இருந்திராவிடில் சிறந்த தமிழறிஞராக திகழ்ந்த முதல் ஆழ்வார்கள் இம்மலையை வேங்கடம் என்றே அழைக்கின்றனர்.

சோணாட்டின் வட எல்லையில் கிழக்கு பகுதிகளில் தொடங்குகின்றது. இத்திருப்பதிமலை வேங்கடம் என்ற பகுதி பாண்டிநாட்டின் எல்லையாக நீண்டு மேற்குக் கடற்கரையை எட்டுகின்றது.

வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை
மறப்போர் பாண்டியர் அறத்திற்காக்கும்[18]

3.2.4. வடநாட்டுத் திருத்தலப் பயணம்

திருமந்திரம் பிறந்த இடம் பதரிகாச்சிரம்ம பதரி இமயமலையிலிருக்கும ஒரு திருத்தலம் என்பது வடமொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். அம்மரங்கள் அடர்ந்து கிடக்கும். பதரி என்னும் இலந்தைமரங்கள் வதரிநாதன் எழுந்தருளியிருக்கும் திருமலை முழுவதும் பரவியிருக்கும்.

3.2.5. வேங்கடத்தின் சூழ்நிலை

அழகு என்பது ஒரு தத்துவம் எங்கெல்லாம் அழகு ததும்பிவழிகின்றதோ அங்கெல்லாம் ஆண்டவன் கோயில் கொண்டிருப்பான் என்பது நம் முந்தையோர் கண்ட கொள்கை.

ஆலமும் கடம்பு நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்[19]

என்னும் பரிபாடல் வரிகளில் ஆலமரமும் கடப்ப மரமும் யாற்றிடைக்குறையும் குன்றும் பிறவுமாகிய இடங்களில் எல்லாம் இறைவன் பல்வேறு பெயர்களில் பல்வேறு தோற்றங்களின் நிலைகொண்டிருப்பான். இறைவனுடைய திருமேனியும் அழகையும் கற்பகத் தரு மரத்தைப் போலவும், பனைத்துப் பூத்தாற்போல நிற்கின்றான் எம்பெருமான் என்று வர்ணிக்கின்றது.

ஆழ்வார்கள் திருமலைக்கு வரும்போது அந்த அழகு கொள்ளை கொள்கிறது. மணம்மிக்க மலர்கள் நாறும் விசாலமான சோலைகளால் சூழப்பட்டிருந்தது. திருமலையில் எண்ணற்ற தீர்த்த இடங்கள் அங்கு உள்ளது. விண்ணிற்றும் மழை நீரும் பனி நீரும் பெய்யப்பெற்ற காளமேகங்கள் வந்தபடியாக உள்ளது.

தேனிலும் பூம்பொழில் திருவேங்கடமலை என்றும் குன்றே மேகம் குளிர் மாமலை வேங்கடம் பல்வேறு சோலைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இத்திருமலையில் இயற்கை அழகு மலையின் உச்சியில் பலவிதமான அழகிய தோற்றங்களை கொண்டுள்ளார் எம்பெருமான்.

3.2.6. பாவங்களை போக்குதல்

ஆழ்வாரின் திருவுள்ளமும் அவர் விருப்பத்தகு இசையை பாடி திருவேங்கடமுடையானின் தரிசனத்தை இருவருமாக அனுபவிக்க வந்தனர். எல்லாவற்றிற்கும் இறைவனாய் எல்லாவித உறவுகளாகவும் திருமால் இங்கு காட்சியளிக்கிறார்.எல்லாவிதமாகவும் திகழும் இறைவன் பக்தர்களின் பாவங்களை போக்க வேண்டும் என்று கருதியே பெரிய திருவடிகளை கொண்டு காட்சியளிக்கிறார். அடர்ந்த புல் பூண்டுகள் காணப்படும் உயர்ந்த வேங்கடமே சங்ககால வேங்கடம் எனவும் வடவேங்கடம் எனவும் பல்வேறு வகையில் கூறப்படுகிறது.

3.3. இன்றைய திருவேங்கடம்

இன்று கற்றறிந்த புலவர்களும் பொதுமக்களும்திருப்பதி மலையையே வடவேங்கடம் என்று கருதினர். வடமாலவகுன்றமாகவும் திகழ்கின்றது. முதலில் திருப்பதி என்ற நகரத்தின் இருப்பையும் அதன் இயற்கை சூழ்நிலையையும் காண்போம்.

கோவிந்தராசர் இங்கு திருக்கோயில் கொண்டிருப்பதால் இந்நகரத்தைப் பக்தர்கள் கோவிந்தராசப் பட்டணம் என்றும் வழங்கப்படுகின்றது. இந்த நகரத்தை ஒட்டியுள்ள மலையையும் மக்கள் திருப்பதி என்றும் விவரம் அறிந்தோர் அதனை திருமலை என்றும் நகரைத் திருப்பதி என்றும் வழங்குகின்றனர்.

இந்த மலை தமிழ்கூறும் நல்லுலகத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒழுங்கற்ற தாழ்வான சிலகுன்றுகளின் கூட்டமாகும். இம்மலை 14 டிகிரி வடகுறுக்கேயுள்ள 80 டிகிரி கீழ் நெடுக்குக் கோட்டிலும் அமைந்துள்ளது. சென்னைக்கு வடமேற்குத் திசையில் சுமார் 85 கல் என்றே வழிவழியாக வழங்கப்பெற்று வருகிறது. பேருந்தில் மலைக்குச் சென்று திரும்புவார் உண்டு.

அத்திரி என்ற வடமொழிச்சொல் மலையைக் குறிக்கும். இந்த மலைக்குன்றுகள் நேராக ஓர் ஒழுங்கில் அமையவில்லை. ஒன்றையொன்று தொடர்ந்த நிலையில் ஒரு சங்கிலி போலவும் அமையவில்லை. அவை ஒன்றையொன்று தழுவிய நிலையில் ஒன்று சேர்ந்த கூட்டம் போல் காணப்படும். பேருந்தில் மலை மேல் ஏறுபவர்கள் இருபக்கமும் நோக்கி இந்நிலையை கண்டு தெளியலாம். இக்குன்றுகள் கடல் மட்டத்திற்கு மேல் 1000 அடி முதல் 2500 அடி வரை உயரமுள்ள பகுதியாகும். மலையெங்கம் புல் பூண்டுகள் காணப்படுகிறது. இங்கு அங்குமாகச் சிறுசிறு மரங்கள் கொண்ட அடர்ந்த காடுகள் இல்லை. மலையின் உயரம் காரணமாக தட்பவெப்பநிலையில் சிறிது மாற்றம் காணப்படுகின்றது.

3.3.1. வேங்கடம் சொற்பொருள் மாற்றம்

முன்பே வேங்கடம் என்ற சொல் பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது. பக்தியியக்கம் செல்வாக்குப் பெற்ற இடைக்காலத்தில் வேங்கடம் என்ற சொல்லும் புதுப்பொருளை பெற்றுவிட்டது எனலாம்.

வேங்கடங்கள் மெய் மேல்வினை முற்றவும்

தாங்கள் தங்கட்கு நல்லன வே செய்வார்

வேங்கடத்துறை வார்க்கு[19]

ஆழ்வார்கள் காலம் வரை வேம் – வெந்துபோம் கடங்கள் – பாவங்கள் என்று வழங்கினர். தன்னை அடைந்தவர்களுக்கு பாவம் அனைத்தையும் ஒழிப்பதனால் இத்திவ்விய வேங்கடம் எனக்கூறப்பட்டுள்ளது.

அவர்கள் காலத்திற்கு பிறகு வேம் என்ற சொல் எரித்தல் என்ற பொருளைக் கொண்டதாக மாறியது. பக்கதிவியக்கம் ஓங்கி இருந்த காலத்தில் சமயக்கருத்துக்களும் மக்கள் மனதில் நுழைய தொடங்கின. அதனால் அவர்களின் மனநிலை விரிந்த காலத்தில் புதுப்பொலிவு சேரத்துவங்கியது. பாவமும் ஆன்மாவிற்கு தாங்கமுடியாத வெப்பத்தை தருவதாக அமைகிறது.

3.3.2. திருவேங்கடத்தின் மீது மங்களசாசனம்

108 திருப்பதிகளுள் கோயில் திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி) என்ற மூன்றும் வைணவப் பெருமக்களால் மிகவும் சிறப்பாகப் போற்றப்பெறுவன. திருவரங்கம், திருவேங்கடம் என இவை சிறப்புப் பெயர் பெற்றனவாகப் பெரியோர் பணிப்பர். இந்த மூன்று திவ்வியதேசங்களுள் திருமலை (திருவேங்கடம்) நடுநாயகமாகத் திழக்கிறது. வடநாட்டுத் திருப்பதிக்ள பன்னிரண்டனுள் முதலாவதாகக் கூறப்பெறுவது. இதனை திவ்விய கவி

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான் - தேனேய்
திருவேங்கடந்தொழுதேம் தீய விபூதிக்குள்
கருவேம் கடந்தனெமிவ் வாழ்வு[20]

இத்தகைய பெருமை வாய்ந்த திருவேங்கடத்தைப் பற்றிய பாசுரங்கள் 213 திவ்விய பிரபந்தத்தில் உள்ளன. இவற்றைப் பாடியவர்கள் பதின்மர். பத்து ஆழ்வார்கள் ஆவர். திருவேங்கடமுடையானை திருமேனியில் நாகாபரணமும் சடையும் உள்ளன என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. திருவேங்கடம் திருமாலிற்கே சிறப்புடையது என்பதற்கு ஆழ்வார்களின் திருவாக்குகளேயன்றி வேறு பழைய சான்றுகளும் உள்ளன.

3.3.3 ஆற்றுப்படுதல்

ஒரு பாசுரத்தில் கிளரொளி இளமை கெடுவதற்குமுன் தலைமுலை சென்று திருமலையப்பனைச் சேவிக்குமாறு பணிக்கின்றார். ஒரு சமயம் இராவணன் தனது பத்துத்

தலைகளையும் மறைத்துக் கொண்டு நான்முகனிடம் சென்று வரம் வேண்டுகின்றான். எம்பெருமான் குழந்தை வடிவமாய் நான்முகனுடைய மடியில் உறங்குவான் போல் கிடந்து இவன் பத்துத் தலைகளையுடைய இராவணன்; உண்மை உருவத்தை மறைத்துக் கொண்டு உன்னை வஞ்சித்துவரம் பெற வந்துள்ளது. இவனுக்கு நீ வரம் அளித்தால் பெருந்தீங்காக முடியும்.

திருவடிகளால் இப்படிப்பட்ட எம்பெருமான் திருவேங்கட மலையில் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். அவனையடைந்து எல்லோரும் மனநிலையையும் ஆசைகளையும் அவன் நன்கு அறிவான். ஏழுமலையின் பூண்டு மலர்களைத் தூவி மங்களசாசனம் செய்து கொண்டு நிற்கும் மக்கட் கூட்டம் திருமலையின் அழகிய திருவேங்கடமுடையானைத் திருமலையில் ஒலிக்கின்ற அருவிகளின் மூலம் முத்துக்கள் உதிர்கின்றது. வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு நிற்கும் பெருமாலும் எல்லோருக்கும் வைத்தமா திகழ்கிறது.

3.3.4. வழிகாட்டியின் பயன்

இங்ஙனம் திருவேங்கடமுடையானை வழிபடுவதால் பயன் என்ன? இரண்டு பாசுரங்களால் இதனைத் தெரிவிக்க நித்திய சூரிகள் எம்பெருமானை இடைவிடாது அனுபவிக்கும் அங்குப் பரத்துவத்திற்கே உரிய உண்மைக் குணங்களை மட்டுமே அனுபவிக்கலாம். சௌலப்பிய பாங்காக எளிமைக் குணங்களை இந்த நிலத்திலே வந்ததுதான். அவற்றை அனுபவிப்பதற்காக உண்மையான பக்தியுடன் அவர்கள் திருமலைக்கு வருகின்றனர். பாவங்களையும் உடம்பைப் பற்றிய நோய்களையும் போக்க வல்லது திருமலையே. அசுரர்கள் மாளும்படி தனது திருவடியைத் தொட்டு வானவர்களைக் காத்தருளின எம்பெருமானுடைய மலை திருமலையாகும்.

வேங்கடமே விண்ணோர்

தொழுவதும் மெய்மையால்

வேங்கடமே மெய்வினைநோய்

தீர்ப்பதும் வேங்கடமே[21]

மெய்வினை நோய் தீர்ப்பதற்கு விளக்கமாக தீபிக்கையில் ஒரு வரலாறுகளை காட்டுகின்றார். திருமலைக்கு மேற்குத் திசையில் நந்தனபுரம் என்னும் பகுதியில் மலை என்று வரும் பெயர்களை அடுக்கடுக்காக சொல்கின்றனர். கொக்குமலை, குருவி மலை, எருத்து மலை, பசுமலை என்பதாகும்.

அடைவிலே தம்மையும் அறியாமல் திருவேங்கடமலை என்றும் தம்திருவாயில வந்துவிட்டது. இதனையே பற்றாகக் கொண்டு எம்பெருமான் தம்மைத் திருவேங்கடம் பாடினவனாக கணக்கிட்டு கொண்டான் எம்பெருமான். தானே மடிமாங்கா என்று இதனையே திருவுள்ளம் பற்றுகின்ற இச்செயல் வியத்தற்குரிய ஈடுபட்டு நிற்கின்றார்.

எம்பெருமான் கூட இவ்விருள் தருமா ஞாலத்தில் திருவவதரித்தால் கூட சோகங்கள். அதுபோல ஆழ்வார்களும் பிரகிருதி வசானையின் கொடுமையினால் சில குற்றங்கள் அதுபோல ஆழ்வார்கட்கு சிறிய குற்றங்களையும் அவர்கள் குளிர்காலத்தில் திருத்துவ வருணையும் அங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானை பற்றியும் கூறுகின்றது. சித்திரகூட மலை வரும் காட்சி இங்கு ஓர் யானை சூல் திருவரங்கப் பெருமாள் நிலையில் பாசுரம் அதிபவம் என்று கூறப்படுகிறது.

3.3.5. ஆழ்வார் திருவேங்கடமலையின் மீது கொண்ட காதல்

இக்கழிபெருங்காதலை அவர் அருளியுள்ள ஒரு திருமொழியில் கண்டு அனுபவிக்கலாம். திருவேங்கடமலையில் பிறத்தலும் அங்கு ஏதாவது ஒரு பொருளாக இருந்தாலும் போதும் எனக்கூறுகுன்றார்.நாளுக்கு நாள் வளர்ந்து கொழுக்கும் மனித உடம்பெடுத்துப் பிறத்தலை விரும்பாத ஆழ்வார் கோனேரி வாழும் குருக்காய் இதனா;ல் ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி திருவேங்கடத்தானுக்கு ஏதாவது ஒரு வகையில் வழுவிலா அடிமை செய்ய வாய்ப்பாகும் என்று சித்தித்தார் போலும்

தேனார் பூஞ்சோலை

திருவேஙடகச் சுனையில்

மீனாய் பிறக்கும்

விதியுடையேன் ஆவேனே[22]

மேலே மீனாய்ப்பிறந்தாலும் போதும் என்று எண்ணியவர். மீன் நீர் நிலையைப் பற்றியே உயிர்தரிக்கவேண்டியுள்ளது. அப்படிப் பிறப்பதைவிட எம்பெருமானுக்கு அந்தரங்க சேவகனாகத் தொண்டுபுரியும் வாய்ப்புக் கிடைக்க தான் யாதொரு தடையுமின்றி அர்ச்சக பரிசாரர்களுடன் சேவை செய்யவேண்டும் என்று விரும்பினார்கள்.

இக்கோயிலுக்கு திருவேங்கட மலையிலுள்ள மரக்கிளையின் அருகிலுள்ள குருகு ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருக்கின்றது. விண்ணில் செல்லும் மீன இராசியின் வவம் நீரில் தெரியக் கண்டு அதனை உண்மையான மீன் என்று கருத்திக் கொத்துகிறது.

திருவேங்கடமலையில் தொடங்கவிடப் பெற்ற பொன் ஊஞ்சலிலிருந்து கொண்டு மகளிர் வேங்கடமலையின் உயர்ச்சியைக் காட்டும் போக்கில் வேறுசிலவற்றையும் வருணிக்கும் திருமலையில் மலர்களைக் கொண்டு காட்டப்பெறும் இக்காட்சி ஈகைக்குணமுடைய இயற்கை பொருட்கள் இன்பமயமாகக் கொண்டு திருவேங்கடம் காட்சியளிக்கிறது. இத்தகைய திருவேங்கடமுடையானை வணங்கும் போது உள்ளம் மகிழ்வால் பொங்கும் என கூறப்படுகிறது.

தொகுப்புரை

திருவேங்கடத்தின் வரலாறுகள் எனும் இவ்வியலில் வேங்கடமேவிய விளக்கு, சங்ககால வேங்கடம், இன்றைய வேங்கடம், வேங்கடம் என்ற சொல்பொருள்விளக்கம், வேங்கடத்தின்மீது காதல் அதைத் தொடர்ந்து வழிகாட்டியின் பயன்கள் என்ற நிலையில் இந்த இயலில் ஆராயப்பெற்றுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.1

2. மேலது, ப.2

3. மேலது, ப.3

4. மேலது, ப.4

5. மேலது, ப.5

6. மேலது, ப.6

7. மேலது, ப.8

8. மேலது, ப.13

9. மேலது, ப.16

10. மேலது, ப.17

11. வடவேங்கடமும், திருவேங்கடமும், ப.146

12. ந.சுப்புரெட்டியாரின் வடநாட்டுத் திருப்பதிகள், ப.28

13. மேலது, ப.17

14. வடவேங்கடமும், திருவேங்கடமும், ப.1

15. மேலது, ப.1

16. மேலது, ப.2

17. மேலது, ப.15

18. மேலது, ப.26

19. மேலது, ப.65

20. மேலது, ப.78

21. மேலது, ப.116

22. மேலது, ப.173

இயல் நான்கு

பிருந்தாவனத்தில் கண்ணனின் வரலாறு

4.0. முன்னுரை

வடமதுரை இருப்பூர்தி நிலையத் தாங்கும் நிலையில் உள்ள நம் கண்ணன் சிறுவனாக இருந்ததை பற்றியும், அவன் விளையாடிய இடத்தைப் பற்றியும் அவனது வளரும் பருவத்தின் போது நிகழ்த்திய சாதனைகள் பற்றியும் இவ்வியலின் வாயிலாக எடுத்துரைக்கப்படுகின்றன.

4.1. கண்ணனின் வாழ்க்கை வரலாறு

பிந்தவாறும் வளர்ந்தவாறும்
பெரிய பாரதம் கசெய்து ஐவர்க்குத்
திறங்கள் காட்டிவிட்டுச் செய்துபோன
மாயங்களும்[1]

என்ற பாசுரமும்திருவாய்மொழியிலுள்ள வேறுசில பாசுரங்களும் நம் மனதில் குமிழியிட்டு எழுகின்றன. நாமும் நம்மாழ்வாரைப்போலவே எம்பெருமானின் குணாநுபவம் பண்ணவல்லராம்படிப் பண்ணியருள வேண்டும் என்று சரண் புகுகின்றோம். இவ்வாறு கண்ணன் செய்த குறும்புகளையும் மாடுமேய்த்த இடங்கள் இடைப்பெண்களுடன் சிறு குறும்புகள் போன்றவற்றை இவ்வரலாறு மூலம் காணமுடிகிறது.

வடமதுரையிலிருந்து பிருந்தாவனம் சுமார் பத்துக் கிலோமீட்ட தொலைவிலுள்ளது. இங்கு செல்வதற்கு பேருந்து வசதி உள்ளது. பிருந்தாவனத்தில் கண்ணன் குழல் ஊதி கோபியருடன் கண்ணீர் மல்க விழுந்து விழுந்து புரண்ட இடம். சில நாட்களில் நள்ளிரவில் இன்றும் கண்ணனின் குழலோசை பிருந்தாவனத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கேட்பதாக மக்கள் நம்புகின்றனர். கண்ணனுக்கு பெரும்பாலான திருக்கோயில்கள் இப்பகுதியில் உள்ளன. வைணவத்தின் ஒரு பிருந்தாவனத்தில் கண்ணன் என்றும் மகிழ்ந்து இனிது மருவியுள்ளான் என்றுகூறுவர்.

இத்திருக்கோயில் யமுனைக் கரையில் நிமிர்ந்து நின்று காட்சி தருகின்றது. தமிழகப் பாணியில் அமைந்தது இங்குப் பழமையான பல திருக்கோயில்கள் இருப்பினும் அரங்கமந்திரே சிறந்த ஒரு திவ்விய தேசமாகத் திகழ்கின்றது. ஐந்து சுற்றுகளும் ஐந்து கோபுரங்களும் ஐந்து மதில்களும் உடைய இத்திருக்கோயிலமைப்பை ஒத்துள்ளது.

ஒரு சமயம் ஆழ்வார்கள் கிருஷ்ணாவதாரத்தில் அதிகமாக ஈடுபாடு காண்பதற்கு காணரம் என்ன என்று கேட்க ஒருவனுக்கு உண்டான துக்கம் சில நாட்கள் மட்டும் கழிந்தால் பொறுக்கலாம் அணித்தனால் ஆறியிருக்கப் போகதே அன்றோ? அப்படியே அல்லாத அவதாரங்களைப் போல் அன்றைக்கே சமகாலமாக ஒரு செவ்வாய்க் கிழமை முற்படப் பெற்றிலோம் பாவியேம் இங்ஙனம் மனம் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் பிருந்தாவனத்தைச் சென்று சேவிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். தற்போது இந்நிலப்பகுதி வளம் கொழிக்கும் விரஜபூமி (மேய்ச்சல் நிலம்) யாக மாறிவிட்டது.

இராதை அவதரித்த இராதாபர்காம் என்ற ஊர் கண்ணன் லீலைகள் புரிந்த பிருந்தாவனம் ஆகிய புனிதமான இடங்கள் யாவும்இந்த கண்ணன் வளர்ந்த இடமாக ஆயர்பாடியிலுள்ள நந்தகோபன் முதலான ஆயர்கள் கண்ணனுக்கு அங்கு அடிக்கடி நேரிட்ட பேரிடர்களை உற்பாதங்கள் எனக்கருதி மகாவனம் எனப்படும் அவ்விடத்தை விட்டுக் கன்று காவி முதலிய எல்லாப் பொருள்களுடனும் பிருந்தாவனத்திற்குச் சென்று அங்கு குடியேறினர்.

4.1.1. பழமையான கோவில்கள்

கோவிந்த தேவருக்குரிய கோயில் சிவப்புநிறக் கற்களால் அமைந்துள்ளது. வங்காளிகளால் கட்டப்பெற்றது. மதன் மோகருக்குள்ள கோயில் அக்பரின் தளபதியாகிய மான்சிங் என்பவரால் கட்டப்பட்டதாகச் சொல்லப்பெறுகின்றது. இரண்டிலும் கண்ணன் எழுந்தருளியுள்ளான்.

4.1.2.புதிய கோயில்

இது ஷாஜி கோயில் என்று வழங்கப்பெறுகின்றது. மிக அண்மைக் காலத்தில் கட்டப்பெற்றது. இது கண்கவர் எழிலுடன் திகழும் திருக்கோயிலாகும். கண்ணனுக்கு உரியதான பழைய கோயில்களிலும் இந்தப் புதிய கோயிலும் சைதன்ய மார்க்க சம்பிரதாயம் அனுட்டிக்கப் பெறுகின்றது. வங்காளத்தில் தோன்றிய சைதன்ய இயக்கம் இங்கெல்லாம் வந்து பரவியுள்ளது. பங்கே பீகாரி என்பது கண்ணனுக்கு வழங்கும் பெயர். நிம்பார்க்கரின் இயக்கத்தின் ஒரு கிளை ஹரிதாஸ் முனிவர் என்ற இசைக் கலைஞரால் நிறுவப்பெற்றது. தான்சென் என்பாரின் குருநாதர். ஹரிதாசருக்கும் இங்கு ஒரு கோயல் உண்டு. பங்கே பீகாரி கோயில் பிருந்தாவனத்தில் மிகவும் பெயர் பெற்றது.

இக்கோயில் ஸ்ரீஹரிவம்சர் என்பவரால் கட்டப்பெற்றது. இராதா வல்லபரை இங்கு எழுந்தருளச் செய்துள்ளார். கண்ணன் இராதையுடன் சேவை சாதிக்கின்றான். மிக்க செல்வச் செழிப்புடன் நிகழ்கின்றது இக்கோயில்.

பிருந்தாவனத்திலிருக்கும்போதும் ஆயர்பாடி நிகழ்ச்சிகளாக ஆழ்வார் பெருமக்கள் அன்றாடம் சந்திந்த கண்ணனின் பல சிறுச் சேவகங்கள் நம்மனதில் எழுகின்றன. அவற்றுள் சில ஆழங்கால் படுவோம். தேனுகன் என்ற அசுரன் கம்சனின் ஏவலால் கழுதை வடிவம் கொண்டு காட்டுக்குள்ளே கண்ணனை நலிவதாக வந்தவன். ஒரு நாள் கண்ணபிரான் பலராமனோடும் வேறு சில ஆயர் சிறுவர்களோடும் ஆநிரை மேய்த்துக் கொண்டு கனிகள் கவினுறும்படி மிகுதியாகப் பழுத்து மணம் பரப்பிக் கொண்டிருந்த ஒரு பனஞ்சோலையை அடைந்தனர்.

சுழற்றி உயிரிழக்கும்படி ஒரு பனைமரத்தின்மீது வீசி எறிந்து அவனை அழித்தான். இந்நிகழ்ச்சியை மற்றொரு நாள் கண்ணன் கன்றுகளை ஓட்டிக்கொண்டு ஒருவரும் சென்ற வராத வழியே போகத் தொடங்கினான். ஆயர் சிறுவர் அவ்வழி போக வேண்டாம் என்றனர். அவ்வழியில் யமுனை நதி மடுவொன்றில் காளியன் என்னும் ஐந்தலைப் பாம்பு தன் குடும்பத்துடன் இருந்துகொண்டு அம்மடுநீர் முழுவதையும் தன் நஞ்சினால் கொதிப்படையச் செய்து அணுகினவர்கள் அனைவரையும் பினமாகச் செய்வதையும் எடுத்துக்கூறி அச்சசுறுத்தினர். உடனே அந்த ஐந்தலை அரவைவத் தண்டிக்கத்

திருவுள்ளங் கொண்டனன் கண்ணன். அம்மடுவிற்கு அருகிலுள்ள கடம்ப மரத்திலேறி அம்மடுவிற்குள் குதித்து அந்நாகத்தின் படத்தின் மேல் ஏறி நடனம் ஆடி நசுக்கி அதன் வலியடக்கினான். நாக கன்னிகையரின் வேண்டுகோளின்படி அந்தக காளியனைக் கடலில் சென்று வாழும்படி உயிரோடு விட்டருளினர்.

காயும் நீர் பூக்கும் கடம்பேறி காளியன்

தீய பணத்தின் சிலம்பார்க்கப் பாய்ந்துஆடி

வேயின் குழலூதி வித்தகனாய் நின்ற ஆயன்[2]

என்றும் கண்ணனின் தோள் வலிவீரத்தை அநுசரித்து மகிழ்கின்றார். இவ்வண்ணமாக ந.சுப்புரெட்டியார் கூறுகிறார்.

4.1.3. பிரலம்பன்வரலாறு

பிரலம்பன் ஓர் அசுரன். இவன் ஆயர் சிறுவன் வடிவங்கொண்டு கிருஷ்ணன், பலராமன் ஏனைய ஆயச்சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். ஒருவிதப் பந்தாட்டத்தில் தோற்றவர்கள் வெற்றியடைந்தவர்களைச் சுமந்து கொண்டு ஆநிலைகள் பிரிந்து சிதறிப் போகாமல் அவற்றை வலப்புறமாகச் சென்று மடக்க வேண்டும் என்பதும், அங்ஙனம் செல்லுங்கால் தாம் அமைத்துள்ள குறிகளைத் தொட்டுத் தாம் இருந்த இடத்திற்கே வந்து சேரவேண்டியது என்பதும் நிபந்தனை. இதில் பரலாமனைப் பிரலம்பன் சுமந்து செல்லும் வாய்ப்பு வந்தது. அங்ஙனம் சுமந்து செல்லுங்கால் பிரலம்பன் தீய எண்ணத்தனாய்க் குறிகளைத் தாண்டிப் போனான். பலராமன் தன் ஆற்றல் சிறப்பினால் அவனுக்க அதிகப் பாரமானான். உடனே பிரலம்பன் தன் உண்மையான அரக்க உருவத்துடன் வான்வழிச் செல்லத் தொடங்கினான். பலராமன் மடக்கிய தன் கையினால் அசுரன் தலையில் ஓங்கிக் குத்த அசுரன் தலை பிளந்து உடலெங்கும் செந்நீர் பெருகக் கதறிக் கொண்டு பூமியில் விழுந்து உயிரொழிந்தனன். இந்த நிகழ்ச்சியினையும் மேற்குறிப்பிட்ட தேனுகன் காளியன் நிகழ்ச்சிகளையும் ஒரு சேரத் தொகுத்து பாசுரத்தில் அனுசந்திக்கின்றனர். இங்ஙனம் பலராமனால் செய்யப்பெற்ற அசுர வதத்தைக் கண்ன்ன் செய்தருளினதாகவே அனுசந்திப்பது ஒன்றுமை நயம் பற்றியதாகும். பிரலம்பன் வரலாறு கூறுகிறது.

4.1.4. கேசியின் வாயைக் கீண்ட வரலாறு

ஒரு சமயம் கம்சனால் ஏவப்பட்ட கேசிகன் என்னும் அசுரன் குதிரையின் வடிவங்கொண்டு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படிக் கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணனை நோக்கிப் பாய்ந்து வந்தான். அப்பெருமான் தமது திருக்கைகளை நன்றாகப் பெருக்கி நீட்டிக் குதிரையின் வாயிற்கொடுத்துத் தாக்கிப் பற்களை உதிர்த்து உதட்டையும் பிளந்து அதன் உடலையும் இரண்டாக வகிர்ந்து தள்ளிக் கொன்றனன். இந்த நிகழ்ச்சியால் கண்ணன் கேசவன் என்ற திருநாமமும் பெற்றனன். இந்நிகழ்வை திருமங்கையாழ்வார் ஆழங்கால்பாடுகிறார். கம்சனால் ஏவப்பெற்ற கவித்தாசுரன் விளாமரத்தின் வடிவமாய்க் கன்று மேய்க்கும் கண்ணன் தன் கீழ்வரும் போது மேல் விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்கின்றான். அவ்வாறே வந்த சாசுரன் என்பான் கிருஷ்ணனை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவமாக வந்து காத்திருக்கின்றான்.

4.2. மாலை நேரத்தில் கண்ணன்

பிருந்தாவனத்தில் இருக்கும்போது இருவகைாயகக் கண்ணனிடம் அனுபவப்படுகிறோம். ஒரு சிறுவனாக பாலகிருஷ்ணனாகஇருந்து மாடுகள் மேய்த்தது. மற்றொன்று கண்ணன் இளைஞனாக இருந்தபோது இடைப்பெண்களுடன் விளையாடியது. பெரியாழ்வார் அதிகமாக ஈடுபட்டது குழந்தைக் கண்ணனிடமே. யசோதை நிலையில் இருந்து கண்ணன் செய்த சிறு குறும்புகளையெல்லாம் நம் அனுபவமாகக் கொள்ள முயல்கின்றோம் உண்மையான பிள்ளைத் தமிழச் சுவையில் நம்மை ஆழ்த்துகின்றது. யசோததைப் பிராட்டி கண்ணனை நீராட்டிக் குழல்வாரிப் பூச்சூட்டிக் காப்பிட்டுத் தன் பக்கத்தில் படுக்க தைத்துத் தானும் உறங்கிப் பின்பு விடிய எழுந்து வீட்டு அலுவல்களைப் பார்க்கப் போகின்றாள். கண்ணனும் எழுந்து ஊரார் வீட்டில் சென்று பல தீம்புகளைப் புரிகின்றான். “இடைப்பெண்கள் இவற்றை யசோதைப் பிராட்டியிடம் வந்து முறையிடுகின்றனர். ஒரு வீட்டில் புகுந்து கலத்திலுள்ள வெண்ணெய் முழுவதையும் விழுங்கி விடுகிறான்.”[3]

4.3. திருவாய்ப்பாடியில் கண்ணன்

கலந்து அமரரோடும் கரை கண்டாரோடும்

பொலிந்து திருநாட்டிருக்கப் போவீர் - மலிந்த புகழ்

ஆண்டர் ஆய்ப்பாடி அமலர் அடியார் அடியார்

தொண்டராய்ப் பாடித் தொழும்[4]

பிருந்தாவனமும், கோவர்த்தனமும் அடங்கியவட மதுராவைச் சேவித்துவிட்டு வடமதுரையிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் தென் கிழக்கில் அமைந்துள்ள இத்தலத்தைசேவிக்கலாம். சுமார் 2 கி.மீ. அகலமுள்ள யமுனை ஆற்றைக்கடந்து இத்தலத்திற்கு செல்லுதல் வேண்டும். வடமதுரையிலிருந்து இத்தலம்செல்வதற்குப் பேருந்து வசதிகள் உள்ளன. ஆயர்பாடி சிறிய ஊர் ஆதலால் இங்கு தங்கும் வசதிகள் கிடையாது. ஒருத்தி மகனாய் வளர்ந்த கண்ணன் தனது இளமைப்பருவம் முழுவதையும் சீர் மல்கும் ஆயர்பாடி என்று கோதை நாச்சியாரால் வருணிக்கப்பட்ட ஆயர்பாடி என்ற கோகுலத்திலேயே கழித்தான். திரு ஆய்ப்பாடியைச் சேவித்தவர்களுக்குச் செல்வம் பெருகும் என்பது ஐதீகம். ஆழ்வார்கள் இதை மங்களா சாசனம் செய்தார்கள்.

கோயில்களையோ அல்லது மூர்த்திகளையோ தற்போது ஆயர்ப்பாடியில் காணமுடியாது. கால வெள்ளத்தாலும் அந்நியர்களின் படையெடுப்பாலும் இவ்வாலாயம் அழிந்துபட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது ஆயர்ப்பாடியில் காணப்பமு; ஆலயம் பிற்காலத்தில் எழுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. புரானாகோல் என்ற இடத்திலும் கண்ணனுக்கு ஆலயம் ஒன்று காணப்படுகிறது. கோவில் வசாலிலேயே யமுனை நதி ஓடுகிறது. இவ்வாலயத்தில் மங்களாசாசனம் செய்யப்பெற்ற தலம் எது என்பது தெரியவில்லை. எனவே இரண்டு தலங்களையும் சேவித்து விடுவது உசிதம்.

ஆயர்ப்பாடியில் உள்ள பலரது இல்லங்களில் சிறு தொட்டில் ஒன்றினைக் கட்டி, தவழும் வடிவில் உள்ள கண்ணனின் உருவத்தை அதில தைத்துத் தாலாட்டி கண்ணன் அந்த இல்லத்திலேயே தவழ்ந்து வளர்ந்ததாகக் கூறுகின்றனர். இந்தச் செய்கை ஆயர்ப்படி மக்களுக்கு கண்ணன் மீதுள்ள ஈடுபாட்டினைக் காட்டுகின்றது.

கண்ணன் வேறு சிறு குறும்புகள் செய்ய ஆய்நங்கை முகத்தை மாற வைக்கின்றாள். கண்ணனோ அவளை விட்டான் இவன் பின்பறத்து உன் தாமரை புரை கண்ணினையும் செவ்வாய் முறுவலும் ஆகுலங்க்ள செய்ய அழிந்தற்கே நோற்றோம் யாம் என்கின்றாள்.

சேயன் அணியன்

சிறியன் மிகப்பெரியன்

ஆயன் துவரைக்கோனாய்

நின்ற - மாயன் அன்(று)

ஓதிய வர்க்கதனைக்

கல்லார் உலகத்தில்

எதிலராம் மெய்ஞ்ஞானம் இல்[5]

இங்குள்ள திருக்கோயில்கள் யாவும் வைணவத்தில் வல்லவர்கள் என்ற பிரிவைச் சார்ந்தவர்களால் கட்டப் பெற்றவை. திருக்கோயில்கள் யாவும் பாலகிரூஷ்ணனுக்கு எழுந்தவை. இந்திக் கவிஞர் துளசிதாசரைப் போலவே ஆயர்பாடியை நினைக்கம்போதே கண்ணன் விளைவித்த சிறு குறும்புகளும் அதிமானுடதாகும். ஆழங்கால் படுவது ஒருவித பகவதநுபவம் ஆகம். ஆா;வார்க்ள மனத்தைக் கவர்ந்த நேர்த்தியும இவற்றை அவர்க்ள தம் பாசுரங்களில் குறிப்பிட்ட அழகும் நம் உள்ளத்தை காணமுடிகிறது.

ஆயர்பாடியில் விளையாட்டின்போது கண்ணன் உறிகளை ஆராய்வதும், இவன்புரியும் தீம்புகள் இவன் செய்த சிறு சேவலகங்களை எல்லாம் பட்டியல்போட்டுக் காட்டி யசோதை முளைப்பால் பருக அனுமதிக்கமுடியாது என்று கூறுவதாக அமைந்துள்ள பாசுரங்கள் பன்முறை படித்து அநுபவிக்க வேண்டியவை. கண்ணனை கன்றுகள் மேய்கக் காடேற அனுப்பிவிட்டு அப்பிரிவைப் பொறுக்க மாட்டாமல் என் செயப்பிள்ளையைப் போக்கினேன் எல்லா பாவமே என் மணிவண்ணனைப் போக்கினேன் எல்லா பாவமே என்று யசோதனை கழறியனவா அமைந்த பாடல்கள். கள்னெஞ்சத்தையும் கரைக்க வல்லவை. இந்த பாசுரங்களை ஒருநாள் கண்ணன் பிருந்தாவனத்தில் நின்று குழல் ஊத அக்குழலோசை அமுதாரையைச் செவிமடுத்த

மானிடர் உட்பட உயிர்களும் அடைந்த அனுபவத்தைப் பேசுகின்றார் ஆழ்வார். குழல் ஊதும் கண்ணன் நிலை இது.

இடவணரை இடத் தோளோடு சாய்த்து

இருகை கூடப் புருவம் நித்தேறக்

குடவயிறுபட வாய்கடைக் கூடக்

கோவிந்தன் குழல் கொடுதின போது[6]

கண்ணன் குழலூதும்போது அவனது மேவாய்க் கட்டையின் இடப்பக்கம் இடத்தோள் பக்கமாகத் திரும்புகின்றது.

4.3.1. வெண்ணெய் உண்ட வரலாறு

இந்த வரலாறு பல நிகழ்ச்சிகளைக் கொண்டது. வெண்ணெய் களவு செய்கின்ற தன்னை யதோதைப் பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாள் என்று கண்ணன் இல்லத்திலுள்ள கயிறுகளையெல்லாம் துண்டு துண்டாக அறுத்து வைத்திடுவன். யசோதைப் பிராட்டி அவற்றை ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறு வடிவமாக்கி அதனைக் கொண்டு கண்ணனைக் கட்டுவாள். முடிச்சுகள் உடலை உறுத்தி வருத்துமே என்றும் வருந்துவள். இதனை மதுர கவிகள்

கண்ணி நுண்சிறுத தாம்பினால் கட்டுண்ணப்

மண்ணிய பெருமாயன்[7]

பல சிறு துண்டுக் கயிறுகளை முடிபோட்டு ஒரு பெரிய கயிறாக்கினமைபற்றித் தாம்புக்குக் கண்ணி என்ற அடைமொழி வந்தது. நுண், சிறு என்ற அடைொழி சுற்றளவிலும் நீட்டளவிலுமுள்ள சிறுமையைக் காட்டும். இப்படிப்பட்ட தாம்பினால் கட்டும்போது தன் உடலுக்கு நீளம் போதாத அச்சிறு கயிற்றினால் தன்னைக் கட்டமுடியாதபடித் தன்னைத் தப்புவித்துக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார். கண்ணனின் குழலோசை ஆயர் மகளிரின் செவிக்கு எட்டியதும், அவர்கள் காம உணர்ச்சியில் உடல் இளைத்து மனம் உருகுகின்றனர். அலட்சியம் செய்து குழலூதும் இடத்திற்கு வந்து திரள்கின்றனர். கயிற்றில் பூக்களை அடரத் தொடுத்தாற்போல சரிகையாக நின்று கண்ணன் முகத்தைக்

காண கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கின்றது. கூந்தல் அவிழ்கின்றது. குலசேரப் பெருமாள் ஊடல் கோபம் கொண்ட ஆயமகளிர்கள் கண்ணனை வெறுத்துரைக்கும் காட்சிகளைப் பேசி இனியாராகின்றார். கண்ணபிரான் அவர்களை யொருத்திக்கு யமுனையாற்றின் மணலின் குறியிடம் அமைந்தான் ஆனால் அங்கு அவன் போகத் தவறினான். அவள் மட்டிலும் மணலில் விடியும் மளவும் காத்திருந்து ஏமாந்து வருத்தத்துடன் வீடு திரும்பினாள். மற்றொருநாள் கண்ணனைக் கண்டபோது அவள் உன்னுடைய பொய்யான வார்த்தைகளைக் கேட்டு மழைபோல் பணிக்கு ஊதல் எய்தி நாணி நடுங்கி மணலில் காத்திருந்தேன். கனவிலும் பொய் சொல்லி அறியாத வாசுதேவர் வயிற்றில் பிறந்த நீயும் தந்தையும் ஒத்திருப்பாய் என்று நம்பிக் கொண்டேன்.

சிந்நதிக்க நெஞ்சில்லை; நாவில்லை
நாமங்கன் செப்ப; நின்னை
வந்திக்க மெய்யில்லை; வந்திருபோது
மெய்ம்மா மலர்ப்பூம்
பந்தித் தடம் பொழில் சூழ் அரங்
கா! ததி பாண்டனுன்னைச்
சந்தித்த நாள்முத்தி பெற்றதென்
னோதயிர்த் தாழியு மே[8]

பண்டங்களைக் கொள்ளதற்கன்றி உன்னைச் சிந்தித்தற்கு உதவாத நெஞ்சையும், உள்ளவற்றை வெளியில் விடுவதற்கன்றி திருநாமங்களைச் செப்புவதற்குவாத வாயையும் நின்னைத் தாழ்ந்து வணங்கத்தகாத மேனியையும் உடையதாய் அசித்தாயிருந்ததொரு பாண்டமும் வீடுபெறச் செய்தது.

4.3.2.மருதமரங்கள் முறிந்த வரலாறு

குழந்தைப் பருவமுள்ள கண்ணன் துன்பத்துக்குள்ளாக்கும் பல திருவிளையாடல்களைச் செய்யக் கண்டு சினங்கொண்ட யசோதைப் பிராட்டி அவனைத் திருவயிற்றிற் கயிற்றினால் கட்டி ஓர் உரலில் பிணித்து விட்டாள். கண்ணன் அவ்வுரலை

இழுத்துக்கொண்டு தவழ்ந்து அவன் இருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே எழுந்தான். உடனே முன் ஒருகால் நாரத முனிவரின் சாபத்தினால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபன் மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர்களை இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர். இதனை இருங்கைமா கரிமமுனிந்து என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் பல நிகழ்ச்சிகளுடன் சேர்த்து அநுசந்திக்கின்றார். நம்மாழ்வாரும் கண்ணனின் சிறு சேவங்களை அனுபவிப்பதில் எல்லை கடந்த இன்பம் அடைகின்றார்.

4.3.3. வையம் ஏழும் கண்ட வரலாறு

ஒரு நாள் கண்ணன் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தனன். கண்ணன் மண்ணைத் தின்றதாக பலராமன் மூலம் கேள்வியுற்ற யசோதைப் பிராட்டி ஓடிப்போய் கண்ணனை வாரியெடுத்துக்கொண்டு இல்லத்தினுள் ஏகி ஏன் மண்ணைத் தின்றாய் என்று அச்சுறத்தினாள் கண்ணனோ அம்மா நான் மண்ணைத் தின்னவில்லை. அண்ணன் வேண்டுமென்றே கோள் சொல்லுகின்றான். என் வாயைப் பார் என்று வாயைத் திறந்து காட்டினான். யசோதை அந்த வாய் வழியாகக் கண்ணனின் திருவயிற்றில் வையம் ஏழினையும் கண்டு வியப்புற்றாள் இவன் ஆயர் மகன் அல்லன்; அருந்தெய்வம் என்று அறுதியிட்டனள். சிறிது நேரத்தில் அந்த மயக்க நிலை மாறித் தன்னுடைய மகனாகவே எண்ணிக்கொண்டாள். இந்த நிகழ்ச்சியை பெரியாழ்வாரும் பலவிதமாக விளக்கியுள்ளார். ஆனால் கண்ணனாகிய குழந்தையை நீராட்டி நாவழிக்க முயலுங்கால் இக்காட்சியைக் கண்டதாக அநுசந்திக்கின்றார். கண்ணன் பார்த்தனுக்கு ஞானக் கண்ணைக் கொடுத்துத் தன் உருவத்தைக் காட்டினதை யசோதைப் பிராட்டிக்கு தன்னுடைய தெய்வத் தன்மையைக் காட்ட வேண்டும் என்றே பேரவாவினால் இங்ஙனம் செய்தனன் போலும், கண்ணன் முளைப்பால் உண்ணும் போது கொட்டாவி விடுவது போல் வாயைத் திறந்து தன் பேருருவம் காட்டினதாகவும் சில புராணங்கள் கூறுகின்றனர்.

4.4.4.பூதனை வரலாறு

ஒரு நாள் கம்சனால் ஏவப்பெற்ற பூதனை என்ற ஓர் அரக்கி அழகிய ஆயர் மகள்போல் வடிவங்ககொண்டுவந்து கண்ணனுக்கு நஞ்சி தீட்டிய தன் முலைப்பாலை ஊட்டினாள். கண்ணன் பாலையுண்டதுடன் பாதகியின் உயிரையும் உண்டான்.

பூதனை பெரிய அரக்கி உருவத்துடன் மலைபோல் பிணமானாள். இதனைக் கண்ட ஆய்ச்சியர் யாவரும் வெருண்டு ஓடினர். யசோதைப் பிராட்டி மட்டிலும் கண்ணனை வாரியெடுத்து முலையூட்டினாள்.

பேய்ச்சிமுலை உண்ணக் கண்டு
பின்னையும் நில்லாது என்நெஞ்சம்
ஆய்ச்சியர் எல்லோரும் கூடி
அழைக்கவும் நான்முலை தந்தேன்
கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்
கருநிறச் செம்மயிர்ப் பேயை
வஞ்சிப்ப தற்குவி டுத்தான்
என்பது ஓர் வார்த்தையும் உண்டு[9]

பகாசுரன் என்பவன் கிருஷ்ணனைக் கொல்லுமாறு கம்சனால் ஏவபெற்ற அசுரர்களில் ஒருவன் இவன் பெரியதொரு கொக்கின் வடிவங்கொண்டு வழக்கமாகக் கண்ணனும் அவன் தோழர்களும் மாலையில் கன்று காலிகளை ஓட்டிக்கொண்டு வீடுதிரும்பும் ஓர் ஒற்யைடிப் பாதையருகில் காத்திருந்தான் அவ்வழியாக வரிசையாக வரும் கன்றுகளை ஒவ்வொன்றாக விழுங்கி விட்டான். கண்ணனின் தோழர்களையும் ஒவ்வொருவராக கபளீகரம் பண்ணிவிட்டான். இறுதியாக வந்தவன் கண்ணன். அவனையும் அலகால் கொத்தி விழுங்கினன். உள்ளே சென்ற கண்ணன் அசுரன் வயிற்றில் நெருப்பு போல எரித்தான்.

பகாசுரன் என்பவன் கிருஷ்ணனைக் கொல்லுமாறு கம்சனால் ஏவப்பெற்ற அசுரர்களில் ஒருவன். இவன் பெரியதொரு கொக்கின் வடிவங்கொண்டு வழக்கமாகக் கண்ணனும் அவன் தோழர்களும் மாலையில் கன்று காலிகளை ஓட்டிக்கொண்டு வீடு

திரும்பும் ஓர் ஒற்றையடிப் பாதையருகில் காத்திருந்தான். அவ்வழியாக வரிசையாக வரும் கன்றுகளை ஒவ்வொன்றாக விழுங்கிவிட்டான். கண்ணனின் தோழர்களையும் ஒவ்வொருவராக கபளிகரம் பன்னிவிட்டான் அசுரன் சமயம் பார்த்திருந்து கம்சன் வண்டிச் சக்கரத்தின்மீது ஆவேசித்திருந்து வண்டியை உருண்டோடச் செய்து கண்ணனைக் கொல்லத் திட்டம்போட்டிருந்தான்.

சகடுதைத்த ஒண்மலர்ச சேவடி என்று போற்றி மகிழ்கின்றார்.

இருங் கைமா கரிமுனிந்து பரியைக் கீறி

இனவிடைகள் ஏழ் அடர்த்து மருதம் சாய்த்து

வருசகடம் இற உதைத்து மல்லை அட்டு

வஞ்சகம் செய் கஞ்சனுக்கு நஞ்சு ஆனான்[10]

இதில் சகடாசுரனைக் கொன்ற நிகழ்ச்சியுடன் குவலயா பீடம் என்ற யானையைக் கொன்றது. குதிரை வடிவாக வந்த கேசி என்ற அசுரனை வதைத்தது. நட்பின்னைக்காக ஏழு ஏறுகளின் வலிவை அடக்கியது. இரட்டைமருத மரங்களை வீழ்த்தி நளகூபர மணிக்ரீவர்களின் சாபந் தீர்ந்தது. சானூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களைக் கொன்றது ஆகிய வேறு ஐந்து சிறு சேவகங்களையும் சேர்த்து அநுபவித்து மகிழ்வதைக் காணலாம்.

கண்ணனாகத் திருவுருவு அவதரித்து விளையாடின இடமாகிய திருவாய்ப்பாடியிலுள்ள அடியாரின் அடியார்க்கு அடியவராகிய அவர்தம் திருக்குணங்களைப் பாடித் துதித்தால் அதன் பயனாக நித்தியருடனும் முத்தருடனும் ஒருசேரக் கலந்து பேரானந்தம் அநுபவிப்பதற்கு வாய்ப்பு உண்டாகும் என்ற அய்யங்காரின் உபதேசத்தில் மனம் அழுந்திய நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

வடமதுரையில் மூன்றாவது தலமாகக் கருதப்படும் கோவர்த்தனம், வட மதுரையிலிருந்து சுமார் 12 கிடமீ. தூரத்தில் அமைந்துள்ளது. வடமதுரை-பிருந்தாவனம் கோவர்த்தனம் ஆகிய மூன்று இடங்களும் முக்கோண வடிவில் அமைந்துள்ளன. கோவர்த்தன கிரி சிறிய மலை இம்மலையின் சுற்றளவு 10 கி.மீ. தூரம் இருக்கும். மரங்கள் அடர்ந்து செழுமையுடன் காணப்படும். இம்மலையை பெரியாழ்வார் குரவிற்கொடி

முல்லைகள் நின்று உறங்கும் கோவர்த்தனம் (பெரியாழ்வார் திருமொழி 274) எனப் போற்றகின்றார்.

கண்ணன் ஆநிரைகளுக்குப் பசும் புல்லும், நீரும் இட்டு வளர்த்ததனால் அவனுக்கு கோவர்த்தனம் என்னும் திருநாமம் உண்டாயிற்று என்பர். ஆயர்கள் பால் சினம் கொண்ட தேவேந்திரன் தொடர்ந்து ஏழு நாட்கள் கல் மழையைப் பெய்வித்து ஆயர்களையும் ஆநிரைகளையும் வருத்தியபோது கண்ணன் இம்மலையைக் குடையாகப் பிடித்து ஆயர் மக்களை காப்பாற்றினான் என்பது ஐதீகம்.

4.5. திரு அயோத்தி

ஆர்க்கும் இது நன்று நீ தானாலும் நெஞ்சே நீ
பார்க்கும் பல கலையும் பன்னாதே - சீர்க்கும்
திரு அயோத்திப் புயலைச் சீரியமெய் ஞானத்து
உருவை ஒத்தின் பொருளை ஓர்[11]

இத்தலம் உத்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. உத்தரப் பிரதேசத்தின் தலைநகரமான லக்னோவிற்கும் காசிக்கும் இடையில் இத்தலம் அமைந்துள்ளது. லக்னோவிலிருந்து காசிக்குச் செல்லும் ரயில் பாதையில் அமைந்துள்ளது. பைசாபத் என்ற இடம் இரயில் நிலையத்திலிருந்து சுமார் 5 கிலோமீட்டர் தூரத்தில் ஸ்ரீ ராமன் அவதாரம் செய்த திருவயோத்தி அமைந்துள்ளது. ரயில் நிலையத்திலிருந்து பேருந்துமற்றும் ஆட்டோ மூலம் இத்தலத்தைச் சென்றடையலாம். அயோத்தியை எங்கு நோக்கினும் ஸ்ரீ ராமன் சீதாப்பிராட்டியின் திருக்கோவில்களை பார்க்கமுடிகிறது. தென் இந்தியாவைச் சேர்ந்த வைணவ அர்ச்சகர்களே அம்மாஜி மந்திரி என்றழைக்கப்படுகின்றனர். ஆலயத்தில் பூசை செய்வதால் அவர்களுக்கு இப்பெயர் வந்தது. பெரியாழ்வார் குலசேகரர், தொண்டரடிப் பொடியாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் இத்தலத்தல் உறையும் பெருமானை வணங்கினார்கள். அயோத்தி என்றால் பகைவர்களால் போர் செய்துவெல்லமுடியாத நகரம் என்று பொருள்படும் திரேதாயுகத்த ஸ்ரீ ராமன் இந்த நகரை

ஆட்சி செய்தபோதுஇந்நகரம் பகைவர்களால் வெல்ல முடியாத நிலையில் இருந்ததால் அயோத்தி என்று பெயர் பெற்றது.

4.5.1. கோவில் மற்றும் பெருமாள் பற்றிய விவரம்

ஆழ்வார்கள் பாடிய கோயில்களையும் மூர்த்திகளையும் தற்போது அயோத்தியில் காணமுடியாது. புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள புதிய விக்ரகங்களையே தற்போது திருவயோத்தியில் காணலாம்.

மூலவர் – ராமன், சக்கரவர்த்தித் திருமகன்

தாயார் – சீதாப்பிரட்டியார்

தீர்த்தம் – பரமபத ஸத்ய புஷ்கரணி

காட்சிகண்டவர்கள் – பரதாழ்வான், தேவர்கள்

மங்களாசாஸனம் – பெரியாழ்வார், குலசேகராழ்வார்

தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்ார், நம்மாழ்வார் ஆகிய ஐந்து ஆழ்வார்கள் 13 பாசுரங்கள் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

பண்டைய தமிழகத்தின் வட எல்லையாகவே தமிழ் இலக்கியங்களில் இத்தலம் பேசப்பட்டபோதிலும் வடநாட்டிலுள்ள திவ்விய தேசங்களின் வரிசையிலேயே இத்தலம் இடம் பெற்றுள்ளது. சென்னை – மும்பை ரயில் பாதையில் அமைந்துள்ள ரேணிகுண்டாவிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் திருப்பதி அமைந்துள்ளது. சென்னை மற்றும் தமிழகத்தின் பல முக்கிய நகரங்களிலிருந்தும் திருப்பதி –திருமலை ஆகிய இடங்களுக்கு பேருந்துகள் செல்கின்றன.

கோவில் திருமலை பெருமாள் கோவில் என்று வைணவர்களால் சிறப்புடன் போற்றப்படும் மூன்று திருத்தலங்களில் இரண்டாவதாக வைத்து எண்ணப்படும் தலம் திருமலை ஆகும். தானாகவே தோன்றிய ஸ்வயம் வயக்த ஒன்றாக கருதப்படும் 1-8 திவ்விய தேசங்களில் ஒன்றான திருக்குடந்தை சாரங்கபாணி திருக்கோவிலின் தலவரலாற்றைப் பார்க்கும்போது கோல்ஹாபூரில் மறைந்திருந்த திருமகள், நாரதர் வாயிலாக ஸ்ரீநிவாசன் பத்மாவதித் தாயாரை மணந்த செய்தியை கேள்விப்பட்டு அதனால்

சீற்றம் அடைந்தது என சொல்லப்படுகிறது திருமகள் இறுதியில் தவம் செய்து பெருமானை அடையப் பெற்றார் என்று கும்பகோணம் தல வரலாற்றில் சொல்லப்படுகிறது. திருவேங்கடத்தில் உறையும் பெருமானைப் பற்றி பலவிதமான சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஒரு சாரர் இத்தலத்தில் உறைவது சிவபெருமானே என்றும் ஒரு சாரர் ஆதிபராசக்தியே என்றும் சிறுவிளக்கம் தந்துள்ளனர். திருமலையில் காணப்படும் பலவிதமான கோயில்கள் புராணங்கள், ஆகமங்கள், சிற்ப சாஸ்திரங்கள் பலவகையாக என்னலாம். அவற்றில் சிலவற்றி பெயர்கள்.

குண்ட நரசிம்மன், கோப நரசிம்மன், திவ்வியசிம்ஹன், பிரம்மாண்ட சிம்ஹன், ளமுத்ரசிம்ஹன், விஸ்ரூப சிம்ஹன், வீரசம்ஹன், குரூரசிம்ஹன், பீபத்ஸசிம்ஹன், ரௌத்தர சிம்ஹன், தூம்ரசிம்ஹன், வாஹ்நிசிம்வரன் என பலவிதமாக பிரிக்கலாம்.

அரியாய் இருந்தான் திருநாமம் எண்

கோளரியாய் ஒண்திறலோன் மார்வத் துகிர்வைத்தது

இவையவன் கோயில் இரணியன் தாகம்

அவை செய்து அரியுருவு மானான்

மாறாய தானவனை வள்ளுகிரால் மார்விரண்டு

கூறாகக் கீறிய கோளரியை

இவ்வாறாக பெருமையை சுட்டிக்காட்டுகிறார்.

ஸ்ரீபார்க்கவ நரசிம்மன்

கீழ் அஹோபிலம் பிரக்லாத வரதன் திருக்கோயிலில் இருந்து சுமார் 2 கி.மீ தூரத்தில் பார்க்கவ தீர்த்தம் என்ற புண்ணிய தீர்த்ததத்தின் அருகில் இத்தலம் காணப்படுகிறது. பார்க்கவ தீர்த்தத்தின் கரையில் அமைந்த காரணத்தால் இத்தலத்தில் உறையும் பெருமான் பார்க்கவ நரசிம்மன் என்றழைக்கப்பட்டதாகச் சொல்லுர். இந்தத் தீர்த்தம் என்றுமே வற்றாது என்று சொல்லப்பட்டது. இத்திருத்தலத்தில் பார்க்கவ நரசிம்மன் வீற்றிருந்த திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் சேவை சாதிக்கின்றார்.

யோகாநந்த நரசிம்மன்

கீழ் அஹோபிலம், பிரக்லாதவரன் ஆலயத்திற்குத் தென்கிழக்கே மலையின் அடிவாரத்தில் உள்ள ஆலயத்தில் யோகாநந்த நரசிம்மன் சேவை சாதிக்கின்றார். இப்பெருமானே ப்ரக்லாதனுக்கு யோக சாஸ்திரங்களை உபதேசித்ததின் காரணமாக ஸ்ரீயோகநந்த நரசிம்மன் என்று பெயர் வந்துள்ளதை புராணத்தின் மூலம் அறிய முடிகிறது.

சத்ரவடநரசிம்மன்

கீழ் அஹோபிலம் பிரக்லாதவரதன் ஆலயத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில அஹோபில மலையின் மேற்குப் பக்கத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. யோகாநந்த நரசிம்மன் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் இவ்வாலயம் அமைந்துள்ளதுதால் யோகாநந்த நரசிம்மரைச் சேவித்த பின்னர் கந்தர்வர்களாக காட்சியளிக்கிறார்.

அஹோபிலே நரசிம்மன்

இத்திருக்கோயில் கீழ் அஹோபிலத்திலிருந்து சுமார் 8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. வனப்பகுதியல் அமைந்துள்ள இத்தலத்தை பேருந்து மூலமாகவோ அல்லது காரிலோ சென்றடையலாம். சுமார் 20 ஆயிரம் சதுர அடி சமவெளிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இத்தலத்தைச் சுற்றிலும் நெடிந்துயர்ந்த மலைகளும் மரங்களும் காணப்படுகின்றன. இத்திருக்கோயில் உயர்ந்த மலையைச் சுற்றியுள்ள நாற்பத்தைந்து கிராமங்கள் உள்ளன.

வராஹநரசிம்மன்

மேல் அஹோபிலத்திலுள்ள ஸ்ரீ அஹோபில நரசிம்மன் ஆலயத்தில் சுமார் ஒரு கி.மீ. தூரத்தில் மலோவன் சந்திக்க செல்லும் வழியில் வராஹநரசிம்மன் ஆலயம் அமைந்துள்ளது. மேல் அகோபிலம் அகோபிலேசன் சந்நிதியில் இருந்து பவநாசினீ நதியின் கிழக்குப் பக்கத்தில் ஆதிவண்சடபோக மண்டபத்தின் வழியாகச் சென்றால் இவ்வாலதய்த்தை அடையலாம். நரசிம்மரையும் தரிசனம் செய்து பயனடையலாம்.

காரஞ்ச நரசிம்மன்

இத்திருக்கோவில் மேல் அஹோபிலத்தில் இருக்கும் அஹோபிலநரசிம்மர் ஆலயத்திற்கு மிக அருகில் சுமார் அரை கி.மீ. தூரத்தில் இருக்கிறது. காரஞ்ச மரத்தில் அடியில் இப்பெருமானின் சந்நிதி அமைந்துள்ள காரணத்தால் காரஞ்ச நரசிம்மன் எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

தலத்தின் பெயர் வந்தவிதம்

கோவில் திருமலை பெருமாள் கோவில என்று வைணவர்களால் சிறப்புடன் போற்றப்படும் மூன்று திருத்தலங்களில் இரண்டாவதாக வைத்து எண்ணப்படும் தலம் திருமலை, தானாகவே தோன்றிய ஸ்யம் வியக்த ஒன்றாகக் கருதப்படும் இத்திருத்தலம் கிருதயுகத்தில் திருமலையில் கோவில் கொள்வதற்கத் திருவுள்ளம் கொண்ட ஸ்ரீமந்நாராயணன் பெரியதிருவடியானை கருடாழ்வாரை முன்னொரு யுகத்தில் இராமனாக அவதரித்தார். அவரே துவாபரயுகத்தில் கண்ணனாக விளங்கினான் என்பது ஐதீகம்.

திருமலையில் கோவில் ொகள்வதற்குத் திருவுள்ளம் கொண்ட ஸ்ரீமத் நாராயணன் பெரிய திருவடியான கருடாழ்வாரை முன்னொரு யுகத்தில் (கிருதயுகம்) வைகுண்டத்தில் இருக்கும் நாராயண மலையைப் பெயர்த்தெடுத்து வந்த திருமலையில் வைக்கும்படி நிறைவேற்றி, தன்னால் எடுத்துவரப்பட்டமலை தன பெயரைத் தாங்கிக் கொண்டு நிற்பதற்கு அருள்புரியுமாறு பெருமானை வேண்டினாராம் என்று சுப்புரெட்டி கூறுகிறார்.

பெருமானும் கருடனது விருப்பம் நிறைவேறும் என்று வாக்களித்தாராம். அதன் காரணமாக திருமலை திருத்தலம் கருடாசலம் என்ற பெயர் கருடாத்திரி ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

திரேதாயுகத்தில் விருஷபன் என்று பெயர் பொண்ட அரக்கன் ஒருவன் வாழ்ந்து வந்தான். இவனுக்கு மிகவும விநோதமான ஆசை ஒன்று ஏற்பட்டதாம். எண்ணம் எல்லாம் நிறைவேறும் என்று வாக்களித்தார். விருஷபனுக்கும் பகவானுக்கும் இடையே தற்போதுள்ள திருமலை பகுதியில் பயங்கரமான யுத்தம் ஏற்பட்டதாம் அப்போது பகவான்

அந்த அசுரனைக் கொன்று பகவானைப் பணிந்து தன்னைக் காக்கும்படியும் தனது பெயரைத தாங்கியே அம்லையும் அழைக்கப்படவேண்டும் என்ற வரத்தினை பகவான் கொடுத்தார்.

அதுமட்டுமின்றி அஞ்ஞானத்தால் ஆட்கொள்ளப்பட்டு பகவானிடமே சண்டையிடத் துணிந்த தனது பேதமை மற்றவர்களுக்கும் பற்றாமல் இருப்பதற்காக மலை வடிவமான தன்னை மிதித்துக் கொண்டு செல்பவர்களுக்கு பகவான் கருணை மழையைப் பொழியவேண்டும் என்றும் இத்தலம் சொல்லப்பட்டது. திருமலை என்றும் திருவேங்கடம் என்றாயிற்று என்று புராணம் சொல்லப்படுகிறது. நாராயணன் தானாகவே விரும்பி இத்தலத்தில் கோவில் கொண்ட காரணத்தால் இத்தலம் நாராயணச்சலம் என்று பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

திருவேங்கடமலை இப்பூவுலகில் எவ்வாறு தோன்றியது என்பது குறித்து பிரம்ம புராணம் விவரிக்கின்றன. நண்டுகொழுத்தால் வளையில்தங்காது என்பது பழமொழி அதுபோலத்தான் என்ற செருக்கு கொண்ட ஆதிசேஷன் திருவேங்கடத்தில் உறையும் பெருாளைப் பற்றி பலவிதமான சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஒரு சாரர் இத்தலத்தில் உறைவது சிவபெருமானே என்றும், ஒரு சாரர் திருமலையில் மலை குனிய நின்ற பெருமாள் உக்கிர ஏராளமான உத்ஸவ மூர்த்திகள் சேவை சாதிக்கின்றனர் திருவேங்கடவனைப் போற்றி ஏராளமான கீர்த்தனைகள் தெலுங்கு, தமிழ், கன்னடம் ஆகியமொழிகளில் இயற்றப்பட்டுள்ளன. மனதிலே நினைத்தும் பார்க் கமுடியாத அளவிற்கு சுமார் முப்பத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் ஸ்ரீநிவாசனைப்பற்றி பாடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதில் சுமார் 32,000 கீர்த்தனைகள் தாளப்பாக்கம் அன்னமாச்சார்யா என்ற மகானால் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. அதில் தற்போது 12,000 பாடல்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது என்று சொல்லுவர் திருவேங்கடவனின் திருமுன்பே பாடியதாக திருமலை ஆலயத்தில் சுப்ரபாத சேவையின்போதும் கௌடசேவையின்போதும் அன்னமாச்சாரியாரின் அம்மகானது பாடல்களைப் பாடுகின்றனர். பகவானின் பாதங்களைப் பற்றினால் அதுவே மோட்சத்திற்கு அழைத்துச்செல்லும் என்ற கீதை

வாக்கியங்களை ஒட்டி எழுந்த கீர்த்தனைகள் ஏராளம். எல்லாம் பெருமானை தன்னை மறந்து அந்த இசை வெள்ளத்தில் மூழ்கியதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு நாளும் இரவில் திருமலையப்பனைப் பள்ளியறைக்கு எழுந்தருளப் பண்ணம் முன்னர் அர்த்த ஜாமவழிபாடு நடைபெறும். இந்த வழிபாட்டின் போது ஒரு சமயம் அன்னமாச்சார்யார் பெருமானைத் திருப்பள்ளிக்கு அனுப்பும் முகமாக கீர்த்தனை ஒன்றினைப் பாடினாராம். திருமலை ஆலயத்தில் கண்டாமணி மட்டுமே உண்டு. கையால் அடிக்கும் மணியைக் காணமுடியாது. அச்சிறிய மணியே திருவேஙடகடவ்ன அருளாள் திருமலைக்கு சென்று அங்கேயே சில காலம் தங்கியிருந்து திருவேங்கடவனைத் தரிசனம் செய்து வந்தது திருவேங்கடவனின் திருவருளாள் என்று கூறப்பட்டுள்ளது.

தொகுப்புரை

கண்ணனின் வரலாறு, பழமையான கோவில்கள், பிரலம்பன் வரலாறு, கேசியின் வாயைக் கீண்ட வரலாறு, இருவகை மணம், மாலை நேரத்தில் கண்ணன் புரிந்த லீலைகள் பற்றியும இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

சான்றெண்விளக்கம்

1. நா.சுப்புரெட்டியாரன் வடநாட்டுத திருப்பதிகள், ப.110

2. மேலது, ப.121

3. தேவராஜன், வைணவதிவ்விய தேசங்கள், ப.573

4. நா.சுப்புரெட்டியாரன் வடநாட்டுத திருப்பதிகள், ப.162

5. மேலது, பக்.169

6. மேலது, ப.172

7. மேலது, ப.173

8. 108 வைணவ திவ்விய தேசங்கள், ப.562

9. நா.சுப்புரெட்டியாரன் வடநாட்டுத திருப்பதிகள், ப.160

10. மேலது, ப.159

11. வைணவச் செம்மல், ப.163

முடிவுரை

- ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்பும் எனும் இயலில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் அறிமுகம், வைணவம் அறிமுகம், வைணவத்திருத்தலம் பற்றியும் இவரின் படைப்புகள் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.
- ஆழ்வார்களின் மொத்த எண்ணிக்கையும் அவர்களில் ஒன்பது பேர் மட்டுமே மங்கள சாசனம் செய்துள்ளனர். மங்கள சாசனம் பற்றியும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.
- அவர்களின் பக்தி நிலைப்பற்றி விளக்கப்பட்டுள்ளது. ஆழ்வார்களின் ஆழ்ந்த நிலையில் இறைவனை பாடி பரவசம் அடைந்துள்ளது இவ்வியலின் வாயிலாக அறியமுடிகிறது.
- திருவேங்கடத்தின் வரலாறுகள் எனும் இவ்வியலில் வேங்கடமேவிய விளக்கு, சங்ககால வேங்கடம், இன்றைய வேங்கடம், வேங்கடம் என்ற சொல்பொருள்விளக்கம், வேங்கடத்தின்மீது காதல் அதைத் தொடர்ந்து வழிகாட்டியின் பயன்கள் என்ற நிலையில் இந்த இயலில் ஆராயப்பெற்றுள்ளது.
- கண்ணனின் வரலாறு, பழமையான கோவில்கள், பிரலம்பன் வரலாறு, கேசியின் வாயைக் கீண்ட வரலாறு, இருவகை மணம், மாலை நேரத்தில் கண்ணன் புரிந்த லீலைகள் பற்றியும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

சுப்புரெட்டியார்.ந., **வடநாட்டுத் திருப்பதிகள்**
அண்ணாநகர்,
சென்னை.
மூன்றாம் பதிப்பு -2018

துணைமை ஆதாரம்

அருணாசலம்.மு., **தமிழ் இலக்கிய வரலாறு**
திவ்குரு பதிப்பகம்,
சென்னைன்.
ஆறாம்பதிப்பு - 2017

இராகவதாஸ்.வி.எஸ்.வி., (ஸ்ரீ வைணவத்திருத்தொண்டர்) **நாலாயிர திவ்வியப் பிரபந்தம்**
முல்லை நிலையம்,
தி.நகர், சென்னை.
இரண்டாம்பதிப்பு - 2008

காமராசு. இரா., **பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் பண்முகம்**
சாகித்திய அகாதெமி,
சென்னை.
முதல் பதிப்பு -2007

சுப்புரெட்டியார். நா., **வடவேங்கடமும், திருவேங்கடமும்**
வேங்கடம் வெளியீடு,
பாரதி நிலையம், சென்னை.
இரண்டாம்பதிப்பு - 1980

,, **வைணவச் செல்வம், தொகுதி -2**
தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள்,
செங்கண்மால்,கோடம்பாக்கம்,
சென்னை.
முதற்பதிப்பு - 2010

சுப்புரெட்டியார். நா.,	**வைணவமும் தமிழும்** சைவ சித்தாந்தம் நூற்பதிப்புக் கழகம் சென்னை 1998
சுஜாதா,	**ஆழ்வார்களின் ஓர் எளிய அறிமுகம்** விசா பப்ளிகேஷன்ஸ் நான்காம் பதிப்பு -2017
தேவராஜன்,	**வைணவ திவ்விய தேசங்கள் 108** ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை. இரண்டாம் பதிப்பு -2009
--	**பாணர் குலவிலக்கு** வேங்கடம், அண்ணாநகர், சென்னை. முதற்பதிப்பு - 1987
--	**வைணவமும் உரைவளம்** தாய்மை பதிப்பகம், அண்ணாநகர், சென்னை.

First Paper: *என்ன ஆச்சரியம்?* "Enna Aacharyam !" [1949]

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : 135 + 1
Papers Published : 200 [Tamil 173 + English 27]
Endowments established: 10
Endowment Lectures : 12
Awards received: 8
Prizes won : 14
Titles conferred : 8

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)
c) Bharathiyar University - 2019 (leading to PhD)

ISBN 978-81-939835-6-0

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக) **http://tinyurl.com/nsr100collections** எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]